தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு எண் 109.

சமர்த்த ராமதாஸ ஸ்வாமிகள்
இயற்றிய

தாசபோதம்

(இரண்டாம் பாகம்)

தமிழ் மொழியாக்கம்:
மாதோபா ரத்தினாகர்

தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலைய வெளியீடு எண். 109.

தாசபோதம்.

(இரண்டாம் பாகம்.)

சமர்த்த ராமதாஸ ஸ்வாமிகளால்
இயற்றப்பட்டது.

★

தமிழ் மொழிபெயர்ப்பு:
மாதோபா ரத்நாகரர்

★

பதிப்பாசிரியர் :
சு. கணபதி ராவ்,
தஞ்சை சரபோஜி மன்னர் சரஸ்வதி மகால் நூல் நிலைய
மராத்தி பண்டிட்.

★

உ. அ. நாராயணசுவாமி, பி. ஏ., பி. எல்.,
கௌரவ காரியதரிசி,
தஞ்சை சரபோஜி மன்னர் சரசுவதி மகால்
நிர்வாகக்குழு அவர்களால்
குழுவின் சார்பில் வெளியிடப்பட்டது.

Dasadodham Part II

கி. பி. **1964.**

சகம். **1886.** T.M.S.S.M-2016 விலை ரூ. 9.

This book has been published with grant-in aid-under the scheme of publication of classics sponsored by the Ministry of Scientific Research and Cultural Affairs, Government of India.

PRINTED AT THE
UKKADAI SRI AMBAL PRESS.
THANJAVUR.



சமர்த்த ஸ்ரீ ராமதாசர்.

தாசபோத மராத்தி மூலத்தின் ஆசிரியர்.

முகவுரை.

தாசபோதம் எனும் இந்நூலின் இரண்டாவது பாகத்தில், ஆன்மீக விஷயங்கள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சீர்பெற்ற வாழ்க்கைக்கு சமூக சேவையே தலைசிறந்த சாதனமாகுமென்பதை ஸமர்த ஸ்ரீ ராமதாசர் இப்பகுதியில் விரிவாக விளக்குகின்றனர். சமூக வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள், சமூகத்தில் தன் கடமைகளை உணர்ந்து, நடந்துகொள்வதினால் தானும் நலன் பெற்று, சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய தன் கடமைகளையும் ஓரளவு செலுத்தமுடியும் என்பதே சுவாமிகளின் போதனை. எக்காலத்திலும் உண்மையாகத்திகழும் தத்துவங்களை விஷயமாகக் கொண்டமையினால் இந்நூல் என்றும், எந்த சமூகத்திலும், ஓர் அறிய வழிகாட்டியாகத் திகழும்.

இந்நூல், தேவநாகரி எழுத்துக் கொண்ட மராத்தி ஏட்டுப் பிரதிகளினின்று, தமிழ் எழுத்துக்களில் முதலில் மாற்றி எழுதப்பட்டு, பிற்பாடு வெளியிடப்பட்டது. இதை மிக்க சிரமத்துடன், போதிய குறிப்புகளுடன் திறம்பட பதிப்பிற்கு கொண்டுவரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சரஸ்வதி மகால் நூல் நிலைய மராத்தி பண்டிதர் ஸ்ரீ சு. கணபதி, நமது பாராட்டுக்குரியவராகிறார்.

அரிய பல நூல்களை இந்நூல் நிலையத்திலிருந்து வெளியிடுவதற்கான, பொருளுதவி புரிந்த, மத்திய சர்க்காரின் உதவியையும், மாநில அரசாங்கத்தாரின் உதவியையும் போற்றுவதுடன், அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தஞ்சை
12—9—64.

O. A. நாராயணசாமி B.A., B.L.,
கௌரவ காரியதரிசி,
சரஸ்வதி மகால் நூல் நிலையம்.

முன்னுரை.

ஸ்ரீ தாஸபோதம் முதற்பாகத்தின் முன்னுரையில் இந்நூலாசிரியரான ஸ்ரீ ஸமர்த்தராமதாஸ ஸ்வாமி களின் சரித்திரத்திரத்தை இரண்டாம் பாகத்தில் கொடுப்பதாக தெரிவித்திருந்தபடி ஸ்ரீ ஸமர்த்தரின் சரித்திர சுருக்கத்தையே இம் முன்னுரையில் விவரமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இம்மகானின் சரித்திரத்தை விஸ்தரிப்பது எனில், அவரால் இயற்றப் பட்ட நூலினும் அது விரிவுடையதாக முடியும். ஆகை யால் ஸமர்த்தருடைய சரித்திரத்தில் வெகு முக்யமான சில சம்பவங்களை மட்டும் இங்கே கொடுக்கிறோம்.

இந்நூலைப் பற்றி ஓரளவு முதல் பாகத்தில் விவரிக் கப்பட்டுள்ளது. எனினும் தற்போது, இந்நூலைப்பற்றி சுருக்கமாக சிலவார்த்தைகள் சொல்வதுதான் முறை எனத் தோன்றுகிறது

தாஸபோதம் மனிதன் இல்லறத்தை செவ்வையாக நடத்தி, சிறிது சிறிதாக பரமார்த்த பாதையில் முன் னேற மார்க்கங்களையும், சாதனங்களையும் மிகவும் எளிய நடையில் போதிக்கும் ஓர் அரிய நூல். இது மதசம்பந்த மான நூல் அன்று. தன்னை சுற்றி இருக்கும் உலகத் தையும், உலகவாழ் மக்களையும், தான் பிறருக்கு புரிய வேண்டிய கடமைகளையும் தெளிவாக எடுத்துக்காட்டி, சமூக வாழ்வின் அவசியத்தை வற்புறுத்தி, வேதாந்த கார்யங்களுக்கு சமூக தொண்டும், வாழ்வும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை விளக்கிக்காட்டுகிறது. மேலும் ஐம்பூதங்களால் ஆகிய வாழ்க்கை ஒழிந்தபின்

மேலும் வாழ்க்கை துடருகிறது என்பதையும் அவ் வாழ்க்கையைக் கொண்டுதான் மனிதன்மகோன்னத மான நிலையை அடையலாம் என்பதையும், தாஸ போதம் எழில் மிகுந்த நடையில் சுலபமான பாஷையில் சித்தரிக்கிறது. சமூக வாழ்க்கையைப்பற்றி விவரிக் கையில், அரசியல், கல்வி, உடல் நலம், சமூகத்தில் காணும் ஊழல்கள், அவைகள் தோன்றுவதற்கு கார ணங்கள், அவைகளை களைய சாதனங்கள் இவைகளையும் எடுத்து கூறுகின்றது இந்நூல். மேலும் வேதாந்த வழிகளை புகட்டும் எல்லா நூல்களுமே பக்திவழியை புறக் கணிப்பதிலோ, தீவிரமாக கண்டிப்பதிலோ பின் வாங்குவதில்லை. ஆனல் இந்நூலின் மகத்தான விசே ஷம் அது பக்தியையும் வேதாந்தத்தையும் இனிமையாக இணைப்பதில் நிகறற்றது.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் மகாராஷ்ட்டிர தேசத்தில் காடு, மலை, வனந்திரங்களில் தன் வாழ்நாட் களை ஸ்ரீ ராமதாஸர் கழித்துவந்தார். கோர்வையான சரித்திரம் எழுதப்படுவதில் அவா குறைந்தகாலம் அது. எனினும் சமர்த்தரின் சீடர்கள் அவ்வப்போது எடுத்த குறிப்புகளைக் கொண்டு பல நாட்கள் சிரமப்பட்டு இந் நூலாசிரியரின் சரித்திரத்தை மராத்தியில் சிலர் வெளி யிட்டுள்ளனர். பல விஷயங்களில் இந் நூல்கள் ஒன் றுக்கொன்று முரண்படுகின்றன.

ஸமர்த்தரின் வாழ்க்கை வரலாறு :

மஹாராஷ்ட்ர பிராந்தியத்தில், கோதாவரி ஆற் றின் கரையிலுள்ள ஜாம்ப் எனும் ஊரில் ஸ்ரீ சமர்த்தர் பிறந்தார். தந்தை சூர்யாஜி பந்த் என்பவர். டோஸர் என்ற குடும்பத்தில் ருக்வேத, ஆச்வலாயனக்கிளையில். ஜமதக்னி கோத்திரத்தில் உதித்தவர். அன்னையின் பெயர் ராணுபாயி. ஸ்ரீசகம் 1530, கீலக ஆண்டு,

சைத்ர சுத்த நவமி தினத்தன்று, அதாவது ஸ்ரீ ராம நவமி தினம் ஸ்ரீ சமர்த்தரின் பிறந்த நாளாகும். இவருக்கு பெற்றோர்களிட்ட பெயர் நாராயணன். இவருக்கு மூத்த சகோதரர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் கங்காதரர். இவரும் இராமபிரானின் அருள்பெற்றவர். 'ஸ்ரேஷ்டர்' என ஜனங்களால் அழைக்கப்பட்ட இவர் தான் இயற்றிய நூலில் தன்னை "ராமீ ராமதஸர்" என்ற முத்திரையினால் அறிமுகப் படுத்திக் கொள்கிறார். சகோதரர்கள் இருவருக்குமே, சிறு பிராயம் தொட்டு இறைவனின் வழிபாட்டிலேயே மனது ஈடுபட்டது. உலக இன்பங்களில் சுவை குன்றியிருந்தது.

ஜாம்ப் எனும் ஊரில் இருந்த ஹனுமாரின் கோவிலில் இருவரும் ஏகாந்தமாக சிந்தனையில் ஈடுபடுவர். இருவருக்குமே ஸ்ரீ ராமபிரானுடைய திருவருள் கிட்டியதால், இருவரும் தம்தம் வழியில் தேசத்தொண்டை ஏற்றுக்கொண்டு, தன் வாழ் நாளைக்கழித்தனர்.

இந்நூல் ஆசிரியரான ஸ்ரீ சமர்த்தர் ஸ்ரீ ராமபிரானின் தர்சனம் அடைந்த நன்னாள் ஸ்ரீ சகம் **1538**, ச்ராவண மாதம், வளர்பக்ஷம் நவமி என இவருடைய சரித்திரத்தை எழுதியவர் எல்லாரும் கூறுவர். அதாவது எட்டு வயது நிரம்பும் இளம் பிராயத்திலேயே சக்கரவர்த்தி திருமகனின் அனுக்ரஹத்தை ஸ்ரீ சமர்த்தர் பெற்றார்.

இவருடைய இளம் பிராயத்தைப்பற்றி எழுதிய எல்லோரும் குறிப்பிடுவது யாதெனில், சாதாரண விளையாட்டுக் கேளிக்கையில் இவர் களிப்பதில்லை. மனதை ஓர் முகப்படுத்தி ஆழ்ந்த சிந்தனை செய்வதொன்றே இவரது இன்பச் செயலாயிருந்தது என்பதே.

திருமணப் பேச்சை எடுத்தாலே இவருக்கு கசப் பெய்யும் முகக்குறித் தோன்றும். ஆகையால் ஒருவரும் இதைப்பற்றி இவரிடம் பேசுவது கிடையாது. கூட விருக்கும் இளைஞர்கள் பரிகசிப்பதற்கு இவ்விஷயத் தைப்பற்றி பேசினும், கடுஞ்சினம் கொள்ளும் இயல்பு கொண்டிருந்தார் சமர்த்தர். தான் ஈன்றெடுத்த செல் வம், உலகத்தில் எல்லோரையும் போல் இல்வாழ்க்கை யில் ஈடுபட்டு வாழ வேண்டும், மணக்கோலத்தில் மைந் தனைக் கண்டுகளிக்க வேண்டும் என்ற பேரவா தாயா ருக்கு மிக்க வளர்ந்தது. ஆனால் மணப்பேச்சுகள் துடங் கினால் முரட்டு சுவபாவம் ஒன்று நாராயணனைப் பிடித்து ஆட்டுவதைக் கண்டு அவளும் சற்றுத் தயங்கியே ஓர் நாள் சமர்த்தரிடம் 'என் வேண்டுகோள் ஒன்றை நிறை வேற்ற வேண்டும்' எனத் தந்திரமாகக் கேட்டுக் கொண் டாள். 'ஆணை' என ஏற்றுக் கொண்ட நாராயண னிடம், தாய் 'திருமணப் பேச்சை எடுக்கும் போதே, ஆறுச்சினம் கொள்கிறாய், எனக்காக வேண்டி, 'அந்தர்படம் – திரை' நீக்கும் சடங்குவரை நீ பொறுத்து கொள்ள வேண்டும். இதற்கு தடை சொல்க்கூடாது' என வேண்டினள்.

மஹாராஷ்ட்ர தேசத்தில் இத்திரை நீக்குச் சடங் கை மிக்க முக்கியமாகக் கருதுகின்றனர். இப்போதும் மகாராஷ்ட்ரர்களின் திருமணச் சடங்குகளில் கலந்து கொள்பவர்களுக்கு இது நன்கு தெரியவரும். திருமங்க லியம் எனும் தாலிக்கயிற்றை மணப்பெண்ணிற்கு சூட்டு முன் இச்சடங்கு நிறைவேறுகிறது. மணமகனை ஓர் மனையில் உட்கார வைத்து அவனுக் கெதிரில் திரை போன்று 'ஸ்வஸ்திக்' சின்னம் இருபுரத்திலும் எழுதிய மஞ்சளில் நினைக்கப்பட்ட துணி ஒன்றை அந்தணர்கள்

திரைபோல் பிடித்துக் கொண்டு நிற்கின்றனர். மண மகளை நன்கு வலங்கரித்து இத்திரைக்கு பின் புறம் உட் காரவைக்கின்றனர். பிறகு மணமக்களை வாழ்த்தும் பல செய்யுள்கள் பாடப்படுகின்றன. இறுதியில் 'ஸுர்யாத் - சதாமங்களம்', 'சுலங்னே சாவதான' எனும் இரு பதங்களை எல்லோரும் ஒருங்கே கூற திரை நீக்கப் படுகிறது. கூடியவர் எல்லோரும் ஆசியைக் குறிக்கும், அக்ஷதைகளை மணமக்கட் மீது இறைக்கின்றனர், 'என் றும் நன்மை பயக்கட்டும், என்றும் 'இச்சுபவேளையில் ஊக்கமுடன் இருப்பாய்' எனப் பொருள் கூறும் பதங் கள் மேல் கண்டவை.

அன்னைக்களித்த வாக்கின்படி, அதன் பிறகு திரு மணவார்த்தைகள் எவர் பேசினும், துளிக்கூட சலனம் கொள்ளாது நாராயணனிருந்தமையால் சகஜமாக எல் லோரும், இவர் மனதிலும் வாழ்க்கையிலும் திருப்பம் ஏற்பட்டுவிட்டதாகவே எண்ணினர் தன் சகோதரன் பான்ஜீபுவா என்பவரின் புதல்வியை, நாராயணனுக்கு மணம் செய்துவிக்க பெரியோர்களால் நிச்சயிக்கப் பட்டு, திருமணமும் குறிப்பிட்ட சுபநாளில் துடங்கப் பெற்றது. திரையின் இருபுரத்திலும் மணமக்களை உட் காரவைத்தனர். ஆசிகள் செய்யுள் உருவத்தில் வழங் கப்பட்டன. வேதியர் 'சுலக்னே சாவதான' எனச் சொல்லி திரையை விலக்கும் தருவாயில் மணமகனை நாராயணன், துள்ளிக்குதித்து பாய்ந்தோடினன். அவனைப்பிடித்து நிறுத்த ஒருவராலும் இயலவில்லை. தாயார் இந்நிகழ்ச்சி வரை வாளாவிருக்கச் சொன்ன மையால், ஒன்றுமறியாதவன் போல் இருந்துவிட்டு, தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிக் கொண்டு, தன்விருப்பத்தையும் நிறைவேற்றிக் கொண்டு விட்டார்

நாராயணன் எனும் ஸ்ரீ சமர்த்தர். இலக்கியத்தில் முதல் ஸ்தானம் பெற்று விளங்கும் மோரோபந்த் எனும் கவிஞர், தான் இயற்றிய 'சன்மணி மாலை' எனும் நூலில் 'த்விஜ சாவதான ஐஸே ஸர்வத்ர விவாஹ மங்கலி மண்டபே ஏக ராமதாஸே ஆயகிலே தயா அஸோசதாப்ரணதி', விவாக சடங்குகள் எல்லாவற்றி லுமே 'சுலக்னே சாவதான' எனும் சொற்கள் மறை யோதுவோர் வாயினின்றும் எழுகின்றன. ஆனல் அதை முற்றிலும் உணர்ந்து பின் பற்றியவர் சமர்த்தர் ஒருவர்தான். அவருக்கு என் வணக்கம், எனப் பொருள்படும் பாட்டு ஒன்றை இயற்றியுள்ளார். 'சாவதான' என்ற மராத்தி சொல்லிற்கு, உன்னிப்பாய் விழிப்புடன் இரு எனப்பொருள். திருமணம் ஆகிய பின் உன்னிப்பாய் விழிப்புடன் இருக்கவில்லை என்ருல் ஏதோ ஆபத்து வந்துவிடும் என நினைப்பு போலும். இப்போதே விழித்துக் கொண்டு, உன்னிப்பாய் நழுவி விடுவோம் என்று இவர் அகன்றுவிட்டார் எனவும் சிலர் சொல்வர். அம்மணப் பெண்ணிற்கு சில நாட்களில் வேறு மணவாளனைத் தேர்ந்தெடுத்து திருமணம் நடந்தேறியது.

சமர்த்தர் திருமணப் பந்தலிலிருந்து 'ஜாம்ப்', எனும் ஊரை அடைந்து, அங்கிருந்து நாசிக், பஞ்சவடியை அடைந்தார். அப்போது அவர் வயது சுமார் 12. அவர் கோதாவரீ நதியில் புனித நீராடி ஸ்ரீ ராமபிரானின் தர்சனம் செய்து, பஞ்சவடிக்கு கிழக்கே அருகில் உள்ள டாகளி என்னும் ஊரில் இருந்த ஓர் குகையில் வசிக்கலானர். சரித்திரம் எழுதியோர்கள் கணக்குப் படி. சகம் 1542, ரௌத்ரி வருடம், மாக மாதம் (தை) சுக்ல பக்ஷத்து சப்தமி முதல் மந்த்ர புரச்சரணம்

செய்வதென சங்கல்பம் செய்து கொண்டார். சங்கல்பம் என்ருல் பனிரண்டாண்டுகளில் 13 கோடி எண்ணிக்கை நிறைவேற்றிவிடுவதென்ற தீர்மானம்.

தினந்தோறும் விடியற்காலை, நதியில் இடுப்பளவு நீரில் நின்று ஜபம் துவங்கப்படும். நதியில் உள்ள மீன்கள் தேகத்தை கடிக்கும். எதையும் லக்ஷியம் செய்யாது, தினசரி, புரச்சரணம், பஜனை, பூஜை இவைகளிலேயே காலம் கழித்து வந்தார். மத்தியான்ன காலம்வரை, ஜபதபங்கள் செய்து பிறகு பஞ்சவடிக்குச் சென்று பிக்ஷை எடுத்து ஸ்ரீ ராமருக்கு சமர்பித்து, டாகளியில் உள்ள குகையில் போய் புசிக்கிறது வழக்கம். இப்படியாக பனிரண்டு ஆண்டுகள் கழிந்தன. இந்த பனிரண்டு ஆண்டுகளில் பலவித ஆச்சர்யமான நிகழ்ச்சிகள் அவர் வாழ்க்கையில் நிகழ்ந்தன. அவைகள் எல்லாவற்றையும் இங்கு எடுத்து எழுதவில்லை எனினும் சிலவற்றை அவசியம் கூற வேண்டும்.

டாகளி எனும் ஊரில், தவம் புரியத்துடங்கி மூன்ருண்டுகள் கழிந்த பின்னர், ஓர் நாள், சமர்த்தர் ஆற்றங்கரையில் பிர்மயஞம் எனும் தினசரி சடங்கு ஒன்றை செய்து கொண்டிருந்தார். அதே சமயம், இறந்த தன் புருஷனின் சடலத்துடன், உடன் கட்டை ஏற வந்த ஓர் ஸ்த்ரீ, இவரைப் பார்த்து யாரோ மகான் போன்றுளது, யாக்கை தீக்கிரையாகுமுன் தரிசனம் செய்வோம், என எண்ணி அவரை அணுகி வணங்கினுள். கைவளையல்களின் சத்தத்தினுல், தன்னையாரோவணங்குகிருள், என்பதை உணர்ந்து 'அஷ்டபுத்ரா-சௌபாக்யவதி பவ' என ஆசி கூறினர். அவள் 'எந்த பிறவியில் இந்த ஆசி பலிக்கும்' என கேட்க, கூடவிருந்தவர்கள்

உண்மை நிலையை எடுத்துக் கூறினார்கள். அச்சடலத்தின்மீது,நதியின் நீரை தெளித்து 'ஐயா எழுந்திருங்கள்' என சமர்த்தர் சொல்லவே, அச்சவம், துயில் விழிப்போன் போல, 'ராம, ராம' என சொல்லியவாறே எழுந்துவிட்டது. இந்நிகழ்ச்சி சகம் 1545, வைசாக, சுத்த தசமி அன்று நிகழ்ச்சியுற்றதாக தெரிகிறோம். தம்பதிகளுக்கு பிறகு பத்து குழந்தைகள் பிறந்தன. முதல் சிசுவை இவர்கள் சமர்த்தரிடம் ஒப்படைத்து விட்டனர். அக்குழந்தையும் சமர்த்தரின் குகையிலேயே காலம் கழித்து வந்தது. திரும்பவும் தன் வீடு செல்லவில்லை.

அவருடைய இஷ்ட தெய்வமான, இராமர், ஹனுமார் முதலிய தெய்வங்கள் இவர் எதிரில் தோன்றி இவருடன் பேசுவது வழக்கமாம். இதைப் போல் பல ஆச்சரியகரமான சம்பவங்கள் அவர் வாழ்க்கையில் நிறைந்துள்ளன.

தவம் முற்றுப்பெற்ற பிறகு சமர்த்தர் ஸ்ரீ ராமரின் கட்டளைப்படி, தீர்த்த யாத்திரை செய்ய பாதசாரியாகக் கிளம்பினார். இந்தக் காலம் சுமார் சகம் 1554 (கி. பி. 1632). பல்குன மாதம் சுக்லபக்ஷம் என அறிவிக்கப் பட்டுள்ளது. இமயமலையிலிருந்து, ராமேச்வரம் வரை அவர் சென்று வருவதாக தீர்மானம் செய்தார்.

சுற்றிக் கொண்டே காசியை முதலில் அடைந்தார் காசியினின்றும், அயோத்தி, துவாரகை, காச்மீரம், வழியாக ஹிமாலயத்தை அடைந்தார். இமாலயத்திலிருந்து, கீழ் கடற்கரை வழியாக ராமேச்வரம், இலங்கை ஆகிய விடங்களுக்குச் சென்றார். இராமேச்வரத்திற்கு திரும்பி அங்கிருந்து, ஸ்ரீசைலம் முதலிய ஸ்தலங்

கூளில் சில நாட்கள் தங்கி திரும்பினர். இதன் பிறகு அவருடைய இஷ்ட தெய்வமாகிய ஸ்ரீ ராமனின் கட்டளையின்படி, சமூகத்தில் தெய்வீக வாழ்க்கையை பரப்புவதற்காக விரதம் கொண்டார். இடையில் தன் பிறந்த ஊருக்கு போக தீர்மானம் செய்து கொண்டு அவர் 'பைடண்' எனும் ஊருக்குப் போய் சேர்ந்தார். அங்கேயும் சில அற்புத சம்பவங்கள் புரிந்து, பிறகு தன் சொந்த ஊராகிய ஜாம்ப் கிராமத்தை அடைந்தார்.

பல வருடங்களாக தன் இளையமகனைக் காணாது வருந்திக் கொண்டு, ஏக்கம் பிடித்திருந்த தாயின் உள்ளம் குளிர்ந்தது. தாயை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தவர், தன் தாய் குருடாகி விட்டதைக் கண்டு, தன் கையினல் ஒர் தடவைதாயின் கண்களைத் தடவிக் கொடுத்து, இழந்த கண்பார்வையை மீண்டும் பெறச் செய்தார். தாயின் உவகையை கூறவும் முடியுமோ!

சில நாட்கள் அன்னையின் விருப்பப்படி தங்கி, தன் பிரிவை சகியாத அவளுக்கு, கபிலகீதையை சொல்லி சமாதானம் செய்வித்து, அவள் விருப்பத்தை ஈடேற வைக்க ஸ்ரீ ராமபிரானின் தர்சனம் அவளுக்கு செய்து வைத்தார். பிறகு அவள் நினைக்கும் போது நேரில் தோன்றுவதாய் தாயாருக்கு வாக்களித்துவிட்டு, தனக்கு ஸ்ரீ ராமனல் இடப்பட்ட கட்டளையாகிய, 'மக்கட் தொண்டு' புரிய, அன்னையின், சம்மதியையும், ஆசியையும் பெற்று கிளம்பினர். இவைகள் எல்லாம் நடைபெற்றது சுமார் 1566 சகம். டாகளி, கிராமத்தின்றும், கிருஷ்ண நதிக்கரையில், மகா பலேச்வர் எனும் ஊரையடைந்தார். இதுவரை, அவரது பால்ய தசையில் 12

வருடங்களும், தவம் புரிவதில் 12 வருடங்களும். தேசாடனம் புரிய பன்னிரு ஆண்டுகளும் கடந்தன.

சமர்த்தர் சென்றவிட மெல்லாம், பஜனை கீர்த்தனங்கள், கதாகாலக்ஷேபங்கள் வழியே, மிகவும் கடினமான பரமார்த்த ஞானத்தை பாமரர்களும் ஆசையுடன் அறிந்து கொள்ளும்படி புகட்டிவந்தார். சங்கீத ஞானம் பெற்று, குரலும் இனிமையுடனிருந்து, அனுபவத்தின் பலம் கொண்ட சொற்கள், மேலும் தபோபலத்தினால், வசீகரமான தோற்றம், அன்பும், மரியாயாதையும், தணிவும் கொண்ட சுவாபவம் இவ்வளவும் ஒரங்கே குடிகொண்டிருந்தது சமர்த்த இராமதாஸரிடத்தில். ஆகையால் இவருடைய பஜனைகளைக் கேட்டு மகிழ திரள் திரளாக ஜனங்கள் கூடினர்.

அக்காலத்தில் சமர்த்தரைத் தவிர பல பிரசித்திப் பெற்ற சாதுக்கள் மகாராஷ்டிரத்தில் வசித்து வந்தனர். துகாராம் ஸ்வாமிகள், ரங்கநாத ஸ்வாமிகள், ஜயராம ஸ்வாமிகள், கேசவ ஸ்வாமிகள், ஆனந்தமூர்த்தி ஸ்வாமிகள் என பலர் மிகவும் பிரசித்தியுற்றவர்கள். இவர்கள் எல்லோருமே சமர்த்தரின் தரிசனம் கொண்டு அவரை பெரிய மகானாகவும், தங்களுக்கு வழிகாட்டுபவராகவும் மதித்து வந்தனர்.

ஒரே இடத்தில் அதிக நாட்கள் தங்காமல் அங்கங்கே பக்திபெருக்கு எடுக்கும்படியும், அத்வைத அறிவு பதியும்படியாகவும், பிரசங்கங்கள் கீர்த்தனைகள் புரிந்தவாறு, பதினொரு இடத்தில் ஹனுமாரின் மூர்த்தியை ஸ்தாபனை செய்து அவைகளுக்கு தினந் தோறும் பூஜை செய்ய, ஏற்பாடுகளும் செய்வித்தார். அந்த பதினொரு ஸ்தலங்கள். 1. சஹாபூர், 2. மசூர், 3. சாபள், 4. உம்ப்ரேஜ், 5. சிராள், 6. பாடள், 7. பாரகாம், 8. மனபாடல், 9. ஹிங்கண்வாடி,

10. வர்ளனி, 11. சாபள் எனும் ஊரில், ஸ்ரீ ராமச்சந்திரனின் சிலைக்குப்பின் அமைத்துள்ள 'பீமன்' என்ற பெயருள்ள அனுமான், ஆக பதினெரு ஹனுமார்களின் பிரதிஷ்டை இவரால் நடைபெற்றது.

இவருடைய சிஷ்ய பரம்பரை அதிகமாக வளர்ந்து கொண்டே போயிற்று பெண்பாலர்களும் அதில் இடம் பெற்றிருந்தனர். அக்கா - வேணு எனும் இரு ஸ்த்ரிகள் இவரது தொண்டை செய்து கொண்டிருந்தனர். மகாராஜா சிவாஜியே இவரது சீடராக இருந்து வந்தார். இருவர்களின் குறிகோளும் ஒன்ருக இருந்தன. ஜனசமுதாயத்தின் தொண்டு ஒன்றே இருவரும் தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர்கள். தேசத்தையும், தேசமக்களையும் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க சிவாஜி பாடுபட்டவர். ஆத்மீக சுதந்திரத்தை நிலைநாட்ட சமர்த்தர் பாடு பட்டார். ஏற்கனவே பராக்கிரமம், புத்தி யூகம் இவைகளில் தேர்ந்த சிவாஜிக்கு, ஆத்மீக சக்தியின் வளர்ச்சிக்காக ஒரு ஆசானும் கிடைத்துவிட்டநிலுல் அவருடைய சாதனங்கள் எளிதில் பலித்துக் கொண்டு போயின. சமர்த்தரின் கீர்த்தி பரவப்பரவ சிவாஜி அவரிடம் அளவு கடந்து பக்தி கொண்டான். அவரை தரிசனம் செய்து அவர் தாள்பணிய வேண்டும் என அவா வளர்ந்து, கடைசியில் சிங்களவாடி எனும் சிற்றூரில் சிவாஜி அவரைப் போய் தரிசத்தினன் ஸ்ரீசகம் 1571, விகாரி வருஷம், வைசாக மாதம், சுத்தபக்ஷம் நவமி, வியழக்கிழமை அன்று, இவ்விரு மகாபுருஷர்கள் சந்தித்தனர். சமர்த்தரின் பரிபூர்ண கிருபைக்கு, சிவாஜி மகாராஜா பாத்திரருனர். இறுதிகாலம் வரை ராஜாங்க அலுவல்களில் கூட ஸ்ரீ சமர்த்தரின், ஆசியையும், ஆலோசனையையும் பெற்று தன்கோரிக்கையை ஈடு ஏற்றிக் கொண்டார் சிவாஜி மன்னர்.

இதுகாறும் பாதசாரியாக சுற்றித்திரிந்த சமர்த்தர் சகம் 1671-ற்கு பிறகு, பரளி எனும் ஊரில் நிலையான வாசஸ்தலத்தைக் கொண்டார். இதற்கு பல காரணங் களில் ஒன்ருக, சிவாஜீ மன்னர், அடிக்கடி சந்திக்க அவகாசம் கிடைப்பதற்கென இவ்வூரைத் தேர்ந்ரி எடுத்ததாகக் கூறுகின்றனர். இம்மகான் இந்த ஊதுல் மலைமீதுள்ள கோட்டையில் வசிக்க ஆரம்பித்ததுமுதல், அங்கு ஏராளமான பக்தர்கள், சாதுக்கள் கூடவாரம் பித்தனர். அந்த கோட்டைக்கு 'சஜ்ஜனகட்' எனும் பெயர் வழங்கி இதுவரை அந்தப் பெயரிலேயே இது பிரசித்தியுற்றுள்ளதாக இருக்கிறது.

மகான்களின் வாழ்க்கையில் நிகழக்கூடிய பல அற்புதங்களும், அதுவரை பலர் கண்டு கேட்டிராத பல அற்புத, சம்பவங்களும் சமர்த்தர் வாழ்க்கையில் நிறைந் திருந்தன.

சகம் 1577 வைசாக மாதம் சுத்தபக்ஷம், த்வீதியை அன்று ராமேச்வர யாத்திரைக்குக் கிளம்பினர். தஞ்சை நகரின் பெருமை இவ்விஷயத்தில் மிகவும் சிறந் தது. உத்தமமான சாதுக்கள், மகோன்னத ஸ்திதியை யடைந்த அவதார புருடாகள் எல்லோரும் தஞ்சைக்கு வந்து, தஞ்சையில் சிலகாலம் வசித்துவிட்டு போயிருக்கி ருர்கள். அவர்கள் எல்லோருடைய கிருபா திருஷ்டியும் பாததூளியும், தஞ்சைக்கு பிராப்தமானது, தஞ் சைக்கு ஓர் ஈடற்ற பாக்கியமல்லவா?

சமர்த்தர் தஞ்சைக்கு வந்த போது வெங்கோஜி, எனும் முதல் மராத்திய மன்னர் தஞ்சையை ஆண்டுவந் தார். அவர் சமர்த்தரை எதிர்கொண்டழைத்து, அவருக்கு செய்யவேண்டிய சர்வ உபசாரங்களையும், ஏற்பாடுகளையும் செய்து, பதினைந்து நாட்கள் வரை தங்கவைத்தார். அரசர் ஸ்ரீ சமர்த்தரின் அனுக்

நகத்திற்கும் பாத்திரமானூர். ஸ்ரீசகம் 1577-ம் ஆண்டு, ஜ்யேஷ்ட மாதம் கிருஷ்ண பக்ஷத்திருதீயை அன்று அரசருக்கு இம்மகானின் பூர்ண அனுக்கிரகம் கிடைத்தது என சரித்திரக்காரர்கள் தெரிவிக்கிறூர்கள். சமர்த்தரைத் தஞ்சையிலேயே இருந்துவிடும்படி மன்னர் மிக்க வேண்டியதின் பேரில், சமர்த்தர் தன்னுடன் கூடவிருந்த மௌனி பாபா முதலியவரை பிகாஜி எனும் தன் சீடருடன் கூடத் தஞ்சையில் வசிக்கும்படி கட்டளை இட்டதாகத் தெரிகிறது. பலவருடங்கள் கழிந்து மீண்டும், சமர்த்தரை தரிசிக்க வேண்டி, வெங்கோஜீ பிரார்த்தித்ததால், சமர்த்தர் அவர் வேண்டுகோளுக்கு இணங்கி தஞ்சைக்கு வந்திருந்தார். மன்னர் குடியிலிருந்து சமர்த்தரை, தஞ்சை வரை மன்னர் வெங்கோஜி அழைத்துவந்ததாகத் தெரிகிறது. சகாஜி பாவாவின் மடத்தில் சமர்த்தர் இன்னுட்களில் தங்கி இருப்பதும், மன்னர் அங்கேபோய் அவரை சேவிப்பதுமாக இருந்து வந்தது. ஓர் நாள் சமர்த்தர் 'இந்த ஊரில் மிகச்சிறந்த சிற்பிகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஸ்ரீ ராமபிரானின் உருவகம் ஒன்று செய்ய விருப்பம்' என்று அறிவித்தார். 'நகரத்தில் மிகவும் தேர்ந்த சிற்பி ஒருவன் இருக்கிறுன். ஆனூல் அவனது இருகண்களும் குருடு எனத் தெரிவித்தார்கள். அதனூல் தடையில்லை எனச் சமர்த்தர் சொல்லி அவனை தருவித்துக் கொண்டார். அவனுடைய இழந்த கண்களை மீட்டுக்கொடுத்தார். சமர்த்தர் விரும்பியபடி, அப்பழுக்கு இன்றி இராம, லக்ஷமண, சீதை, மாருதி ஆகிய நான்கு உருவகங்களைத் தயார் செய்து கொடுத்தான் அக்கிழச்சிற்பி. சமர்த்தர் மிகவும் சந்தோஷமடைந்து சிற்பியை தனக்கு வேண்டுவனவற்றைக்

கேட்கச் சொன்னார். சிற்பியின் வேண்டு கோள் மிக வியப்பானது.

"ராமச்சந்திர பிரபுவின் திவ்ய மூர்த்தியினதும், தங்கள் தரிசனமும் கிடைப்பதற்காக பெற்ற இவ்விரு கண்களும் மூர்த்திகளின் தியானத்திலிருக்கும்போதே மற்ற, அழியும் பொருள்களைப் பாராமலே, முன்போல் குருடாகிவிட வேண்டும்" என்பதே அவன் வேண்டுகோள். எவ்வளவு சொல்லியும் கேட்காமல், பிடிவாதத்துடன் சமர்த்தரிடம் இவ்வரனைப் பெற்று மகிழ்ந்தனன் அச்சிற்பி. பிறகு சமர்த்தர் தன் ஊருக்குத் திரும்பினர். பல விடங்களில் மடங்களை ஸ்தாபித்து, இராமபிரானின் பக்தியை பரப்புவதும், வேதாந்த அத்யாத்தும சர்சைகளில் ஜனங்களை ஈடுபெறச்செய்து அவர்கள் வாழ்க்கை பயன் பெற தொண்டாற்றுவதுமே இம்மடத்தலைவர்களின் இலட்சிய மாக உபதேசித்து அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்து கொண்டிருந்தார்.

இந்த காலத்தில்தான் 'தாஸபோதம்' உருவாயிற்று. தாசபோதத்தின் செய்யுள்களை, சமர்த்தர் சொல்லிவர, கல்யாண் எனும் அவர் சீடர் அதை எழுதிக் கொண்டு வந்தார். அந்த முதற்பிரதியானது இப்போதும், கல்யாண் அவர்கள் நிர்வகித்துவந்த 'டோம்காவ்' எனும் ஊரிலுள்ள மடத்தில் இருக்கிறது. சமர்த்தர் அதில் பிழை திருத்தம் தன் கைகளால் செய்திருக்கிறார்.

சாலிவாகன சகம் 1606, துர்முகி வருடம், மாக மாதம் கிருஷ்ண பக்ஷம் பஞ்சமி அன்று, தஞ்சை சிற்பியினால் உருவாக்கப்பட்ட, மூர்திகள் ஸ்ரீ சமர்த்திரிடம்,

மல்லாரிராவ் நிம்பதேவர், கேசவகோஸ்வாமி எனும் இரு மாராஷ்டிரர்களின் மூலம் வெங்கோஜி மன்னரால் அனுப்பப்பட்டு போய் சேர்ந்தன. மறு நாள் அம்மூர்த்திகளுக்கு பூஜை முதலியன செய்வித்து வழக்கப்படி பஜனை முதலியவைகளை முடித்துக் கொண்டு சமர்த்தர் கீழ்க்கண்ட ச்லோகத்தின் பாதியை மராத்தியில் சொன்னர்.

"ரவிகுல திலகாசா வேள சந்நீத ஆலா,
ததுபரி பஜனே பாஹிஜே சாங்கேலா"

இது சமர்த்தர் சொன்னபாதி செய்யுள். இதன் அர்த்தம் ரவிகுலதிலகனின் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகையால் பஜனை செய்து மேல் ஆவனவற்றை பூர்த்திசெய்ய வேண்டும் என்பது. தன்னுடைய உடலை விடும் காலம் நெறுங்கிவிட்டதென்பதை சூசிக்கவே சமர்த்தர் இதை சொன்னார். சமர்த்தரிடம் தயாராகிய சீடர்கள் எப்படிப்பட்டவர்கள். உத்தவர் எனும் சீடர் பாக்கி பாதியை சொல்லி செய்யுளை பூர்த்திசெய்தார்.

"அனுதினமும் நவமியை மனதில் நினைக்க வேண்டும். மிக்கவும் சடுதியாக காரியங்களை முடிக்க வேண்டும்."

இதைக் கேட்டு சமர்த்தர் மகிழ்ந்தார். ஸ்ரீ சாலிவாகன சகம் 1603 துர்முகி ஆண்டு, மாக மாதம், கிருஷ்ண பக்ஷம் நவமி, சனிக்கிழமை அன்று, தஞ்சையிலிருந்து வந்த மூர்த்திகள் எதிரில் உட்கார்ந்து பிராண ஆகர்ஷணம் செய்யத்துடங்கினர். பக்கத்தில் இருந்த முக்ய சீடர்கள் அழத்துடங்கினர். 'தாசபோதம், ஆத்மாராம்' எனும் என் இரு நூல்களையும் பாராயணம் செய்

பவருக்கு, என்னுடன் நேரில் பேசும் உணர்ச்சி உண்டாகும். எனப் பிரசாத மொழிகள் அருளி தன் பூத உடலை நீத்தார்.

சமர்த்தரின் வாழ்க்கை வரலாறுகளை சரிவர எழுதுவது என்றால் அது தாசபோதத்தைவிட மிகப் பெரிய நூலாகிவிடும். மிகவும் முக்யமானதாகக் கருதிய, சில பகுதிகளைக் கொண்டே இச்சரித்திரம் எழுதப்பட்டது.

சமர்த்தர் இயற்றிய நூல்கள் :

தாசபோதம், ஆத்மராம், மனுசேச்லோக், இராமாயணம் இவைகள் பெரிய நூல்கள். இதைத் தவிர பல சிறு சிறு, செய்யுட்களின் தொகுதிகள் அவ்வப்போது காரியங்களை அனுசரித்து செய்யபட்டவை.

தாசபோதம் :

அத்துவைத மார்கத்தைப் புகட்டும் நூலாக இருப்பினும், உலகவியல்களைப்பற்றி அதிகம் இதில் சிந்தனை செய்யப்பட்டுள்ளது. காரணம் நூலாசிரியர் பல தடவைகள் நினைவுறுத்தும் மொழிகள், 'பிரபஞ்ச கராவா நேடகா மகபோகாவே பரமார்த்த சுகா'

முதலில் இல்லறத்தை நன்றாக போற்றிச் செய்; பிறகு பரமார்த்த சுகத்தை அனுபவி என்பதே. சமர்த்தருக்குமுன் பரமார்த்த வழியை புகட்டும் நூலாசிரியர் எல்லோருமே, 'இல்வாழ்க்கை மிக்க குறுகிய காலத்தையுடையது, நிரந்தரமான சுகத்தைக் கொடுப்பதுவும் அன்று ஆகையால் அதை உதாசீனம் செய்' எனவே

போதித்து வந்தனர். இவ்வுலக வாழ்க்கையும், பரமார்த்தத்தையும் இனிமையான இணைப்பில் கலந்தவர் இவர்தான்.

7750, செய்யுட்களைக் கொண்ட தாசபோதம் ஒரே மூச்சில் இயற்றபட்டதல்ல. சுமார் சகம் 1571-ல் இது துடங்கப்பட்டிருக்க வேண்டும். சகம் 1063-ம் ஆண்டு முடிவுப் பெற்றிருக்கவேண்டும். கிட்டதட்ட 32 ஆண்டு களில் இது பூர்த்தியாயிருக்க வேண்டும்.

பல நூல்களிலிருந்து, தான் இந்நூலுக்கு ஆதாரம் கண்டிருப்பதாக முதல் தசகத்தில், முதல் சமாஸத்தில் ஆசிரியர் தெரிவிக்கிறார். அவைகள்.

சிவகீதை, ராமகீதை, குருகீதை, கர்பகீதை, உத்தர கீதை, அவதூத கீதை, வேதம், வேதாந்தநூல்கள், பகவத் கீதை, பிர்ம கீதை, ஹம்ச கீதை, பாண்டவ கீதை, கணேச கீதை, யம கீதை, உபநிஷத்துக்கள், பாகவதம் பல கிரந்தங்களைப் படித்து, ஆராய்ச்சியின் பயனாக இயற்றப்பட்டது இத்தாச போதம். இதை மராத்திப் புலவர்கள் 'கிரந்த ராஜ்' என்று 'நூல்களின் அரசு' என சிறப்புப் பெயருடன் குறிப்பிடுகிறார்கள். இப்பெயர் மற்ற நூல்களுக்கு கிடைக்கவில்லை.

தமிழ் மொழிப் பெயர்ப்பு:

இப்போது வெளியிட்டுள்ள இம்மொழிபெயர்ப்பு மராத்தியில் மிக்க சிறந்ததாக உள்ள ஓர் நூலை மொழியாக்கப்படுவதற்கு தகுதியான நடையில் அமையவில்லை. மொழிபெயர்ப்பு ஆசிரியர், 'சுவாமிகள்' (மாதோப ரத்

ஞகரர்) பிரசங்கம் தமிழில் செய்ய தான் எழுதிவந்த தாக இம்மொழி பெயர்ப்பின் முதல் தசகம் இரண்டாம் சருக்கத்தில்' அறிவிக்கிருர் இதை எழுதிய கோபாலன். தாசபோதத்தின் தமிழாக்கத்தைக் கேட்க ஓர் காலத்தில் ஜனங்கள் ஆசை பட்டு இரத்திஞகர சுவாமிகள் இதைப் பிரசங்க வாயிலாகச் சொல்லி இருக்க வேண்டும் என ஏற்படுகிறது. மூல மொழியாக் கத்தை சிறிதும் பின்னப்படுத்தாமல் ஆங்காங்கு சிறு மாறுதல்களுடனேயே இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது ஆயினும் இரண்டாம்பாகத்தில்,வாக்கிய அமைப்புகளில் கூடியவரை சீர்திருத்தம் செய்து, மூலத்தின் சொற்களை யும் மாற்றிவிடாமல், பதிப்பிக்கக்பட்டிருக்கிறது. இந் நூல் தேவநாகரி எழுத்துக்களில் தமிழ் மொழியிலிருக் கிறது. ஆயினும் சரஸ்வதி மகால் நூல் நிலைய தமிழ்ப் பகுதியில் கிடைத்த ஓர் தமிழ் பிரதியும் இதை ஒத்து நோக்க உதவியுள்ளதாய் அமைந்தது.

சரஸ்வதி மகால் நூல் நிலையத்தின் மராத்திப்பகுதி யில் 153-ம் எண்கொண்ட ஏட்டுப்பிரதியில் தேவநாகரி எழுத்துக்களில் தமிழ் மொழிபெயர்ப்பு ஒன்று உளது. அதே போல் ஓர் பிரதி, தமிழ் எழுத்துக்ளிலேயே எழுதப்பட்டது, தமிழ் பகுதியிலும் இருக்கிறது.

முதற் தசகம், இரண்டாவது சமாஸத்தின் முதலில் பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது :

" இராம தாசபோதகத்தின் உரை - சுவமிகள் நினைத்து மாதோபாரத்திஞகர முன்னிலையாக அநேக அப்பிராணிகள் கடைத்தேறும் பொருட்டாக கட்டளை

யிட்டதினலேயே அருணசல சுவாமி கிருபையின் கேள்வியும் அவன் ரூபமான புல்லனுகிய அடியேன் அவர்கள் சுவன ரூபம்கொண்டவருக்கு அத்தியா ரோபமாய்ப் பெற்றபேர் கோபலன் என்று பேர்படைத்தெழுதிக் கொண்ட உரை - விண்ணப்பம். இதில்வளள்ல் எப்படி என்றல் பறை அறைந்த உலகத்தில் சப்தம் கேட்கப் படுகிறதே. அப்படி யாம்போல் அவர்கள் வள்ளலே யொழிய அடியேன் புல்லனிடத்தில் இல்லையே. ஆனது கொண்டு கேட்கும் மகாஜனங்களும், பெரியோர்களும், மகத்துக்களும் அனுபோக முடையவர்களாகையால் திருத்திக்கொள்ள வேண்டிய பொருத்தங்களுடைய தாமே. தங்கள் சபைக்கும், சபாநாயகர்களுக்கும், சகலபொது ஜனங்களுக்கும் பக்தபாவிகளுக்கும் சர்வ சித்தாளுக்கும் சகல பிராணிகளுக்கும் அடியேன் சாஷ்டங்கம்பண்ணி விண்ணப்பம்.''

மேற்கண்ட குறிப்பிலிருந்து 'கோபாலன் என்னும் ஓர் சிரத்தையாளர், ரத்தினகரர் தமிழில் பிரசங்கம் செய்யும்போது தான் எடுத்துக் கொண்ட குறிப்பு என தெரிகிறது. மாதோபா ரத்தினகரர் தஞ்சையில் உள்ள மகாராஷ்ட்டிர மடங்களில் ஒன்றின் தலைவர் என்பதும் அவர் ஹரிகதைகள், பக்திமார்க்க பிரசங்கங்கள் இவைகளை சொல்வது வழக்கம் எனவும் தெரிகிறது ரத்தினகரர் பண்டிதர் சந்து என்ற ஓர் சந்து தஞ்சையில் இப்போதும் அதே பெயருடன் இருக்கிறது. இதைத் தவிர அங்குள்ள ஒரு மடமும் இவர் பெயரால் இருக்கிறது. ரத்தினகர பண்டிதரால் இயற்றப்பட்ட சில நூல்களும் சகஸ்வதி மகாலில், மராத்திப்பகுதியில் இருக்கின்றன. இவைகள் எதிலுமே அவரைப்பற்றி

ஒரு விஷயமும் குறிக்கப்படவில்லை. சுவாமிகள் பிர சங்கம் செய்யும்போது குறிப்பு எடுத்துக் கொண்ட கோபாலன் என்பபவரைப் பற்றியும் போதிய தகவல் கள் கிடைக்கவில்லை.

இதை பதிப்பிக்க சந்தர்ப்பம் கொடுத்ததுடன், அவ் வப்பொது ஊக்கமும், உதவியும் அளித்த சரஸ்வதி மகால் கௌரவ காரியதரிசி ஸ்ரீ உ, அ. நாராயண ஸ்வாமி பி. ஏ. பி. எல். அவர்களுக்கும். இந்நூலை வெளி யிட ஒத்துழைத்த ‘உக்கடை ஸ்ரீ அம்பாள்’ அச்சகத் தினருக்கும் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

பொருளடக்கம்.

				பக்கங்கள்.
1. முகவுரை				
2. முன்னுரை			i	xx
3. பதினேரும் பீம தசகம்			*1*	**36**
சித்தாந்தம்	சர்க்கம்	1	1	5
நான்குவித தெய்வம்	,,	2	5	10
உபதேச	,,	3	10	13
விவேக இலட்சணம்	,,	4	14	17
இராஜகாரண	,,	5	17	20
மகுத்துவ இலக்ஷணம்	,,	6	21	23
சஞ்சல நதி	,,	7	23	26
அந்தராத்துமா விவரணை	,,	8	26	29
உபதேச பக்தி	,,	9	29	32
நிஜப்பிரகர்மம்	,,	10	33	35
4. பனிரண்டாம் வைராக்கிய தசகம்			36	70
விமல	சர்க்கம்	1	36	38
சோதினை	,,	2	38	42
தெய்வ பக்தன்	,,	3	42	45
விவேக வைராக்யம்	,,	4	46	48
ஆத்தும நிவேதனம்	,	5	49	51
சிருஷ்டிக் கிரமம்	,,	6	51	54

பக்கங்கள்.

விஷயத்தியாக	,,	7	55	58
காலநிர்ணய	,,	8	58	62
பிரயத்தின	,,	9	62	65
உத்தமபுருஷ இலக்ஷணம்	,,	10	66	70

5. **பதிமூன்ரும் நாம ரூப தசகம்** 71 108

ஆத்மானுத்ம விவேக சர்க்கம்		1	71	74
சஞ்சல ஆத்துமா	,,	2	74	78
சிருஷ்டி ரசனே	,,	3	78	80
பிரளய	,,	4	81	83
கதை	,,	5	84	86
லகு போதனே	,,	6	87	90
சோதினே விவறணே	,,	7	90	94
கர்த்தா	,,	8	94	99
ஆத்துமா	,,	9	99	104
கற்றுக்கொடுக்கிற	,,	10	104	108

6. **பதிநான்காம் அகண்டதியாக தசகம்** 108 158

நிஜப்ரகார போதனே சர்க்கம்		1	108	116
பிக்ஷை நிர்ணயம்	,,	2	116	119
கவி இலக்ஷணம்	,,	3	119	125
கீர்த்தனே	,,	4	125	130
ஹரிகதை இலக்ஷண	,,	5	130	134
சிங்கார	,,	6	135	139
அந்தணர் ராச்சிய பிரஷ்டாள்	,,	7	139	144

				பக்கங்கள்.	
	அகண்டதியான	,,	8	144	150
	சாசுவத	,,	9	151	154
	மாயா லக்ஷண	,,	10	155	157
7.	**பதினைந்து ஆத்ம தசகம்**			*158*	*203*
	சாதுரிய இலட்சணம்	சர்க்கம்	1	158	162
	நிசப்பிரசங்கம்	,,	2	163	166
	அந்தராத்துமா	,,	3	167	170
	சாசுவதப்பிரம்மம்	,,	4	171	174
	சஞ்சல	,,	5	175	179
	விவறணை	,,	6	180	183
	அகோரத	,,	7	184	189
	சூட்சம ஜீவன்கள்	,,	8	189	194
	பிண்டோற்பத்தி	,,	9	195	199
	சித்தாந்த	,,	10	199	203
8.	**பதினாறும் தசகம்**			*204*	*256*
	வல்மீக ஸ்தவனம்	சர்க்கம்	1	204	207
	சூரிய ஸ்துதி	,,	2	207	211
	பூமி ஸ்துதி	,,	3	212	216
	ஆப நிரூபணம்	,,	4	217	221
	அக்னி ஸ்துதி	,,	5	222	226
	வாயு ஸ்துதி	,,	6	227	232
	நிரூபண	,,	7	233	239
	ஆத்ம இலக்ஷணை	,,	8	240	244

பக்கங்கள்.

நாநா உபாசனை	,,	9	246	251
குணபூத நிருபணம்	,,	10	252	256

9. பதினேழாவது தசகம்
பிரகிருதி புருஷாள் 257 301

தெய்வபலாத்கார	சர்க்கம்	1	257	261
சிவசக்தி நிருபணம்	,,	2	262	266
சிரவண நிருபணம்	,,	3	267	271
அனுமான நிரஸனம்	,,	4	272	276
அஜ்பா நிருபணம்	,,	5	277	281
தேக ஆத்துமா இலக்ஷணம்	,,	6	282	285
உலக வாழ்க்கை	,,	7	286	289
தத்துவ ஆராய்ச்சி	,,	8	290	293
தனுசதுஷ்டயம்	,,	9	294	296
மூர்க்கர் - அறிவாளிகள் இலக்ஷண	,,	10	297	301

10. பதினெட்டாவது பல விஷயங்கள்
கொண்ட தசகம் 302 342

பலதேவதைகள் நிருபணம்	சர்க்கம்	1	302	306
சர்வஞ - சங்க நிருபணம்	,,	2	307	309
நிஸ்ப்ருஹ போதனை	,,	3	310	312
தேஹத்தின் முக்யத்வம்	,,	4	313	317
மூர்க்க சோதனை	,,	5	318	322
உத்தம புருஷ நிருபணம்	,,	6	323	326

			பக்கங்கள்.
ஜனஸ்வபாவ நிரூபணம்	,,	7	327 329
அந்தர்தேவதா நிரூபண	,,	8	330 333
நித்திரா நிரூபணம்	,,	9	334 335
சபை அவலக்குண நிரூபணம்	,,	10	336 342

11. பத்தொன்பதாவது போதனை தசகம் 343 388

எழுதும் வகை நிரூபணம்	சர்க்கம்	1	343 345
விரண நிரூபணம்	,,	2	346 349
மூர்க்க இலக்ஷணம் கூறியது	,,	3	350 353
பாக்ய சாலிகளின் இலக்ஷண	,,	4	354 358
தேகமான்ய நிரூபணம்	,,	5	359 363
புத்திவாத நிரூபணம்	,,	6	364 368
முயற்சி நிரூபணம்	,,	7	369 373
உபாதிகள் இலக்ஷணம்	,,	8	374 378
அரசியல் நிரூபணம்	,,	9	379 383
விவேக இலக்ஷணம்	,,	10	384 3 8

12. இருபதாவது பூர்ண தசகம் 389 440

பூர்ண பூர்ண நிரூபணம்	சர்க்கம்	1	389 395
படைப்பின் மூவகை இலக்ஷண	,,	2	396 400
சூக்கும சோதினை	,,	3	401 405

			பக்கங்கள்,	
ஆத்தும நிரூபணம்	,,	4	406	410
நான்குவகை இலக்ஷணம்	,,	5	411	415
ஆத்மகுண நிரூபணம்	,,	6	416	418
ஆத்ம நிரூபணம்	,,	7	419	423
தேக க்ஷேத்திர நிரூபணம்	,,	8	424	428
சூக்கும நிரூபணை	,,	9	429	433
விமல பிர்ம நிரூபணை	,,	10	434	440

இனிமேல் பதினோராம் பீம தசகத்தில்
முதல் சர்க்கப் பிரசங்கம்.

ஆகாசத்திலிருந்து வாயு ஆகிறது. இது பிரத்தியக்ஷமாய்த் தெரிகிறது. வாயுவிலிருந்து அக்கினி ஆகிறது. இப்போது சாவதானமாய் கேளுங்கள். வாயு கடினமாயுறைஞ்சப்படும். அதிலிருந்து உண்டானது அக்கினி. அந்த வாயுவிலிருந்து பிருதிவியானது. அது நானு பீஜ ரூபமென்று மறியவேண்டும். பீஜத்திலிருந்து உத்பத்தி. இது சுபாவமாயிருப்பது. ஆதியில், சிருஷ்டி கல்பனையாலுண்டானது கல்பனை ஆதியிலேயே யிருப்பது. அந்தக் கல்பனையிலிருந்து, மும்மூர்த்திகளுடைய காயமானது. நிச்சலத்தின் மத்தியில் சஞ்சலம். அதுவே கேவலமான கல்பனை. அது எட்டுவிதப் பிரகிருதியின் மூலம், கல்பனையின் ரூபம். கல்பனையே எட்டுவிதப் பிரகிருதி ஆகிறது. பின்னுமோ, எட்டுவிதப் பிரகிருதியே கல்பனையின் உருவம் வேர் முதல் நுனிவரைக்கும் உத்பத்தி எட்டு விதமென்று அறியவேண்டும். ஐந்து பூதம், மூன்று குணம், இரண்டுங்கூடி யெட்டு ஆனது. ஆனபடியினாலே, எட்டுவிதமென்று சொல்லப்பட்டது ஆதியில், கல்பனை ரூபமானது மேல் படர்ந்தது. அப்பால், சிருஷ்டி ரூபமாய்க் கேவலம் ஜடத்துவத்துக்கு வந்தது. ஆதியில் மூலமாய்கை யானது. திரிகுணம் பிறந்ததே. குண மாய்கை. சிருஷ்டி ரூபமாய் ஜடத்துவ மடைந்தது அவித்தை என்

கப்பட்ட மாய்கை. பிறகு நால்வகை யோனியானது நான்கு வாக்காய் விஸ்தாரப்பட்டது. நாலு யோனிகள், நாலு ரூபமாய்ப் பிரகடமானது இப்படி உண்டாயிற்று.

இப்போது, [1]சம்வாறங் கேளுங்கள் முன் தசகத்தில், விஸ்தாரமாய்ச் சொல்லியிருப்பது. ஆனாலுமிப்போது, சுருக்கமாய்ச் சொல்லப்படும். கேழ்கிறவாள், சித்தம் வைத்துக் கேளுங்கள்.

"நூறு வருஷம் மழையில்லாமல் போம். அதினாலே, ஜீவ சிருஷ்டி வத்திப்போம்." இப்படியாக கல்பாந்திரத்தைப் பற்றி சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. "சூரியன் பனிரென்றுகளை யோடே தஹிப்பான். பிருதிவி சாம்பலாய்ப் போம். அப்பால் அந்த சாம்பல் ஜலத்தில் கறைந்துபோம். அந்த ஜலத்தை அக்கினி [2]சோஷிக்கும். அந்த அக்கினியை வாயு அறையும். அந்த வாயுவும் நிராகாரத்தில் காணாது போகும். அப்பால் அந்த நிராகாரம் எப்படியிருந்ததோ, அப்படியே இருக்கும் இப்படி சிருஷ்டி, சம்ஹாரமானது, முன்னாலே விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டது.

மாய்கை ஒழிந்ததினால் சொரூபஸ்திதியே மிஞ்சியிருக்கிறது. எவ்விடத்தில் ஜீவன் சிவன், பிண்ட பிர்மாண்டம், யென்கப்பட்ட கோட்பாடுகள் வத்திப்போனதோ, மாய்கை எனும் அவித்தை யினுடைய கூத்துத் தெளிந்து போனதோ, அப்போது விவேகத்தினாலேயே க்ஷயஞ் சொல்லப்பட்டது. இதற்கு விவேகப் பிறளயம் என்றும் பேர். இதை விவேகிகளே அறிவாள். மூர்க்கனுக்குக்குத் தெரியவராது. சகல சிருஷ்டியும் சோதித்தால், ஒன்று சஞ்சலம், ஒன்று நிச்சலம். சஞ்சலத்துக்குக் கர்த்தாவும் சஞ்சலம். சஞ்சலரூபீ.

---

1. சம்ஹாரம் — உள்ளடக்குவது. 2. வற்றவைக்கும்.

எவன் சகல சரீரத்திலேயும் நடைபடுகிறானோ எவன் சகல [1]கருத்துருவத்தையும் ஏற்கிறானோ, மேலும் அரசன் முதல் பேதைகள், பிர்மாதிகள் சகலத்துக்குள்ளேயும் இருந்து, உலகை நடைபெற வைக்கிறவனொருவன் நானா சரீரங்களிலேயும் இந்திரிய வழியாய் நடப்பிக்கிறானோ, அவனைத்தான் பரமாத்மா வென்பார்கள். பின்னுமோ சகலகர்த்தாவென்றும், சொல்லுவார்கள். ஆனாலும் அவன் நசிப்பான் இந்த சோதனையை விவேகி அறிவான். சுவானத்து உடலில் இருந்து கொண்டு உறுமுகிறானோ, பன்றிக்குள் எவனிருந்து முகருகிறானோ, கழுதையினுள்ளே நுழைந்து, அட்டகாசமாய் கத்துகிறானோ அந்தபரமாத்வை ஜனங்கள் நானா தேகமாகக் காண்பான். விவேகி [2]தேகாந்திரத்தில் பார்ப்பான். இந்தப்பிரகாரம் பண்டிதாள் சமதெரிசனம் பண்ணுவாள். தேகங்கள் பார்க்கையில், தனித் தனியேயிருப்பது. ஆனாலும் அந்தரங்கமொன்றேயானது. ஆனபடியினால் எல்லா பிராணிகளுக்கும் ஒரே அந்தரமாய்க் காணப்பட்டது.

அநேகப் பிராணிகள் உண்டாகிறாள். ஆனாலும், ஒரேகலையினால் நடக்கப்படுகிறாள். அதற்குப்பேர் 'ஜெகஜ்ஜோதி' அறிவின்கலை. காதில் நானாசப்தங்களையறிகிறார்கள். [3]தொக்கில் சீதள, உஷ்ணமறிகிறார்கள். கண்ணிலிருந்து நானாபதார்த்தங்களைப் பார்க்கிறார்கள். நாக்கிலிருந்து ருசியறிகிறார்கள். [4]ஆக்கிராணத்திலிருந்து வாசனையறிகிறார்கள். கர்ம இந்திரியங்களிலிருந்து நானா விஷயங்களுடைய ருசியைப் பார்க்கிறார்கள். சூட்சம ரூபமாய் ஸ்தூலத்தைக் காப்பாத்துகிறார்கள். நானா சுகதுக்கங்களைப் பரீக்ஷிக்கிறார்கள். அதை அந்தரசாக்ஷி, அந்தர ஆத்துமாவென்றும் சொல்கிறார்

1. படைக்கும் தொழிலை. 2. உடலைவிடமாறாக. 3. துவக் =மேல்தோல். 4. மூக்கு.

கள். ஆத்துமா, அந்தர ஆத்துமா, விஸ்வாத்துமா, சைதன்னியம், சர்வாத்துமா, சூட்சமஆத்துமா, ஜீவாத்துமா, பரமாத்துமா, திருஷ்டா, சாக்ஷி, சத்தா ரூபம், விகாரத்துக்குள்ளேவிகாரீ, பின்னும் எப்போதும் நாஞவிகாறத்திற்குக்காரணமானது. அதை விவேகஹீனுளான பிச்சைக்காரர்கள் "வஸ்து"வென்பார்கள். சர்வத்தையும் ஒண்ணுய்ப்பார்க்கிறுன். மூழுமையும் பொய்யானஸ்திதீ. அது, சஞ்சாலத்துக்குள்ளே சஞ்சலம், மாய்கை, அவள் பொய்யானவள்.

நிற்சமாய் சாஸ்வதமாயிருக்கிற பரப்பிர்மம் ஒன்று ஆனதிஞல் நித்தியாநித்தியம் விவேகம்அடையவேணும். அறிவு அதுவே ஞானம். அறியாமை அதுவே அஞானம். ஜென்மம் எடுக்கிறஜீவன் வாசனையுடையது. ஐக்கியமான ஜீவன் பிர்ம்மத்தின் அம்சம். அவ்விடத்தில் பிண்டபிர்மாண்டம் எனும் பாகுபாடு ஒழிந்துபோம். இவ்விடத்தில் விசேஷமான நான்குவித ஜீவன்களும் சொல்லப்பட்டன. இப்போது இவைபிருக்கட்டும். இவை எல்லாம் சஞ்சலம். சஞ்சலஞ் சகலமும் போய்விடும்.

நிற்சலம் ஆதியிலும் அந்தியத்திலும் நிற்சலமாக்கும் ஆதியில், மத்தியில், அந்தியத்திலும் எந்த வஸ்து சமமாயிருப்பதோ, அதுநிர்குணம், நிற்விகாரி, நிறஞ்சனம். நிஷ்பிரபஞ்சமாகும். உபாதி நீக்கினநிஞல், தத்துவமாய் ஜீவசீவாளுக்கு ஐக்கிகை, விவரித்துப் பார்க்கப் போஞல், உபாதியேது? இருந்தாலும் அறிகிறது அத்தினையும் ஞானம், ஆஞலும், விஞ்ஞானமாய்விடுகிறது. மனிதருல் உன்மனத்தில் எந்தப்பிரகாரம் அறியவேணும்? விருத்திக்கு நிவிருத்தித்தெரியாது. குணத்துக்கு நிற்குணப் பிராப்தியேது? ஆனதுகொண்டு சாதகாள் குணுதீதமாகிருள். அப்போது நன்கு விளங்கும்.

[1]ஸ்றவணத்தைப் பார்க்கிலும் மனனம் பெரியது. மனனத்தினுல் சராச்சாரந் தெரியவரும். [2]நிஜத்தியாசத்தினுல். [3]சாக்ஷரத்காரம். [4]நிசங்கவஸ்து நிற்குணத்தில் எது [5]அனன்ணிதையோ, அதுவே சாயுச்சியமுக்தி. இவ்விடத்தில் வாச்சாம்சம், இலட்சாம்சம் போதுமானது அப்போது அலட்சியத்தில் இலட்சாம்சமிருந்தது சித்தாந்தத்தில் பூர்வபக்ஷமேது? ஆனபடியினுலே, பொய்யான உபாதியிருக்கட்டும். அதுவேசககசமாதி. ஸ்றவணத்தினுல், நிச்சயத்தின் புத்திதெளிந்து கொள்ளவேணும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
சித்தாந்த சர்க்கம் - 1. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினேரும் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

ஒன்று நிற்சலம், ஒன்று சஞ்சலம், சஞ்சலத்தில் சகலமும் சிக்கப்பட்டன. நிற்சலம், எப்படியிருக்கிறதோ அப்படியே நிற்சலமாயிருப்பது. நிற்சலத்தின் விவேகம்,

1. காதினுல் கேழ்ப்பது. 2. மெய்ப்பொருளைப் பற்றிய ஓயாவிசாரம். 3. கண்ணிற்குப் புலனுமை. 4 தனித்துநிற்கும் பொருள். 5. ஒப்பில்லாததோ.

பார்க்கத்தக்கவனுய் இலட்சத்தில் ஒருவர் கிடைக்கலாம். நிற்சலத்தைப்போலவே நிற்சலத்துமகம், ஆனபடியி ஞலே, நிற்சலமே அவன். ஆஞலோ, நிற்சலத்தின் பேச்சுகள் சொல்லிக்கொண்டு மறுபடி சஞ்சலத்தின் கிட்ட ஓடுகிறூர்கள் பலர். ஆனதுகொண்டு, சஞ்சல சக் கரத்திலிருந்து விடுபட்டுப்போகிறபேர் கொஞ்சம் பேரா கும். சஞ்சலத்தில் சஞ்சலம் பிறந்தது. சஞ்சலததிலே ஜன்மம் வரைக்கும் வளர்ந்தது முழுமைக்குஞ் சஞ்ச லமே, வியாபித்தது. பிரிதிவிமுழுமைக்கும் சஞ்சலத் தின் சேர்மானம். பண்ணப்படுகிறது அத்திீனகாரிய மும் சஞ்சலத்திலேயே சேறும் அந்த சஞ்சலத்தை விட்டுவிட்டு, நிற்சலத்தில் பிரவேசிக்கிறவனுய் எவனிருக் கிருன்? சஞ்சலம் நிற்சலப்படாது. நிற்சலம் ஒரு நாளுஞ்சலியாது.

நித்தியானித்திய விவேகத்திஞல், ஜனங்களுக்கு யெவ்வளவோ தோணும். எவ்வளவுத் தோணிஞலும் அவன் தோணப்படான். எவ்வளவு அறிந்தாலும் அவனே அறியமாட்டாள். எவ்வளவாகிலும் அறியப் பட்டவஞஞலும், கிஞ்சித்மாத்திரம் சஞ்சலமு உடைய வனுவான். சந்தேகம், அனுமானம், பின்னும்பிறமை, இது முழுமைக்கும் சஞ்சலத்துக்ருள்ளே அடக்கம் ஒரு காலமும் நிற்சலத்தில் ஸ்றமமில்லே. இந்த வர்மம் தெரிந் துகொள்ளவேண்டியது. சஞ்சலாகாறம் அத்திஃனயும் மாய்கை. அது பொய்யானது. அது இல்லாது போய் விடும். இவ்விடத்தில் சிறிதுபேர் உண்மையென்று யெண்ணவேண்டிய காரியமில்லே. முழுமைக்கும் மாய்கை விஸ்தாரப்பட்டது. எட்டுவிதப் பிரகிருதி படர்ந்தது. சித்திரம் விசித்திரமாக நாஞ ரூபமாய் விகாறப்பட்டது

நாஞ உத்பத்தி, நாஞவிகாறம், சின்னவை, பெரி யவை, நாஞப் பிராணிகள், நாஞப் பிரகாரமுடைய

பதார்த்தங்கள், நானா ரூபமுடையவை, விகாறமுடையதே விகாறப்பட்டன. சூட்சமமாயிருந்ததே ஜடத்துக்கு வந்தது. அளவில்லாத [1]யேதுவாய் தத்துவமாய்க் காணப்பட்டது. அப்பால் நானா சரீரங்கள் பிறந்தன, நானா நாமங்கள் வைக்கப்பட்டன, பாஷானுசாறமாய்க் கொஞ்சங்கொஞ்சந் தெரியவந்தது. அப்பால் நானா ரீதிகள், நானா தண்டங்களாயின. ஆசாரங்களும் ஒன்றைப் பார்க்கிலும் ஒன்று. இப்படி லோகா [2]சாறமாய் சகல ஜனங்களும் நடக்கத் தலைப்பட்டார்கள். எட்டுவிதப் பிரகிருதியின் சரீரங்கள் சிறிதும், பெரியதுமாய் நிற்மாணமானது. மேல் தனத்தில், தன்னுடைய [3]பிரகாரமாய் நடக்கத்தலைப்பட்டார்கள்.

நானா மதங்களுண்டாயின. நானா பாஷாண்டங்கள் வளர்ந்தன. நானா பிரகாரமுடைய நானாக் கூத்துகள் கிளம்பின. பிரவாக மெப்படிப் பிறப்பட்டதோ, அப்படியே உலகம் நடந்தது. எவன் எவனை விலக்குவான்? ஒரு விஸ்வதையுமில்லை. ஒருவரைப் பார்க்கிலும் ஒருத்தர் பெருத்தவர். அதில், எவன் மெய்யானவன், எவன் பொய்யான்?

இது யார் அறிவாள்? ஆச்சாறம் வெகுசிக்கில் விழுந்தது. சிறிது, வயதுக்காக முழுகிப் போனது. அபிமானத்துக்காக முழுமைக்கும் மேலுக்கு மேலாயானது. தேவதைகள் மிகுதியும் ஆனார்கள். தேவதைகளுடைய கூத்துகளுண்டாயின, பூதங்கள், தேவதைகளுடைய கூட்டாளிகள். ஒன்றுயானது. முக்கிய தெய்வமானது தெரியவராது. ஒன்றுக்கு ஒன்று கூடாது. அடங்காமல் ஒருத்தருக்கொருத்தர் வசப்படமாட்டாள்.

---

1. காரணமாய். 2. சாஸ்திர விதிகளின்றி உலகத்தில் உள்ளோர். 3. சுய மனப்போக்கின்.

இப்படி விசாரணை கெட்டுப்போனது. எவன் சராச் சாரம் பார்க்கிறான்?

எது சிறிது எது பெரிது, இது தெரியவே தெரியாது. தேவதைகளுடைய கூக்குறலால் சாத்திரங்கள் நிறம்பின. ஜனங்கள் [1]காம்மியத்தின் விர்த்தியை பிடித்துக்கொண்டு விழுந்துயிருக்கிறார்கள். இப்படி முழுமையும் கெட்டுவிட்டது. சத்தியம் அசத்தியம் காணுமல் போனது. நாலு பக்கத்திலும் முழுமையும் அனுசாரமாய்ப் போனது. மதத்துக்கு மதங் கூக்குறலானதினுல் ஒருத்தருக்கொருத்தர் கேழ்கமாட்டாள். எவன் எந்த மதத்தில் அகப்பட்டானே, அவனுக்கு அதுவே பெரியது. அசத்தியத்தின் அபிமானம் அதினுல் [2]பதனமடையவேணும். ஆனபடியினுவே, ஞானமுடைய ஜனங்கள் சத்தியத்தை சோதிக்கிறுள். உலகத்தில் சகல ஜனங்களும் நடந்துகொள்ளுவது ஞானிகளுக்கு [3]கரதலாமலகமாய்த் தெரியும்.

இப்போது, கேவலம் விவேகிகளே கேளுங்கள். ஜனங்கள் எந்த வழியாய்ப்போகிறுள்? பின்னும் எந்த தேவதையைப் பஜ்னம் பண்ணுகிறுள்? இந்த உண்மையான சோதினே சாவதானமாய்க் கேளுங்கள். [4]மிருத்திகை, தாது, [5]பாஷாணுதிகள். இப்படிக்கு அனேகம். பிரதிமை: இதில் பாஷாணமுடைய தேவதைகள் அதிகம். வெகு ஜனங்களுக்கு நானு தெய்வத்தினுடைய அவதாரத்தின் சரித்திரங்கள் கேட்டுட் பழக்கம், சிறிது பேர் நிறந்தரமாய் ஜெபம், தியானம், பூசை பண்ணுகிறுர்கள் சிறிது பேர், " சகலத்தினுடைய அந்தர ஆத்துமாஒன்றே. விசுவத்தில் நடைவடை

---

1. பலனைக்குறித்து செயல்படும் தன்மை. 2. வீழ்ச்சி. 3. உள்ளங்நெல்லிக்கனி. 4. மண். 5. கல்.

படுகிற விசுவாத்துமா திருஷ்டா சாக்ஷி, ஞானாத்துமா", என ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஒருவன் உபாசினை, நிற்மலம், நிற்சலமுடையது. அவனை அந்த உபாசினையை, சஞ்சலமாக்கான். அவன் அனன்னிய பாவத்தினால், அவனே கேவலம் ஒன்றான வஸ்துவாக பாவனை பண்ணுகிறான். நானாப் பிரதிமை இரண்டாவது அவதார மகிமை: மூன்றாவது அந்தராத்துமா: நான்காவது நிற்விகாரி: இப்படி இது நான்கு வித தெய்வம். உலகத்தில் சுபாவீகம். இதுவினா, அந்தர்ப்பாவ ரகசியம். வேறு எங்கேயுமில்லை முழுமையும் ஒன்றாய் மானிக்கிறாள். அவாள் சாட்சி தேவதையை அறிகிறாள். ஆனாலும் எட்டு விதப் பிரகிருதி என்று அறிந்து கொள்ளவேண்டியது. பிரகிருதி மத்தியில் இருக்கிற தெய்வமெதுவோ, அது பிரகிருதியினுடைய சுபாவமுள்ளதே யாகும் ஆனது கொண்டு, பாவாதீதரான மானுபாவனை விவேகத்தினாலறிய வேணும்

எவன் நிற்மலத்தின் தியானம் பண்ணுவானோ, அவன் நிற்மலமேயாவான். எவன் எதைப் பஜிப்பானோ, அவன் அந்த ரூபமென்று அறியவேணும். க்ஷீரமும், [1]உதகமும் பிரிக்கிறாள், அவாள் அன்னமென்று சொல்லப்படுவாள். எவன் சலிக்கிறதைப் பஜிப்பானோ அவன், சகசமாய்ச் சலிப்பான். எவன் நிற்சலமாகப் பஜிப்பானோ, அவன் நிற்சலனேயாவான். பிரவிர்த்தி போலவே நடக்கவேணும். ஆனாலும் கருத்

1. நீர்.

தில் சாஸ்வதம் அறியவேணும். சத்தியமறிந்துகொண்டு ஜனங்கள் போலவே நடக்கவேணும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால உபதேச விளக்கத்தில் நான்கு வித தெய்வங் கூறிய சர்க்கம் 2 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினோராம் தசகத்தில் மூன்ரும் சர்க்கப் பிரசங்கம்.

பல ஜென்மங்களுக்குப்பிறகு [1]ஆகசமீகமாய் நர தேகம் அடையப்படும் ஆனப்படியினலே, இவ்விடத்தில் நீதிஞாயத்துடனே நடக்கவேண்டும். [2]பிரபஞ்சம் சீரய் பண்ணவேண்டும். பரமார்த்த விவேகத்தைப் பார்க்க வேனும். அதினல், [3]உபயலோகமும் சந்துஷ்டமாகி விடும்.

ஆயுசு நூருக நேமிக்கப்பட்டது. அதில் பாலியம் அறியாமையினல் போகிறது. தாருணியமோ, விஷயத்தில் சிலவழிந்துபோனது. விர்த்தாப்யியத்தில் நானு ரோகங்கள், கர்மபோகங்களும் போகிக்க வேண்டியதா

---

1. முன்பின் தெரியாமல். 2. இல்லறம். 3. இருதர்மங் களும்.

கின்றன. பகவானுடையயோகம் எப்போது செய்கிறது?

இதில், இராஜீகம், தெய்வீகம், ஏக்கங்கள், சிந்தைகள், அன்னவஸ்திரயோசினை, தேகமமதை; நானு பிரசங்கத்தினால், இருந்தாப்போலேயிருந்து, ஜென்மம் வீணாய்ப்போனது. ஜனங்கள் பிறந்து இறந்துபோகிறார்கள். தன்னுடைய பெரியவாளும் போனார்கள். இந்த சோதனை, அறிந்தறிந்து என்ன நிச்சிந்தை எண்ணப்பட்டது? வீடு அக்கினியில்பட்டுவேகிறது. பின்னும் சாவகாசமாய்த் தூங்கினால் அவன் ஆத்துமஹத்தி செய்பவனேயல்லாமல், எப்படி நல்லவனென்று சொல்வது? புண்ணிய மார்க்கம் முழுமையும்முழுகி, [1]பாபசங்கரம் மிகுதியுமானது. மேல் எமயாதினையின் [2]இழுப்புக்கடினமானது. ஆனபடியினாலே, இப்படி நடக்கக்கூடாது. வெகுநீதியாய் நடக்கவேண்டும். இகலோகம் பரலோகமும் இரண்டையும் அனுபவிக்கவேண்டும்.

[3]ஆலசியத்தின் பலம் உண்மையானது. கொட்டாவி கொண்டு நித்திரை வந்துவிடும். அதில், ஆலசியமுடைய ஜனங்களுக்கு சுகமென்று பிரியமாயிருக்கும். மறுபடி அக்கரை உண்டாகையில் கஷ்டப்படுவார்கள் ஆனாலும், சுகம் வளர்ந்துகொண்டேவரும். [4]எத்தினத்தினாலே சுகமடைவார்கள். ஆலசியத்தினாலே வெறுப்பும், சுகம் பரிகொடுக்கப்படுகிறது. ஆலசியத்தினாலேயே பிரயத்தினம் முழுகடிக்கப்படுகிறது. ஆலசியத்தினால் அதிஷ்டஹீனத்தின் [5]குறிபிரகடமாய்விடும். ஆனபடியினாலே, ஆலசியமில்லாமல் போகவேண்டும். ஆனால்தான், வைபவம் அடைய முடியும். இகபரத்திலும் ஜீவனுக்கு சமாதானம் கிட்டும். ஆனபடியினாலே, எந்தயெத்தினம்

1. சேமிப்பு. 2. அல்லல் சகிக்க முடியாதது. 3. சோம்பல். 4. முயற்சி. 5. வெளித் தோன்றும்.

பண்ணவேண்டுமோ, அதை இப்போது கேளுங்கள். ஒரு நிமிஷமாத்திரம் அந்தக் காரணஞ் சாவதானம் பண்ணிக்கொள்ளுங்கள்.

பிராதக்காலமே எழுந்திருக்கவேணும். [1]எவ்வளவாகிலும் பாடாந்திரங்கள் பண்ணவேண்டும். சக்திக்குத்தக்கதாய், பகவானை நினைக்கவேண்டும். நடமாட்டமில்லாவிடத்தில் மலோபாதைக்குப் போகவேணும் அப்பால், நிர்மல ஜலத்தில் சௌச ஆச்ச மன்னியம் பண்ணவேணும். முகங்கழுவிக் கொண்டு பிராதஸ்நானம், சந்தியாவந்தன், தர்ப்பணம், தேவதார்ச்சனை, பிறகு வைசுதேவஉபாசினை; இவைகளை [2]எதாயோக்கியமாய்ப்பண்ணவேண்டும். அப்பால், ஏதாகிலும் பலகாரம் பண்ணவேண்டும் பிறகு [3]சமுசாரகாரியம் பார்க்கவேண்டும். நல்லவார்த்தைகளினால், சகலஜனங்களுடைய அன்பைக் காப்பாத்திக் கொள்ளவேண்டும் எவன் எவனுக்கு எந்தெந்த காரியமோ அதில் ஜாக்கிறதையாயிருக்கவேண்டும். அதுவிட்டு, துச்சித்தத்தினால் பொய்கள், பைத்தியமான காரியங்களை செய்கிறான். ஆனதினாலே, மோசம் போகிறது, தப்புகிறது, மறக்கிறது, சிந்தனை செய்கிறது, நினைப்புவந்தால் கஷ்டப்படுகிறது; இவைகள் துச்சிதத்தின் பயன்கள் ஆலசியத்தின் ரொக்கமான சோதினை.

சாவதானமாய் மனம் ஏகாக்கிறமமாயிருந்து பிறகு போஜனம் பண்ணினால் ருசி தோணும். மேல், சாப்பாடானதின் பிறகு கிரந்தகங்களைப் படிக்க வேண்டும். விவறணை பண்ணவேண்டும் ஏகாந்தத்திலிருந்து நானாக் கிரந்தகங்கள் விசாரணை பண்ணவேண்டும். செய்தால் தான் பிராணி சமத்தனாகிறான். இல்லாவிட்டால், மூர்க்கனாயிருந்துவிடுகிறான். சமர்த்தனை ஜனங்கள் நன்று

---

1. நிறம்ப. 2. சாஸ்திரங்கள் கட்டளைப்படி. 3. தினசரி

கச் சாப்பிடுவாள். இந்த மூர்க்கன் தீன ரூபமாய் முகம் பார்த்துக்கொண்டேயிருப்பான்.

அதிர்ஷ்டவானுடைய இலட்சனங் கேளுங்கள். அவன் க்ஷணப்பொழுது வீணாய்ப்போக்கான். பிரபஞ்ச விவசாயத்தின் ஞானம் நன்றாய்ப் பாருங்கள். முன்னமே தேடுவான், பிறகு சாப்பிடுவான். பின்னையோ, சிக்கிக்கொண்ட ஜனங்களை விடுதலை பண்ணுவான். [1]சரீரக் காரணத்தினாலேயேசேர்ப்பான். மேவும் தர்ம சிரத்தை, புராண ஸ்ரவணம். ஹரி கதை, சாஸ்திரப் பிரசங்கம்: இப்படி, இரண்டு பக்கங்களிலும் க்ஷணப்பொழுதும் வீணாய்ப்போக்கான். இப்படி எவன் சர்வ சாக்கிரதையுடையவனோ, அவனுக்கு ஆலசியம் என்கப்பட்ட துக்கமேது? விவேகத்தினால் தேக புத்தியின் சம்பந்தம் அறுந்துபோனது. அவனுக்கு இருக்கிறதவ்வளவும், தெய்வத்தினுடையது என்று திடநம்பிக்கை அந்த நிச்சயத்தின் நடத்தை நடக்கிறான் இந்த ரீதியாய் ஏக்கத்தின் வேர் அறுபட்டுப்போகும். பிரபஞ்சத்தில் சுவர்ணம் வேண்டியது. பரமார்த்தத்தில் பஞ்சீகரணம், மகாவாக்கியத்தின் விவரணை பண்ணினதினால் விடுபடுவான். கர்ம உபாசினை, ஞானம்: இதினால் சமாதான மேற்படும் பரமார்த்தத்தின் சாதனம் அதுவே.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
உபதேச சர்க்கம் 113—11
3 முடிந்தது.

முற்றும்.

---

1. தேகம் உள்ளவரை அதை பாதுகாக்க வேண்டிய கடமையினால்.

ஸ்ரீ ராமர் கர்த்தர், ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினோராம் தசகத்தில்

4-ம் சர்க்கப் பிரசங்கம்.

பிர்மம், நிருகாரம், ககனம் போலவே விபர[1]முடையது. விகாறங் கிடையாது. நிற்விகார மெதுவோ, அதுவே பிர்மம். பிர்மம்யென்ருல் நிச்சலம்.

அந்தர ஆத்துமா சஞ்சலம், கேவலமாய், திர்ஷ்டா சாட்சியென்று அதற்கு சொல்லப்படும். அந்த அந்தர ஆத்துமாவென்ருல் தேவதை. அதின் சுபாவம் சஞ்சலம். உள்ளிலிருந்துகொண்டு சகல ஜீவன்களையுங் காப்பாத்துகிருன். [2]அதுவிஞ, தேகம் வீண். அவனலேயே யாதொரு பதார்த்தமும் தெரியவரும். கர்ம மார்க்கம், ஞான மார்க்கம், உபாசினை மார்க்கம், சித்தாந்த மார்க்கம், பிரவர்த்தி மார்க்கம், நிவிர்த்தி மார்க்கம்: அந்த தெய்வமே நடப்புவிக்கிறது. சஞ்சலம் விஞ, நிச்சலந் தெரியவராது சஞ்சல மாஞல், ஸ்திரமாய் நிற்காது. இந்த விசாரணையைச் செவ்வைய்பாய்ப்படச் செய்யுங்கள்

சஞ்சல நிச்சலத்தின் சந்தி, அங்கேயே புத்தி தட்டுக் கெட்டுப் போகிறது. கர்ம மார்க்கத்தின் விதியெதுவோ, அதைக் கடைப்பிடிப்பது கிடையாது. இந்த சகலததுக்கும் தெய்வமே மூலம் தெய்வத்திற்கும், அடியுமுடியுங் கிடையாது. பரப்பிர்மம் நிச்சலம். நிற்விகாரி. பின்னுமோ, விகாரிக்கும். இதை, ஒன்றுயென்று சொல்லுகிறவன் அவன் விசாரணை பார்க்கப் பார்க்கையிலே

1. ஆகாயத்தைப்போன்று விஸ்தாரமானது. 2. இல்லையேல்.

பிரிந்து போகிறது. சகல பரமார்த்தத்தின் மூலமானது, கேவலம் பஞ்சீகரணம், கேவலமான மகா வாக்கியம் அதுவே. மேலும் பிரபஞ்சளம் பண்ணவேணும்.

முதல் தேகம், ஸ்தூலகாயம், பின்னும் எட்டாந் தேகம். மூலமாய்கை, இந்த எட்டு தேகமுமில்லாது போனல், விகாரமேது? ஆனபடியினலே, விகாரி மெய் யன் போலவே செய்யும் செப்படி வித்தையாக்கும். ஒருவன் தெரிந்துகொள்ளுவான். ஒருவன் மெய்யாய் எண்ணுகிறன். உத்பத்தி, ஸ்திதி, சம்வாரம்: இதற் குத் தனிதனியேயிருப்பது, நிற்விகாரம்: இது தெரிய வேண்டியதற்காக சாராசாரம் விவேகம் பண்ணப்பட் டது. சாராசாரம் இரண்டும் ஒன்று பட்டால் அவ்விடத் தில் விவேக மிச்சமேது? பரீக்ஷை செய்தறியார்கள் ஏழைகள், பாபீ, அதிஷ்டஹீனள்.

எதுவும் ஒன்றே அது விஸ்தாரப்பட்டது. அது, அந்தர ஆத்துமாவென்று சொல்லப்பட்டது. அது, நாள விகாறமுடனே விகாறப்பட்டது அது நிற்விகார மல்ல. அது இப்படிப் பிறகடமாயிருக்கிறது. தன்னு டைய சோதினையினல் பார்த்தால், என்ன இருக்கும், எது இராது: இவைகள் தெரியவராது. எது யெப் போதும் ஆகிறதும், போகிறதும், எது சர்வகாலமும் சம்வாறப்படுகிறதுமாய் இருக்கிறதோ அதுகளுக் குள்ளே பிரகடமான சோதினக்கு வருகிறது. ஒருத் தன் அழுகிறன்: ஒருத்தன் தத்தளிப்பான்: ஒருவன் ஒருவனுடைய மென்னியைப் பிடிப்பான்: [1]க்ஷாமத்தால் அடிபட்டு வயிற்றுக்கு வீங்கினவனைப் போவான்: ஒருத் தருக்கொருத்தர் இழுத்துப்பரித்துக்கொண்டு நிற்பாள். ஞாயமில்லே, நீதியில்லே, இந்த ஜனங்கள் இப்படி நடக் கிறர்கள். எல்லோரும் சாரமென்பாள். அவாள்

1. பஞ்சத்தால்.

விவேகஹீனுள். கற்களை விட்டுப்போட்டு, தங்கத்தை யெடுத்துக்கொள்ளவேண்டும். மண்ணைப் போட்டுவிட்டு அன்னஞ்சாப்பிடவேண்டும். இப்படியிருக்க, [1]ஆபாசத்திருல் முழுமையும் சாறமென்கவேண்டும் ஆனபடியினுலே, இந்த விசாரணை பண்ணவேண்டும்.

சத்திய மார்க்கமெதுவோ, அதுவே கடைபிடிக்க வேண்டும். வேகத்திருல் இலாபம் அறிந்து வாங்கிக் கொள்ளவேண்டும். சாறமும், கூழாங்கல்லும் இது இரண்டும் ஒன்ருய் எண்ணினதேயாகில் அவ்விடத்தில், பரீக்ஷைக்கு இடமேது? ஆனபடியினுலே, சதுராளானவாள் பரீக்ஷை பண்ணவேண்டும் எவ்விடத்தில் பரீக்ஷையின் [2]அபாவமே அவ்விடத்தில், அடியும் பிடியுமாயிருக்கும். சகலமும் ஒன்ருக எண்ணுகிறது மூடத்தனம். எதை ஒப்புக்கொள்ளலாமோ அதை ஒப்புக்கொள்ள வேண்டும் ஒப்புக்கொள்ளாததை விட்டுவிடவேண்டும். உயர்வு, தாழ்வு அறிய வேண்டும். இதனுடைய பேர் ஞானம்.

சம்சாரமென்கிற சந்தைக்கு வந்தாள். அதில், சிறிது பேர் லாபம்பெற்று மிகுதியும் பாக்கிய வந்தாளாஞர்கள். சிறிது பேர் மோசம் போனுர்கள் முதலும் போய்விட்டது. ஆனபடியினுலே, அறிந்தவாள் இப்படிப் பண்ணக்கூடாது. எது சாறமோ, அதையே சோதித்து வாங்கிக்கொள்ள வேண்டும். அந்த வாந்தியைப் பிராஞ்சனம் பண்ணிஞலது சுவானத்தின் இலட்சணம் அவ்விடத்தில் சுகியுடைய பிராமணன் என்ன பண்ணுவான்? எவாள் எப்படி சஞ்சிதம் பண்ணிஞளோ, அவாளுக்கு அப்படியே லபித்தது எது அப்

1. பொய்த்தோற்றத்திஞல். 2. பரீக்ஷை இல்லையோ.

பியாசத்தில் விழுந்து வொட்டியிருப்பதோ. அது விட்டுப் போகவே மாட்டாது. சிறிது பேர் அமேத்தியத்தை வாறுகிறுள். அவனவன் தன் தன் விர்த்தியின் அபிமானத்தைப் பிடித்துக்கொள்ளுகிறுன். ஆனபடியினுலே, எல்லோரும் ஸ்ரவணமனனம் பண்ணினதே பண்ண வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
விவேக இலட்சணம் கூறியது.
சர்க்கம் 4 முடித்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினேராம் தசகத்தில்

ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

கர்மம் பண்ணினதையே பண்ணவேண்டும், செய்ததையே செய்யவேண்டும். சாஸ்திரப் பிரசங்கம் விவரித்ததையே மறுபடியும் விவரிக்க வேண்டும். இப்படியே நமக்கு லபித்தது. எப்படி யென்றுல், சொன்னதைத் திரும்பியும் சொல்லவேண்டியதாயிற்று. ஏனென்றுல், பிரியப்பட்ட சமாதானம் மறுபடியும் கூடவேண்டியதற்

காகச் சொல்லவேண்டியதாயிற்று. பரிவார ஜனங்கள் [1]அனன்னியமாய் இருந்ததேயாகில், இதர ஜனங்களுக்கும் பாவனை பிறக்கும். உபாயத்தின் அபிப்பிராயமிப்படியிருக்கப்பட்டது

முக்கியமாய் ஹரிகதை, சாஸ்திரப் பிரசங்கம். இரண்டாவது இராஜ காரியம். மூன்றாவது சகல விடத்திலும் [2]சாவதானமாயிருக்கவேண்டும். நான்காவது, நானு ஆட்சேபனங்கள் தீர்த்துப்போடவேண்டும். அன்னியாயத்தில் சிறியது பெரியது க்ஷமித்துப் பொறுத்துக்கொண்டு போகவேண்டும். பிரத்தியானுடைய கருத்தை அறியவேண்டும். நிறந்தரமாய் வெறுப்பு உடையவனாயிருக்கக வேண்டும். நீதி ஞாயத்துக்கு மாறுபாடு வரலாகாது. [3]சங்கேதத்தினால் ஜனங்களைப் பரமார்த்த [4]வேதை பிறக்கும்படி பண்ணவேண்டும். ஒருவனைக்கொண்டு மற்றொருவனுக்குப் போதிக்கவேண்டும். [5]பிரபஞ்சமும் சக்திக்குத் தக்கதாய் முடித்துக்கொள்ள வேண்டும். பிரசங்கமும் சமயமும் அறியவேண்டும். தீரத்துவம் வெகுசாயிருக்கவேண்டும். அதிகசினேகிதம் செய்யலாகாது. அபவாதத்தை விஸ்தரிக்கவேண்டும். அபவாதத்தில் அகப்படலாகாது.

முதலிலேயே நீசத்துவம், மூர்க்கத்தனமும் அங்கீகரிக்கவேண்டும். அபசகுணங்களை எப்போதும் சொல்லலாகாது. தோஷங்களைக்கண்டு மூடவேண்டும்: துற்சனனுடன் கூடிக்கொண்டு உபகாரம் பண்ணிவிட வேண்டும்.

பிடிவாதம் பண்ணலாகாது. நானு உபாயங்கள் தோணவேண்டும். ஆகாத காரியத்தைத்தீர்க்கப் பிரயத்தினத்தினால் பண்ணவேண்டும்.

---

1. ஒன்றில் நிச்சயமாய் ஊன்றி 2. கூர்மையான கவனிப்பு. 3. தொட்டுக் குறிப்பதால். 4. ஆற்றல். 5. இல்லறம்.

பின்னுமோ, வைராக்கியங்கெட நடக்கலாகாது. முடிந்தவரை பிரசங்கங் காப்பாத்திக்கொள்ளவேண்டும் ஒருவனுடனேயும் அதிவாதம் பண்ணலாகாது. பிறர் களுடைய அபீஷ்டம் அறிய வேண்டும். வெகுபேருடைய உபாதி மிகுதியுஞ் சயிக்கவேண்டும். சயிக்காதுபோனல் தேசாந்திரத்துக்குப் போய்விட வேண்டும். பிறருடைய துக்கம் அறியவேண்டும். கேட்டுக்கொள்ளவேண்டும்.

[1]பாடாந்திரம் அபாரமாயிருக்க வேண்டும். ஆனு லும், சன்னதியிலேயே விசாரணையிருக்க வேண்டும். சதாசர்வதா பர உபகாரத்தில் தத்பரனுயிருக்கவேண் டும். சாந்தியைப் பிடித்துக்கொண்டு காண்பிக்கவேண் டும். பிடிவாதம் விட்டுவிடவேண்டும். கிரிகைபண்ணி, பின்னும், வெகுஜனங்களைப் பண்ணிவைக்க வேண்டும். உபாயம் பண்ணிவைக்க வேண்டியிருந்துதேயாகில், சொல்லிக்காட்டவேலாகாது. பரஸ்பரம் சோதனைக்குக் கொண்டுவரவேண்டும். எவன், வெகுபேருடைய காரி யங்களை சிந்திக்க முடியாதோ, அவன் வெகு சனங்களின் சங்கம் செய்யக்கூடாது. ஆனாலோ, எல்லாவற்றையும் சயித்தால், தன்னுடைய மகுத்துவம் நில்லாது.

வெகு இராஜ [2]காரணங்கள் பண்ணவேண்டும். ஆனாலும், அது தெரியவைக்கலாகாது. பிறர் பீடையில் பற்று இல்லாமலிருக்கவேண்டும். ஜனங்களைப் பரீக்ஷித் துவிடவேண்டும். இராஜ காரணத்தினுல் அபிமானத் தைக்கழிக்கவேண்டும். மறுபடி வேறு வழியில் அவா ளைக் கூட்டிக்கொள்ளவேண்டும்,

---

1. ஒரே நூலின் விதவிதமான பாடங்கள். 2. பொது வாழ்க்கை.

முறடனைத் தூரத்தில் வைக்கவேண்டும். வண்டனோடு பேசலாகாது. அதவா, சம்பந்தம் விழுந்தாலும் விட்டுவிட்டு வேறுயிடத்தில் போய்விடவேண்டும்.

இப்படி இராஜகாரணம். சொல்லப்போனலது அசாதாரணமாக்கும். ஆனபடியினாலே, இராஜகாரணத்தில் அந்தக்கறணம் சுசித்தம்பண்ண வேண்டும். மரமேறுகிறவனைத் தாங்கவேண்டும். சண்டைபண்ணுகிறவனைத் தள்ளிவிடவேண்டும். கார்பாரி அங்கம் எப்படியெனச் சொல்லிகொடுக்கவேண்டும்.

பார்க்கப்போனல், அகப்படான், கீர்த்தியாய் நடக்கையில் வெருமனேயிரான். என்ன பண்ணினாலும் வந்த வைபவத்தை அபிலசிக்கான். இது தவிர, ஒருவனைக் காப்பாத்துகிறது. ஒருவனைப் பார்த்து சலிக்காமல் போகிறது. இவைகள், சாதுரியத்தின் இலட்சணமல்லவே. ஞாயம் செல்லும்போது மானிக்கான். எது, ஹிதமோ, அது மனதுக்குத் தோன்றுது. இவ்விடத்தில், தேகாபிமானம் ஒன்றும் நடவாது, கேழ்க்கிறவாளுக்குத் தெரிந்தே ஆட்சேபித்தாள், என்று சொன்னதைச் சொல்லவேண்டியதாயிற்று. இவ்விடத்தில், கேழ்க்கிறவாள், இதிலுள்ள குறைகளை க்ஷமை பண்ண வேண்டியது.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
இராஜகாரண சர்க்கம்
5 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினேரும் தசகத்தில்

ஆரும் சர்க்கப் பிரசங்கம்.

எழுத்துகள் சுத்தமாய் எழுதவேண்டும். எழுதிய பின் பிழையைச் சோதிக்கவேண்டும். சோதித்துப் படிக்க வேண்டும். தப்பிப்போகலாகாது, கொம்பு, ரகரங்கள், கோணல்கள், செவ்வையாய்ப்போடவேண்டும். தனைகண்டு திடமாய் பிரிக்கவேண்டும். சீர்சந்தம், இவைகளைக்கண்டுபிடிக்க வேண்டும்.

நானு கதைகளை, பூர்ணமாய் வாசித்து அறிய வேண்டும். அறியவேண்டியதைச் சொல்லவராது. சொல்ல வேண்டியதை சீராகச்சொல்ல வராது. ஏனென்றால், ஒருவனுக்கும் எதையும் அறிந்தால் தவிர, ஒன்றுந் தோன்ருது.

ஹரிகதை, சாஸ்திரப் பிரசங்கம், நேமத்தினுல் இராஜகாரணம் நடக்கவேண்டிய இலட்சணமுமிருக்க வேண்டும். பின்னுமோ, கேழ்க அறியாள். சொல்லவும் அறியாள். அர்த்தாந்தரம் பண்ண அறியாள். சகலஜனங்களுடைய சமாதானங்காப்பாத்த அறியான்

தீர்க்க சூசினை முன்னமே தெரியும் சாவதானத் தர்க்கம் பிரபலிக்கும். அறிந்து அறிந்து எதாயோக்கியமாய்த் தெளிவாள். இப்படி சமஸ்தமும் அறிகிறவன் எவனே, அவனே புத்திசாலியான மகான். அவன் நீங்கலாக சகலமும் அசத்து.

தாளம், இராகம், வேளை, கெட்டாங்கு, குட்டாங்கு, பிரபந்தங்கள், கவிதை, வசனங்கள், சபையினுடைய நானா முறைகளையும் அறியவேண்டும், ஏகாந்தத்துக்கு தத்பரனாக இருந்து முன்னமே பாடாந்தரங்கள் பண்ணுவான். அதவா சாஸ்திர கெர்பத்தின் அப்பியந்தரம் சோதிப்பான். முன்னமே கற்றுகொண்டு எவன் கற்றுகொடுப்பானோ, அவனே சிரேஷ்ட பதவியடைவான்.

விவேக பலத்தினாலே, சிக்கன ஜனங்களை விடுவிப்பான், [1]அட்சரம், சுந்திரமாய்ப்படிக்கிறது, சுந்திரமாய்ப் பேசுகிறது. சுந்திரமாய் நடக்கிறது. நடத்தையும், சுந்திரம், பந்தி ஞானம், வைராக்கியமும், சுந்திரமாய் பண்ணிக்காட்டுவான்.

எவனுக்கு [2]எத்தினமே பிரியமோ அவன் நானாப் பிரசங்கத்திலும் பிரவேசிப்பான். பின்னுமோ, போலியான ஞானி, துணிந்தவன் போலேயல்ல. அவன் பின்னும், உபய சங்கடங்களிலேயும் நின்று நிர்வாகம் பண்ணப்பட்டவன். உபாதி மத்தியில் கூடித்திரிய அறிவான். அணுகி அணுகாததினால், தன்னைக் காப்பாத்திக்கொள்ள அறிவான். அவன் இருக்கிறதானால், சகலவிடத்திலுமிருப்பான். பார்க்கப்போனால், ஒருவிடத்திலுமிருக்கான்

ஆத்துமா எப்படி இருந்த விடத்தில் குப்தமாகுமோ அதுபோல ஆத்துமாவினு, ஒன்றுங்கிடையாது. பார்க்கப்போனால் தெரியாது. காணுமலிருந்தும் சகல பிராணிகளையும் நடத்திவைக்கிறது. அதுவும் போல இவனும், நானாவிதமாய் வெகு ஜனங்களைச் சமத்தனாக்குவான். நானாவித்தைகளை, ஸ்தூல சூட்சமங்களை, விவகரிப்

1. எழுத்து. 2. முயற்சி.

பான். தன்னாலே எவாள் சமத்தனாகிறாரோ, அவாளை சகசமாய் ஆசை பிடிப்பான். சமாதானமடைந்தவனின் மகுத்துவம் இப்படியிருப்பது.

பின்னையோ, நீதி ஞாயத்தைக்காப்பாற்ற அறிவான். அநியாயம் பண்ணான். பண்ணியும் வைக்கான். கடினப்பிரசங்கத்தில் உபாயம்பண்ண அறிவான். இப்படிபட்ட புத்திதாரணையுடைய புருஷன், அவனே வெகு ஜனங்களுக்கு ஆதாரம்: இப்போது, இராமதாச சுவாமிகள் சொல்லுகிறார்: இப்படியான இரகுநாதனுடைய குணத்தை அடைய வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
மகுத்துவ இலட்சணங் கூறியது சர்க்கம் 6. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினோராம் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்.

சஞ்சலமான நதி அது [1]குப்தமாயிருக்கிற கங்கை. ஸ்றவண மாத்திரத்தினாலே உலகத்தைப் [2]பாவனம் பண்ணுகிறாள். இது ரொக்கமான சோதனை கேவலம் சஞ்சலத்தில் நிற்மான மானாள். [3]அதோ முகமாய் பல

1. மறைந்து இருக்கும். 2. புனிதம். 3. கீழ்நோக்கிய வண்ணம்.

மாய் நடந்தாள். எப்போதும் பிரவாகிக்கிறாள். ஆனா லும், ஒருத்தருங் கண்டதில்லை அந்த நதி எப்படியிருப்ப தென்றால், விசையும், வளைவும், கோணத்திலும், சுழி கள் குமுளிகள், அலைகள், ஊறல்கள், பிறலைகள், இவை களுடன் தங்கித் தங்கியோடுகிறது இடத்துக்கு இடம், சன்னமாய்ப்போகிற ஜலத்தில், வரிவரிகள், தாரைகள், படபடவென்ற ஓசைகள்: இது முதலானவைகளுடன் ஓடும் ஜலம். பின்னும், நொரை, உப்பல், அலைக்கழிவு, கண்டவிடமெல்லாம் நிற்பயமாய் ஓடுகிறது தண்ணீரும், துளியுந்தூசியும், திவலையும், அணுரேணுப்போல எவ் வளவென்று எண்ணவேண்டும்.

அனேக வஸ்துக்களை, நீர் பிரவாகத்தில் அடித்துக் கொண்டு வருகிறது. திட்டுகளும், மலைகளும், கல் கறடு களும், பாறைகள் முதலியவைகள். உடையமோதுத லும், இறைச்சலுமுண்டாம். மெதுவான பூமி அடித்துப் போனது. கடின பூமிகள் அப்படியே நின்றுபோனது. சிருஷ்டியில் இடத்துக்கு இடம் பூமிகள் பல வகைகள் தென்படுகின்றன. இந்த நதி சில பேரை அடித்துக் போய்விட்டது. சில பேர் சுழலில் அகப்பட்டு விழுந்து போனார்கள். சிலர் தலைகீழாய் தவறி சிக்கிக்கொண் டாள் சிறிதுபேர் உதறிக்கொண்டேயிருந்து போனார் கள். சிலர் தத்தளித்துக்கொண்டே பிரவாகத்தில் போய்விட்டாள். சில பேர் தண்ணீரை உட்கொண்டு உப்பினாள். சிலர் நீந்துகிறவாள் பிரிந்தாள். நீந்திக் கொண்டே அவர்கள் அந்த நதி உற்பத்தியான விடத் துக்குப் போனாள். அவ்விடத்து தரிசனத்தினால் தீர்த்த ரூபமாய்ப் பவித்திரமானாள்

அவ்விடத்தில் பிர்மாதிகளுடைய புவனங்கள் பிர் மாண்ட தேவதைகளுடைய ஸ்தானங்கள்உள. இந்த கங்கையை எதிராக நீந்திப்போனால், அவ்விடத்தில்

சசலமான பேருங் கூடுகிறுர்கள் அந்த ஜலத்தைப் போல நிர்மலமுகில்லை.

அதனுல் அப்புவே நாராயணனென்று சொல்ல வேண்டும். அது, மகாநதி, ஆனுலும் [1]அந்தராளத்தில் பிரத்தியக்ஷமாய் சர்வகாலத்திலும் பிரவர்த்திக்கிருள்: சுவர்க்கலோகத்திலும், மிருத்தியுலோகத்திலும் பாதாளத்திலும். நிறம்பியிருக்கிருள்: பாருங்கள். பின்னும், தாழ்வும், மேலும், அஷ்டதிக்குகளிலேயும் அவளுடைய ஜலம் பிரமிக்கும்படி உள்ளது ஆனபடியினுலே, அவள், ஜெகதீசர் போலவேயென்று அறிவுள்ளவாள் அறிவார்கள். அனந்த பாத்திரத்தில் [2]உதகம் நிறம்பியிருப்பது. சிறிது விடத்தில் கசிந்துக்கசிந்தே போனது. சிறிது சம்சாரத்தில் சிலவழிந்தே போனது. ஒரு பதார்த்த சங்கத்தினுல், அது கசப்பாகும். ஒரு பதார்த்த சங்கத்தினுல் தித்திக்கும். ஒவ்வொரு பதார்த்த சங்கத்தினுல் அது முறையே உறைப்பு, துவர்ப்பு, க்ஷாறம், இப்படியாகும். எந்தயெந்த பதார்த்தங்களில் சேருமோ, அவ்விடத்தில் அந்த ரூபமேயாகிப்போம். ஆழமான பூமியில் ஆழமாய் நிறம்பியிருக்கும். விஷத்தில் விஷமே ஆகிறது. அமிர்தத்தில் சேர்ந்துபோகிறது. [3]சுகந்தத்தில் அது சுகந்தமே ஆகிறது. துற்கெந்தத்தில், துற்கெந்த குணத்திலும், அவகுணத்திலும் சேரும். எவனுக்கு எந்தப் பிரகாரமோ, அப்படியே தெளியும்.

அந்த ஜலத்தினுடைய மகிமை, ஜலத்தினுல்தான் புரியும். அந்த ஜலம் அபாரமாய்ப் பிரவாகிக்கிறது அது, நதியோ, குளமோ தெரியவராது. அந்த ஜலத்தில் சிறிதுபேர் ஜலவாசம் பண்ணிக்கொண்டுயிருக்கிருள். பிறந்த விடத்துக்கு அப்புறம் போனுள். அவ்விடத்திலிருந்து திரும்பிப்பார்த்தாள். அப்போது,

1. ஆகாயத்தில். 2. நீர். 3. நறுமணம்.

அந்த ஜலமே வற்றிற்று. ஒன்றுமில்லை. விறக்திசூன் னியமான யோகீசுவரருடைய விசாரணையைப் பார்க்க வேண்டும். ஸ்ரீ ராம தாசரான விபூவானவர், அடிக்கடி அதை எவ்வளவென்று சொல்வோமென்றார்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
சஞ்சலநதி சர்க்கம்
7 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினோராம் தசகத்தில் எட்டாம் சர்க்கப் பிரசங்கம்,

சமஸ்த தேவதைகளுடைய கர்த்தா எவனோ, அந்த சகல கர்த்தாவை முன்னமே வந்தனம் பண்ணுவோம். அவனுடைய சாதனத்தில் எவராகிலும் ஈடுபடுங்கள்.

அவனின்றி காரியங்கள் நடக்காது. உதிர்ந்து விழுந்த [1]பத்திரமும் அசையாது. பின்னும், திருலோகம் முழுமையும், எவனாலே நடக்கிறதோ, அவன் சகலமான பேருடைய அந்தர ஆத்துமா. தேவ, தானவ, மானவாளுடையவர்களுக்கும், அவர் அந்தர ஆத்துமா.

1. இலை.

நான்குவித உத்பத்தி, நான்குவித வாக்குக்கும், அவர் காரியக்காரர். அவனொருவனே, சகல கடத்திலும் பின்ன பின்னமாய் காரியங்கள் நடக்கப் பண்ணுவான். சகல சிருஷ்டியைப்பற்றி என்னவென்றுஞ் சொல்ல வேண்டும்? இப்படியாப்பட்டவன் குப்த ஈஸ்வரன். பின்னும், மகத்தாயிருக்கிற சகல ஐசுவரியங்களும் எவனால் நடப்பிக்கிறதோ, அவனே, ஈஸ்வரனென்று சொல்லவேண்டும்.

இப்படியாகப்பட்டவனே, எவன் அறிந்தானோ, அவன் விஸ்வத்தில் விஸ்வம்பரன் ஆனான். அப்போது, சமாதி, சகச ஸ்திதியைத்தேட வேண்டியதில்லை. திரிலோக்கியம் முழுமையும் விவரிக்கவேண்டும். அப்போது வர்மம் [1]வெளிப்படும், அடையலாமென்று முட்டாள்தனமாய் வீணாய்க்கஷ்டப்பட வேண்டியதில்லை. பார்க்கப் போனால், அந்தர அத்துமாவை விவரித்துப்பார்க்கிறவனாய் எவனிருக்கிறான்? அல்பம் சொல்பம் எவ்வளவோ, சமாதானம் அறிந்து இருந்துவிடுகிறான்.

இதைப்பார்த்தே பார்க்கவேண்டும். படித்ததே படிக்கவேண்டும். விவரித்ததே மறுபடியும் விவரிக்க வேண்டும். அந்தர ஆத்துமாவையே பெறப்பட்டது. பின்னும் எப்படிக்கொத்தது? அதைப் பார்க்கிறவனுடைய திசை எப்படியாகப்பட்டது? இப்படியிருக்க, பார்த்தவன் போலவும், கேட்டதுபோலவும், விவேகஞ் சொல்லுகிறான். மிகுதியுங்கண்டதுங் கேட்டதும், அந்தர ஆத்துமாவுக்கு யீடல்ல.

பிராணி தேகதாரிப் பொம்மை; என்ன அறிவான்? பூரணமாயிருக்கிறதற்கு அபூரணஞ் சரியாகாது. ஏனென்றால், அகண்டமாகவிரிவடையாது. விவரிக்க விவரிக்க தெய்வம் வினா மிஞ்சமாட்டான்.

---

1. இரகசியம்.

[1]விபக்தத்தனமாய் இருக்கக்கூடாது ஆனல், தான் பக்தனென்கவேண்டும். இல்லாவிட்டால், வீண் தொந்தரவினல் கஷ்டப்படவேண்டும். சும்மா வீட்டைப் பார்த்துப்போட்டுப் போனன். வீட்டு எஜமானனை அறியவில்லை. இராச்சிய மத்தியிலேயே வந்தான். ஆனலும், இராஜாவை அறியான். தேக சங்கத்தியினலே விஷயங்கள் பொசிக்கப்பட்டன. தேக சங்கத்தியினல், பிராணி ஊர்ந்து திரிந்தது. ஆனல் தேகம் தரித்தவன் தப்பினன். இது பெரிய ஆச்சரியம். இப்படியிருக்க, ஜனங்கள் அவிவேகிகள். பின்னுமோ, நாங்கள் விவேகியென்றுஞ் சொல்லுகிருர்கள். நல்லது:

மூர்க்கன் எதிரியின் அந்தரங்கங்காப்பாத்த மாட்டான். சமர்த்தனயிருக்க வேண்டும். அந்த சமத்தனே தைன்யனய்ப்போனன். ஏனென்ருல், அந்தரங்கத்தில் இருப்புத் தப்பினன்யென்று வாசலுக்குவாசல் திரியத் தலைப்பட்டான். அஞ்ஞானனுக்கு அப்படி ஆனது, தெய்வந்தெரியாது. இந்த தெய்வத்தை தியானம் பண்ணுகிறவனய் சிருஷ்டியில் எவனிருக்கிருன்? விருத்தி ஒரு பக்கத்தில் கிடந்து தத்தளிக்கும். அது எங்கே வியாபிக்கப்போகிறது?

பிர்மாண்டத்தில் பிராணிகள் நிறம்பியிருக்கின்றன, வெகு ரூபமாகவும், வெகுவாகவும் பூமியின் கற்பத்திலும், பாஷாணத்திலும், சிறிது பிராணிகள் இருக்கின்றன. இத்தனை இடத்திலும் எவன் ஏற்பட்டானே, அவன். அனேகத்தில் ஒன்றே ஆனன். குப்தமாகவும், பின்னுமோ, சிறிது பேர் பிறகடமானள். நிச்சலம் சலிக்க மாட்டாது. இது கேவலம் சோதினையாக்கும். சஞ்சலம், நிச்சலமான பரபிர்ம்மமாகாது. தத்துவங்கள் தத்துவத்தினல் எப்போது உதிருமோ, அப்போது தேகபுத்தி

1. வேற்றுமையுடன் கூடினவனய்.

பறக்கும். நிற்மலம், நிற்சலம், நாலு பக்கத்திலும் நிறஞ்சனம் புலனாகும். அப்போது, தான், எவன், எவ்விடம், ஏது? இப்படிப் பார்ப்பது விவேகத்தின் மார்க்கம். எந்தப் பிராணி சுயமாய் [1]கிஞ்சிதனோ, அவனுக்கு இவைகள் தெரியவராது. ஆனது கொண்டு, நல்லவன் விவேகம் பிடிக்கவேண்டும். கடினமான சம்சாரம் நீந்த வேண்டும் முழு வயதிலும் ஹரி கதை பண்ணிக்கடைத் தேற வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில்.
தாச பால உபதேச விளக்கத்தில்,
அத்தர ஆத்துமா விவரணைக்கூறியது
சர்க்கம் 8 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினோராம் தசகத்தில்
ஒன்பதாம் சர்க்கப் பிரசங்கம்.

முன்னமே, கர்மத்தின் பிரசங்கம். கர்மம் சாங்கமாய்ப்பண்ண வேண்டியது எனக்கூறினோம். அதில், ஆகச்மீகமாய் ஊனம்வந்ததே ஆனால், பரித்தியாகம் லெபிக்கும். ஆனபடியினாலே, கர்மம் ஆரம்பிக்கப்பட்

1. அற்ப அறிவு படைத்தவனோ.

டது. எவ்வளவாகிலும் சாங்கமாய் முடிந்ததேயாகிலும், அதவா, தப்பிதங்கள் எப்போது உண்டானதோ, அவ் விடத்தில், ஹரியை ஸ்மரிக்கவேண்டும்.

ஆனாலந்தஹரி எப்படியிருக்கப்பட்டவன்? இந்த விசாரணை பார்க்கவேண்டும். சந்தியாவந்தனத்துக்கு முன்னமே, ஜெகதீசனை, இருபத்துநான்கு நாமங்களி னாலே ஸ்மரிக்கவேண்டும். இருபத்துநான்கு நாமங்கள், பின்னும், சகஸ்தரநாமம், பின்னுமோ அனந்த நாமங் கள்: இவைகளுடையவன். பின்னும், அவன் [1]அனாமி, அவன் எப்படியிருக்கிறான்? அதைக் கருத்தில் விவே கத்தினால் அறியவேண்டும்.

பிராமணன் ஸ்நானம், சந்தியாவந்தனம் பண்ணி வந்தான். அப்பால் அவன் தேவதார்ச்சனையில் இருந் தான். [2]எதாசங்கமாய், அந்தப் பிரதிமையுடைய தேவ தையைப் பூசித்தான்.

நானா தேவதைகளுடைய நானாப் பிரதிமை. அதில் பிரியம் பிடித்து ஜனங்கள் பூசிப்பார்கள். எவனுடைய பிரதிமைகளோ, அந்தப் பரமாத்துமா எப்படியிருக் கிறான்? இதை அறிந்துகொள்ளவேண்டியது. அறிந்து பஜனம் பண்ணவேண்டும். எஜமானாய் இருக்கிற வனை அறிந்ததின் பிறகு எப்படி நமஸ்காரம் பண்ணப் படுமோ, அதுவும்போல, பரமாத்துமா பரமேஸ்வரனை அறிந்து விசாரம் விட்டுவிடவேண்டும். இப்படி ஆனால் தான் பவக்கடல் அக்கரை அடையமுடியும். உலகத்தில் பிறதிமைகள் பூசையைப் பெறுகின்றன. உடலில் அந் தர ஆத்துமா விடுகிறது. அவதாரங்களாகயிருந்து, நிஜவிடத்தில்போய் விட்டாள். ஆனாலும், அவாள் நிஜ ரூபமாயிருக்கிறாள்.

---

1. பெயரற்றோன். 2. எல்லா முறைகளோடும்.

அந்த நிஜரூபம் ஜெகஜ்ஜோதியாம் அந்த ஜெகஜ்ஜோதியே சத்துவ குணம் அறிவின் கலையென்று சொல்லுவார்கள். அந்தக் கலையின் உதரத்தில் கோடானுகோடி தேவதைகள் இருக்கிருள். இது, அனுபவத்தின் சொற்கள். சோதனை பார்க்கவேண்டும். தேகத்திற்குள் ஈசன் இருக்கிருன்யென்றும், அவனுக்கு புருஷனென்பது பெயர். இந்த ஜெகத்தில், ஜகதீசனை இப்படியேயறியவேண்டும். அறிவு ரூபமாக [1]ஜெகதாந்திரத்தில் பிரத்தியக்ஷமாய் சரீரங்களை நடப்புவிக்கிருன். [2]அந்தக்கறணம் விஷ்ணுவை இந்தப் பிரகாரம் அறிந்துகொள்ள வேண்டும். அந்த விஷ்ணு ஜெகதாந்திரத்திலிருக்கிருன். தன்னுடைய உள்ளத்திலேயுமிருக்கிருன். சதுராளானவாள் கர்த்தா, போக்தா, அந்தர ஆத்துமாவென்று அறியவேண்டும். கேழ்கிறது, பார்க்கிறது, அறிகிறது, விசாரணையை அறிகிறது. சிறிது பேரைத் தன்னுடையவாள், பிறத்தியானென்பதும் அறிகிருன். ஜெகத்தில் ஒருவனே [3]சிவ்வாளம் ஆனுலும், தேக லோபத்தின்தடை அந்த தேக சம்பந்தத்தினுல், வேறு அபிமானம் பிடிக்கிருன். ஆனது கொண்டு, பிறக்கிருன், வளருகிருன், சாகிருன், கொல்லுகிருன்: இவைகள் எப்படியென்ருல், அலையின் பேரில் அலைகள் கிளம்புகின்றன அது போலவாம். சஞ்சல சமுத்திரத்தில் மேன்மேலும் மூன்று உலகமும் ஆகிறதும், போகிறதும போல், அந்த மூன்று உலகத்தையும் நடப்பிக்கிறவன் ஒருவன். ஆனதினுலே, திரிலோக்கியன்யெனப்படுவான். இப்படிப்பட்ட இந்தப் பிரத்தியக்ஷமான விவேகத்தை, ஏன் பார்க்கமாட்டீர்களோ?

---

1. வேறு உலகில் இருந்து. 2. மனதில். 3. சிவ்வாளம் மராத்திச் சொல்—உயிர் நண்பன்.

இப்படிப்பட்ட அந்தர ஆத்துமா சொல்லப்பட்டது. ஆனாலும், அவன் தத்துவங்களில் சேர்ந்தவன். ஆனது கொண்டு மேல் மகாவாக்கியத்தின் விசாரணை பண்ண வேண்டியது முன்னே [1]தேகதாரியாய்க் காணப்பட்டான் அப்பால் ஜெகதாந்திரத்தில் பார்க்கப்பட்டான். அதற்குமேல், பரப்பிர்மத்தை அடையவேண்டும். பரப்பிர்மத்தின் விசாரணையாலைப்போது சராச்சாரம் புரியும். சஞ்சலம் போகும். இந்த [2]நிற்தாரம் தப்பமாட்டாது.

உற்பத்தி, ஸ்திதி, சம்வாரம்: அதைப் பார்க்கிலும் நிறஞ்சனம் தனியேயிருப்பது, அவ்விடத்தில் ஞானம் விஞ்ஞானமாகிறது. எட்டுதேகஸ்தானமானம் அறிந்து ஒழிந்து விடுதலையாய்ப்போனால், மேல் நிறஞ்சனமான விமலப் பிர்மம் மீந்துயிருப்பது தெரியும். விசாரணையினாலே அன்னியனானன் பார்க்கிறவன் வினாசோதினைக்கு வந்தது. வந்ததுயென்பதும் விர்த்தியே செவ்வையாய்ப் பாருங்கள். இவ்விடத்தில் வாச்சாம்சம் நின்றது. இலட்சாம்சம் அறிந்து தள்ளப்பட்டது. இந்த இலட்சாம்சத்துடனே விர்த்திலேசமும் போய்விட்டது.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்,
உபதேச பக்தி சர்க்கம்
9 முடிந்தது.

முற்றும்.

---

1. தேகந்தரித்தவன். 2. உறுதியான நினைவு.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினோராம் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

மூர்க்கன் ஒரு பக்கமே நோக்கமுடையவன். சதுரன் சகலத்தையும் பார்க்கிறான். வெகுவிதமாய் வெகுவித சுகங்களை அனுபவிக்கிறான். அவனே அந்தர ஆத்துமா மகுத்து, அவன் ஏன் சந்தேகமடைவான்? சகல பிரயத்தினங்களும் அறிகிற அவன் [1]விக்யாதயோகி: கர்த்தா: போக்தா, தத்துவமானவன், பூமண்டலத்தில் சகல சத்தையும் அவன் இன்றி, அவனைப் பார்க்கத் தக்க ஞானி எவன்? மகுத்தானவன் இப்படியிருக்க வேண்டும். சகல சாறத்தையும் சோதித்து அறிய வேண்டும், பார்க்கப்போனால், இருந்தாப்போலயிருந்து அகப்படலாகாது. கீர்த்தி ரூபமாய் மிகுதியும் பிரக்யாதியாயுமிருப்பான். சிறியவாள், பெரியவாள், எல்லோரும் அவனை அறிவார்கள். அவருடைய வேஷம் பார்க்கப் போனால் சாஸ்வதமாய் ஒரு விதமும் கிடையாது. [2]பிறகட கீர்த்தி சலியாது. இது வெகு ஜனங்களுக்குத் தெரியாது. பார்க்கப்போனால் அவன் எப்படிப்பட்டவன்யென்கிறது புரியாது.

வேஷபூஷணம் அது தூஷணம். கீர்த்தி பூஷணமே பூஷணம். விசாறணை வினு, ஒரு க்ஷணப்பொழுதாகிலும் போக்கவேமாட்டான். அறிந்த ஜனங்களை விட்டு விடுவான். சர்வகாலமும் நித்திய நூதனமாயிருப்பான். உலகத்தார் மனஞ்சோதித்துப் பார்ப்பான். பார்த்தா

1. புகழுற்ற. 2. தோன்றிய புகழ்.

லும் இச்சை காணவராது. செவ்வையாய் ஒருத்தரை யும் பாரான். செவ்வையாய் ஒருவரோடும் பேசான். செவ்வையாய் ஒரு விடத்திலேயும் உட்காரான். எழுந்து திரிந்துப் போய்விடுவான், போகிறவிடஞ் சொல்லான். சொன்னாலும் அவ்விடம் போகான். தன்னுடையஸ்திதி இப்படிப்பட்டதென்று தெரிவிக்கமாட்டான். ஜனங்கள் பண்ணினதைத் தப்பவைப்பான். ஜனங்கள் பாவித் ததை பிறட்டுவான். ஜனங்கள் எண்ணியிருக்கிறதை நிற்பலமாய்ப் பண்ணிக்காட்டுவான். ஜனங்களுக்கு எதைப்பார்க்க அன்பும் ஆதரவோ. அவ்விடத்தில் இவ னுக்கு ஆதரவே கிடையாது. பின்னும், ஜனங்கள், சர்வகாலமும் எதில் தத்பராளோ, அதில் இவருக்கு இச்சையில்லே.

ஆனபடியினலே, யோகீஸ்வரர் [1]கற்பித்தாலும் கல் பிக்கப்படார் தர்க்கித்தாலும் தர்க்கத்தில் சிக்கார். பின்னுமோ, பாவித்தாலும், ஒருகாலமும் பாவனைக்கு வரார். இப்படி அவரைப்பற்றி கருத்து அகப்படாது. சரீரமாகிலும் இருந்தவிடந் தெரியாது. க்ஷணப்போது கூட கதைகள், கீர்த்தனத்துக்கு மறதி கிடையாது. ஜனங்களுடைய விர்த்தியினலேயே ஜனங்களையே வெட் கப்படுத்திடுவார். அவரே யோகீஸ்வரர். அவரை, வெகுபேர் சோதித்துப் பார்த்தார்கள். வெகுபேரு டைய மனதுக்கு ஒப்பினதேயாகில், அப்பால் மகுத்துக் கிர்த்தியம் சாதிக்கப்பட்டதென்று அறியவேண்டும்.

எப்போதும் ஏகாந்தத்திலிருக்கவே இருக்கவேண் டும். அப்யியாசம் பண்ணிக்கொண்டே போகவேண்டும். ஜனங்களுடனே கால [2]சார்த்தகம் பண்ணவேண்டும். உத்தம குணங்கள் அவ்வளவும் பிடிக்கவேண்டும். மிடித் துக்கொண்டு ஜனங்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும்

---

1. கற்பனைமூலம் அறியமுடியாதவர். 2. பயனுள்ளதாக.

மிகுதியும் சமுதாயங்குப்தரூபமாய்ச் சேர்க்கவேண்டும் எப்பொழுதும் காரியத்தில் கடுபடியாய் உலகத்தைச் சேர்ப்பான். ஜனங்களை அறிந்துகொண்டு, அப்பால் ஆக்கினைக்கு இச்சிப்பான். முன்னமே கஷ்டம். அப்பால், பலம், கஷ்டமேயில்லை முயற்சி இன்றி உறக்கம் கொள்ளும் சுகம் கேவலம் [1]விருதா புஷ்டமாக்கும்.

வெகு ஜனங்களை சோதிக்கவேண்டும் அவாளுடைய அதிகாரம் அறியவேண்டும். அறிந்தறிந்து, தூரமும் சமீபமாயும் சேர்க்கவேண்டும். அதிகாரத்துக்குத்தக்கதாய் காரியமாகிறது அதிகாரம் இல்லாவிட்டால் வியர்த்தமாய்ப்போகிறது. அறிந்து சித்தங்களை நானுப்பிரகாரமாய் சோதிக்கவேண்டும். அதிகாரம் பார்த்துக் காரியஞ்சொல்ல வேண்டும். கவனித்துப்பார்த்து நம்பிக்கைவைக்கவேண்டும். எம்படியாவது தன்னுடைய உளவு காப்பாத்த வேண்டும். இவைகள் சோதினையோடே சொல்லப்பட்டன. ஏனென்றால், முன்னமே பண்ணி அப்பால் சொல்லியது [2]மானித்ததேயாகில், யாராகிலும் ஒப்புக்கொள்ளவேண்டியது.

மகத்தானவர் மகுத்துகளைப் [3]பண்ணவேண்டும் யுகதிபுத்தியினுல் அவாளிருதயத்தில் நிறப்பவேண்டும். அறிவுள்ளவாளாக்கி நானு தேசங்களிலே நிறப்பவேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
நிஜப்பிர கர்மத்துக்குக் கொடுக்கப்பட்ட
சர்க்கம் 10. முடிந்தது.

முற்றும்.

---

1. வீண் வளர்ச்சி. 2. கௌரவத்துடன் அங்கீகரிக்கப்பட்டதேயாகில். 3. மகான்கள் என்போர் ஏனையோரையும் மகான்களாக்க முயலவேண்டும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

தாசபோதம் வைராக்கிய தசகம்.
இனிமேல் பன்னிரண்டாம் தசகத்தில்
முதல் சர்க்கப் பிரசங்கம்.

முன்னம் [1]பிரபஞ்சம் அழகாய் நடத்தவேண்டும். அப்பால் பரமார்த்தத்தை விவேகத்தினால் அடைய வேண்டும். இந்தவிடத்தில், விவேகிகளே! ஆலசியம் பண்ணவேண்டாம். பிரபஞ்சம் விட்டுப்போட்டுப் பரமார்த்தம் பண்ணுவீர்களானால் நீங்கள் கஷ்டப்படுவீர்கள். ஆனபடியினாலே பிரபஞ்சம், பரமார்த்தம்: இது இரண்டும் நடப்பிவிப்பீர்களாகில், நீங்கள் அப்போது விவேகிகள். பிரபஞ்சம் விட்டுவிட்டு, பரமார்த்தம் பண்ணினதேயாகில், உண்ண உணவு அகப்படாது. அப்பால் அந்த அதிர்ஷ்ட ஹீனனுக்குப் பரமார்த்தமேது? பரமார்த்தம் விட்டுப்போட்டு, பிரபஞ்சமே பண்ணுவாயானால், நீ, எமயாதனை போகிப்பாய் அந்தியத்தில், நீ, உன்னுடைய தோஷங்கள் அனுபவிக்கிறதில் பரம கஷ்டமாய்க் கஷ்டப்படுவாய். எஜமான் காரியத்தில் ஈடுபடாமல், வேலையாள் வீட்டிலேயே தின்றுகொழுத்திருந்து விட்டானேயாகில், அவனை எஜமானன் நன்றாகப் [2]பிரகரிப்பான். அதை, ஜனங்கள் பார்ப்பார்கள். அப்போது, இவன் பெருமையே போய்விடும், அப்போது, துற்ஜனனுடைய சிறிப்பிற்குவிடமாகும். தன்னுடைய வாழ்க்கையால் மிகுதியும் துக்கமனுபவிக்கப்பட்டது. ஆனது கொண்டு, [3]அந்தியத்தில் அப்படியாகிறதென்று பகவானை உபாசிக்கவேண்டும். பரமார்த்தத்தின் சோதினையை நிதரிசனமாய் அடையவேண்டும்.

---

1. இல்லறம். 2. அடிப்பது. 3 முடிவில்.

சமுசாரத்திலேயேயிருக்கையில் முக்தன்; அவனே சயியுக்தனென்று அறியவேண்டும். அவன் எப்பொழுதும் யுக்தாயுக்த விசாரணைபண்ணுவான். பிரபஞ்சத்திலெவன் சாவதானமாயிருப்பானோ, அவனே பரமார்த்தம் பண்ணுவானென்றுஅறி. பிரபஞ்சத்தில் எவன் [1]அப்பிரமாணனோ, அவன் பரமார்த்தத்தில் கெட்டவன். ஆனபடியினாலே சாவதானமாய் பிரபஞ்சம், பரமார்த்தம் இரண்டும் சாதிக்கவேண்டும்.

இப்படிப் பண்ணுவிட்டால், நானா துக்கங்கள் அனுபவிக்க வேண்டிவரும். இலைப்புழு, மறுஇலை ஆதரவு பார்த்துக்கொண்டு கிளம்புப. ஜீவசிருஷ்டி, விவேகத்தினால் நடக்கிறது. பின்னுமோ, புருஷாளாக்கிக்கொண்டு பிரமித்தாள். அவாளை என்னவென்று அழைப்பது? எப்பொழுதும் ஆலோசனை பண்ணவேண்டும். மேல் ஆகிறதை அறிய வேண்டும். சுகமாயிருக்கிறவன், சாக்கிரதையுடைய கெட்டிக்காரன். துக்கப்படுகிறவன், சாக்கிரதையில்லாதவன். இப்படிப்பட்ட இந்த லௌகீக விசாறணை காணப்பட்டுக்கொண்டேயிருக்கிறது. ஆனபடியினாலே, எவன் சர்வ [2]சாவதானனோ அவனுடைய மகிமை [3]தன்னியமாகும். உலகத்தில் சமாதானங்காப்பாற்றுகிறவன் அவனேயொருவன்; ஆலோசனையில் ஆலசியம் பண்ணப்பட்டது. ஆனால், ஆகசமீகமாய் அவதியும் மோசம் வந்துவிடும். அந்தவேளையில் சாக்கிறதையாகிறதற்கு அவகாசமிராது. ஆனபடியினாலே, தீர்க்கசூசினையுடைய ஜனங்களெவாளோ, அவர்களுடைய விவேகம் பார்க்கவேண்டும். ஜனங்களினாலேயே ஜனங்கள் புத்திமானாகிறார்கள். ஆனால், அந்த புத்திமான்களை அறிய வேண்டும். குணவந்தாளுடைய குணத்தை

---

1. நேர்மையை கடைபிடிக்காதவன். 2. எப்போதும் விழிப்புடையவன். 3. புகழ்ச்சியுறதகுதி உடையது.

அடையவேண்டும். ஜனங்களுக்குள்ளே அவகுணத்தைப் பார்த்து விலகவேண்டும். மனிதனைப் பரீக்ஷிக்காமல் இரான். பின்னும், ஒருவர் மனதையும் முறிக்கான். மனுஷாள் யாவரையும் அனுமானித்துப் பார்ப்பான். ஆனாலோ, சகலமான பேர்க்கும் சரியாகதானிருப்பான். பார்க்கப்போனால், அழகான விவேகி, பின்னையோ, காரியக்காரனையும், [1]அகாரியாயிருக்கிற ஜனங்களையும் செவ்வையாயறிவான். யாவரையும் பார்த்து அறிகிறதே அவனுடைய [2]அபரூபம். எவனுக்கு எப்படியோ, அப்படிக்கே கௌரவம் காப்பாற்ற அறிவான்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
விமல இலக்ஷணங் கூறியது.
சர்க்கம் 1 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பன்னிரண்டாம் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

சமுசாரத்தில் வந்தவர்களே! ஸ்த்ரீ புருஷாள் நிஷ்பிராளே! கேளுங்கள் [3]அர்த்தாந்திரத்தில், நல்ல சித்தமுடையதாகவிருந்து கேளுங்கள். வாசனை என்ன என்கிறது? கல்பனை என்ன கல்பிக்கிறது? உள்ளத்தினு

1. தேம்பித்திறிவோர். 2. போற்றக்கூடி குணம்.
3 கருத்துகளை பாகுபாடு படுத்த.

ண்டைய அலைகள் நானா பிரகாரமாய்க் கிளம்புகிறது; என்னவென்றால், நன்றாக உண்ணவேண்டும். நன்றாய்ச் சாப்பிடவேண்டும், நன்றாக உடுத்தவேண்டும், நன்றாகக் கட்டவேண்டும், மனம்போலவே சகலமுமிருக்கவேண்டும், இப்படி மனோ தர்மமிருப்பது ஆனாலும், அதுகளொன்றுங் கூடிவருகிறதில்லை. நல்லது பண்ணினால் ஆகசமீகமாய்ப் பொல்லாததாய் முடிகிறது. உலகத்திலொருத்தர் சுகி: ஒருத்தர் துக்கியாக எப்படி நடக்கிறது? கஷ்டப்பட்டு, கடைசியில் [1]பிராலப்தமென்கிறார்கள். ஏனென்றால், தப்பாத [2]எத்தினம் பண்ணத்தெரியாது. ஆனபடியினாலே, தான் பண்ணினது தவறு எனத் தோணாது. தன்னுடைய அவகுணங்கள் என்ன பண்ணினாலும் அறியமுடியாதவை. எவன், தன்னுடைய அவகுணமறியானோ, அவன், பிறத்தியானுடையதை என்ன அறியப்போகிறான்? நியாயம் விட்டுவிட்டதினால், ஜனங்கள் தீனரூபமாகிறார்கள். ஜனங்களுடைய [3]மனோகதங்காப்பாற்றத் தெரியாது. பின்னுமோ, ஜனங்கள் போலவே நடக்கான், மூர்க்கத்தனத்தினால் நானா கலகமுண்டாகிறது. அப்பால் அந்தக் கலகம் வளருகிறது. அதினால் இரண்டு பக்கத்திலேயும் பரஸ்பரம் கஷ்டபபடுகிறான். பிரயத்தினங்கள் நின்றுபோகிறது. அந்தியத்தில் சிரமமே ஆகிவிடும். இப்படி [4]நடவடையல்ல.

நானா ஜனங்களைப் பரிக்ஷிக்கவேண்டும். எவனுக்கு எப்படியோ, அந்தப்படியே [5]நேமகமாய் அறியவேண்டியது. அது எப்படியென்றால் சப்த பரீக்ஷை, அந்தரப் பரீக்ஷை; இவைகள், [6]தடசனானவனுக்கு நன்றாகத் தெரியவரும். போலியானவனுக்கு மனோகதம் என்ன தெரியும்? பிறர் பேரில் சர்தம் வைக்கிறது. தன்பக்ஷம்

1. ஊழ்வினை. 2. பலன் தப்பாத முயற்சி. 3. மனதில் உள்ளடைந்த அவா. 4. இவ்வாறு நடப்பது நற்பழக்கமாகா. 5. முறைப்படி. 6. திடபுத்தியுடையோனுக்கு.

மேல் வாங்கிக்கொள்ளுகிறது. பார்க்கப் போனல், லௌகிக இலட்சணங்கள் இப்படி அதிகமாயுமுண்டு. உலகத்தில் நல்லவனென்று பிரஸ்தாபித்துக்கொள்ளுகிறதற்காக நல்லவனை ஜயிக்கவேண்டும். ஜயிக்காது போனல், வண்டத்தனம் [1]சகசமே ஆகிவிடும். தனக்கு எது [2]மானிக்காதோ, அவ்விடத்தில் ஒருகாலமுமிருக்க சயிக்காது. அவன் நட்பை முறித்துக்கொண்டு போக மாட்டான். ஏனென்றல் பேசுகிறது மெய்: நடத்தையும் மெய்: அப்படிப்பட்டவனுக்கு சிறியவாள், பெரியவாள் எல்லோருமே ஒன்றுகூடி சேருவார்கள். நியாயம், அன்னியாயம் பரஸ்பரம் சகசமாய்த் தெரியவரும். ஜனங்களுக்குத் தெரியாதவரைக்கும், விவேகத்தினல் க்ஷமை பண்ணுதே போனல், சரிசமானஞ் சகசமே ஆகிவிடும். எதுவரைக்குஞ் சந்தன காஷ்டந்தெரியாதோ, அதுவரைக்குஞ் [3]சுகந்தத்தெரியாது. சந்தனமும், சந்தன காஷ்டமும், பின்னும், நான விருக்ஷங்களும் சரியாய்ப்போகும். அதுவும்போல எதுவரைக்கும் உத்தம குணங்கள் தெரியாதோ, அதுவரைக்கும் அவனை இந்த சாதாரண ஜனங்கள் எப்படி அறியப்போகிறது ?

உத்தம குணத்தைப் பார்த்தால், [4]ஜெகதாந்திரத்தில் எவனுந்தெளிவான். ஜெகதாந்திரத்தில், தெளிந்துகொண்டே வந்தது, ஜெகதாந்திரத்தில் சௌக்கியமானது. ஆனல், விசுவஜனங்களின் கிருபையுடையவாளானுளென்று அறியவேண்டும். ஜெகத்தில், ஜனர்த்தனன் கிருபையுடையவனுனேயாகில், அவனுக்கு என்னகுறை? ஆனபடியினலே, சகல ஜனங்களிடமும் ராசியாய்க் காப்பாற்றிக்கொள்ளுகிறது கடினமாக்கும். விரைத்ததே முளைக்கும். வழக்கமாக வாங்கிவந்தால்,

1. தானகவே. 2. ஏற்காதோ. 3. நறுமணம். 4. வேறு உலகங்களிலும்.

மருகாமல் கொடுக்கவேண்டும். கொடுத்தால் வாங்க வேண்டும். வர்மம்யெடுத்துச் சொன்னுல், [1]பராந்திரம் [2]பங்கப்படுகிறது. ஆனதினுல், உலகத்தில் நல்லதனமாகவே பழக வேண்டும். அதினுல் [3]சக்கியமே வளர்ந்தது. உத்திரத்துக்குப் போலவே பிரதி உத்திரம் வந்தது. இவைகள் முழுமையும் தன்னிடத்திலேதானே இருக்கிறது. இவ்விடத்தில், ஜனங்கள்பேரில் குறை சொல்ல இடமேயில்லை. தன்னுடைய மனதிற்கு க்ஷணத்துக்கு க்ஷணம் கற்றுக்கொடுத்துக்கொண்டு வரவேண்டும். வண்டன், துர்சனன்கூடி, க்ஷமையின் தீர்த்துவம் முழுகிப்போனது. ஆனுல் மௌனமாய், சாதகன் அந்த [4]ஸ்தலத்தியாகம் பண்ணவேண்டும்.

நாஞு பரீக்ஷையை அறிகிருர்கள். உள்ளத்தில், [5]அந்தறப் பரீக்ஷ அறியாள். அதிஞல் பிராணிகள் அதிர்ஷ்ட ஹீஞளாகிருர்கள். இதில் சந்தேகமில்லை. தனக்கு மரணமிருக்கிறது. ஆனபடியினுலே, நல்லத்தனமாகவே உலகில் வாழவேண்டும். விவேகத்தின் இலட்சணம் கடினமாயிருக்கிறது. பெரியவர்கள், சிறியவர்வர், பின்னும் சமானமானவர்கள், தன்னவர்கள், பிறர் சகல ஜனங்களுக்கும் மேன்பட்டு வளர்ந்துகொண்டேவர வேண்டும். சமாதானம் பண்ணிஞல் நல்லது: நல்லது பண்ணிஞல், நல்லதாகிறது. இதுவாஞல் சோதிணக்கு வருகிறது. இப்போதும், மேலும், எல்லோருக்கும் செய்யவும் சொல்லவும் தக்கது, ஹரிகதை, சாஸ்திரப் பிரசங்கம், நல்லதனத்திஞல் ராஜகாரணம், பிரசங்கம்

1. மாற்ருன் மனது. 2. துன்பமடைகிறது. 3. நட்பு. 4. இடம்விட்டகல வேண்டும். 5. மனதை பரீக்ஷிக்க.

பாராவிட்டால், சகலமும் பொல்லாது ஆபாசம், இளப்பம். வித்தைமிகுதியுங்கற்ருன். பிரசங்கத்தில் தப்பிக் கொண்டே போனுனுகில், அப்பால், அந்த வித்தையை எவன் தேடுவான்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்.
தாச பால உபதேச விளக்கத்தில்,
சோதினை சர்க்கங் கூறியது.
சர்க்கம் 2 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பன்னிரண்டாம் தசகத்தில் மூன்ரும் சர்க்கப் பிரசங்கம்.

கேளுங்கள். [1]பிருதிவியின் கண்ணில் சகல ஜனங்களும் விவேகம் பார்க்க வேண்டும். இகலோகமும், பரலோகமும் செவ்வையாய்ப் பார்க்க வேண்டும். இகலோகம் சாதிக்க வேண்டியதற்காக, அறிவுள்ளவனுடைய [2]சங்கத்தி பிடிக்கவேண்டும். பரமார்த்தம் அடைய வேண்டியதற்கு, சத்குருவை அடையவேண்டும் அந்த சத்குருவை, என்ன கேழ்கவேண்டும்? இதுவும் சுபாவீகமாய்த்தெரியாது.

1. உலகில். 2. உறவு. 3. அழிவில்லாத.

அனன்னிய பாவத்தினுலும் ஒரேபாவமாய், இரண்டு சொல்கள் கேட்கவேண்டும். அந்த இரண்டு சொற்களும் என்ன வென்ருல் தெய்வம் யார்? தான் யார்?

இந்த இரண்டு சொல்லின் விவறணை பண்ணினதே பண்ணவேண்டும். முன்னமே முக்கியமான தெய்வம் யார்? அப்பால் பக்தனுனதானுர்? பஞ்சீகரணம், மகாவாக்கிய விவரணை பண்ணினதே பண்ணவேண்டும். சகலமும் பண்ணினதின் பலன் எதுவென்ருல், நிக்ஷய மான தெய்வம் அறியவேண்டும். தான் யார் என்கப் பட்ட சோதினையும் அடையவேண்டும், சராசாறம் தெரி யும்போது, விசாறணையினுல் பதார்த்தங்களுக்கு சாஸ்வ தம் இல்லை. ஆனது கொண்டு முன்னமே பகவந்தனே காரணம். அந்த பகவந்தனை அறிந்துகொள்ள வேண் டியது.

நிச்சலம், சஞ்சலம், பின்னுமோ, ஜடம், இது முழு மையும் மாய்கையின் சாயல், மாய்கையின் மத்தியிலே, தெரிதான வஸ்து நுழையமாட்டாது. அந்தப் பரப் பிர்மத்தைத்தேட வேண்டும். விவேகத்தினுல் மூன்று உலகமும் சுற்ற வேண்டும். பரீக்ஷை வந்தாளானவாள், மாயீகமானதை விசாறணையினுல் கண்டிக்கவேண்டும். சொல்லாததை விட்டுவிட்டு, மெய்யானதைக் கிரகிக்க வேண்டும். இதை, பரீக்ஷவந்தாள் பரிக்ஷிக்கவேண் டும். மாய்கையின் ரூபமும் மாயீகமென்று அறியவேண் டும். அந்த மாய்கை பொய்யானது; அந்த மாயீகம் பஞ்சபூதம் இல்லாது, போய்விடும்

பிண்டம், பிர்மாண்டம், அஷ்டகாயமும், நாச முடையது காணப்படுகிறதெல்லாம் நசிக்கும். பிறக்கிற தெல்லாம் இறந்துபோம். அடுக்கப்பட்டதெல்லாம் நிச்சயமாய் இடிந்துபோம். வளரப்பட்டதெல்லாம் முறிந்துபோகப்பட்டது. வரப்பட்டதெல்லாம் போகப்

பட்டது. பிரளயகாலத்தில், பூதத்துக்குப்பூதம் நசித்துப்போம். தேகதாரிகள் அத்தனைபேரும் இறந்துபோனார்கள். இது நிச்சயமான சோதினை.

மனிதன் வினை, உற்பத்தி இந்திரியமேது? அன்னமில்லாமல் இந்திரியமேது? விந்து இல்லாமல் அன்னமேது? தானியத்திற்குப் பிருதிவியில்லாவிட்டால், பிழைப்பேது? அப்புயில்லாவிட்டால் பிருதிவியில்லை. தேயுயில்லாவிட்டால் அப்புயில்லை. வாயுவுயில்லாவிட்டால் தேயுயில்லை. அந்தற ஆத்துமாயில்லாவிட்டால் வாயுயேது? விகாறமில்லாவிட்டால் அந்தற ஆத்துமாயேது? நிற்விகாறத்தில் விகாறமேது? செவ்வையாய்ப் பாருங்கள். நிற்விகாறத்தில் பிருதிவியில்லை, அப்புயில்லை, தேயுயில்லை, வாயுயில்லை, அந்தற ஆத்துமா விகாறமில்லை. நிற்விகாரியான எது நிற்குணமோ, அதுவே சாசுவதத்தின் குறி. எட்டுவிதப் பிரகிருதி சகலமும் நாசமடைகின்றன. நாசமுடையது, [1]எண்ணிப்பார்க்கப்பட்டது. அப்போது, அது இருக்கையிலே இல்லாமற்போயிற்று.

சாராச்சாறத்தினல், சமாதானந் தெரியவந்தது. விவேகத்தினல் விவறணை பார்க்கப்பட்டது. அதினல், மனதில் சாராச்சாறந் தோணினது. இதனல் நிற்தாரம் திடமானது. சாசுவத தெய்வமானது நிற்குணம். இப்படிக்குக்கருத்தில் குறிவந்தது. ஆனது கொண்டு, இப்போது தெய்வந்தெரியவந்தது.

இப்போது, நான் எவன்? அதுதெரியவேண்டியது. பின்னுமோ நான் யார்? இது தெரிய வேண்டியதினலே தேகத்துவம் முழுமையும் சோதித்தது அப்போது, மனோவிர்த்தியினிடத்தில், நான் நீ, என்பது

1. விசாரம் செய்து.

தத்துவமாய்த் தத்துவத்தில் மறைந்தது. திரசியப் பதார்த்தங்கள் எப்போது ஒழியுமோ, தத்துவத்தினுல் தத்துவங்கள் எப்போது மிஞ்சி இராதோ, அப்போது, நான், நீ என்ற மிச்சமேது? தத்துவமாய் வஸ்துவாகும். பஞ்சீகறணம், தத்துவவிவரணை, மகாவாக்கியமான வஸ்து. தானந்தான் நிசங்கத்தனமாய் நிவேதனம் பண்ண வேண்டியது. தெய்வபக்தனுடைய மூலம் சகலமும் சோதித்துப் பார்க்கப்போனுல், உபாதி நீங்கலான, கேவலம், நிருபாதி ஆத்துமா நான் நீ என்பது. விவேகத்தினுல் வேருயிருப்பது போனது, நிவர்த்திபதத்துக்கு, துரியாதீத பதம் பிராப்தமானது. விஞ்ஞானத்தில் ஞானம் நின்றது. தெய்வத்தில் தியானம் நின்று போனது. யாதொரு காரியாகாரணமும் பார்த்துவிட்டு விட்டது. ஜனன மரணத்தின் பயம் தப்பியது. பாபம் அனைத்தும் முழுகிப்போயிற்று: எமயாதனையின் பயமற்றுபோனது. நிற்பந்தம் எல்லாம் அறுபட்டுப்போயின, விசாறணையினுல் மோட்சம் பிராப்தமானது. சகலமும் ஜென்ம சார்த்தகம் ஆனதாய்த் தோன்றுகிறது. நானு சந்தேகங்கள் தீர்த்து போயின. திகில் முழுமையும் அறுபட்டுப்போயிற்று, ஞான விவேகத்தினுல், வெகு ஜனங்கள் பாவன மானுள். பதீதபவானுடைய தாசானும், ஜனங்களைப் பாவனம் பண்ணுகிருள். இப்படி இந்த சோதினை வெகுபேருடைய மனதிற்கு வந்தது.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்.
தெய்வ பக்தன் சர்க்கம் 3 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பன்னிரண்டாம் தசகத்தில்

நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

மகத்தான பாக்கியம் கைக்கு வந்தது. ஆனாலும், போகித்து அறிந்து கொள்ளவில்லை. அப்படி வைராக்கியமும் உற்பன்னமானது விவேகமில்லாத போது, தவறுகிறது. பலப்படாதது கஷ்டப்படுகிறது: துக்கப்படுகிறது: கேழ்வியுங் காணப்படுகிறதும் இவைகளினாலே வைராக்கியம் வருகிறது பிரபஞ்சத்தில், நானா இழுப்புகள், நானா சங்கடங்கள், இடுக்கண்கள்: அதினால், சம்சாரம் விட்டு விட்டு, தேசாந்திரமாவான். அவன், [1]சிந்தையிலிருந்து விடுபட்டான். பராதீனத்திலிருந்து ஓடிப்போனான். அது எப்படி என்றால், ரோகியானவன் துக்கத்தியாகத்தினால் யெப்படி விடுபட்டுப் போனானோ, அது போல்.

ஆனாலும், இஷ்டம் போல தனது மனம் போனபடி திரியலாகாது. பின்னுமோ, நஷ்டனாகவும், பிறஷ்டனாகவும், விடனாகவும், கரை வரையில்லாமல், விவேகம் வினா வைராக்கியம் பண்ணப்பட்டதேயாகில் அது அவிவேகம். அனர்த்தத்தில் கொண்டுவிடும். இரண்டு பக்கத்திலும் முழுமையும் வியர்த்தமாய்ப் போகும். பிரபஞ்சமுமில்லை, பரமார்த்தமுமில்லை. பிழைப்பு முழு

1. கவலை.

மையும் வியர்த்தமாயிற்று. அவிவேகம் இப்படியெல்லாம் அனர்த்தம் பண்ணிற்று, ஏன்? வியர்த்தமாய் ஞானம் புலம்பினன். ஆனாலும், வைராக்கியம், யோகம் லெபிக்கவில்லை. அதுயெப்படி யென்றால், காராக்கிரகமென்கப்பட்ட சிறைச்சாலையில் சிக்கினவன் சாமர்த்தியன்யென்று சொல்லிக் கொள்ளுகிறவன் போலவாகும். வைராக்கியம் விஞ்ஞானம்; [1]விருத்தமான அபிமானமாக்கும். லோபத்தினால், டம்பத்தினால், புறப்பட்டு ஆராட்டப்பட்டவனானன். பின்னுமோ, சுவானம் கட்டியிருந்தாலும், அது குலைக்கும். அப்படி சுவார்த்த விஷயத்தினால் கதறுகிறான். மானத்தில், பராளுடைய ஆதிக்கம் பார்த்து அசங்கிதப்படுவான். இதில் ஏதாவது ஒன்றுயிருந்ததேயாகில் சோகம் அனுவச்யமாகவே வளரும்.

இப்போது வைராக்கியமும், விவேகமும் கூடிய யோகத்தைக்கேளுங்கள். விவேகத்தினால், உள்ளத்திலிருந்து விடுபட்டான். வைராக்கியத்தினால், பிரபஞ்சம் அறுபட்டது. உள்ளும், புறமுமொழிந்து நீங்கினான். அப்போது, யோகி [2]யொழிந்தவனானன். எப்படி வாக்கினால் ஞானம் பேசுவானே அப்படி சுயமாய் கிரியை நடக்கும். அந்த [3]திடசையைக்கண்டு, சுகுர்த [4]வந்தாள் திகைத்துப் போகிறார்கள். வைராக்கியத்தின் ஸ்திதி உண்டாகினதேயாகில், மூன்று உலகத்தின் ஆஸ்தையில்லை. எத்தினம், விவேகம், தாறணை: இதுகளுடைய கரை வரை கிடையாது. பண்களோடு ரச

1. வியர்த்தமான—வீணான. 2. துக்கம் ஒழிந்தவனான். 3. உறுதி. 4. நல்லோர்கள்.

மான ஹரிகீர்த்தனம், தாளக்கட்டு தானமானம், உள்ளத்திலிருந்து [1]பிரேமளமான பிரியபஜனமாகும் தாத்காலமே சன்மார்க்கம் வந்துவிடும். இப்படிக்கு, உள்ளத்தில் விவேகம் உண்டாயிருக்கும். அவன், சோதினையுடைய [2]சாயித்தியம் சொல்லி வருகையில், ஒருகாலமுங் [3]கச்சுப் போகான் சன்மார்க்கத்தினால் ஜகத்தில் சேர்ந்தான். ஆனபடியினாலே, ஜெகதீசனுடைய கிருபையுடையவனானன்.

பிரபல வைராக்கியத்தினால் [4]வெறுப்புடையவன், பின்னுமோ. சோதனையின் பிர்மக்ஞானம். பின்னும், ஸ்நானம், சந்தி, பகவத்பஜனமும், புண்ணிய மார்க்கமும், விவேக வைராக்கியம் வந்து இப்படியாகும். வெறும் வைராக்கியம் மட்டித்தனம், சப்த ஞானத்தினால், தானே தீனனைக் காணப்படுவான். ஆனபடியினாலே, விவேக வைராக்கியமே மகத்பாக்கிய மென்று அறியவேணும். ஸ்ரீ ராமதாச சுவாமிகள் இவிடத்தில் சொல்லுகிறார். யோக்கியமான சாதுக்கள் அறிவார்கள்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

விவேக வைராக்கியம் சொல்லப்பட்டது.

சர்க்கம் 4 முற்றும்.

---

1. உள்ளன்புடன் கூடிய. 2. இலக்கணம். 3. கசப்புடையான். 4. பற்றற்றவன்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பன்னிரண்டாம் தசகத்தில்
ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

[1]ரேகைகளால், வட்டமாய்ச்சுத்து மாத்திரிகை [2]அட்சரங்களினால் [3]சப்தமானது. அந்த சப்தங்கூட்டி, சுலோகங்கள் முதலாய் பிரபந்தங்கள் நடக்கின்றன. பின்னும், வேத சாஸ்திர புராணங்கள், நானா வாக்கியங்கள், சாஸ்திரங்களும் கிரந்த பேதங்களையும் எத்தனை என்று சொல்லலாம்: நானா ரிஷிகள், நானா மதங்கள், பார்க்கப்போனால் அளவு கடந்தவை. எங்கெங்கும் பாஷைகள் தனித்தனியே வளர்கின்றன. என்ன குறை? வேதத்தின் மெட்டுகள், அத்தியாயங்கள், சர்க்கங்கள், முதலாய்க்கிரந்தங்களில் செய்யுள், கலித்துறை, கவி, வெண்பா, விருத்தம், அகவல் இப்படி வெகுபேருடைய பாட்டுகள். பின்னும் நானா சில்லரைப் பாட்டுகள், விளையாட்டுகள் இவையுமுள. த்வனி, நாதம், கோஷம், ரேகை, இவைகள் நான்கு வாக்கிலுமிருக்கின்றன.

அந்த வாக்கின் ரூபம் சொல்வோம் கேளுங்கள். [4]பரையான வாக்கில் சுவனம், [5]பைசந்தியில் த்வனி, [6]மத்திமத்தில் நாதம், நான்காவது சப்தம். அந்த வைகறி சப்தத்திலிருந்து நானா சப்த ரெத்தினங்கள் பிரகடமாகின்றன. அகாரம், உகாரம், மகாரம் அட்சரங்களுடைய அந்தரங்கம் மூன்றுகரை மாத்திரை,

1. கோடுகளால். 2. எழுத்து. 3 வார்த்தை. 4. பரா. 5. பச்யந்தீ. 6. மத்தியமா.

அதின்பிறகு ஐம்பத்திரண்டு அக்ஷரம், நாலு பேதமான இராக ஞானம், மங்கள், நாட்டியபேதம், தாளக் ஞானம், அர்த்தபேதம், தத்துவக்ஞானம், விவறணே, தத்துவத்தில் முக்கியத்துவம். அதில், சுத்த தத்துவ மென்று அறியவேண்டும். அர்த்த மாத்திரை கூடிய தத்துவம், மூலமாய்கை, சிறியது, பெரியது, மகாகாரண தத்துவங்கள் கூடியது. எட்டுவித சரீரங்கள், எட்டு விதப் பிரகிருதியின் காற்று. காற்று இல்லாதேபோ னல் கூத்துப்புறப்பட்டுப்போகிறது. ககனம் எபபடியோ அப்படிப் பிரப்பிர்மம் போல நிறமபியிருப்பது. அஷ் டதா தேகத்தைப் போக்கடித்துப் பார்க்கவேண்டும். பிர்மாண்டம், பிண்டம் நிறுத்திப்பார்க்க வேண்டும். பிண்டப் பிர்மாண்டம், சம்வாரமிது இரண்டுதவிர்த்தால் நிஜமான விமலப் பிர்மம். மற்ற பதார்த்தங்கள், ஜடம், சஞ்சலம், விமலபிர்மம், நிச்சலம்: இதை விவரணம் செய்யுங்கால், [1]த்தாத்காலமே உருகி தத்ரூபமாகிவிடு வான்.

பதார்த்தங்கள், மனம், காயம், வாக்கு, இந்த நான்கும் முழுமையும் தெய்வத்தினுடையது என்று ஆத்ம நிவேதனம் செய்வது ஜட ஆத்தும நிவேதனம்.

சஞ்சலகர்த்தா, எந்த ஜெகதீசனே, பிராணிகள் யெல்லாம் அவனுடைய அம்சம், ஆனபடியினலே, அவனே அவன். அவிடத்தில் தனக்கு விடமேயில்லை என்பது சஞ்சல ஆத்தும நிவேதனத்தின் இலட்சணம்.

கர்த்தா அந்த தெய்வம்தான். அவனைத் தவிர மற்றது எங்குமில்லை. சஞ்சலம் சொற்பனகாரமாக ஜொலிக்கும். தெய்வம் நிராகாரமானது என்பது நிச்சல ஆத்தும நிவேதனத்தின் இலட்சணம் சஞ்சலத்

1. அப்போதே.

தின் ஆத்தும நிவேதனத்தின் விவேகம் இப்படி மூன்று பிரகாரத்திலும், தான், இரண்டாவதவனுமில்லவே யில்லை, தான்யில்லாதே போகையில், அந்த நானென்ன்பது எங்கேயுமில்லை என்பது பார்க்கப்பார்க்க அறியலாயிற்று. தெரியத் தெரிய தெரியவந்தது. பார்க்கப் போனால், பேச்சுகள் முழுமையும் நிவாந்தர மாயின.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
மூன்றுவித ஆத்தும நிவேதன
சர்க்கம் 5

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதிநோராம் தசகத்தில்
ஆறும் சர்க்கப் பிரசங்கம்.

பிர்மமென்றால், நிக்சலம், சாசுவதம், சாறம், அமலம், விமலம், அவகாசமாகவும், நிறம்பியும், போலாகவும், ஆகாசத்தைப் போலவே யிருப்பது, அதற்குச் செய்ய வேண்டியதும் பிடிக்க வேண்டியதும் கிடையாது. பின்னும், பிறக்கிறதும், மரணமும் கிடையாது. அவ்விடத்தில், அறிகிறதும். அறியாமையுங் கிடையாது. அது சூனியாதீதமாக்கும். உயராது, இடியாது, ஆகாது, போகாது, அது மாயாதீதமான நிறஞ்சனம். அதற்கு அந்தியமே கிடையாது.

மேல்சங்கல்பங் கிளப்பினால் அதற்கு ஷட்குணயீசுவரனென்று அழைக்கப் பட்டது. அர்த்தநாரி நடேசுவரன், மூலமாய் கையென்றுஞ் சொல்லப்படும். பின்னும் சர்வேசுவரன். சர்வக்ஞன், திறடன் சாக்ஷி, ஞானகனம், பரேசன், பரமாத்துமா, ஜெகஜ்ஜீவனம், மூலபுருஷன் என்றெல்லாம் பெயர்களுண்டு

அந்த மூலமாய்கை வெகு குணமுடையவள்; [1]அதோமுகத்தினால் குணக்ஷோபிணி ஆகிறான். அவளிடத்திலிருந்து குணத்திரய முண்டானது. மேல் விஷ்ணு உண்டானார். அறிவின்கலை, சத்துவ குணம், அந்த விஷ்ணு. திரிலோகத்தையும் பாலனம் பண்ணுகிறார். பிர்மதேவன் அறிவும் அறியாமை சேர்மானமொன்று அறியவேண்டும். அவர் குணத்தினால் மூன்று உலகத்திலும் "உற்பத்தி" யாகிறது. மேல், உருத்திரர் தமோகுணமுடையவர், சகல சம்வாரத்துக்கும் காரணமானவர். அறியாமைத்தனம் சகலமும் அவ்விடத்திலே தானியிருப்பது. மேல், அங்கேயிருந்து பஞ்ச பூதங்கள் ஸ்பஷ்டமாய் வெளிப்பட்டன. எட்டுவிதப் பிரகிருதியினுடைய ஸ்வரூபம் ஆதியிலேயேயிருப்பது. நிச்சலத்தில் சஞ்சலமானதே வாயுவின் இலட்சணம். பஞ்ச பூதங்கள், மூன்று குணமுங்கூடிய சூட்சுமமான எட்டுமாகும். ஆகாசமென்றால், அந்தர ஆத்மா ஆத்துமா. சோதினையினால் மகிமையைப் பார்க்க வேண்டும், அந்த ஆகாசத்தில் நின்று, வாயு ஜென்மத்துக்குவந்தது, அந்த வாயுவினுடைய நண்பர்கள் இருவர். ஒன்று உஷ்ணம், ஒன்று சீதளம். சீதளத்திலிருந்து நக்ஷத்திரங்களும், சந்திரனும் பிறந்தன, உஷ்ணத்திலிருந்து சூரியன், அக்கினி, தேயு, இடிகள் முதலியன பிறந்தன. ஆனதுகொண்டு, சீதள உஷ்ண

---

1. கீழ் நோக்கில்.

முங்கூடியதே தேயுயென்று அறியவேண்டும். அந்தத் தேயுவிலிருந்து அப்புவானது. அந்த அப்பு சுருங்கிப் பிருதிவியானது. மேலும் மூலிகைகள் உண்டாயின. அந்த மூலிகைகளிலிருந்து நானுரசங்கள், நானு பீஜத்தினுல் அன்னரசங்கள்; இவைகளால் பூமண்டலத்தில் எண்பத்து நான்கு இலட்ச யோனிகள் வாசமாக்கும். இப்படி சிர்ஷ்டிரச்சனையாயிற்று.

இந்த விவறணை மனதில் கொண்டு வரவேண்டியது. சோதினையன்னியில், அனுமானத்துக்கு ஏன் பாத்திரமாகவேணும். இந்தப்படி, உருவாயின எல்லாம், அந்தப் பிரகாரமே சம்வாரமாகிறது. இதற்கு சராசர விசாறணையென்றும் சொல்ல வேண்டும். எது எவ்விடத்திலிருந்து நிர்மாணமானதோ. அது அவ்விடத்தில் அற்றுப்போனது. இந்தப் பிரகாரமாய், மகா பிரளயத்தில் [1]சம்ஹாரப்பட்டது. ஆதியிலும், மத்தியிலும், அந்தியத்திலும், எது சாசுவதமான நிறஞ்சனமோ. அவ்விடத்தில், அறிவுள்ள புருஷாள் அனுசந்தானம் அமையவேண்டும். நானு சேர்மானங்கள் ஆகிறது போகிறது ஆனுலும், அது ஒன்றும் நில்லாது. இதற்காக, சராச்சர விசாரணை பண்ணவேண்டும். த்ரஷ்டா, சாக்ஷி, அந்தர ஆத்துமா : இதுகளுடைய மகிமை [2]சர்வத்திராளும் சொல்லுகிருள். ஆனுலும், இது சர்வ சாக்ஷிணி அவஸ்தை : இது, சோதினையினுல் பார்க்கவேண்டும். ஆதிமுதல், கடைசி வரைக்கும் எல்லாம் மாய்கையின் சேர்மானம் ; விஸ்தாரம் : நானுவித்தை கலைகள் : நுண்மை : இதுகள் அவனுக்குள்ளே தானுக்கும். எவன் உபாதையுடைய கடைசியில் சேர்வானே, அவனுக்கு, சர்வமும் பிறமை யென்பதாய்த்தோன்றும். எவன், உபாதிக்குள்ளே அகப்படுவானே, அவனை விடு

1. சம்ஹரிக்கப்பட்டது. 2. எல்லோரும்

தலை பண்ணுகிறவனெவன் ? விவேகம், சோதினியுடைய காரியங்களிது ? அனுமான பிறமையினால், எப்படி லெபிக்கும் ? ஆனபடியினாலே. சராச்சார விசாறணை யினால் பிறமை யில்லாமல் பிர்மம் அடையவேணும்.

பிர்மாண்டத்தில் மகாகாரணம், அது மூலமாய்கை யென்று அறி. அபூர்ணத்தைப் பிர்மம் பூர்ணமென்று விவேகஹீனன் சொல்லுவார்கள். சிருஷ்டிக்குள்ளே வெகு ஜனங்கள் இருக்கிறார்கள். அதில், சிறிது பேர் இராஜா ஆசனம் அனுபவிக்கிறார். சிறிது பேர், இப் போது, பிரத்தியக்ஷமாய் மலத்தை வாரிப்போடுகிறார். இப்படியாக வெகு ஜனங்கள் இருக்கிறார்கள். தன்னைப் பெரியவனாய் எண்ணிக் கொள்ளுகிறார்கள். ஆனால், சகலமும் அந்த விவேகிகள் அறிவார்கள். இந்த சமாச் சாரம் இப்படியிருப்பது, இவ்விடத்தில், 'சகாரணம் விசாறணை வேண்டியது. வெகுபேருடைய சொல்லு களினால் சம்சாரங் கெடுத்துப்போடலாகாது. புஸ்தக ஞானத்தினால் நிச்சயம் பிடிக்கிறதேயாகில், சத்கு ருவை யேதுக்காக அடையவேணும். ஆனபடியினாலே' தன்னுடைய சோதினையோடு விவறணைபண்ணவேண்டும். எவன் வெகுபேருடைய சொல்லுகளில் சேர்ந்தானோ, அவன், நிச்சயமாய் முழுகினானென்று அறியவேண்டும். ஒரு எஜமானன் இல்லாதபோனால், எவனை சம்பளம் கேட்கிறது ?

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்,
சிருஷ்டிக் கிரமம் கூறியது.
சர்க்கம் 6 முடிந்தது.

முற்றும்.

---

1. கார்யகாரண ரூபமாக பகிர்ந்து அறிதல்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பன்னிரண்டாம் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்.

"நியாய, நிஷ்டூரமான பேச்சுகள் வெகுபேருக்கு அசங்கிதமாய்த் தோன்றும். வயிறு பிரட்டல்காணும் போது மேலும் சாப்பிடுகிறது சரி அல்ல. வெகுபேர் கள் [1]விஷயங்களை நிந்தித்தார்கள். அதை அவர்களே தானாகப் புசித்துக்கொண்டே போனார்கள். விஷயங் களை [2]தெயிதத்தினால் தேகமிருக்கிறது. இது நடவாது, சொல்லுகிறது ஒன்று. நடக்கிறது ஒன்று. இது மிக்க அவிவேகம். அதினால் சகல ஜனங்கள் சிரிக்கத்தலைப் படுவார்கள். விஷயங்களை துறந்தாலன்றி பரலோகம் கிட்டாது, என்று இடத்துக்கு இடம் சாஸ்திரங்களில் சொல்களிருக்கின்றன.

உலகத்தில், பிரபஞ்சிகாள் மாத்திரம் தின்கிறார்கள். பரமார்த்திகள் யென்ன உபவாசம் பண்ணுகிறார்களா? ஆனபடியினாலே, [3]உபயத்திராளும் விஷயா விஷயத்தில் சமானமாய்க் காணப்படுகிறார்கள். தேகமிருக்கையில், விஷயந்தெயிக்கிறவனாய் உலகத்தில் எவனானன்? இதி னுடைய நிர்வாகம் தெய்வமே எனக்குச் சொல்லவேண் டும். விஷயம் முழுமையும் தஹிக்க வேண்டும். ஆனால் தான் பரமார்த்தம் பண்ணவேண்டும். பார்க்கப் போனால், இப்படிப்பட்ட சிக்கல் காணப்படுகிறதே", என்று கேழ்கிறவன் விண்ணப்பம் பண்ணினான்.

---

1. வீண் சமாச்சாரம். 2. தகித்ததினால். 3. இருவர் களும்.

சுவாமி பிரதி உத்தரம் சொல்லுகிறுர். ஓ! சாத காளே! இந்த ஞாபகத்தை மனதில் வையுங்கள். வைராக்கியத்தினுல் தியாகம் பண்ணவேண்டும். ஆனுல் தான் பரமார்த்தம் [1]யோகமாகும். பிரபஞ்சத்தியாகத் தினுல் சர்வசாங்கமாய்ப் பரமார்த்தம் லெபிக்கும்.

முன் காலத்தில் பலர் ஞானிகளானுர்கள். அவர்கள் வெகு கஷ்டப்பட்டார்கள். இதனுல், அப்பால் அவர்கள் பூமண்டலத்தில் [2]விகாதமானுர்கள். சிறிதுபேர் மத, மாச்சரியம் பண்ணிக்கொண்டே போனுர்கள். அவர் கள், அன்னமன்னமென்றே கஷ்டப்பட்டுப்போனுர்கள். சிறிதுபேர் வயிற்றுக்காகப் [3]பிரஷ்டாளாய்ப் போனுர் கள். வைராக்கியம் ஆதியிலேயே இல்லை. சோதினை யால் அடைந்த ஞானமில்லை. ஆச்சாரமுமில்லை, அவ் விடத்தில் பஜனமேது? இந்தப்பிரகாரமுடை ஜனங் கள், தன்னை சற்ஜனனென்று எண்ணிக்கொள்ளுகிறுர் கள். பார்க்கப்போனுல், எல்லாம் அனுமானமாய்க் காணுகிறது.

எவ்னுக்கு அனுதாபமில்லையோ, அதுவே பூர்வ பாபம். பாரளுடைய ஆதிக்கத்தினுல், க்ஷணத்துக்கு க்ஷணம் விக்ஷேபம் உண்டாகிறது. பின்னுமோ, "எனக்கு இல்லை, உனக்கு சோபிக்கவில்லை," இது சர்வ ஜனங்களுக்குத் தெரிந்தேயிருக்கிறது தின்கிற வனைத் தின்காதவன் பார்க்க சகிக்கான். பாக்கிய புரு ஷானை மெலிந்தவாள் நிந்திப்பார்கள். எப்படியென்றுல் நிஜஸ்தனைக் கண்டால், திருடன் தத்தளிப்பான் போல்.

வாக்கும், வைராக்கியமும்வினு பாக்கியமில்லை. வைராக்கியமில்லாததுவே அபாக்கியம். வைராக்கியமில் லாதேபோனுல், யோக்கியமான பரமார்த்தம் லபியாது.

---

1. சித்திக்கும். 2. விக்யாதம் — பிரசித்தி பெற்றவர்கள். 3. சாத்திர வரம்புக்கு மீறியவர்கள்.

சோதினையுடைய ஞானியானவன் விதராகி; அவன் விவேக பலத்தினால், சகலமும் தகிக்கிறவன். அவனே ஈசுவர சாயலான மகாயோகியென்று அறியவேண்டும். எட்டுவித சித்தியுடைய உபேக்ஷை தள்ளி, மகாதேவர், யோக தீக்ஷை யெடுத்துக்கொண்டு, வீட்டுக்குவீடு பிச்சை யெடுக்கிறார்- அந்த ஈசுவரனுக்குச் சரிசமானமாய் எப்படி தேகதாரி செய்வான்? ஆனபடியினாலே, சகடு சரியாயாகிறதில்லை. வெறுப்பும், பின்னும் விவேகமுடையவனை, சகல ஜனங்களும் சோதிப்பார்கள்.

ஆசையுடைய மூர்க்கன் ருசியினால் தீனரூபியாக்கும். எவன், ஆச்சாரம்விட்டு யெடுபட்டானோ, எவன் விசாரணையிலிருந்து யெடுப்பானோ, பின்னும், பிறஷ்டனாய்ப் போனானோ, பின்னும், வைராக்கியம் பண்ண மறந்தானோ, அவன் மூர்க்கன். விஷயலோபமே இதற்குக்காரணம். பஜனமானால் பிரியப்படாது [1]புனர் சரணமான ஜெபம், உரு ஒரு காலமும் லெபியாது. இந்த நிமித்தியத்தினால், நல்லவாளுக்கும், இவனுக்கும் சேராது வைராக்கியம் பண்ணி பிறஷ்டனாகான். ஞானியாகி பஜனம்விடான். விற்பன்னனாகி வாக்குவாதம் பண்ண மாட்டான்.

இப்படி இருக்கப்பட்டபேர் கொஞ்சம்பேர், கஷ்டப் பட்டால், பயிர்பலிக்கும். உயர்ந்தவஸ்திரம் தாத்கால மேவிலைபடும். அறிவுடைய ஜனங்கள் சந்தோஷத்தினால் குதிப்பார்கள். மற்றவாள் முழுமையும் மந்தமயமாய்ப்போவார்கள், துராசையினால், செல்லாதவரானார்கள். பிரஷ்டாகாறத்தினால் ஞானத்தை சுறுக்கினார்கள். ஆனதினாலே சபல விஷயத்தியாகம் பண்ண வேண்டும். சுத்தமானது காரித்யத்துக்குத் தக்கதாய் வாங்கிக் கொள்ளவேண்டும். விஷயத்தியாகத்தின்

---

1. ஜபத்தை நியமத்துடன் உருப்போடுவது.

இலட்சணங்கள் இப்படியென்று அறியுங்கள். ஏதொரு சகலமும் கர்த்தா தெய்வமாக்கும். அகங்கிறிதிக்கு விடமேயில்லை. விவேகத்தின் அபிப்பிராயம் விவேகி கள் அறிவார்கள். சூரத்தனத்தில் மிகுதியுங் கெட்டிக் காரனை சிறியவாளும் பெரியவாளும் மானிப்பார்கள். காரியம் பண்ணுகிறவனும், உடம்பை ஒளிக்கிறவனும் ஒன்றுகயெப்படியாவான்? தியாகாத்தியாகம் தார்க்கி கள் அறிவாள். பேசினபடிக்கு நடக்க அறிவான். பிண்டபிர்மாண்ட சகலமும் எதாயோக்கியமறிவான். இப்படிப்பட்ட அறிவுள்ள சமத்தன் எவனே, அவன், உத்தம இலட்சணங்களினுல் பூர்ணமானவன். அவ ஞலே, சார்த்தகம் சகலஜனங்களுக்கும் சகஜமே ஆகி விடும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
விஷயத்தியாக
சர்க்கம் 7. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பன்னிரண்டாம் தசகத்தில் எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

மூலமாய்கை, ஜெகதீசுவரன்மேல் எட்டுவிதப்ற கிருதியின் விஸ்தாரம். இப்படியாகச் சிருஷ்டிக்கிரம

உருவாரங்கள் உருவாரப்பட்டன. இது முழுமையுமில்லாதுபோனால், அந்தராளமான ஆகாசம் எப்படியோ, அதுவும்போல, நிர்மலம்தான் இருக்கப்பட்டது. நிராகாரத்தில், காலம், வேளை, இவையொன்றுமில்லை. உபாதி விஸ்தாரமானது. அதில், காலம் தோற்றியது. மற்றபடிபார்க்கப்போனால், காலத்துக்குவிடமேயில்லை. ஒன்று சஞ்சலம், ஒன்று நிற்சலம். இதுவின. கால்மேது? சஞ்சலமிருக்கிறவரைக்கும் காலமென்கவேண்டும்.

தாகத்திஞல் சரீரம் சோஷிக்கிறது. அந்த விசாறம் ஆத்துமாவுக்குத் தெரியாது. அப்பால் சரீரத்தைக் கிளப்பிவிட்டு, தண்ணீர் சமீபத்தில் நடப்புவிக்கிறது. தண்ணீர் வேண்டும் என்கிறது. சப்தம் செய்து வைக் கிறது. வழி பார்த்துக்கொண்டு சரீரத்தை நடப்புவிக் கிறது. [2]பிரசங்கத்துக்குத் தக்கதாய் எல்லாச் சரீரத் தையும் அசைத்து வைக்கிறது. பசியெடுத்தது யென்று அறிகிறது. அப்பால் தேகத்தை எழுப்பிவிடுகிறது. கண்டபேரை யெல்லாம் தப்பத்தவறப் பேசுகிறது. பெண்டுகளை, "சமையல் ஆயிற்ரு", வென்கிறது. தேகத் தைத்தான் ஆசாரம் பண்ணவைத்து கொண்டுவந்தது. காலில்யேற்பட்டு சுருக்குச்சுருக்காய் நடக்கிறது, பாத்தி ரத்தின் முன்னே உட்கார வைக்கிறது. கண்ணிஞல் பாத்திரத்தைப் பார்க்கிறது. கையிஞல், ஆபோசன த்தை வாங்கவைக்கிறது. கையிஞல், கவளத்தையெடுப் புவிக்கிறது. முகத்தில் போய் வாயைத்திறக்கப்பண்ணு கிறது. நன்ருய் நன்ருய் மெல்லுகிறது. பின்னும், நாக்

---

1. உணவு, நீர் முதலியவை. 2. சந்தர்ப்பத்திற்கு ஒட்டி.

கிலிருந்து கொண்டு, பரிமளருசியை பார்க்கிறது. பின்னுமோ, மயிர்களெடுத்துப் போடுகிறது. கல்கள் அறிந்து, அந்த க்ஷணமே, உமிழ்ந்து போடுகிறது. உப்பு இல்லையென்று தெரிந்ததினால், உப்பு வேண்டுமென கேழ்கிறது. பெண்சாதியைப் பார்த்து "ஏண்டி" யென், கிறது. கோபங்களோடே உருட்டி முழுத்துப் பார்க்கிறது. ருசிப்பட்டவுடனே ஆனந்தமடைகிறது. ருசியில்லாவிட்டால். அதிக கோபமடைகிறது. ஆத்துமாவுக்கு நிஷ்டூரவசனம், கடினவசனம், தாத்காலமே பேதிக்கிறது. நானா அன்னங்களாய நானாருசிகள், நானா சாறங்களுடையயினம் பிரிக்கிறது. உறப்புப்பட்டவுடனே தலையை உதறுகிறது. பின்னுமோ, இருமுகிறது. வெகுதூள் எப்படிப் போட்டாள், அதிகம், இவள்யென்னமாய்ச் செய்கிறுள். என்று நாவில் கோபத்தோடே கடின உத்திரம் பேசவைக்கிறது. நெய்யை மிகுதியுஞ் சாப்பிட்டான். உடனே ஜலத்தை யெடுத்துக் கொண்டு களா, களா, வென்று சாவகாசமாய்க் குடிக்கத் தலைப்பட்டான். ஆனபடியினலே, தேகத்தில் சுக்துகம் பார்க்கையில், போக்தா இந்த ஆத்துமாவே ஒருவன். ஆனது. கொண்டு, ஆத்துமாவினயித்துத் தேகம்விருத்தாப்பிணமாக்கும்.

மனதினுடைய ஆனந்த விருத்திகள் அதை அறிகிறதே ஆத்துமஸ்திதி. மூன்று உலகத்திலும் எவ்வளவு மூர்த்திகளோ, அதற்குள் ஆத்துமா, ஜெகத்துக்குள்ளே ஜெகதாத்துமா: விசுவத்தில், நடைவடை படுகிறதே, விசுவாத்துமா. நானாரூபமாய் சர்வத்தையும் நடப்புவிக்கிறது. சர்வாத்துமா, ஆக்கிராணிக்கிறது. சப்புகிறது. கேழ்கிறது, பார்க்கிறது, மிருது, கடினத்தை

அறிகிறது. சீத உஷ்ணங்களை அறிவது ஆத்துமா. தாத்காலமே சாவதானமாய் லாவக முடையவன், வெகு ஹேதுக்கிடை பண்ணுகிறது. சமத்தனுடைய பிரிவு, அது, சமத்தனே பண்ணுவான்.

வாயுவின் கூடவே பரிமளம் வருகிறது. வந்தாலும், அது தனித்து போகிறது. அப்பால், வாயு [1]தூளிக் கொண்டு வருகிறது. அதுவும்போய்விடும். சீதளம், உஷ்ணமான நல்லவாசனை, துற்வாசனை, இவை வாயுவு ட்னேய கூடியிருப்பபை. ஆனாலும், சாவகாசமாய் நிற் கிறது கிடையாது. வாயுவின் கூடவே ரோகங்கள் வரு கின்றன. பின்னுமோ, பிசாசுகளும் ஓடிவருகிறது. புகையும், ரேணுவும் வருகின்றன. வாயுவின் கூட ஒன் றும் ஈடாகாது

ஆனாலும், ஆத்துமாவின் கூட அந்தவாயு நில்லாது. ஆத்துமாவுடைய சஞ்சலம் அதிகமாக்கும். வாயுகடினத் துக்குத் தடைபடுகிறது. ஆத்துமா கடினம் பேதித்துப் போகிறது. அந்த கடினத்தைப் பார்ப்பதே ஆனால், துவாரமுமில்லை. வாயுபடபடவென்று சப்திக்கிறது. ஆத்துமா ஒன்றும் ஓசைப்படுகிறதேயில்லை. மௌனமா கவே உள்ளில் அறிந்து, விவரித்துப் பார்க்கிறது. ஆனதினாலே, சரீரங்களுக்கு நன்மை பண்ணப்பட்ட தெல்லாம், அந்த ஆத்துமாவுக்கே அடைந்தது. ஆனதி னாலே, சரீரயோகத்தினால் சமாதானமடைகிறது. ஒரு தேகம் வினாநானா உபாயங்கள் பண்ணினாலும், அவை ஆத்துமாவுக் தடையாது. தேகத்தினாலேயே வாசனை

1. தூசி.

சமாதானமடைகிறது. ஆனதுகொண்டு, தேக ஆத்துமாவின் நாட்டிய வேடிக்கைப் பார்க்கப்போனல், அநேகம் தேகந்தவிர ஆத்துமாவுக்கு உபாயமில்லை. ஆனதுகொண்டு, இரண்டு மொன்ருயிருக்கையில், மிகுதியும் லெபிக்கும். பிரித்துப் பார்த்தாலோ, ஒன்றும் நடக்காது, தேகாத்தும யோகத்தினுல், விவேகி, மூன்று உலகத்திலும் பரவுவான்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்.
ஆத்துமா கூறின சர்க்கம் 9

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதின்மூன்ரும் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

இலைகளுடைய மாலைகள், புஷ்பத்தின் மாலைகள், பழங்களுடைய மாலைகள், விறைகளுடைய மாலைகள், பாஷாண மாலைகள், பலகரையின் மாலைகள்; இவைகளெல்லாம் நூலினுலே தொடுக்கப்பட்டன. பின்னுமோ ஸ்படிக மாலை, விஷக்கல் மாலைகள், காஷ்டமாலை, சந்தன மாலை, தாது மாலை, இரத்தின மாலை, வலைகள், துப்பட்டிகள், மெய்க்கட்டுகள்: இவைகள் எல்லாம்

நூலினாலேயே கொடுக்கப்பட்டன. நூலில்லாது போனால், (விஷ்களிதமாய்ப்போம்,) வீணாய்ப்போகும். அப்படி, ஆத்துமாவைச் சொல்வோமானால், நடவாது. நூலில் மணிகோர்க்கப்பட்டது. அந்த நூல் மணி நடுவே யேயிருக்கும். ஆத்துமா சர்வாங்கத்தினால் வியாபித்து இருக்கும். ஆத்துமாவின் சகஜ குணமே, சபலமா யிருப்பது. நூல், யென்ன சலிப்பதை அறியும்? ஆன படியினாலே, இந்த திருஷ்டாந்திரம் கொடுக்கிறது விகிதமல்ல.[1]

நானாகோடிகளுக்குள்ளே நீரமுசம், கரும்பில் இர சம் நிறம்பியிருப்பது. இருந்தாலும் அந்த ரசமும், சர்க்கரையும் ஒன்றல்லவே. தேகி ஆத்துமா, தேகம் அனாத்மா: அதற்கு அப்புறம் இருப்பது, பரமாத்துமா, நிறஞ்சனத்துக்கு உபமானங்கிடையவே கிடையாது. இராஜா முதல் புழுக்கள் வரைக்கும் எல்லாம் மனுஷா ளுடைய பந்தி. ஆனாலும், இவாளைச் சரிசமானமாய் எப்படி எண்ணவேணும்? தேவதைகள், தானவாள், மானவாள், நீசயோனிகள், ஜீவாள், பாபி, சுக்ருத்தீ. இப்படிக்கு அபிப்ராயம் அநேகமாகவுமிருப்பது. ஒரே அம்சத்தினால் ஜகம் நடந்தாலும் சாமர்த்தியம் வேறாக வேயிருப்பது.

ஒரு சங்கத்தியினால், முக்தி பண்ணப்பட்டது: ஒரு சங்கத்தியினால் [2]ரவுரம்பிராப்தி. சர்க்கரை, மண்ணும் பிருதிவியேயாம். ஆனாலும், அது பொல்லாது. புண் ணிய ஆத்துமா, பின்னும், பாபஆத்துமா, இரண்டு பக்கத்திலேயும் அந்தர ஆத்துமா ஒன்றே யிருப்பது

1. உசிதமல்ல. 2. நரகம்.

வழிமறித்துப்பறிக்கிறவன், சாது, சுக்குப்பொடிகாரன் இவாளுக்கு வறம்பு தப்பி நடக்கலாகாது. அந்தறங்க மானல் ஒன்று யென்பது மெய். ஆனாலும், நீசக்கூட்டங்களை, சமீபத்தில் வைத்துக்கொள்ளலாகாது. பண்டிதாளும், மதியீனர்களும் ஒன்றுவது எப்படி? மனிதனும், கழுதைகளும், இராஜ அன்னங்களும், கோழிகளும், இராஜாவும், குரங்குகளும், எப்படி ஒன்றும்? பாகீரதிஜலப் அப்பு, சாக்கடைத் தண்ணீரின் தெளிவின் பெயர் அப்பு; அந்தத்தண்ணீர் அசங்கிதமாக அல்பமாயிருக்கப்பட்டது. குடிக்கக்கூடாது.

ஆனபடியினாலே, ஆசாற சுத்தமும், அதற்குமேல் விசாறணை சுத்தமும் வீதராகியும், மெய்யனாகவும் இருக்கவேண்டியது. சூரனைப் பார்க்கிலும், பயங்காளியை மானித்ததேயாகில், புத்தப் பிரசங்கத்திலே யாது பலன்? ஸ்ரீமந்த்தனை விட்டு விட்டு போக்கிரிப் பச்சையைச்சேவித்தால் என்னவடைய முடியும்? ஒரே ஜலத்தினாலே சகலமுமானது. ஆனாலும், பார்த்து விசாரித்துச்சாப்பிட வேண்டியது. முழுமையும் குடித்ததேயாகில், அது மூர்க்கத்தனம். ஜலத்தின் கண்ணிலே தான் அன்னமானது. அந்த அன்னமே வாந்தியானது. அந்த வாந்தியைக் கொள்ளவே கூடாது. அப்படி நிந்தனையானதை விட்டுவிட வேணும். மேன்மையானதைக் கருத்தில் பிடிக்கவேணும். சத்கீர்த்தி பூமண்டலத்தில் நிறம்பவேணும். உத்தமனுக்கு உத்தமம் பிடிக்கும். கனிஷ்டனுக்கு அதுபிடியாது.

ஆனது கொண்டு தெய்வம் அதிர்ஷ்டஹீனம் என்பதையும் சிருஷ்டித்தது. அதிர்ஷ்ட ஹீனத்துவம் முழுமைக்கும் விட்டு விடுங்கள். உத்தம இலட்சணம் பிடியுங்கள். ஹரிகதை, புராணக்கேழ்விகள், நீதி, நியாயம் தான் நடந்துகொள்ள வேண்டிய விவேகம், விசாரிக்க வேண்டும். அது யென்னவென்ருல், சகல ஜனங்களுமொருமைப்பட நடந்துகொள்ள வேண்டும். மெள்ள மெள்ள புண்ணிய சுலோகங்களாக்க வேண்டும். உலகத்தில், பிள்ளையாண்டான் கூடவே அனுசரித்து நடந்தால், அவன் நடையே நடக்க வேண்டும். பின்னும் அவன் கருத்தைப்போலவே பேச வேண்டும. அதுவும் போலவே ஜனங்களுக்கு, மெள்ள மெள்ள சொல்லிக்கொடுக்க வேண்டும். சாதுரியத்தின் இலட்சணம் எதுவென்ருல், மனேகதம் காப்பாற்ற வேண்டுவதே முக்கியமானது

சதுரனுனவன், சதுர் அங்கத்தையும் அறிவான். மற்றபேர், வைத்தியமுடையவாளாக்கும் வைத்தியக்காரனைப் பைத்தியக்காரனெக்கக்கூடாது. வர்மம் ஒரு காலமும் பேசக்கூடாது ஆனல்த்தான் நிசபறனுடைய புத்திக்கு விஷாயம் லெபிக்கும் வெகு ஸ்தலங்களில் வெகு பிரசங்கங்கள் கேழ்க்கப்படும். அது, சாங்கமாயறிந்து பண்ணவேண்டும். பிராணிகளுடைய அந்தரங்கம்போலவே போகவேண்டும். மனேகதம் காப்பாற்றிக்கொண்டே போகையில், பரஸ்பரம் அவஸ்தை லபிக்கும், மனேகதம் முறிந்தால், விவஸ்தை நன்ருக நடவாது. ஆனபடியினலே, மனேகதம் காப்பாற்று

கிறவனே பெரியமருத்து. மனோகதங் காப்பாற்றினால், சர்வத்திராளுங் கல்விக் கொண்டே வருவாள்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
கற்றுக்கொடுக்கிற
சர்க்கம் 10 முடிந்தது.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

தாசபோதம் பதினாலாவது அகண்ட தியாக தசகம், முதல் சர்க்கம்.

இனிமேல், பதின்நான்காவது தசகத்தில் முதல் சர்க்கப் பிரசங்கம்.

நிசப் பிராளுக்கு நிறந்தரமாய், சமாதானம் நீக்கும்படியாய்ச் சொல்லிக் கொடுக்கிற யுக்தி, புத்தி, சாமார்த்தியங்களைக், கேளுங்கள், சுலூபமான மந்திரம் ஆனாலும் உத்தமோத்தமம். அது இலகு ஔஷதம், குணகாரி. அதுவும் போலவே, என்னுடைய சொற்கள் சுலூபமானாலும் சோதினையுடையது. தாத்காலமே அவ குணம் போய்விடுகிறது. பின்னுமோ, உத்தம குணம் பிராப்தியாகிவிடும். ஆனபடியினாலே, கேழ்கிறவாள் அக்கரையுடனே, சப்த ஔஷதத்தை, சீக்கிரமாய்ச் சாப்பிடவேணும்.

நீசப்பிரகாம் பிடிக்கவேயாகாது பிடித்தேயானல், அதைவிடவேயாகாது. விட்டாயாகில், அறிந்தவாளுக்குள்ளே திரியவேயாகாது. பெண்களைத்தன்கண்ணுல் பார்கவே கூடாது. மனதிற்கு ருகிகொடுக்வேயாகாது. தைரியம் சவித்தால், ஒருத்வருக்கு முகம்காட்டவேயாகாது. ஒருவிடத்திலிருக்கலாகாது, இழுக்கான சொற்கள் சகிக்கலாகாது. திரவியம், ஸ்திரி, இவைகளை ஆஸ்தையினுல் பார்க்கலாகாது. ஆர்சாரம் பிறஷ்டத்துவம், ஆகாது. திரவியம் கொடுத்தாலும் வாங்கலாகாது. தன்பேரில் ஊனசப்தம் வரலாகாது. தினமும் அழுக்குடைய வஸ்திரம் கட்டலாகாது. ருசியான அன்னந்தின்னலாகாது. துராக்கிரம் பண்ணலாகாது. பிரசங்கத்துக்குத்தக்கதாய் நடந்து கொள்ளவேண்டும்.

பிக்ஷைக்கு வெட்கப்படலாகாது. மிகுதியும் பிக்ஷை வாங்கலாகாது. கேட்கையிலும் தன்னுடைய அறிமுகங் காட்டலாகாது. போகங்களில் மனமிருக்கலாகாது. தேகதுக்கத்தினுல் கஷ்டப்படலாகாது. இனிமேலும் ஜீவப்பிழைப்பின் ஆசைபிடிக்க்லாகாது விறக்திசலியக் கொடுக்கலாகாது. விவேகபலத்தினுல் ஞானமலின்ம் ஆகக்கூடாது. கருணையின் கீர்த்தனம் விடல்ாகாது அந்தரத்தியானம் முறிக்கப்படாது. சகாரமூர்த்தியின் பிரியத்தின் தாரை அறுக்கலாகாது.

கருத்நில் சிந்தை பிடிக்கலாகாது. கஷ்டத்தினுல் துக்கமெண்ணலாகா. என்ன பண்ணினுலும், சமயத்தில் தீர்த்துவம் விடலாகாது. அவமானத்தினுல் குன்றலாகாது. தூஷியத்தினுல் கஷ்டப்படலாகாது. ஏசல்

களிறல் எப்பேகதுங்குண்ணலாகாது. உலகத்தின் இலட்சை பிடிக்கலாகாது. வெட்கப்படுத்தினல் வெட்கப் படலாகாது. குன்றப்பண்ணிறலும் விறக்த புருஷன் குன்றலாகாது. சுத்த மார்க்கம்விடலாகாது. துற்ஜனு ளோடு எதிர்க்கலாது. சண்டாளனேடு சம்மந்தம் விழக் கொடுக்கலாகாது. தப்தத்தின் தனம் பிடிக்கலாகாது. சர்ச்சைப்படுத்தினும், சர்சைப்படலாகாது. பறக்கடிந் தாலும் தன்னுடைய நிஜஸ்தியை மறக்கலாகாது. சிறிப்பு மூட்டினல் சிறிக்கலாகாது பேசுவித்தாலும் பேச்சுக் கொடுக்கலாகாது. க்ஷணத்துக்கு க்ஷணம் நடக்க வைத் தாலும் நடக்கலாகாது. ஒருவேஷமும் பிடிக்கலாகாது ஒரேவாடிக்கை பிடித்துப் பண்ணலாகாது.

ஒரேவேசத்தில் இருக்கலாகாது பின்னுமோ சுற் றிக்கொண்டே திரியவேண்டும். தாக்ஷண்யம் விழக் கொடுக்கலாகாது. சபையில் சர்வகாலமும் உட்காரலா காது. உடலில் நேமம் ஒட்டக் கொடுக்கலாகாது. யாருக்கும் பூரவசங்கொடுக்கலாகாது. பெருமையை அங்கீகாரம் பண்ணலாகாது நித்தியநேமம் விடலா காது. அப்பியாச முழுகக்கொடுக்கலாகாது. என்ன பண்ணிறலும் பிறத்தியான் வசம் ஆகக்கூடாது. சுவா தீனத்தை முறிக்கலாகாது. க்ஷணத்துக்குக்ஷணம் பரா ளபேக்ஷை ஆகலாகாது. நிராபேக்ஷை முறிக்கலாகாது.

வைபவதிருஷ்டி பார்க்கலாகாது. உபாதி, சோகத் தினல் இருக்கலாகாது. சொரூப ஸ்திதியின் ஏகாந்தம் முறிக்கலாகாது. இழுக்குத்தனம் பிடிக்கலாகாது. உலகத்தில் சிந்தையானகாரியம் பண்ணலாகாது. எவ்

விடத்திலேயாகிலும் ஒருக்காலமும் ஆசையுடையவ்னுக லாகாது. பரம்பரையை அற்றுப்போகவைக்கக்கூடாது உபாசினேயை முறிக்கலாகாது. ஒரிக்காலமும் ஞானம் மறந்துவிடலாகாது. கற்ம மார்க்கம் விட்டுவிடலாகாது. வைராக்கியம் முறிக்கலாகாது. கருத்தில் சாதனபஜனம் [1]கணடிக்கலாகாது. அதிவாதம பண்ணலாகாது. உள்ளில் அநீதி பிடிக்கலாகாது. கோபத்திஞல் கண்டவிடத்தில் நுழைந்து கொடுக்கலாகாது; அசங்கிதமாய்ப் பேசலாகாது. ஒரு ஸ்தலத்தில் வெகுநேரம் இருக்கலாகாது. ஏதொரு உபாதியும் பண்ணலாகாது. டிுண்ணிஞலும் பிடிக்கலாகாது. பிடித்தாலும், அந்த உபாதிக்குள்ளே அகப்படலாகாது

பெரியகுணமிருக்கலாகாது. மகுத்துவம் பிடித்துக் கொண்டு உட்காரலாகாது. எவ்விடத்திலேயாகிலும் ஏதொருமானமும் இச்சிக்கலாகாது. பலாத்காரமாய் உடலில் அபிமானம் சேரக்கொடுக்கலாகாது. அதிகாரமில்லாமல் சொல்லலாகாது. தாஞய் உபதேசம் கொடுக்கலாகாது. தன்னுடைய பரமாத்துமாயிழுக்குதனமாகலாகாது, கடின சப்தங்கள் சொல்லலாகாது. கடின ஆக்கினே பண்ணலாகாது. ஏதொரு காரியத்திலும் கடினங்கள் பிடிக்கலாகாது.

கடின வைராக்கியம் விடலாகாது. ஞான அப்பியாசம் முறிக்கலாகாது. என்னபண்ணிஞலும் கடின தீர்த்துவம் விட்டுவிடலாகாது. தான் அசக்தஞகலாகாது பண்ணுமல் சொல்லலாகாது. சிஷ்யாளே, அதிகமாகக்

1. துண்டிக்கக்கூடாது.

கேழ்கலாகாது. தாஷ்டீக சப்தம் பேசலாகாது இந்திரியஸ்மரணை பண்ணலாகாது. முக்ததனத்தினால் சாதக மார்க்க அனுபவம் தப்பலாகாது. சத்கீர்த்தியடைய வெட்கப்படலாகாது. பாக்கியம் வந்தால் கர்விக்கலாகாது. அறிவீனத்தினால் குரோதத்தில் நுழையலாகாது. பெரியதனமாகலாகாது. நியாயநீதி விடவேயாகாது. என்ன பண்ணினாலும் அபிமானமாய் நடக்கலாகாது.

தெரியாமலே சொல்லலாகாது. அனுமானத்தினால் நிச்சயம் பண்ணலாகாது. சொல்லும்போதும், மூர்க்கத்தனத்தினால் துக்கம் பிடிக்கலாகாது. சாவதானங் கைவிடலாகாது. வியாபகத்தனம் விட்டுவிடலாகாது. சோம்பேரித்தனத்தை ஒருகாலமும் சுகமாய் எண்ணலாகாது. நெஞ்சில் விகல்பம் பிடிக்கலாகாது. சுவார்த்தத்தனத்தினால், அவஞ்சை பண்ணலாகாது. பண்ணினாலும். மேல்தனக்கே வந்துமுடியும். பிரசங்கம் வினா, பேசவேயாகாது. அன்வயம் வினா, பாடலாகாது. விசாறணைவினா, அவிசாறணை வழியில் போகவேயாகாது.

பரஉபகாரம் விட்டுவிடலாகாது, பரபீடை பண்ணலாகாது. யாதா ஒருவனுக்கு விகல்பம் வரக் கொடுக்கலாகாது. அறியாமைத்தனம் அடையலாகாது. மகுத்துவத்தனம் பரப்பி யிருக்கலாகாது. திரவியத்திற்காக கீர்த்தனம் பண்ணிக்கொண்டே அலையலாகாது. சமூசியாத்துமகமாய்ப் பேசலாகாது. வெகு நிச்சயம் பண்ணலாகாது. நிர்வாகம் வினா, கிரந்தமே கையில் பிடிக்கலாகாது. அறிவீனத்தனமாய் கேழ்க்கலாகாது. அகம்பாவம் தோன்றக் கொடுக்கலாகாது. யாதாமொருவனுக்குச் சொல்வேன் என்பதாய் இணங்கலாகாது

ஞான கர்வம் பிடிக்கலாகாது. எவ்விடத்திலும், யாதா வொருவனோடேயும் வாக்குவாதம் பண்ணலாகாது. சுவார்த்தம் புத்தியில் சேர்க்கலாகாது.

கார்பாரில் விழலாகாது. இராஜ துவாரத்தில், காரியகர்த்தாவாகலாகாது. யாதா வொருவனுக்குப் பரவசங் கொடுக்கலாகாது. கடினமான பிக்ஷை கேழ்க லாகாது. பிக்ஷயின் பொருட்டு, தன்னுடைய பாரம் பரையைச் சொல்லலாகாது. பந்து தனத்தில் உழல லாகாது. [1]மத்திசங்களை வைக்கலாகாது. பிரபஞ்சத் தின் உபாதியை உடலில் சேரலாகாது. பிரபஞ்சத்தின் விருந்துக்குப் போகலாகாது. இழுக்கன்னம் சாப்பிட லாகாது. விருந்தாடியாய் சாப்பிட ஒப்புக்கொள்ளலா காது. திதி, [2]மாளயம், சாந்தி, பலசோபனம், பெயர் வைக்கிறது, [3]போஸ்து, விரதங்கள், தானங்கள், உத் தியாபனங்கள், இவை முதலாகிய மற்றதிலும் இவைகளி லும் நிஸ்பரனைவன் போகலாகாது. இந்த அன்னங் களையும் சாப்பிடலாகாது.

தனக்கு ஏழ்மைத்தனம் பண்ணலாகாது. தன்னு டைய பிக்ஷையை விடலாகாது. கீழ்மையன்னம் சாப் பிடலாகாது. முறையாய், நிஸ்பரன், கூலி யாத்திரை பண்ணலாகாது. கலியாணம், இலக்கனம் இதுகளில் போகலாகாது. வயிற்றுக்காகப் பாடலாகாது. எவ் விடத்திலேயாகிலும் கூலிக்குக் கீர்த்தனம் பண்ணலா

---

1. மத்யஸ்தங்களை. 2. மஹாளயபக்ஷம். 3. விருந் துடன் கூடிய வேடிக்கை.

காது. கூலிக்கு சுகுர்தம் பண்ணலாகாது. கூலிக்குப் பூசாரியாகலாகாது, இனும் கொடுத்தாலும் நிஸ்பாரனவன் வாங்கலாகாது. எங்கேயும் டம்பம் பண்ணலாகாது. அதவா, பண்ணினாலும் அதைப் பிடித்துக் கொள்ளலாகாது. நிஜப்பிரகார புருஷனானவன் தீர புத்தியை விடலாகாது.

நிஜப்பிரகரன் குடுத்தனம் பண்ணவேண்டும். பண்ணினாலும் அதில் தான் அகப்படலாகாது. பரஸ்பரமாய் பக்திமார்க்கத்திில் நிறுத்தவேண்டும். நிறுத்த வேண்டும். பிரயத்தினம் வினா, இருக்கலாகாது. ஆலசியம் திருஷ்டியால் பார்க்கலாகாது. தேகம் இருக்கையில் உபாசினியின் வியோகம் சகிக்கலாகாது ஏதொன்று உபாதியிலும் அகப்படலாகாது. சேரவுமாகாது. சோம்பேறித் தனத்தினால் பஜனமார்க்கம் முறிக்கலாகாது. வெகு உபாதி பண்ணலாகாது. உபாதிவினா, இருக்கலாகாது. சகள்த்தின் பக்தி விடலாகாது. விபக்தி பொல்லாது. மிகுதியும் ஓடலாகாது மிகுதியும் சும்மாயிருக்கலாகாது. மிகுதியுங் கஷ்டப்படலாகாது. வாளாவிருக்கலாகாது. மிகுதியும் பேசலாகாது. பேசாமலுமிருக்கக்கூடாது. மிகுதியும் அன்னம் சாப்பிடலாகாது உபவாசமுமாகாது. மிகுதியுந் தூங்கலாகாது. இழுக்கினத்தனம் பொல்லாது. வெகு ஜனங்களிலிருக்கலாகாது. வெகு ஆரண்ணியம் திரியலாகாது. தேகத்தை மிகுதியும் போஷிக்கலாகாது. ஆத்துமஹத்தைப் பொல்லாது.

வெகு சங்கத்தி பிடிக்கலாகாது. பிடிவாதமாகாது. அனுச்சாறம் பொல்லாதது. மிகுதியும் லௌகீகம் அனு

சரிக்கலாகாது. ஜனங்களாதீனமாகலாகாது வெகு பிரீதியாகாது. நிஷ்டூரம் பொல்லாது. வெகு சமுசயம் பிடிக்கலாகாது. வெகு சாதனத்தில் விழலாகாது. சாதனம் வினுஇருப்பது பொல்லாது. வெகு விஷயம் போகிக்கலாகாது. விஷயத்தியாகம் பண்ணலாகாது. தேகலோபம் பிடிக்கலாகாது. மிகுதியும் வெறுப்புப் பொல்லாது. வேறு அனுபவம் செய்யலாகாது. அனுபவம் செய்யலாகாது. அனுபவம் வினு கூடாது.

ஆத்துமஸ்திதி பேசவேயாகாது. மனமிஞ்சக் கொடுக்கலாகாது. மனம்வினு, இலட்சியம் இலட்சியத்துக்குவராது. அலட்சியவஸ்துவை இலட்சிக்கப்படாது. இலட்சியம் வினுயிருப்பது, பொல்லாது, மனம் புத்திக்குக்கோசரம், புத்திவினு அந்தக்காரம், அறிவுக்கு மறதிவிழும். அறியாமைபொல்லாது. ஞானத்தனம் பிடிக்கலாகாது. ஞானம்வினு கூடாது. தர்க்கிக்கப்படாதவஸ்துவைத் தர்க்கிக்கக்கூடாது. தர்க்கம்வினு இருக்கக்கூடாது. மறதி வரலாகாது. ஏதொரு சர்ச்சை பண்ணலாகாது. பண்ணுமலும் நடவாது. உலகத்தில் பேதம் பிடிக்கலாகாது. வர்ம சங்கரணம் பண்ணலாகாது. தன்னுடைய தர்மம் பறக்கடிக்கலாகாது. அபிமானம் பொல்லாது

இருக்கட்டும்; இப்போது மிகுதியும் பேசலாகாது விவேகம் வீணு நடக்கலாகாது. என்ன பண்ணினுலும், சமாதானம் அசையக் கொடுக்கலாகாது. பிழையான புத்தகம் எழுதலாகாது. புத்தகம் வினு கூடாது. பிழைபட வாசிக்கலாகாது. வாசிக்காமலிருக்கிறது பொல்லாது. நிசப்பிறனுவன் சொல்லுக்கும் அடங்கலாகாது. சமுசயத்தினுல்சண்டைபடக்கூடாது. ஒரு

காலமும் கேழ்கிறவாளுடைய அசங்கித எண்ணம் கூடாது. இந்த போதனையை, கருத்தில் பிடித்தால் சகல சுகங்களும் வந்துவிடும். இப்படியாப்பட்ட மகுத்துத்தனம் உடலில் ஆகசமீகமாய்ப் பிரவேசிக்கும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால உபதேச விளக்கத்தில், நிஜப்பிரகார போதனை கற்றுக்கொடுத்த சர்க்கம் 1 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினான்காம் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

அந்தணர்க்கு முக்கியமான தீக்ஷை பிக்ஷை கேழ்க்க வேணும். பின்னுமோ, பிக்ஷையின் பக்ஷத்தை இரக்ஷிக்க வேண்டியது எவன் பிக்ஷை வாங்கி சாப்பிடுகிறானோ, அவன், நிராகாரியென்றுஞ் சொல்லப்படுவான் பிக்ஷையினாலே கண்ட கண்ட தானத்தை வாங்குகிற தோஷத்திலிருந்தும் விடுபடான். பின்னுமோ, உத்தமமானவாளும்,அதமாளும், எவாளோ அவாளிடத்தில் உபாதானம் வாங்கிச் சாப்பிடுகிறதே அவன் பிரயத்தி

னம், அமிர்தப் பிராசனம் பண்ணிறான். இதற்குப் பெரியவாள் சம்மதி இருக்கிறது.

இப்படி பிக்ஷையின் மகிமை, பிக்ஷ ஸர்வோத்தமனுக்குப் பிரியம் பின்னுமோ, ஈசுவரனுடையமகிமை அகாதமானது. அவனும் பிக்ஷ கேழ்கிறான். கோறக்ஷர் முதலானசித்த புருஷாள்உலகத்தில்பிக்ஷ கேழ்கிறார்கள். பிக்ஷக்காக நிஸ்பிரகர்தைப் பிறகடமாய்விடும். கீழ்மையிரையன்னஞ் சாப்பாடு பண்ணிக்கொண்டு உட்கார்ந்தானால், அவன் பராதீனமானன். அந்தப் படியே நித்தியமும் சாப்பிடுகிறவனுக்கு சுதந்தரம் ஏது? எட்டு நாளைக்கொருதரம் தானிய ரூபமாய் நேமித்ததேயாகில், அசங்கிதத்தனமானது. பிராணி நித்திய நூதனத்திலிருந்து விடுபட்டுப் போறன். ஆனபடியினாலே, நித்திய நூதனமாய் ஸஞ்சாரம் பண்ணவேணும். வெகு தேசங்கள் சுற்றவேணும். அன்னதான பிக்ஷ கேழ்கிறது நல்லது. சிலாக்கியமாகும். சர்வதா பிக்ஷயின் அப்பியாசமிருக்கிறவனுக்குப் பரதேசமென்றுந் தோன்றாது. மூன்று உலகத்திலேயும், பின்னும், எங்கேயும் அவனுக்குச் சுயதேசமாகும். ஆனதுகொண்டு, பிக்ஷ கேழ்கிறதில் சங்கோசப்படலாகாது. பின்னும், பிக்ஷ கேழ்கையில், வெட்கப்படலாகாது. பிக்ஷ கேழ்கிறதில் இளைக்கலாகாது. சுற்றிக்கொண்டே திரியவேணும். கேழ்கிறது பிக்ஷ: அதில் சமத்காறம் வந்ததுயென்னவென்றால், சின்னவாள், பெரியவாள், அதிசயப்பட்டுப் போவாள். ஏனென்றால், அந்தப்பகவானுடைய கீர்த்தி நிறந்தரம் வர்ணிக்கிறபடியினாலே.

பிக்ஷயென்றால், அது காமதேனு. சதாசர்வ

காலமும் பலிக்கிறவளாக்கும். மற்றது போலவேயல்ல. அப்படியாப்பட்ட பிக்ஷைக்கு யாதாமொருவன் அவமானம் அடைவானே, அவன் அதிர்ஷ்டஹீனனுனன். பிக்ஷையினுல் சிரமங்கள் தீர்ந்துபோம். சாமான்னியமான உத்தமமான பிக்ஷையை, ஸகலமான பிராணிகளும் மானிப்பார்கள். பிக்ஷையென்பது, நிற்பயஸ்திதி. பிக்ஷையினுல் மகுத்துவம் பிறபலத்துக்கு வரும். பின்னுமோ பிக்ஷையினுல், சுதந்தரம் ஈசுவரப் பிராப்தி. பின்னுமோ, பிக்ஷைக்கு குறுக்கில்லை. பிக்ஷையாகாரியானவன் ஒழிந்தவன். பிக்ஷையினுல் காலவேளை சார்த்தகமாகிறது. பிக்ஷை யென்பது அமிர்தக்கொடி. எங்கெங்கே பார்த்தாலும், அங்கங்கே படர்ந்தது. நிற்லஜ்ஜனுக்கு அவகாலத்தில் பலங்கொடுக்கப்பட்டது. பிருதிவியில் நானுதேசங்கள் சுற்றினுலும், பட்டினியாய் ஒருக்காலமும் சாகாள். பின்னுமோ யாதாமொருவிடத்தில் ஜனங்களுக்கு இவன் பாரமல்ல ஆனுலோ கோரக்ஷணை வியாபாரம், வெள்ளாமை, இவைகளைப் பார்க்கிலும் பிக்ஷை மேன்மையானது என்ன பண்ணினுலும், பிக்ஷை ஏமாற்றமில்லை. பிக்ஷையைப்போல வைராக்கியம் கிடையாது. அந்த வைராக்கியத்துக்கு மேன்மையான பாக்கியமில்லை. அப்படிப்பட்ட வைராக்கியமில்லாது போனுல், ஏகதேசியான அபாக்கியனும்.

பிக்ஷைக்குப்போனவிடத்தில், ஏதாகிலும் பிக்ஷையிருக்கிறதாவென்று கேட்கவேணும். அல்ப சந்தோஷியாயிருக்கவேணும் மிகுதியும் கொண்டு வந்தால் கொஞ்சம் ஒருபிடிஎடுத்துக்கொள்ளவேண்டும். சு ஹ ப மா ய் பிக்ஷை கேழ்கவேண்டும். இப்படி நிஜப்பிரகிர்தையினுடைய இலக்ஷணங்கள். பின்னுமோ, பிறத்தியா

னுக்கு சௌக்கியம் பண்ணிவைக்கத் தக்கதான மிருது வாக்கு விலாஸம் பண்ணவேணும். இப்படிக்கு பிக்ஷை யின் ஸ்திதி எனக்குத் தோன்றிய மாத்திரம் அல்ப மாய்ச் சொன்னேன். விபத்து வருங்காலத்தில் பிக்ஷை இரக்ஷிக்கும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்,
பிக்ஷை நிர்ணயம் சொல்லப்பட்ட
சர்க்கம் 2 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைன்காம் தசகத்தில் மூன்ரும் சர்க்கப் பிரசங்கம்.

கவிதையின் சப்தமான பூவின் மாலை. அந்த சப்தத் தின் அர்த்தமே மாலையின் வாசனை. அதினல் மகுத்துக் களான வண்டுகளுக்கு ஆனந்தமாகும். இப்படிப்பட்ட மாலையை அந்தக்கறணத்தில் கோர்வையிட்டு ராமபாதா ரவிந்தத்தில் பூஜியுங்கள். ஆனல், உள்ளத்தில் ஓங் காறம் அந்தியம், அகண்டமாயிருப்பது ஜீவன் கண்ட னைப்படலாகாது. பரோபகாரத்துக்காக, அவச்யமாய்க் கவிதை பண்ணவேணும்.

அந்தக் கவிதையின் இலட்சணங்கள் சொல்லப் படும் எதினுல் பகவத் பக்தி லெபிக்குமோ, எதினுல். விற க்தியண்டாகுமோ, அப்படியாப்பட்டக் கவிதையின் யுக்தி முன்னமே நடப்புவிக்க வேண்டும். கிரியை வினு சப்த ஞானத்துக்கு, சற்ஜனுள் மானிக்கமாட்டார்கள்' ஆனபடியினுலே உறுக்கத்தினுல் தெய்வத்தைப் பரஸன் னம் [1]பண்ணிக்கொள்ளவேண்டும்.. தெய்வத்தினுடைய ஸன்னபிரத்தினுல் யெதெது வசனமுண்டாகுமோ, அதுத்தன அத்தியந்தம் கிலாக்கியமாம். அந்தக் கவிக் குப் பெயர் பிரசாதமுடைய கவி.

உலகைத்தில் திஷ்டமென்றும், பாட்டமென்றும், பிர சாதமென்றும் உடையதுயென்று அனேகம்பேர் சொல்லுகிருர்கள். ஆனுல் இந்த மூன்றுவிதக் கவியின் விவேகம் சொல்லப்படும். திஷ்டமென்ருல், தாஷ்டீ காய்ப் பண்ணப்பட்டது. எது தன்னுடைய மனதில் வந்ததோ, அதை பலவந்தமாய் யாக்குவது. அதற்குப் பெயர் திஷ்ட பாட்டமென்றும் பெயர்.

பாட்டமென்ருல் பாட்டாந்திரத்தினுலும் வெகு சாஸ்திரங்கள் பார்த்ததினுலேயும் அது போலவே உத்திரம் பண்ணத் தலைப்பட்டான் தானும் சீக்கிரம் கவித்தும் ஜோடித்தான். கண்ணில் அகப் பட்டதையே வர்ணிக்கிறது. பக்திவினு ஏது பண்ணப் பட்டதோ, அதற்கு திட பாடமென்றும் பெயர். காமி கம், ரசிகம், சிங்காரிகம், ஹாஸ்யம், பிரஸ்தாபி கம்,விநோதமான அனேகத்துக்கும் திடப்பாடமென்றும் பெயர். மனமானது காமாகாரமாயிருந்தது. அப்படியே

1. சந்தோஷமடைய.

சப்தங்கிளம்பும், பின்னுமோ,திடப்பாடத்தினுல் அக்கரை சேர்க்கிறதில்லை. உதிரஞ் சாந்தி ஆகவேண்டியதற்காக, நாராளைத் துதி பண்ண வேண்டியதாகும். அந்தக் கவியில் என்னயென்னவிதப் பக்தி பண்ணப் பட்டதோ, அதற்குத் திட பாடமென்றும் பெயர்.

ஆனதுகொண்டு கவி திட பாடமாய் இருக்கவேலாகாது. பாஷாண்டமான தொந்தரவுயிருக்கலாகாது. வாதாங்கமாகவும், ரசபங்கமாகவும், ராக பங்கமாகவும், திருஷீடாந்திரஹீனமாகவும் விஸ்தாரமும், அபாசமும் குட்டிலமும்,இவைகளை இரட்சித்துச் சொல்லுகிறது. இந்தக் கவிகள் இருக்கலாகாது. பின்னும், ஹீனக்கவி இருக்கலாகாது. சொன்னதைச் சொல்லக் கூடாது. சந்தோபங்கமும், முத்திரை ஹீனமும் படலாகாது, வித்பத்தி ஹீனம். கலை ஹீனம், சப்த ஹீனம், தர்க்க ஹீனம் பக்தி ஞான வைராக்கிய ஹீனம், முதலிய கவிகள் இருக்கலாகாது. பக்திவினு, எந்தக் கவியோ, அது முட்டாளின் மதமென்றும் அறிய வேண்டும், பிரியம் வினு பாடுகிறது. அது அசங்கிதமானது. பக்தி வினு, அனுவாதமெதுவோ, அதுவே வினோதமென்று, அறியவேணும். சோதினே வினு, சம்வாதம் யெப்படி நடக்கும். திடபாடம் இப்படியாப்பட்டது. இது இருக்கட்டும். இது அகந்தையின் பைத்தியமாக்கும்..

இப்போது பிரசாதமுடையது யெப்படிப்பட்டது. என்ருல் அதுவும் சொல்லப்படும். வைபவம் எவனுக்கு வாந்தி போலவே தோணுமோ. பின்னும், அவனுடைய கருத்தில்சர்வோத்தமனுடையதியானம்கொண்டிருக்கும்

அவனுக்கு நாழிகைக்கு நாழிகைபகவானிடத்தில்பிரியப் படும். மேலும். பகவத் பஜனத்தினுடைய பிரியம் வளர்ந்து உயர்ந்துகொண்டே வரும். அவன் பகவத் பஜனம் வினு ஒரு க்ஷணம் போகக் கொடுக்கான். சர்வகாலமும் அந்தக்கறணம் பக்தியின் மேன்மையினுல் மேன்மைப்பட்டும். எவனுடைய உள்ளத்தில் பகவந்தன் அச்சலமாய், நீவாந்தமாகவும் இருந்துவிட்டானே அவன் சுபாவீகமாய், எது பேசுவானே. அதுவே பிர்ம்மப் பிரசங்கம். ஏனென்றுல் உள்ளத்தில் கோவிந்தன் இருந்து விட்டான். அதினுல் பக்தியின் முயற்சி எப்போதும் நிலவும்ஆனபடியினுலே, அவனுக்கு பக்தி வினு, வேறு ஒரு அனுவாதமும் கிடையாது. உள்ளத்திவ் பிரியப்பட்டபடியே வாக்கு வசனிக்கும் பின்னேயோ, பாவனேயினுல், கருணேயினுடைய கீர்த்தனம் பண்ணுவான். அன்பினுல் கூத்தாடுவான். பகவந்தனிடத்தில் மனம் சேர்ந்தது. அதினுல், தேகாபிமானம் ஞாபகத்துக்கு வராது. சங்கையும், லஜ்ஜையும் ஓடித்துரத்தப்பட்டது. பிரியத்தின் அன்பினுல் விளங்கினுன். பக்தி மதத்தினுல் கொழுத்தான். அதினுல் அகம்பாவத்தைக் காலின் கீழே போட்டுவிட்டான். நிசங்கமாய்ப் பாடுகிறதும், நர்த்தனம் பண்ணுகிறதுமாக காலந்தள்ளுவான். அவன் ஜனங்களேத் தெரிந்து கொள்ளான் ஏனென்றுல் திருஷ்டியில் திரிலோக நாயகன் வகித்துயிருந்துவிட்டான். இப்படி பகவந்தனிடத்தில் விளங்கினுன். மற்றதேதொன்றும், அவனுக்கு ஸ்மரணேவராது. ஆனது கொண்டு, சத்கீர்த்திப் பிரதானம். இவைகளே வர்ணிக்க, சுய இச்சையாய்த் தலேப்பட்டான். நானு தியானங்கள்

நாஞமுத்திகள். பிரதாபங்கள், நாஞ கீர்த்தனங்கள் இவைகளின்முன்னே நரஸ்துதி திரணத்துல்லியமாய்த் தோன்றும்.

இப்போது இருக்கட்டும். இப்படிப் பகவத் பக்தாள். எவன் சமுசாரத்தில் விறக்தனே, அவன் முக்தன் சாதுக்கள் அவனை மானிப்பார்கள். அவனுடைய பக்தி யின் ஆச்சரியம்: அதற்கு பிரசாதமென்றும் பெயர் அவன் சகஜமாய்ப் பேசினல் விவேகம் பிறகடமாய் விடும்.

கவிதையின் இலட்சணங்கள்கேளு. சொன்னப் பிரசங்கமே சொல்லுவோம். கேழ்கிறவாளுடைய அந்த கறணம் ஆறிப்போகும்படிக்கும் கவித்துவம் நிற்மல மாகவும், செவ்வையாகவும், பிருஞ்சள அன்வயமுடைய தாகவும் இருக்க வேண்டும். கவிபக்தி பலமுடையதும், அர்த்த புஷ்டியும், அகத்துக்கு நீங்கினதாகவும், கவி இருக்கவேண்டும். பின்னும், மிகுதியும் கீர்த்தியுடைய தும், ரம்மியமாகவும், மதுரமாகவும் பிரதாபவிஷயத் தில் பிரசாதமாகவும், கவி இருக்க வேண்டும். சுலுபமா கவும், சுறுக்கமாகவும், சறணபந்துக்கட்டுடையதாக வும், கவி இருக்க வேண்டும். மிருதுவும், மனேகரமாக வும், கோமளமாகவும், கவி இருக்கவேண்டும். பவ்விய மாகவும், அத்புதமாகவும், விசாலமாகவும், கவ்வுலிய மாகவும், மாதுரியமாகவும், பக்திரசத்தினல் பூர்ண முடையதாகவும், கவி இருக்கவேண்டும்.

அக்ஷரக்கட்டு, பதக்கட்டு, நாஞ சாதுரியங்களு டைய பிரபந்தம், நாஞ[1]கவுசல்லியதை, சீர், தாட்டி, சந்தம், முத்திரை, இப்படி அனேகமுடையதாய், கவி இருக்கவேண்டும். நாஞயுத்தி, புத்தி, நாஞகலை, நாஞ சித்தி, நாஞ அர்த்த அன்வயத்தினல் சாதிக்கிறது, இத

1. அணிகள்

ற்குப்பெயர் கவி. நாஞ சாயித்திய திருஷ்டாந்தங்கள், நாஞ அன்வயசப்தம், நாஞசம்மதி, சித்தாந்தம், பூர்வ பக்ஷமுடையதுமாகக் கவியிருக்கவேண்டும். நாஞகதி, நாஞவித்பத்தி, நாஞமதி, நாஞகவனம், நாஞதாறணே, நாஞ கருணேதிரவம், இவைகள் இருப்பதினுல், இதற்குப் குப்பெயர் கவி. சங்கை, அசங்கை பிறதியோத்திரம் சாஸ்திர ஆதாரமாய் நாஞவாக்கியங்கள், நிச்சயத்தி ஞல் நிற்தாரம் பண்ணினதினுல், சம்சயம் அறுந்துபோம். நாஞப் பிரசங்கம், நாஞவிசாறணே, நாஞயோகம், நாஞ விவறணே, நாஞதத்துவ சர்ச்சை, சாரம், இதற்குப் பெயர் கவி. நாஞசாதனங்கள், புரச்சரணங்கள், நாஞ தத்துவங்கள், தீர்த்நாடனங்கள், நாஞசந்தேகங்கள்' தீர்க்கிறதற்குப்பெயர் கவி.

எதிஞல் வெறுப்புப்போகுமோ, எதிஞல், இந்த லௌகீகம் வெழ்கப்படுமோ, எதிஞல் ஞானமுண்டா குமோ, அதற்குப்பெயர் கவி. பின்னும், எதிஞல் ஆத்தும ஞானம் பிறபலிக்குமோ, எதிஞல் இந்த விர்த் தித் தெளியுமோ, எதிஞல் பக்திமார்க்கம் தெரிய வருமோ, அதற்குப்பெயர் கவி எதிஞல் தேகபுத்தி அறுபட்டுப்போமோ எதிஞல் பவக்கடல் வற்றிப் போமோ, எதிஞல் பகவந்கன் பிறகடமாய் விடுவானே, அதற்குப்பெயர் கவி. எதிஞல் சத்புத்திவளருமோ, பின்னும், வருமோ, எதிஞல் பாஷாண்டம் பங்கப் படுமோ, எதிஞல் விவேகம் விழித்துக்கொள்ளுமோ, அதற்குப் பெயர் கவி. எதிஞல் சத்வஸ்துத் தோன்று மோ, எதிஞல் இந்த தோன்றுதல் ஒழிந்துபோமோ, எதிஞல் பின்னத்துவம் நசித்துப்போமோ, அதற்குப் பெயர் கவி. எதிஞல் சமாதானமாகிவிடுமோ, எதிஞல்

சம்சார பந்தனம் அறுப்பட்டுப்போமோ, எதை சர்ஜ ஞள் மானிப்பார்களோ, அதற்குப்பெயர் கவி கவியின் இலட்சணம் இப்படிப்பட்டது. சொல்லப்போனல், அது சாதாரணமாகயிருக்கப்பட்டது. ஆனலும் தெரியவேண் டியதற்காக ஸம்க்ஷேபமாய்ச் சொல்லப்பட்டது.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால உபதேச விளக்கத்தில்
கவியின் இலக்ஷணம் கூறியது. சர்க்கம்
சர்க்கம் 3. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினன்காம் தசகத்தில்
நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

கலியுகத்தில் கீர்த்தனம் பண்ணவேண்டும். கேவ லம் கோமளமாகவும், குசலமாகவும் பாடவேண்டும். பின்னேயோ, கடினம், கர்க்கசம், கொச்சை முதலிய வைகளை விட்டுவிடவேண்டும். கடுமை, அலட்சியம் நீக் கிப் போடவேண்டும். துற்ஜனஞேடே சலசலிப்புப் பண்ணலாகாது. மெய்யென்றும், பொய்யென்றும்

தன்னுடைய விர்த்தியை விரிவாகக் கொடுக்கலாகாது. கர்வத்தினல் பாடல் பாடலாகாது. பாடுகையில், தவறிப் போகலாகாது. கோப்பியமான குய்யங்களை கர்ஜிக்கலா காது. குணங்களைப்பாடவேண்டும். தொண்டை கம்மத் தக்கதாயும்,மிகுதியும் கெட்டியாய்ப் பாடுகிறதும், சிரசை நாணியும் கோணியும், சாய்த்தும் பாடுகிறது, இதுவிகித மல்ல.

பகவந்தனுடைய நாஞநாமங்கள், சகளத்தின் நாஞ தியானங்கள், நாஞ கீர்த்தியினுடைய அத்புதமான கீர்த்தனங்கள், இவைகளைப்பாடவேண்டும். அஞவசிய மாகப் பிழையாய்ப் பாடலாகாது: தப்பவுமாகாது விடையமான அபிமானமாய் வாயாடுகிறதாகாது. ஜனங் களுடைய மனது வெறுப்பது போலப் பண்ணலாகாது. நிறடுநிறடிநிறடலாகாது. தன்னை நிறட நிறடத்தான் தான்சலிக்கலாகாது. ஒருவனுக்கும் வெறுப்புண்டாகும் படியாகப் பாடலாகாது. பின்னுமோ, ஜனங்கள் "சுவாமி, சுவாமி, சுவாமி" என்பர் அப்போதுதான், எவ்வளக்கெவ்வளவுத்தான் விழித்துக்கொள்ளுவானே அவ்வளவுக்கவ்வளவும் பாவனஞவான்.

உலகத்தில் ஜபித்து ஜபித்து, ஜனார்த்தனனை சந்துஷ்டி பண்ண வேண்டும். பின்னுமோ, உருக்கத் திறவத்தினல், பக்திரசம் ஊத்தூரல் போலவே மேன் மேலும் பொங்க வேண்டும். சில்லாடு சலம் தூரமாய் யிருந்து பார்க்கையில். ஜலவொளியின் சோபிதம் போலவே, கீர்த்தனப் பிரவாகம், பெருக பக்திரசப் பூரிதமானக் கீர்த்தனம் நடக்கையில், பிராணிகள் தனக் குத்தானே, தன்னலே வந்து சேருவார்கள். அவர்களை

வாரும் வாரும் என்று அழைக்கத் தேவையில்லை. பின்னையோ "வாரீர்களா வாரீர்களா" யென்கிற உபாயந் தேவையில்லை. வாரும், வாரும், என்பது ஒன்றுந் தேவையில்லை. சுபுதனுக்கு, பின்னையோ, நொடி னெடியாகவும், தலைமுற்சனையாகவும், சலசலவென்பதாகவும், அசங்கிதமாகவும் பேசலாகாது. இப்படிக்கொத்த நச்சு வார்த்தையினாலும், டாம்பீகங்களினாலேயும், மூர்த்தித்தியானம் நிலவரப்படாது. தடிக்கித்தடிக்கித் தத்தளித்துத் திக்கிப்பேசுகிறது, கண்டபடியெல்லாம் பேத்தலாகாது. முறடாய்ப் பேசலாகாது; இதுகள் முட்டாள் தனம். பின்னுமோ, எத்தனை எத்தனைக்குப்ப குப்பலாய்ப் பேச்சு பேசினாலும், அந்தப் பேச்சுக்கள் ஒழியாது. அசங்கிதமும், கண்டாளமுமே ஆகும். ஆனதினாலே, நானா சுந்திரமான நாகரீகம், நானா குணங்களுடைய வணக்கம், நானா மதுரமான ரசபுஷ்டியான பாடல், தாளம், வீணைமெட்டு வரிசைகள்: இவைகளினால், தார்க்கீகாளனவாள்; அப்போதைக்குத் தன்மனதினால், ரேகித்துப்போவாள். கம்பங்களோடே மயிர்க் கூச்சுதலும் உயிர் சந்தஸ்வரத்தினால் நாட்டியமும், நுணுக்கத்தின் நுண்மையின் நர்த்தனமும், இவைகள் முழுமையும் அன்புடைய பக்தாளுடையது. பின்னையோ, தெடசனுடைய தாட்சண்ணியத்தினால் நிறைந்தார்கள். பின்னுமோ, பண்ணும், மெட்டும், வரிசையினால் நிறைந்தார்கள். பின்னும், தமதம, திமிதிமி, துமுதுமு வென்றும் சங்கீதப்பாடலும், இப்படிப்பட்டதினால், சபை ஸ்வர கோஷத்தினால் நிறம்பியது. இதில், தூர்த்தனானவன் அவ்விடத்தில் ஓடிவந்தான். கூர்மை புத்தியினால் உயர்ந்தான், அவனுடைய ஆபாச குணங்களின் ஆகியினால், எல்லாம் திகில்பட்டுப் போட்டது. பின்னையோ,

அழகான நாட்டியங்கள், பின்னும், நான ஆச்சரியங்களும். நான நேமகமுடைய வித்தியாபாத்திரான் இருப்பதினல், பாபங்கள் தூர ஓடிப்போயிற்று, மேல்மிகுதியும் புண்ணியம் பிறகடமாகும். பிறத்தியார் அந்தரங்கத்துக்கு அடிக்கடி சன்மார்க்க சுருக்குப்பட்டுவிடும். பின்னுமோ, வீணுகை ஏய்க்கிறதல்ல. படுக்காளித்தனத்தினுலும் அது பிரதிபலிக்கிறது. மற்ற விளையாட்டுக்களும் அவ்விடத்தில் கிடையாது. பின்னும், போலித்தனம், பரிகாசமும், நிந்தையும், பதரான விசேஷமும், அவ்விடத்தில் இல்லை. அந்தக் கீர்த்தனத்தை, ஜகத்தில் "நேத்தி நேத்தி", யென்கிருர்கள். பின்னும், அப்பா அப்பா", வென்று மிகுதியும் பேசுவார்கள். பாவபலத்தினுல் பலவந்தமாய் மீறிப்போவார்கள். உலகத்தில், "நல்லவன் நல்லவன்", யென்பதாய் எண்ணிக்கொள்ளுவார்கள். பின்னுமோ, பக்திபாவத்தினுல் அநேகரிடத்திலும் உத்தமன் ஆனுன். பரஉபகாரத்தில், பாவிக ஜனங்களில் பூஷணத்தைப் போகிக்கப் பண்ணுகிருன். இதைமானித்ததேயாகில், மனதில் மானிக்க வேணும். மமதையினுல் மத்தனுகக் கூடாது. உலகத்தில் வெகு ஜனங்கள், "நான நான" வென்றும் எண்பித்துக் கொள்ளுகிருர்கள். சிலர் "வரட்டா, வரட்டா" யென்பார்கள். அவர்களை, "வாரும் வாரும்" யென்பதாய்ச் சொல்ல வேண்டியதேயில்லை. அந்தரங்கச் சங்கீதத்தினுலே, ரசமுடைய இராகத்தினுலும் புளங்காகிதமாகும். அதுயெப்படியென்ருல், ஒரு இரத்தினப் பரீக்ஷைவந்தன் பின்னல் இரத்தினம் வேண்டிய ஜனங்கள் எப்படிதுடர்வார்களோ, அப்படிப்பட்ட உத்தமமான கதைக்கு ஜனங்கள் சிமிளியாமல், கவனிப்பார்கள் நடுநடுங்கித் திடுக்கிடும் மனம் ஒதுங்கி ஒதுங்கி, அவரைப்

பிரியத்தோடு இலட்சிப்பார்கள். ஜனங்கள் அவரோடு வசனம் ஒன்றும் வீணான வசனம் சொல்லார் ஆசையை விஸ்தரித்து, விவரப்படுத்தித் தெளியவைப்பாள். பின்னுமோ, வினயத்துடனே, புத்தி கோசறத்தினாலேயே, ஜனங்களை ஆற்றிவைப்பாள். சமஸ்த ஜனங்களுக்கும் சராச்சறம் கற்றுக் கொடுப்பான். அப்போது அந்த சாயித்திய சங்கீதம் நல்லதாய்த் தோன்றப்படும். அப்போது, "மெய் மெய்" என்று தோன்றிற்று அதினால், மனிதன் கறகறப்பு ஒடுங்கிப்போயிற்று. செல்லாததை செல்லாததனத்தினால், செல்லாதுயென்று கண்டித்தார். சமத்தனை, சோதித்தாலும் சோதிகப்படான்.

சாஸ்திரங்களினால். ஸ்ருதியையும் சொல்லும் போது கிளிகள் நாணவைக்கும். சப்தங்கள்யென்று சந்தோஷப்பட்டு நகைத்தான். ஆகாவென்றும், ஓகோ வென்றுங்களித்தான். அவனுக்குப் பரலோகத்தின், ஹிதம் ஒரு காலமுமாகாது.

இலட்சியத்தினால், அலட்சியத்தை இலட்சிக்க வேண்டும். இலட்சிக்கப்பட்ட கணங்களையும் இலட்சிப்பான். விஹங்க மார்க்கத்தினால், அலட்சியத்தில் அந்த லயம் ஒட்டியது. தேகத்தினால் க்ஷேத்திரக்ஞன் கோபிப்பான். க்ஷமையினால் க்ஷமித்து க்ஷமையுடையவனுக்கு வான் க்ஷமிக்கிறதும். கோபிக்கிறதும், அந்த க்ஷேத்திரக்ஞன் எல்லாரிடத்திலும் இருப்பது படிக்கிறவாள்,

கேழ்கிறவாள், க்ஷமைப்பண்ணிப் பிழைக்கவேண்டியது. அறியாமையுடையவன் எழுதியது ஆனபடியினாலே

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
கீர்த்தன சர்க்கம் 4 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினான்காம் தசகத்தில் ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

முன்னமே, கேழ்கிறவாள் ஹரிகதையின் இலட்சணத்தின் வகை சங்கித்து யிருந்தார்கள். அதை விசக்ஷணனானவாள் சாவதானமாயிருந்து கேழ்கட்டும். ஹரி கதை எப்படிப்பண்ணவேண்டும்? பக்திப் பிரியம் எப்படி அடைய வேண்டும்? எதினால், இரகுனாதர் கிருபையின் பதவி அடையுமோ, அப்படி ஹரிகீர்த்தனம் பண்ணவேண்டும். பொன்னும், பின்னும், பரிமளம், கரும்புக்கு எப்படி அழகுமோ, மாதுரியமும் இரசமும், பழம் பழுத்ததேயாகில், எப்படியோ, அதுவும் போல ஹரி தாசனானவன் விற்பன்ன ஞாதா பின்னும், அன்புடை

பிரமேள பக்தன், வித்பன்னன். பின்னும், வாக்கு வாதம் பண்ணுதவனுயிருந்ததேயாகில், இதுவும்விசேஷம். இராகஞானி. தாளக்ஞானி, சகல கலேப் பிர்மக் ஞானியாயிருந்தாலும், நிராபிமானமாய் உலகத்தில் நடந்துகொள்கிறவனே அபுரூபமாம். எவனிடத்தில் மாச்சரியங் கிடையாதோ, சற்ஜனுளுக்கு அத்தியந்தம் பிரியப்பட்டவனெவனே, மனதில் சாதுரங்கமும். அறிகிற அந்தர நிஷ்டன், ஜெயந்திகள் முதலான நானுப் பருவ காலங்கள் தீர்த்தங்கள், அபுரூபமான புண்ணிய க்ஷேத்திரங்கள், அதில் தேவாதிதேவன் சாமர்த்திய ரூபமாய் வாசம் பண்ணுபவன். அந்த தீர்த்தத்தை ஏவாள் எண்ணுர்களோ, சப்த ஞானத்திஞல் "பொய்" என்பார்களோ, அந்தப் பாமரனுக்கு ஸ்ரீபதியானபகவான் எப்படி லெபிப்பான்? நிற்குணத்தை, ஸங்தேகங்கொண்டுபோய்விட்டது. பிர்ம்மக் ஞானத்தை சகளங்கொண்டுபோய்ப் பறங்கடித்தது. இரண்டு பக்கத்திலும் அபிமானமானது பாழாகிப்போய்விட்டது. சகள மூர்த்தி முன்னேயிருக்கையில். நற்குணக் கதையை ஏவாள் பண்ணுவாளோ, பின்னும். சகளத்தைஸ்தாபித்துப் பின்னும் பறக்கடிக்கிறவாளே படித்தமூர்க்காள் ஆனதிஞலே அப்படிக்கு கதை பண்ணலாகாது. ஏனென்ருல் உபயமார்க்கத்திலும், அந்தரமாவான்.

ஆனதுகொண்டு, ஹரிகதையின் இலட்சணம் இப்போது கேளுங்கள். சகள மூர்த்திக்கு முன்னே, பாவமாய்க் கருணையின் கீர்த்தனம் பண்ணவேண்டும். தியானங்களும், பிரதாபங்களும் கீர்த்தியும் வர்ணிக்கவேண்டும், இப்படி சுபாவீகமாய்ப் பாடுகையில். கவிதை இரம்மியமாய் நிறம்பும். அதிஞல் சகலமானபேர் கருத்

திலும் பிரேமசுகம் நிறம்பி நிறப்பித்தலும்பும். கதை யின் சேர்மானத்தின் குறியென்னவென்றால், சகள பஜனத்தில் நிற்குணங்கொண்டு வரலாகாது. பின் னேயோ, ஒருக்காலமும், ஒருத்தன் தோஷக் குணங் களைக் கொண்டு வரலாகாது. தெய்வத்தின் வைபவம், நானுப் பிரகாரத்தின் மகுத்துவம் வர்ணிக்க வேண்டும். சகள பாவம் வைத்து, ஹரிகதை பண்ணவேண்டும். ஜனத்தின் இலஜ்ஜையைப் போட்டுவிட்டு, தனத்தின் ஆஸ்தையை விட்டுப்போட்டுக் கீர்த்தனம், நித்திய நூதனமானப் பிரியம் பிடிக்கவேண்டும். சபையில், வணக்கமுடையவனுகி, நிசங்கனுய் அங்கப்பிரதட்சணம் பண்ணவேண்டும். கரதாளம், நாட்டியம், வாக்கில் நாமகோஷங்கள் கர்ஜிக்கவேண்டும். ஒன்றின் கீர்த்தி ஒன்றின் முன்னே வர்ணிக்கப் போனல்; சாயித்தியம் நடவாது. ஆனபடியினலே, எதற்கு எதுவோ, அதுவே சோபிக்கும். சகள மூர்த்தி இல்லாமல் சபையில் சாது ஜனங்கள் உட்கார்ந்து யிருந்தாளேயாகில், அத்வைதப் பிரசங்கம் அவசியமாய்ப் பண்ணவேண்டும். சகள மூர்த்தியும், சற்ஜனுமில்லாமல், பாவிக ஜனங்களிருந் தார்களே யாகில், வெறுப்பு, வைராக்கியமுடைய கீர்த் தனம் பண்ண வேண்டும். சிங்காரம், நவரசிகம், இவைகளை விட்டுவிட வேண்டும். ஏனென்றால், ஸ்திரீ களுடைய வர்ணனை, வர்ணிக்கவே யாகாது. ஸ்திரீ களுடைய லாவண்ணியம் வர்ணிக்கையில், விகாறம் பாதிக்கும். ஏனென்றால், கேழ்கிறவன் தைரியத் திலிருந்து தாத்காலமே சலிப்பான். ஆனபடியினலே, அதைத் தசிக்கவேண்டும். சாதகாளுக்கு, எது சுபா வீகமாய்ப் பாதகமோ, அதைக்கேட்டமாத்திரத்திலை, உள்ளத்தில் ஸ்திரீகளுடைய தியானம் உறுதிபடும்

ஸ்திரீயை வர்ணிக்கிறதில், சுகமானவனானன். அதினால் லாவண்ணியத்தில் பூரிக்கப்பட்டான். அவன், ஈசுவரப் பதத்தில் நின்றுங் கெட்டுப் போனன் என்று அறிய வேண்டும். ஆனபடியினாலே, ஹரிகதையை பாவபலத்தினால் பண்ணிக்கொண்டே போனால் கதை மிகுதியும் பரிமளிக்கும். ஒரு நிமிஷமாகிலும் தியானத்தினால் பரமாத்துமா கவிந்து கொள்ளும். மனம் தியானத்தில் சிக்கிக்கொண்டது. அப்போது, ஜனங்களுடைய ஞாபகம் ஏது? நிசங்கமாகவும், நிற்லஜ்ஜையோடே கீர்த்தனம் பண்ணினால், கதை சோபிக்கும்.

இராக க்ஞானம் பின்னும், ஸ்வரக்ஞானம், கூடிய வித்பன்னன். அர்த்த அன்வயத்தோடு பாடல், காயனம்; பண் அறிவான். ஐம்பத்தாறு பாஷையும், நானாவித கலைகள், குயில் போலக் குறலோசை, மாதுரியமும், இவைகளுமிருக்குமானல், அந்த பக்திமார்க்கம் வேறாகவே யிருப்பது. அதைப் பக்தாளே அறிவாள். பக்தனுக்கு தெய்வத்தின் தியானம். தெய்வம் வின, மற்றது ஒன்றும் அறியான். கலைகளுடையவன் மனம் எதுவோ, அது அந்தக்கலைரூபமே ஆயிற்று. ஸ்ரீஹரி தவிர, எந்தக் கலைகளோ, அதுவே அவகளை, யென்று அறிய வேணும். தெய்வத்தை விட்டு விட்டுப் பிரத்தியக்ஷம் அவன் வேறாகி விழுந்து போனன். சந்தன விருக்ஷத்தை, ஸர்பங்கள் சுற்றிக்கொண்டன. திரவியத்துக் குறுக்கே, பூதங்களிருப்பது. அதுவும் போல தெய்வத்திற்கு நானக்கலைகளிருப்பது. திரையாய், சர்வக்ஞமான தெய்வத்தை விட்டு விட்டு. நாதத்தின் வழியில் நிமக்னனாக ஏன் ஆக வேண்டும்? அதுவே, பிரத்தியட்சமான விக்கினம், குறுக்கே வந்தது. மனம்

ஒன்று. அது ஸ்வரத்தில் சிக்கிக் கொண்டது. அந்த ஸ்ரீ ஹரியை ஆரஸமாய்ச் சிந்திக்க வேண்டும். ஆனது கொண்டு, திருடாள் பலவந்தமாய்ப் பிடித்துக் கொண்டு ஊழியம் வாங்கினர்கள். தெய்வத்தின் தியானம் பண்ணுகிற முன் இராகஞானம் முன்னே வந்தது. அது மனதை பிடித்துக் கொண்டே, ஸ்வரத்தின் பின்னு லேயே துரத்தி விட்டது. அது எப்படி யென்றால், இராஜாவின் பேட்டிக்குப் போகையில், மத்தியில் அசத்துக்கள் இவனைப் பிடித்தது போலவேயாகும். கலைவந்தனுக்குக் கலை: அப்படிப் பண்ணினபடியி னாலே, மனதை ஈசுவரனிடத்தில் வைத்து, ஹரிகதை பண்ணினால் அவன் யொருவனே சமுசாரத்தில் தன் னியனானன். எவனுக்கு, ஹரிகதை ருசி நித்திய நூதன மாய்ப் பிரியமுண்டாகுமோ, அவனுக்கு, சர்வோத்த மனுடைய சக்கியம் சேர்ந்தது. எவ்விடத்தில் ஹரி கதை நடக்குமோ, அவன், சகலத்தையும் விட்டு விட்டு, அவ்விடத்திற்குஒருவன் அவசியம்,பின்னும்,நித்திரையை விறட்டி விட்டு, சுவார்த்தமாய் ஹரிபக்த்தியில் தத்பரன். பின்னையோ, ஹரிபக்தனுடைய வீட்டில், தாழ்ந்த கிர்த் தியம் அங்கீகரிப்பான். சகல காரியத்திலேயும் அக்க ரையுடனே சக்கியமாவான். இப்படிப் பட்டவனுக்குப் பெயர் ஹரிதாசன். பின்னும் அவனுக்கு நாமத்தில் தீவிர விசுவாஸம். இதுவரைக்கும் இந்த சர்க்கம் சம் பூர்ணம்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

ஹரிகதையின் இலட்சணம் கூறிய

சர்க்கம் - 5. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினான்காம் தசகத்தில் ஆறாம் சர்க்கப் பிரசங்கம்.

ரூப லாவண்ணியம் அப்பியாசித்தால் வராது. சகஜ குணத்துக்கு உபாயம் நடவாது. ஆனது கொண்டு இல்லாத குணத்தில் எவ்வளவு உறவுபிடிக்க முடியும்? கறுத்த மனிதன் சிகப்பு ஆகான். மூர்க்கத் துக்கு எத்தினம் நடக்காது. ஊமைக்கு வாக்குப் பிறக் காது. இவைகள் சகஜகுணம். குருடன் கண்ணுடைய வனாகான் செவிடு அதுவும் கேளாது. என்ன பண்ணினாலும் முடவனுக்குக் கால்வராது. இப்படிக்கு ரூபி இலட்சணங்கள் எத்தினையென்றுஞ் சொல்ல வேண்டும்? ஆனபடியினாலே, ரூப லாவண்ணியம் மாறுபடாது

அவகுணங்கள் உண்டானால், அது போகிறது. உத் தம குணங்கள் அப்பியாசத்தால் வருகிறது. ஆனது கொண்டு சமத்தாள் துஷ்டபுத்தியை விட்டு விட்டு, சத் வித்தையை அப்பியாசிப்பாள். மூர்க்கத்துவம் அடைந் துவிட்டால் போகிறது. சமத்துத் தனம் கற்றுக் கொண்டால் வருகிறது. இந்தப்படி மனதில் சோதினை வருகிறது. ஆனால், ஏன் ஸ்வஹிதம் பண்ணலாகாது? ஜனங்கள் சன்மார்க்கமாய் நடந்தால் சற்ஜனர் மானிப் பாள். கருத்தில் மான்யதைப் பிரியமே யிருந்ததேயா கில், ஏன் உபேக்ஷ பண்ணவேண்டும்? சாதுரியம்

வினு, உயர்ந்த பதவி ஒருக்காலமுமில்லை. சரீரம் அழகாய் சிங்காரிக்கப்பட்டு, சாதுரியம் வினு வீணுய்ப் போயிற்று. அது எப்படி யென்றுல் குணமில்லாத படுகாளியை குணவந்தனுக்கினுப் போல வாக்கும். ஆனபடியினுலே அந்தரங்கங்களை சிங்காரிக்க வேண்டும். நானுவிதத்தினுல் தோற்றப்படுத்திக் கொள்ள வேண்டும். சம்பத்து தேடிக்கொண்டு சாவகாசமாய்ப் புசிக்க வேண்டும். பிரயத்தினம் பண்ணுன். கற்றுக் கொள்ளான். சரீரமும் கஷ்டப்படுத்தி வைக்கான். உத்தம சப்தம், சப்தமாகப் பேசுகிறது. கற்றுக் கொள்ளான்: அவன், சதா கோபீ. தான் பிறத்தியானுக்கு உபகாரம் பண்ண வேண்டும். அந்தப் பிரதி உபகாரம் தான் வாங்கிக்கொள்ள வேண்டும். அப்படியும் போல: ஜனங்களைக் கஷ்டப்படுத்தினுல், தானும் வெகுவாகக் கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆனபடியினுலே, நியாயத்தோடு நடக்கிறவனே, சமத்தன்.

அன்னியாயியானவனே நைன்னிய ரூபி. நானு சாதுரியத்தின் குறிகள் சதுரன் அறிவான். எது வெகு பேருக்கு மானிக்குமோ, அதை, வெகு ஜனங்கள் மானியம் பண்ணினுர்கள். அது வீணுக, ஜெக நிந்தையான விருத்தமாய்ப் போய்விட்டது. ஜனங்கள் தன் பேரில் கிருபையுடையவாள் ஆகவேண்டுமோ, அல்லது எல்லோரும் விரோதப்பட வேண்டுமோ! தனக்கு சமாதானம் லெபிக்கும்படியாய்ப் பண்ணிக் கொள்ள வேண்டும். சமாதானத்தினுல் சமாதானம் வளரும்.

[1]மித்திரத்தினல் மித்திரஞ்சேரும். நன்மையை முறித்தால் க்ஷணமாத்திரத்தில் முறியும். "ஓய்" என்ருல், "ஏன்காணும்" என்பார்கள். அடே! என்ருல் ஏண்டா! யென்பான். இப்படி, உலகத்தில் கேழ்கப்படுகிறது. இப்படி யிருக்கையில், ஏன் சும்மாயிருக்கிருய்? சாதுரியத்தினல், கருத்து சிங்காரங்கொள்ளும். வஸ்திரத்தினல், சரீரம் சிங்காரப்படும். இந்த இரண்டிலும் எது பெரியது? நன்ருய்ப்பாருங்கள். மேலுக்கு மேலாய் சிங்காரித்தால், ஜனங்கள் கைக்கு என்ன வந்தது. சாதுரியத்தினல், நானுவிதத்திலும் வெகுபேரை இரக்ஷிக்க முடியும்.

நன்ருய் உண்ண வேண்டும். நல்லதாய்ச் சாப்பிட வேணும். நல்லதாய் உடுக்க வேணும். சமஸ்தாளும் "நேர்த்தி நேர்த்தி" என்பதாய்ச் சொல்ல வேண்டும். இப்படி உங்களுக்கு தோன்றுமானல், மனதோடு தேட வேண்டும். அதினலேயே, நல்லவன் என்பதாய் எண்பிவித்துக் கொள்ள வேண்டும். வெறுமனே கல்பித்துக் கொண்டால், மேல்சிரமப்பட வேண்டியதாயிருக்கும். உலகத்தில், காரியபாகங்கள் தடைபடும். அந்த காரிய பாகம், எவ்விடத்திலே முடியுமோ, அவ்விடத்தில் ஜனங்கள் காரியத்துக்காக ஸகஜமே கனிவார்கள். ஆனபடியினலே, பிறத்தியானேச் சுகப்படுத்த வேண்டும். அதினல், தான் சுகமடைய வேண்டும். பிறத்தியானே கஷ்டப்படுத்தினல், தான், சுயமாய்க் கஷ்டப்பட வேண்டும். இது, [2]பிறகட்டமேயிருப்பது.

1, நட்பினல் நட்புவளரும். 2. கண்ணுக்கு எதிரே.

ஆனதினாலே, சோதிக்காமலிருக்கிறது செவ்வையல்ல. எத்த உபாயமும் தோற்றப்பட வேண்டியது. தோற்றியபடியே நடந்தான். அவனே பாக்கிய புருஷன். இவாள் தவிர, மற்ற பேர் நிற்பாக்கியப் புருஷாள்.

எவ்வளவு வியாபகமோ, அவ்வளவும் வைபவம், அந்த வைபவத்துக்குத் தக்கதாய், நடவடையாகும். தோற்றப்பட்டதே யாகில் உபாயம் பிறகடமாய் யிருக்கிறது. ஆலசியத்தினால், காரிய பாகங்கள் கெட்டுப் போகிறது. அக்கரைப் பிடித்தால், கொஞ்சம் கொஞ்சமாக ஆகும். பேச்சுத் தெரியாதவன் எப்படி சமத்தன்? உலகத்தில் மித்திரம் பண்ணினால் காரியமாகிறது. வைரம் பண்ணினால், மிருத்துவாகிறது. இது சொல்லப்பட்டது சத்தியமோ, அசததியமோ, செவ்வாய்ப்பார். ஹிதம்தான் அறியான். பின்னும், தன்னை சமத்தனாக அறியான். உலகத்தில், [1]மித்திரங் காப்பாற்ற அறியான். வைரம் பண்ணுவான். இந்தப் பிரகாரமுடைய ஜனங்களை அஞ்ஞானி யென்று சொல்லவேண்டும். அவர்களிடத்தில், யார் சமாதானமடைவார்கள்? தான் ஒருத்தனே சிருஷ்டியில் சண்டை பண்ணிக்கொண்டே நடந்தான். வெகுபேருக்குள்ளே ஒருவனுக்கு எசசு ஏது? ஆனபடியினாலே, வெகு பேருடைய ஹிருதயத்தில் நுழைய வேண்டும். உத்தம குணங்களினால், பிராணிகளை விவரிக்கப்பண்ண வேண்

1. நட்பு.

டும். ஜனங்களை, சமத்தர்களாயாக்கவேண்டும். பதிதாளை பாவனம்பண்ணவேண்டும். சிருஷ்டியில் பகவத் பஜனம் வளர்ப்பிக்கவேண்டும்.

இப்படிக்கு
ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்,
சிங்கார சர்க்கம் கூறியது.
சர்க்கம் 6 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினான்காம் தசகத்தில்
ஏழாம் சர்க்கப் பிரசங்க.

உலகத்தில் நானா வேஷங்கள் நானா ஆசிரமங்கள். சகலத்துக்கும் மூலம் கிரஹஸ்தாசிரமம். அதில் திரிலோக்கிய வாசிகள் இளைப்பாறுவார்கள். தேவதைகள், ரிஷிகள், முனிகள், யோகிகள், நானா தபசிகள், வீதராகிகள், பிதுர்தேவதைகள், முதலானவர்கள் எல்லோரும் விபாவிகள். பின்னுமோ, அதீதாள், அப்பியாகதாளும் கிரஹஸ்தாசிரமத்தில் இருக்கப்பட்டவர்

கள். தன்னுடைய ஆசிரமத்தை விட்டு விட்டுப் போனார்கள். ஆனாலும் கீர்த்திரூபமாய் கிறஹஸ்தாள் வீடுகளில், திரியத்தலைப்பட்டார்கள். ஆனபடியினாலே கிறஹஸ்தாசிரமம் வந்தது சகலத்திலும் உத்தமமாக்கும்.

ஆனாலும், சுய தர்மமும், பின்னும், பூத தயவும் வேண்டியது. எவ்விடத்தில், சத்கர்மங்களும் நடக்குமோ, விதியுக்தக் கிரியையை ஆச்ரியிப்பார்களோ, வாக்கு மாதுரியம் பேசுவார்களோ, பின்னுமோ, சர்வப்பிரகாரமாய் நேமமுடையவர்கள். ஏதொரு பிரயோகக் காரியம் பண்ணினாலும், சாஸ்திரோக்தமாய் இருப்பதும் அதிலும் அழகான பக்திமார்க்கமும், [1]புனர்ச்சரணம், காயக்கிலேசம், திரடவிரதம், பரம [2]ஸாயாசி ஜெகதீசன் தவிர,அவனுக்குப் பெரிதொன்றுமில்லை. மனோ வாக்கு, காயம், ஜீவன், பிராணன், இதுகளினால் பகவத்தனுக்காகக் கஷ்டப்படுவான். பின்னும், பக்திமார்க்கத்திற்கு மன மருகிலிருப்பதாயிற்று. இப்படிக்குப் பகவந்தனுடைய பக்தன் விசேஷமாய் அந்தரங்கத்தில் விறக்தன் : தெய்வத்துக்காக சமுசாரம் விட்டு விட்டு முக்தனானன். உள்ளபடியே அந்தரங்கத்திலும் வைராக்கியம் : அதுவே மகத்பாக்கிய மென்றும் அறிய வேணும். இழுக்குடைய தன்மை போல அபாக்கியம் வேறொன்றுமில்லை. இராஜாக்கள் இராஜ்ஜியம் விட்டுப்போட்டுப் போனார்கள். தெய்வத்துக்

1. மந்திரம் உரு வேற்றுவது. 2. முயற்சியுடையோன்

காகக் கஷ்டப்பட்டார்கள். ஆனது கொண்டு அவர்கள் பூமண்டலத்தில் பிரக்யாதியானுர்கள்.

இப்படிக்கு உதாசீன விறக்தி. அதற்குமேல், [1]விசக்ஷணமான பிர்ம்மக்ஞானம். அவனைத் தரிசனம் பண்ணின ஜனங்கள் சமாதானமடைவார்கள். இப்படியாப்பட்ட யோகீசுவரன் எவனே, அவன் சோதினையின் விசாறணையினல், பிராணிகளுடைய கருத்தைப் பிரிக்க அறிவான். வெகுபேருக்கு உபாயம் பண்ணுகிறவன். அவன் ஜனங்களுடைய பங்குக்கு வாரான். அவனுடைய ஹிருதயம் எப்போதும் பகவத்ரூபம். அவனைக் கண்டால், ஜனங்களுக்கு, துற்சித்தனைத் தோறறப்படும். ஆனலுமவன் [2]சாவசித்தனுய் இருக்கிருன். எப்போதும், அவனுடைய சித்தம் பரமேசுவரனிடத்தில் இருப்பது. பின்னும், உபாசினை மூர்த்தி தியானத்தில், அதவா, ஆத்துமா அனுசந்தானத்தில் இல்லாவிட்டால் சிரவண, மனத்தில் நிவந்தாமாயிருப்பது. எவனுக்குப் பெரியவாளுடைய கோடான கோடி புண்ணியங்களின் சங்கறம், இருந்தாலேதான் இப்படிப் பட்டவனுடைய தரிசனம் அகப்படும்.

சோதனை விஞ, எது ஞானமோ, அதுமுழுமையும் அனுமானம். அதில் பிராணிகளுக்கு பரலோக சாதனமேது? ஆனபடியிஞலே முக்கியமானது சோதனையே

---

1. கூறிய அறிவினல் தெளியக் கூடிய.
2. விழிப்புடன் கூடிய.

சோதனை வினை கூடாது. உபாயத்தைப் போலவே அபாயமாக்கும். இது, சமர்த்தாள் அறிவாள். வைத்தியக்காரன் சமுசாரம் விட்டுப்போனான். ஆனாலும் அவன் சண்டை போட்டுக் கொண்டேயிருந்தான். வெகு ஜனங்களைக் கஷ்டப்படுத்தினான். தானும் கஷ்டப்பட்டான். புறப்பட்டுப் போனாலும், அவன் அக்ஞானி; அவன் சங்கத்தியில் சேர்ந்த ஜனங்கள், அந்த குரு சிஷ்யாள் இரண்டு பேரும் அக்ஞானத்தில், சமானமான்வர்களாக்கும். பின்னும் ஆசையினால் கட்டுப்பட்டவன் அனாச்சாரி. தேசாந்திரத்துக்குள்ளே அனாச்சாரமே பண்ணுவான்.

வீட்டில், வயிற்றுக்கில்லாமல் கஷ்டப்படுகிறான். அப்படிக் கஷ்டப்பட்டுப் புறப்பட்டுப் போய்விடுகிறான். போனவிடத்தில், திருட்டு ஏற்பட்டதினால், விடங்கள் தோறும் அடிப்பார்கள். ஆனபடியினாலே, சமுசாரம் மித்தை யென்றும் தெரிந்து, ஞானமறிந்து வெளியே புறப்பட்டுப் போனான். அவன் தன்னைப் போலவே உலகத்தைப் பாவனம் பண்ணினான். ஆகையால், ஒரு [1] சங்கத்தியில் கடைத்தேறுவான். ஒரு சங்கத்தியினால் முழுகிப்போவான். ஆனபடியினாலே, நல்ல சற்சங்கத்தி பிடிக்க வேண்டும். எவ்விடத்தில் விவேக பரிக்ஷை இல்லையோ, அவ்விடத்தில் தீக்ஷை இருப்பதேது? வீட்டுக்கு வீடு பிச்சைக் கேட்டாலும் எங்கேயும் அகப்படாது. எவன் பிறத்தியான் கருத்து அறிவானோ, பின்னுமோதேசம், காலம் பிரசங்கமறிவானோ, அந்தப்

1. சகவாசம்,

புருஷனுக்குப் பூமண்டலத்தில் குறை என்ன? நிஜப் பிராணி, குரு பட்டம் அடைந்தான். அவ்விடத்தில் ஆச்சாரமே முழுகியது. வேத சாஸ்திரப் பிராம்ம ணனை எவன் கேழ்பான்? பிர்ம்மக்ஞானத்தின் விசா றணை, பிராம்மணனுக்கு அதிகாரம். அப்படிப்பட்டப் பிராம்மணன், புத்தியிலிருந்து கெட்டுப்போனார்கள். ஆச்சாரத்திலிருந்தும் பிறஷ்டாளானார்கள். குருத்து வம் விட்டுப்போட்டு, சிஷ்யாளுக்கு சிஷ்யாளானார்கள்.

சிறிதுபேர், "தாவல்ய மாலிகா" வென்கப்பட்ட, முகம்மதிய தெய்வத்தினிடத்தில் சேர்ந்தார்கள். சிறிது பேர், "பீரை"ப் பஜிப்பார்கள். சிறிதுபேர், தன் னுடைய இச்சையினுல் மதம்மாறி போவார்கள். கலி யுகத்து ஆச்சாரமிப்படிப்பட்டது. இவ்விடத்தில், விசா றணை எங்கே நின்றது? இனிமேல், மேலும் வர்ண சங்கரமம் ஆகிறதாயிருக்கிறது. தகுதியற்றோர் குருபட் டம் பெற்றனர். அதில், மகுத்துவம் வளர்ப்பதால், ஆச் சாரம் முழுகடிக்கப்படும். இது முதலில் தெரியாது. அவாளுடைய விர்த்தியே திரும்பாது. மூர்ககத்தனத் தினுல், மித்தையான அபிமானம் முழுகிப்போகாது. இராஜ்ஜியத்தை பரர்கள் கட்டிக் கொண்டார்கள். குரு பட்டம் தகுதியற்றோர் கொண்டு போனார்கள். இகத்திலும், பறத்திலும் ஒன்றுமில்லை. குடுத்தினம் முழுகிற்று. விஷ்ணுவானவர் அந்தணர்களின் திரு வடியை, ஸ்ரீவத்ஸமாய் விளங்கவைத்தார். அந்த விஷ் ணுவே, பரஸ்பரமாய் அந்தணனை ஜெயித்தார். பெரி யவாள் குடுத்தினம் பண்ணிப் போனார்கள். அது

நமக்கும் வந்து விடிந்தது. இப்போது இருக்கிறவர்கள் எது பண்ணினாலும் அன்னம் அகப்படாது. இப்படியாயிற்று. தங்கள் அனைவருக்கும் சோதனைக்கு வந்ததோ யில்லையோ; நல்லது. அந்தணரைப் பற்றியென்ன சொல்ல வேண்டும்? அவர்களுடைய அதிர்ஷ்டமென்று அறிய வேண்டும் பிரசங்கத்துக்காக சுபாவீகமாய் சொல்லப் பட்ட து. கேழ்கிறவாள் க்ஷமிக்க வேணும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
அந்தணர் ராச்சியப் பிறஷ்டாள்
சர்க்கம் கூறியது.
சர்க்கம் 7

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதிநான்காம் தசகத்தில்
எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

நல்லது. இப்படிக்குப் பிரசங்கமானது, நடந்தது நடந்து போயிற்று. இப்போது அந்தணர் தம்மை சமர்த்தராக்கிக் கொள்ள வேண்டும். விமல அசதத்

திஞல், சுவாமியைப் பூஜிக்கவேணும். அதிஞல் ஸமஸ் தாளும் பாக்கியமடைய வேண்டும். மூர்க்கன், அபக் தன், வித்யையில்லாதவாள் ஆவார்கள். தரித்திரியம் அனுபவிக்க வேண்டும். முன்னே தெய்வத்தை அறிய வேண்டும். அப்பால் அனன்னிய பாவத்திஞல் பஜிக்க வேண்டும். சர்வோத்தமனுடைய அகண்ட தியானமே பிடிக்க வேண்டும். சகலத்துக்குள்ளே உத்தமன் ஆனது கொண்டு, சர்வோத்தமனென்றும் பெயர்.

ஆத்துமா, அனாத்துமாவென்பதை விவேகத்திஞல் வர்மம் கண்டுபிடிக்க வேண்டும். அறிந்தரிந்து தேகத்தை இரட்சிக்கிறது, ஆத்துமா. அதற்கு அந்தறசாக்ஷி அறிந்தறிந்து பதார்த்தமென்கிறதற்கெல்லாம் பரிக்ஷிக்கிறது. அந்த ஆத்துமா சகலத்திலும் காரியப்படுகிறது. இந்திரியங்களைக் கட்டிவைக்கிறது. சோதனையிஞல், பிராணிகளுக்கெல்லாம், சோதனைக்கு வருகிறது. அது, பிராணிகளிடத்திலும, [1]ஜகதாந்தரத்திலும் இருப்பதென்றும் அறிவு. ஆனதிஞலே, கருத்துக்களைக் காப்பாற்றிக் கொண்டு நடக்கவேண்டும். ஏதொரு சகலமும் பரஸ்பரமாய், [2]தாதா [3]போக்தாவாக்கும். தெய்வம் ஜெகதாந்தரத்திலும் காரியப்படுகிறது. அதுவே தன்னுடைய உள்ளிலும் இருப்பது மூன்று உலகத்திலும் என்பதை நன்ருகபாருங்கள். ஆதியில் பார்க்

---

1. ஏனைய உலகங்களில்.
2. கொடுப்போன்.
3. அனுபவிப்பவன்.

கிறவன் ஒருவன். அவன், சகலவிடத்திலும் பிரிக்கப் பட்டான். தேகபிரகிருதியினுல் பின்ன பின்னமானுன் வெளியில் பின்னபின்னமாய்த் தோன்றுகிறது. ஆனு லும் அந்தறங்கம் ஒன்ருக இருப்பது. பேச்சுகளும், நடைகளும், நிச்சயமாய் அதோடேதான். தன்னவன் பிறத்தியான், சகல ஜனங்கள், பக்ஷிகள், சுவாபதங்கள் பசுக்கள், புழுக்கள், எறும்புகள் முதலாய், தேகதாரி. சகல பிராணிகள், கேசராள், பூசுராள், வனசராள், நாலுபிரகாரமுடைய ஜலசராள், நால்வகை யோனி யுடைய விஸ்தாரம் எத்தனே என்றும் சொல்ல வேண் டும்? ஸமஸ்தமும் அறிவினுல் நடைவடை படுகிறது. ரொக்கமான சோதனே இதைப் பார்க்கவேணும்.

அந்த சக்தியே இவனுக்கு அகண்டமாயிருப்பது. ஆனபடியினுலே, நாயகன் ஜெகதாந்தரமாய்க் கிருபை யுடையவன். கிரியை தன்னிடத்திலேயே தான். அது தன்னிடத்திலேயேதான் பிடிக்கிறது. ஆனது கொண்டு ஸமஸ்தத்தையும் இராஜியாக்க வேண்டியது. ஏனென் ருல், தேகங்களுக்கு நன்மை பண்ணினது ஆத்துமா வுக்கே சேரும்.

துஷ்டப் பிராணி, அதனிடத்திலிருக்கிற தெய்வம் அதன் சுபாவீகம். துஷ்டத்தனமே யுடையது. உல கத்தில், இராஜன் கோபத்துக் கொண்டானே யாகில், அவனே எதிர்க்கப் போகாதே அந்த வேளேயில் விட்டுவிட வேண்டும். மேல் விவேகம் விவரிக்க வேண் டும். சகல உலகத்திலும், விவேகத்தினுல் சற்ஜனனுக வேணும். ஆத்துமதத்வத்தில் பேதங்காணுது. இது

பேதமுழுமைக்கும் தேக சம்மந்தம் ஒன்றே இருப்பது ஜலத்தில், மூலிகைக்குத் தக்கதாய், நானு ருசியாக்கும் அந்த ஜலம் விஷமும், பின்னும் அமிர்தமாகவும் ஆனது. ஆனுலும், அந்த ஜலத்தனம் போகவில்லை. அதுவும் போல அக்கறையுடனே ஆத்துமாவைப் பார்க்க வேண்டும். அந்தர நிஷ்டையுடைய புருஷன் எவனே, அவன், அந்தர நிஷ்டையினுல் விசேஷன். அவனிடத்தில், ஜெகத்திலிருக்கிற ஜெகதீசன் கிருபையுடையவனுவான். கண்களினுல், கண்ணைப்பார்க்க வேண்டும். மனதினுலேயே மனம் சோதிக்க வேண்டும். அப்படியே இந்த பகவான் சகல கடத்திலுமாம். அது வினு, காரியபாகம் தடைபடும். ஏதொன்றும், சகலமும் அதினுலேயே ஆகிறது. பின்னுமோ, பிராணிகள் அதினுடைய யோக்கியதையினுலேயே விவேகி, விவேகத்தில் நுழைவார்கள்.

ஜாக்கிரதையில் நடக்கிற வியாபாரத்தின் சம்மந்தம் அவனேடேயே விழுகிறது. ஸ்வப்பனத்தில் நடக்கிற வியாபாரம் போலவேதான், அகண்ட தியானத்தின் இலட்சணம். அகண்ட தெய்வத்தின் ஸ்மரணை, இதன் விவரணை தெரிந்தால், சகஜமாய் லெபிக்கிறது. சகஜத்தை விட்டு விட்டு, [1]ஸாயாஸம் பண்ணுகிறதே தோஷம். உலகத்தில், ஆத்துமாவை விட்டு விட்டு, அனுத்துமாவைத் தியானம் பிடிப்பார்கள். பிடித்தாலும், அது பிடிபடாது. தியானத்தில் நானு உருக்கள் வரும் சும்மா மனதை ஸங்கடப்படுத்திக் கஷ்டப்

1. கடும்முயற்சி.

படுத்துகிருர்கள். ஸாயாஸத்திஞல் மூர்த்தித் தியானம் பண்ணுகிருர்கள். அவ்விடத்தில் ஒன்றுவிட ஒன்று காணும். எது, தோன்றலாகாதோ, அந்த விலட்சணமே தோன்றும். தியானம் தெய்வத்தைப் பிடிக்க வேண்டுமோ, அல்ல வென்றுங் கோவிலேப் பிடிக்க வேண்டுமோ, இதுவே, நன்ருய்த் தன்னிடத்தில் விவரிக்க வேண்டும். தேகம் கோவில், ஆத்துமா தெய்வம்; இதில் எவ்விடத்தில் பாவம் பிடிக்கப் பார்க்கிறீர்கள்? தெய்வத்தை யறிந்து, ஜீவனை அங்கு சேர்க்க வேண்டும். அந்தத்ர நிஷ்டாளுடைய தியானம் இப்படி உலகத்தில் [1]தண்ட கதியானம், நீங்கலான அலாதியாக்கும்.

சோதனை விஞ, அனுமானத் தியானம் சகலமும் வெறிபிடித்து வெறித்ததாக்கும். அனுமானத்திஞல், அனுமானம் வளரும். தியானம் பிடித்தால், உடனே முறியும். ஸ்தூல தியானத்திஞல் வீணை மேதகாள் கஷ்டப்படுகிருர்கள். தெய்வத்துக்கு தேகதாரியாய்க் கல்பிக்கிருர்கள். அதில் நாஞவிகல்பமுண்டாகிறது. தேக யோகத்திஞல் புசிக்கிறதும், தேசிக்கிறதும், விபத்தாகும். இப்படி மனதில் தோன்றுகிறது. விசாரிக்குமிடத்தில், ஏதாகிலுமாகிறது. எது, காணப்படாதோ அதுவே நாஞவிதமாய் ஸ்வப்பனத்தில் காணப்படுகிறது. காணப்படுகிறதை சொல்ல முடியாது. பலவந்தமாய், பாவார்த்தம் பிடித்தால், வராது. ஆனதிஞல், சாதகன் உள்ளத்தில் கஷ்டப்படுவான். சாங்கோபாங்கமாய்த் தியானம் லெபிக்கிறதற்குத் தன்னு

---

1. வழக்கமான.

டைய மனமே சாட்சியாகும். மனதில், விகல்பதரிசன மாகவே யாகாது உடைந்த மனம் ஒன்ருய்ச் சேர்க்கப் பட்டது. அதினுல், துண்டித்த தியானம் பண்ணப்பட் டது. அவ்விடத்தில் என்ன சார்த்தகமாயிற்று?

இதைப் பாருங்கள். அகண்ட தியானத்திஞல், ஹிதம் லெபியாவிட்டால், அவன் பதிதனென்று அறிய வேண்டும். இந்த அர்த்தம் சாக்கிறதை சித்தமாய், நன்ருகப் பார்க்க வேண்டும். தியானம் பிடிக்கிறது எது? தியானத்தில் தோன்றுகிறது. எது? இரண் டுக்கும் மத்தியில் அனன்னிய இலட்சணம் இருக்க வேண்டியது. அனன்னியம் ஸகஜமே யிருப்பது. சா தகன் சோதித்துப் பார்ப்பான். ஞானி அதை விவ ரித்துப் பார்த்து, சமாதான மாயிருப்பான். இப்படி இவைகள் சோதனையின் காரியங்கள், சோதனை வினு, பிறமையினுல் பாதிக்கப்பட வேண்டும். உலகத்தில், அப்பிராணிகள் உலக வாடிக்கையை சம்பிரமமாய் நடத்துகிருர்கள். தண்டகதியானத்தின் இலட்சணம் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான் அவலட்சணன். பிரமாணமும், அப்பிரமாணமும், சந்தைக் கூட்டதாரி கள், பொய்யான சேதிகள் பிறபிப்பான். பின்னும், பாடாந்தரங்கங்கள் விட்டுவிடுவார்கள். மனதில், அதை விசாரித்தால் கடைசியில் சகலமும் பொய்யாகும்.

ஒருவன் மானஸ பூஜை தியானத்தில் உட்கார்ந் தான். அவனுக்குப் பின்னுமொருவன் கற்றுக்கொடுக் கொடுக்கிருன். என்னவென்ருல், கிரீடத்தை எடுத்துக் கொண்டு, மாலையைப் போட்டால், நல்லது, என்ருன்.

மனதுக்கு என்ன துஷ்காலம். குறுகலாய், ஏன் மாலை யை கல்பிக்க வேண்டும் ? ஆகையால், சொன்னவனும் கேட்டவனும், கேவலம் அல்பன் யென்றும் அறிய வேண்டும். பிரத்தியக்ஷமாகக் கஷ்டப்பட வேண்டிய தில்லை. நூலும் பூவும் கோர்க்க வேண்டிதில்லை. ஆன படியினாலே, கல்பனையின் மாலை யென்ன நிமித்தயம் செய்கிறான் ?

ஆகையால், புத்திவினா, சகல பிராணிகள் அல்பர் கள் அப்படிப்பட்ட மூர்க்காளோடு எவன் போராடுவன்? ஆனபடியினாலே, எவன் பரமார்த்தம் எப்படிப் பண்ணு கிறானோ, அப்படியே பூமியின்கண் நடந்தது. இப்படிப் பட்ட, பத்தெட்டுப்பேருடைய அபிமானம் பலப்பட்டது. சோதனையில்லாத அபிமானம் எப்படிப்பட்ட தென்றால் [1]ரோகவந்தனை மூடிவைத்துக் கொண்டார் போல். அவ்விடத்தில் முழுமையும் அனுமானம். அவ்விடத்தில் ஞானமேது ? ஆனது கொண்டு, சர்வஸ்வ அபிமானம் விட்டுவிட வேண்டும். சோதனையினால், விசாறணை நிறுத்த வேண்டும் மாய்கை பூர்வபக்ஷம், இதை விவேக பலத்தினால் கண்டிக்க வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

அகண்டதியான சர்க்கம் 8 முடிந்தது.

முற்றும்.

---

1. நோயாளியை.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினுன்காம் தசகத்தில் ஒன்பதாம் சர்க்கப் பிரசங்கம்.

பிண்டத்தின் காரியம் பார்க்கப்பட்டது. ஆத்துமா அனுத்துமாவின் விவேகம் சோதித்தோம். அதில் பிண்டமானது அனுத்துமா, சகல கர்த்தாவான ஆத்துமா ஒன்று. அந்த ஆத்துமாவுக்கு, அனன்னியத்தைச் சொல்லப்பட்டது. அதுவே விவேகத்தினுலே சோதனைக்கு வந்தது.

இப்போது பிர்மாண்டத்தின் சேர்மானம் அறிந்து கொள்ள வேண்டியது. பிண்டத்தில் ஆத்துமா, அனுத்துமா விவேகம் வந்து பிர்மாண்டத்தில், இந்த சாராசார சாறனை எவ்விதமென்று விவரித்து விவரித்துப் பார்க்க வேண்டும். பிண்டகாரியம். பிர்மாண்ட காரணம், இதின் விவரணை பண்ணவேண்டும்.

இந்தப் பிரசங்கமே இனிமேலும் சொல்லப்பட்டது. அசாரமென்ருல் நாசமுடையது. சாரமென்ருல், சாசுவதம். எதற்குக் கல்பாந்திரமாகிவிடுமோ, அது சாரமல்ல. பூமி ஜலத்திலிருந்து ஆனது. மேலும். ஜலத்திலேயே ஒழிந்து போயிற்று அந்த ஜலத்தின் உற்பத்தி தேயுவிலிருந்து வளர்ந்தது. அந்த ஜலத்தை தேயுவே சோஷித்தது. அப்பாலது, சகஜமே வற்றிப்

போயிற்று. மேல்,தேயுவே மீந்தது. அந்தத்தேயு வாயுவிலிருந்து ஆயிற்று. அதை அந்த வாயுவே இராஞ்சிப் போட்டது. அப்போது, தேயு போய், வாயுவே நிறம்பிற்று. அந்த வாயு ஆகாசத்திலுண்டா யிற்று. மறுபடி அவ்விடத்திலேயே ஒழிந்துபோயிற்று. இப்படி இந்த கல்பாந்திரம் வேதாந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்டது. குணமாய்கை, மூலமாய்கை, பரப் பிர்மத்தில் அடைந்தது அந்தப் பிர்மம் விவரிக்கிறதற்கு விவேகி வேண்டும். சர்வ உபாதிக்குக் கடைசியில்; அவ்விடத்தில், திரசியமான கடுபிடியில்லை. நிற்குணப் பிரமம் சகலமான விடத்திலும் நிறம்பியிருப்பது. மிகு தியுங் கல்பாந்திரங்களாலும், அதற்கு நாசமில்லை. மாய்கை, தியாகத்தினால் சாசுவதத்தை அறியவேண்டும் தெய்வம் அந்தராத்துமா, சகளம், சகளத்தினால், நிற் குணமடைய வேண்டும். நிற்குண ஞானத்தின் விக் யானமே அகப்படும்.

எது, கல்பனைக்கு அதீதமான நிற்மலமோ, அவ் விடத்தில் மாய்கை மலங்கிடையாது மித்தியத்துவ முடைய சகல திரசியமும் ஆகிறதும், போகிறதும் எது? ஆகிறது, பின்னும், உடனே போகிறதோ, அதுவே சோதனைக்கு வருகிறது. எதற்கு ஆகிறதும், போகி றதுங் கிடையாதோ, அது விவேகத்தினால் அறிய வேண் டும். ஒன்று ஞானம், ஒன்று அஞ்ஞானம், ஒன்று விப ரீத ஞானம் இது மூன்றும், எவ்விடத்தில் க்ஷீணமாய்ப் போமோ, அதுவே பிர்மம். சித்தாந்தம், தாதாந்தம் இதின் சோதனை பார்க்க வேண்டும். எங்கே பார்த்தா லும் நிற்விகாரீ சதோதீதமாம். அதை ஞானதிருஷ்டி

யினுல் பார்க்க வேண்டும். பார்த்து அனன்னியமா யிருக்க வேண்டும். இதற்குப் பெயர் முக்கியமான ஆத் துமா. ஆத்தும நிவேதன மென்றும் அறிய வேண் டும்.

கண்ணுக்குக் காணப்படுகிற தெல்லாம் கண்டிப்பு: மனதுக்குத் தோணப்படுகிறதெல்லாம் தோணுதல். ஆனபடினுலே திரசியத்திற்கும் தோணுதலுக்கும் அதீ தம்: அவிஞசம்: பரப்பிர்ம்மம் பார்க்கப் போனுலது தூரவிருக்கும். தூரவிருந்தும் கருத்தில் உள்ளும் புறம்புமாயிருப்பது. அந்தமேயில்லாத அனந்த னுக்கு, எவனுடைய உபமானம் கொடுப்பது? சஞ்சல மும் ஸ்திரப்படாது. நிற்ச்சலம் ஒரு காலமும் சலியாது. மாசு வருகிறது: மாசு பின்னும் போகிறது. ககனத் துக்குச் சலனமில்லை எது விகாரத்திஞல் வளர்ந்து, பின்னும் முறியுமோ, அதற்கு, சாசுவத மென்பது, எப் படி லெபிக்கும்? கல்பாந்திரமானவுடனே, சகலமான தும் எடுப்பட்டுப் போம். எவாள், அந்தரத்தில் பிர மித்து மாய்கை [1]சம்பிரமத்திஞல் சம்ப்ரமமாஞளோ, அவாளுக்கு, இந்த மகத்தாகிய காரியம் எப்படி பிறிக் கப்படும்?

தாக்ஷண்ணியத்திஞல் சித்தாந்தம் தேரியாது. தாக்ஷண்ணியத்திஞல் கருத்தில் தெய்வம் சிக்காது. அப்போது வைத்தியனுடைய சிகிச்சை சோதனைக்கு வராது. பின்னுமோ, தாக்ஷண்ணியமும் கடக்க முடிய

1. உற்சாகத்திஞல்.

வில்லை. ஆகையினால், அப்பால், ரோகஸ்தன் சர்வதா பிழையான் என்பதாய் அறிய வேண்டும். எவன் இரா ஜாவை அறிந்தானோ, அவன், கண்டவனை யெல்லாம் இராஜா வென்கான். எவன், தெய்வத்தை அறிந் தானோ, அவன் தெய்வ ரூபி, எவனுக்கு, உலகத்தில் தாக்ஷண்ணியமோ, அந்த மூதேவி என்ன பேசக்கூடும்? விசாறணையைப் பார்க்கையில். ஏதொரு சகலமும் வெளி யாயிருப்பது தாக்ஷண்ணியம், மாய்கைக்கு இப்புறமிருக் கப்பட்டது. பரப்பிர்மம் அப்புறமிருப்பது. அப்புற மும், இப்புறமும் பிர்மம் சதோதீதமாகும். பொய்யான தின் தாக்ஷண்ணியம் பிடிக்கிறது. பிறமையினால் ஏதா கிலுமே பண்ணுகிறது விவேகத்தின் இலட்சணங்கள் இப்படி அல்லவே. ஆனபடியினாலே, சொல்லாததை யெல்லாம் விட்டுவிட வேண்டும். மெய்யானதை, சோத னையினால் அறிய வேண்டும். மாய்கையின் தியாகத்தி னால், பரப்பிர்மம் அறிந்து கொள்ள வேண்டும். அந்த மாய்கையின் இலட்சணம் எதுவோ, அதுவே, இனிமேல் வருகிற சர்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கேழ்க்கிறவாள், சாவதானமாய் விவறணை பண்ண வேண்டியது.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சாசுவத சர்க்கம் சொல்லப்பட்ட

சர்க்கம் - 9. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினுன்காம் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

மாய்கை காணப்படுகிறது; ஆனாலும், அது நசித்துப் போகிறது. வஸ்துகாணாது; ஆனாலும் அது நசித்துப் போகாது. மாய்கை சத்தியமாய்த் தோன்றுகிறது; ஆனாலும் நிரந்திரம் மித்தையாயிருக்கப்பட்டது. நிற்பாக்கியன் முழுமையும் நிறைந்து கொண்டு, நானாவித கல்பனை பண்ணுகிறான்; ஆனாலும், அது ஒன்றும் முடியாது; அப்படிப்பட்டது மாய்கை. மாய்கை தரித்திரனுடைய சொற்பன வைபவம். நானா விலாஸம், நடைவடைபடுகிறது. க்ஷணப்பொழுது தோன்றும்; ஆனாலும், அது பொய் அப்படிக்கு மாய்கை ககனத்தில், கந்தர்வாளுடைய நகரங்கள். நானாப்பிரகாரமாய் நானாரூபம், நானாவிகாரத்துடனே காணப்படுகிறது: அப்படிக்கு மாய்கை இராஜாவினுடைய பரியாசத்தின் இலட்சுமியைப் பேசிக்கொள்ளுகிறதில், மெய்யாகத் தோன்றுவாள். அங்கத்தின் சோதனை மித்தை: அப்படிக்கு மாய்கை செத்தவாளுடைய உச்சம் பண்ணுகிறது. தீயில் குதித்தவாள்டைய வைபவம் வளரவைக்கிறது. மயானத்தில் போய் அழுகிறது. அப்படிப்பட்டது. மாய்கை.

விஜய இலட்சுமியினுடைய பண்டிகையில், இராஜாக்கள் வன்னித்தழையை வெட்டி, சிரசில் தரித்துக் கொள்ளுகிறது. அதை, ஜனங்கள் தங்கத்தின் கட்டியென்பார்கள். ஆனாலும், அது முள்ளாம். முள்ளானாலும், எங்கேயும் பொன் என்பதாய் விளங்குகிறது. அப்படிக்கு மாய்கை எனும் வைப்பாட்டியை இலட்சுமியென்பார்கள். பின்னுமோ, இராண்டாவது நோம்புக் கயறுன இலட்சுமி. மூன்றுவது பெயர் மாத்திரம் இலட்சுமி. இப்படி மாய்கை ஆதியிலே ஸ்திரீ, பாலவிதவை ஜென்மம், சாவித்திரி ஜென்மம், சுமங்கிலி யென்றும் பெயர். குபேரன், வீட்டுக்கு வீடு அலைகிருன் என்பது போல. அப்படி மாய்கை தச அவதாரத்தில், கிருஷ்ணனுக்கு ஜீர்ணகந்தையின் ஆசை பிறந்தது. பின்னேயோ, நதிக்கு அமிர்தமென்று பெயர். அப்படி மாய்கை வெகுருபத்தில்; செப்படி வித்தையில் சேவகன், கிராமத்தார் முன்னே மகாஇராஜனென்றும் லாகவ பாவனை காண்பிக்கிருன். அப்படிக்கு மாய்கை பூஜை மாடத்தில் அன்னபூரணி மூர்த்தியாயிருப்பது: வீட்டிலே அன்னமகப்படாது. பெயர் ஸரஸ்வதி. விராட்டி தட்டுகிறதற்குக் கற்றுக்கொள்ளத் தெரியாது. சுவானத்துக்குப் புலியின் பெயர் வைக்கப்பட்டது. புத்திரனை இந்திரன் பெயரினல் கூப்பிடுவது. குரூபியானலும், சுந்தரமென்றும் வழங்குவது மூர்க்கனுக்குச் சகலகலை வல்லபன் யென்றும் பெயர். பெண் கழுதைக்குக் கோகிலம் என்றும் பெயர். இல்லாவிட்டால், அழகான கண் உடையவளுடைய கண் உடைந்தது போல. கஞ்

சாவின் பெயர் துளசி, தோல் பைக்குப் பெயர் காசி. அதீபாவிக்குப் பாகீரதி யென்பது போலப் பேசுகிறார் கள். நிழலும், பின்னும், இருள் ஒன்றானல், அவ்விடத்து விவரம் அனுவசியமாகத் தோன்றுதல் மாத்திரம், காணப்படும். அப்படிக்கு மாய்கை, காதுகள், விரல்சந்து கள், உள்ளங்கை, இவைகள், ரவீ கிரணத்தினல், நெருப் புப் போல ரம்மியமும், சிகப்பு வர்ண புஷ்டியும் காணப் படும். அப்படி மாய்கை, ஜலத்தில் கை, கால், விரல் கள். குட்டையாகவும், நீளமாகவும், மெல்லியதாகவும், ஜலத்தினல் விபரீதம் போலவே காணப்படுகிறது.

அப்படி மாய்கை காவி வஸ்திரம் பார்க்கையில் மன துக்கு அக்கினியே பட்டுவிட்டதாய்த் தோன்றும். விசா ரித்ததினல், சோதனை வந்தது. அப்படி மாய்கை மயக் கத்தினல், பூமி தத்தளிக்கப்பட்டது. காமாலையினலே பூமி மஞ்சள் வர்ணமானது. சன்னிபாத ஸ்திதி அனுப விக்கப்படடது. அப்படி மாய்கை, விகார முடைய பதார்த்தம் வீணய்த் தோன்றுதல் மாத்திரம் காணப் படுகிறது. அனன்னியத்தின் அனன்னியப்பிரகாரம், அப்படிக்கு மாய்கை.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

மாயா லக்ஷணம், கூறியது.

சர்க்கம் 10 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் ஆத்ம தசகத்தில் முதல் சர்க்கப் பிரசங்க.

அசத்தியமா முழுத்தின் சரீரங்கள். அதில் ஜீவேசுவரர்கள் குடியிருக்கிறார்கள். நானாவிகாரத்தினால் பிரவீணனாகும். கனமாகவும், போலாகவும், சுபாவமாகவும். இதை ஜீவத்தினால் விவரித்து அறியவேண்டும். வேண்டியது, வேண்டியதில்லை. இது முழுமையும் ஜீவன் அறியும். சிறிது பேர் கேட்டு கேட்டு அறிகிறார்கள். சிறிது பேர் கேளாமலிருக்கிறார்கள்.

சேர்தலையினால் சூட்சமமான இலட்சணங்கள் அறிய வேண்டும். ஜீவனை ஜீவத்தில் சேர்த்துப் போட வேண்டும். ஆத்துமா ஆத்துமாவில் கலக்க வேண்டும். பிறத்தியாருடைய கருத்தின் சோதனை மெள்ள அடைய வேண்டும். பூணால் எனப்பெரிதாய்த் தொங்கலாயிற்று. மிகுதியுந்தளர்ந்த படியினாலே, பிரமாண யுக்தமாயிருந்தால், அவ்விடத்தில் சோபிக்கும். அப்படியும் போல, மனதுக்கு மனம் விவேகத்தினால் கலந்துபோக வேண்டும். தளர்ந்த படியினால், அனுமானம் ஆகிறது. அனுமானத்தினால், அனுமானம் வளருகிறது. தாக்ஷண்ணியத்தினால், காரிய பாகங்கள் கெடுதலாகிறது. ஆகையால், முன்னமே சோதனை செய்யவேண்டும். ஒருவ

னுடைய கருத்திலிருப்பது தெரியாது. பராளுடைய அத்தரங்கம் அறிவதில்லை. ஆனதுகொண்டு, நானு ஜனங்கள் எந்தப் பிரகாரம் வசியமாவார்கள்?

புத்தியை, புறம்பில் போட்டுவிட்டு, ஜனங்கள் வசீகரணம் பண்ணுகிறார்கள். அபூர்ணத்தினால், கண்ட கண்ட விடமெல்லாம் தாழ்மை பட்டுப் போவார்கள். ஜெகதாந்தரத்தில். ஜெகதீசனிருக்கிறான். சஸ்திரம் யார்பேரில் படுகிறது? ஆனதுகொண்டு யாதொருவன் விவேகத்தை விவரிப்பானோ, அவனே சிரேஷ்டன். சிரேஷ்டமான காரியம் பண்ணுகிறவன், சிரேஷ்டன். [1] கிருத்துருவம் பண்ணுகிறவன் கனிஷ்டன். [2] காமானுசாரமாய்ப் பிராணிகள் [3] நஷ்டாளும், பின்னுமோ, நல்ம வாளும் ஆவார்கள் இராஜாக்கள், ராஜமார்க்கமாய்ப் போவார்கள்.

திருடாள். திருட்டு வழியாய்ப் போவார்கள். பைத்தியக்காரன் மூர்க்கத்தனமாய், அல்பசுவார்த்தத்தினால் மோசம் போவான். மூர்க்கனுக்குத்தான் சமர்த்தனென்றுந் தோணுகிறது. ஆனாலும், அவன் தைன்யமான பைத்தியக்காரன்.

நானு சாதுரியத்தின் குறிகள் சதுராள் அறிவார்கள். எவன் ஜெகதாந்தரத்தில் கூடினானோ, அவன்,

1. ஈனமான காரியம்.
2. மனதின் நினைப்பின்படி.
3. கெட்டவர்.

ஜெகதாந்தரமே ஆனன். இகபறத்திலும் அவனுக்கு என்ன குறை? புத்தி கொடுப்பது, பகவந்தனுடையது பொறுப்பு: புத்தி வின, மனிதன் [1] திரணத்துல்லியன். ஸகஜமாக வந்த இராஜ்ஜியத்தை விட்டுப்போட்டு, பிச்சைக் கேழ்க்கிறவர்களெவர்களோ, அவர்கள் எவ்விடத்தில் பிறந்தார்களோ, அவர்களுக்கு அவ்விடமே மானிதையாயிற்று. இப்படி அபிமானதயைக்கொடுத்து விடத்துக்குவிடம் சிக்கப்பட்டனர்.

எல்லோரும், " நாமே பெரியவாள் ", என்கிறார்கள். பின்னும், பின்னும், எல்லோரும் " நாமே அழகுடையவாள் ". என்கிறார்கள். பின்னுமோ, எல்லோரும் இந்தப் பூமண்டலத்தில், நாமேசதுராளென்றும், சொல்லுகிறார்கள். இப்படியாப்பட்ட விவரம் மனதில் எண்ணிப் பார்க்கையில், எவனும், " நான் எளியவனென்றும் ", காண்பிக்கான். இது முழுமையும் அறிவுள்ளவாள் அனுமானத்துக்குக் கொண்டு வருவார்கள். தன் தன்னுடைய சுய அபிமானத்தினல். ஜனங்கள், அனுமானத்தோடேயே நடக்கிறார்கள். ஆனலும், இது விவேகத்தினல் பார்க்க வேண்டியது. பொய்யான அபிமானம் பிடிக்கிறது, சத்தியம் முழுமையும் விட்டு விடுகிறது. இது மூர்க்கத்தனத்தின் இலட்சணம், அது இப்படியாப்பட்டது.

சத்தியத்தின் அபிமானம் எதுவோ, அதுவே, நிராபிமானமென்று அறியவேண்டும். நியாயம், அந்நியாயம்

---

1. பூண்டிற்கொப்பானவன்.

ஒருக்காலமும் சமானமாகாது. நியாயம் யென்றால் சாசுவதம். அந்நியாயமென்றாலது அசாசுவதம். இழுக்குடையதும், உத்தமும் ஒன்று எப்படியாகும்? சிறிது பேர், பிறகடமாய்ப் பாக்கியம் அனுபவிக்கிறார்கள். சிறிதுபேர், திருடாளாக ஓடிப்போகிறார்கள். சிறிது பேருடைய மகத்துவம் [1] பிறகடிக்கிறது, சிறிது பேருடைய மகத்துவம் முடங்கிப் போகிறது. ஆச்சாரம், விச்சாரம் வினு, யெதுவது பண்ணப்படுகிறதோ, அதுவது சிரமமாகும். ஆனபடியினாலே, தூர்த்தன், பின்னும் விசக்ஷணனை, சோதிக்க வேண்டும். மிகுதியும் வெகுபேர் உலகத்தார் கூடினார்கள். ஆனாலும். அவர்களை தூர்த்தருக ஆவார்கள். ஆனதுகொண்டு, தூர்த்தனிடத்தில், உலகத்தாரது ஒன்றும் நடவாது.

ஆனபடியினாலே, முக்கியன் முக்கியனோடேயே சக்கியம் பண்ணவேண்டும். அதினால், சங்கையில்லாமல் உலகத்தார் சேருவார்கள்.

தூர்த்தனுக்குத் தூர்த்தனே பிரியப்படுவான். தூர்த்தன் தூர்த்தத்தில் தான் யேற்படுவான். ஸகஜமாய்ப் பைத்தியக்காரர்கள் காரியம் வினு அலைவார்கள், தூர்த்தனுக்குத் தூர்த்தத்தனம் தெரிந்தது. அதினால். மனதுக்கு மனம் சேர்ந்தது ஆனாலும், இது சகலமும் குப்த ரூபமாய்ப் பண்ணவேண்டியது, சமர்த்தனுடைய மனம் காப்பாற்றில், அவ்விடத்தில் வெகுபேர் வருவார்

1. வெளிப்படுகிறது.

கள் ஜனுள் பின்னும், சற்ஜனுள் அவரே யென்றும் சொல்லிக்கார்ப்பார்கள். அறிந்தவனையும், அறியாத வனையும், ஆதாரவாய் அடையவேண்டும். புத்தியினல் புத்தியைப் போதிக்க வேண்டும். நீதி நியாயத்தினல், பாஷாண்டத்தை [1]நிரோதிக்கவேணும். மேதகவேஷம் பிடிக்கவேண்டும். உள்ளத்தில், நாலு கலைகள் இருக்க வேண்டும். எல்லா ஜனங்களுடைய [2]ஜீவாளம் முறிக்க வேயாகாது. நிஷ்பிறகடன், பின்னும், நித்திய நூதனன், பின்னையோ, சோதனையின் பிர்ம்மஞானம், பிரசங்கம் அறகிற சற்ஜனன் உலகத்தில் துர்லபமாக்கும். நாலு தினுசு பாடாந்தரத்தினலே, சர்வத்திராளுடை அந்தரங்கம் ஆற்றப்படும். அதற்குமேல், சஞ்சலமாய் சர்வவிடத்திலும் தானிருப்பவன். ஓரேவிடத்தில் உட்கார்ந்து விட்டானுகில், அப்பால் வியாபகமே முழுகிப்போகும். ஆனதுகொண்டு, சாவதானமாய் எல்லோரையிம் சந்திக்க வேண்டும். சந்தித்து சந்தித்து மிச்சம் காப்பாற்ற வேண்டும். இதுவே சாதுரியத்தின் இலட்சணங்கள் எல்லோரும் உத்தம குணத்தினல் சமாதானமடைவாள்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
சாதுரியத்தின் இலட்சணம்
கூறியது. சர்க்கம் 1

முற்றும்.

---

1. **எதிர்த்து தடுக்க வேண்டும்.**
2. நட்பு.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

பிருதிவியின்கண் நராள் சரீரங்கள் மிகுதியும் சிறியதும், பெரியதும் நிறைந்துள்ளது. அவைகள் மனோ விகாரத்தினுல் க்ஷணத்துக்கு க்ஷணம் பிறணுகின்றன. எத்தனை மூர்த்திகளோ, அவ்வளவு பிரக்கியாதி ஒன்றைப்போலிராது. ஆதி அந்தியத்திலும் நேமமேயில்லை. எவ்வளவு யென்று பார்க்கலாம். சிறிதுபேர் மிலேச்சர்களாய்ப் போனுர்கள். சிறிதுபேர் பரங்கிகளானுர்கள். பின்னும், சிறிதுபேர் தேச பாஷையினுல் கட்டுப்பட்டார்கள். இதில் மஹாராஷ்டிர தேசங் கொஞ்சம் மிஞ்சியிருப்பது. அதில், இராஜ காரணத்தினுல் சிறிது ஜனங்கள் கட்டுப்பட்டார்கள். போஜனத்திற்குக் கூட அவகாசமில்லாமல், எந்நேரமும் தொந்திரவு. சிறிது பேர் உத்தியோகப் பிரசங்கத்தில் சிக்கினுர்கள். அவர்கள், தமோகுணத்தினுல் உன்மத்தர்களானுர்கள். இராத்திரியும் பகலும், உத்தியோகச் சர்க்கை பண்ணத்தலைப்பட்டார்கள். இப்படிப்பட்ட உத்தியோகங்களினுல், வியாபக சங்கமம் பட்டது. அதினுல், உட்கார அவகாசம் கிடையாது. நிரந்தறமாய் முழுயையும் வயிறுவளர்க்கத் தொந்தமே ஆயிற்று. சமையாதிகள், நாஞ மதங்கள், பாஷாண்டம்

மிகுதியும் வளர்ந்தன. [1]பிருதிவியில் எங்கெங்கே பார்த்தாலும், உபதேசிகள் உபதேசம் பண்ணுகிறார்கள். ஸ்மார்த்தாள், பின்னும், வைஷ்ணவாளிடத்திலும், மற்ற இதர மதங்களிலேயும் அதுவே கூடிப் போயிற்று.

சிறிதுபேர் காமனையுடைய பக்தாள் இடத்துக்கு இடம் பதிந்து போனார்கள். ஆசையினால் யுக்தமும், அயுக்தமும், எவன் பார்க்கிறான்? இந்த இறைச்சலுக்குள்ளே இறைச்சல் ஒருவன் பரமார்த்தம் வளர்ப்பித்தான். அவனை வைதீக ஜனங்கள் பார்க்காமல். பொறுமைப்படத் தலைப்பட்டார்கள். அதிலும் ஹரி கீர்த்தனத்தில், சிறிது ஜனங்கள் ஏற்பட்டார்கள். இதில் சோதனையின் பிர்மக்ஞானம், யார் பார்க்கிறான்.

ஆனபடியினாலே, ஞானம் துர்பலம். அலப்பியமான இலாபம் புண்ணியத்தினால் லெபிக்கும். ஆனாலோ விசாறனையுடையவனுக்கு ஏதொரு சகலமும் சுலபமாக்கும். விசாறனை தெரிந்தது சொல்லவராது. ஏனென்றால், மிகுதியும் பிழைகள் வருகின்றன. உபாயம் யோசித்தால், அபாயங்கள் குறுக்கிடுகிறது. இதற்குள்ளே எவன் தீக்ஷணனோ, அவன் ஒரு க்ஷணம் போகக்கொடுக்கான். தூர்த்தன், தர்க்கீகன் விசக்ஷணன், இவன் சகலமானபேர்களாலும் மானிக்கப்படுவான். நானா தினுசான, பாடந்தரங்களைக் கொண்டு கடகடவெனச் சொல்லத் தோக்குவான். சாமர்த்திய

---

1. பூமியில்.

பலத்தினுல், இல்லாத வழியை உண்டாக்குவான். பிரபோத சக்தியின் அனந்த வழிகள், எதினுல் சகல ஜனங்களுடைய அந்தரங்கம், சாஸ்திரப் பிரசங்கத்தினுலும், சுறுக்குக் காட்டுவான். மதங்கள், மதாந்தரங்கள், சகலமும் சோதனையின் பேச்சுகள் பேசி நிர்மூலமாக்குவான். [1] தெண்டகங்களைப் போட்டுவிட்டு, ஜனங்களை நன்ருய்ப் போதனை பண்ணிவிக்கிருன். பேதப்படும்படியாயும் வசனங்களினுல், அகண்டமாய்ப் பிரசங்கத்துக்குத் தக்கதாய்ப் பார்ப்பான். வெறுப்பை மானித்துக் கொண்டு போவான். சோதனையைச் சொல்லி எழுந்திருந்து போவான். அதனுல் ஜனங்களுக்கு அக்கரையுண்டாயிற்று. நாஞமார்க்கங்களை விட்டுப்போட்டு அவனை சரணமடைவார்கள். ஆனுலுமவன் எங்கேயுமகப்படான். அவன் எவ்விடமென்றுந் தெரியாது. [2] குப்தருபமாய் கிருதியும் செய்வான். சொரூபமோ, பிச்சைக்காரனைப் போலவே யிருப்பான் ஆனுலோ, எசசு, கீர்த்தி, பிரதாபம், இவைகளுக்கு வறையிராது. இடத்துக்கு இடம் பஜனம்பண்ணுவித்துத்தான் அவ்விடம் விட்டுத் தப்பவைத்துக் கொள்ளுவான். மதமாச்சரிய மதங்களுடைய சிக்கலில் தன்னை ஈடுபடவே கொடுக்கான். வண்டாளிடத்தில் போயிருப்பான். அவ்விடத்தில் அவனை ஒருத்தருங் காணுள். ஆனுலும், சர்வகாலமும் சர்வத்திராளுடைய சிந்தையை வகிக்கிருன். கஷ்டப் பிரதேசங்களில், கடினமான விடத்திலிருப்பது. உலகத்தில் சகல ஜனங்களும் அங்கே அவனை தேடிக்கொண்டே வரு

1. பழக்கங்களை. 2. மறைந்து.

வார்கள். அவ்விடத்தில், ஒருத்தர் எத்தினமும் நட வாது. வைரப்படுத்தி ஜனங்களை, பஜனத்தில் வளர் விக்கிறான். அதினால், அனேகம்பேர்களானார்கள்.

பூமண்டலத்தில்,குப்தரூபமாய் அவனுடைய[1]சத்தை நடக்கும். இடத்துக்கு இடம் குறிப்பிடுவார்கள். மனுஷாளென்பவர்கள் எல்லோருங் கவரப்படுவார்கள் அதினால், நாலா பக்கத்திலும் பரமார்த்த புத்திமிகுதியும் உயரும். உபாசனையுடைய தோத்திரம் ஸ்தலத் துக்கு ஸ்தலம் மிகுதியும் பெரிது பெரிதாய்க் கர்ஜனை கள் வளரும் சோதனையினால் பிராணிகள் விடுதலைப் பட்டார்கள். அதினால், ஜனங்கள் சமத்தாள் ஆவார் கள். எங்கே பார்த்தாலும், அங்கே பிராணிகளுக்குப் பரமார்த்தம் லெபிக்கும். இப்படிக்குக் கீர்த்தியாக வேண்டும் அதினாலேதான் சமுசாரத்தில் வரவேண்டும். இது, இரமதாச சுவாமிகள், தான் சுய பாஷகமாய்ச் சென்னதாய்ச் சொன்னார்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யர்ன் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
நிசப்பிரகங்கத்துக்கு வருகிற

சர்க்கம் 2 முற்றும்.

---

1. அதிகாரம்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் மூன்ரும் சர்க்கப் பிரசங்கம்,

ஆதிமுதற்கொண்டு எவ்விடமும் முழுமையும் பஞ்சீகரணத்தின் வியாபகம். அதில் சாட்சியின் அன்வயம் அதுவும் தத்துவரூபம். இரு பாரீசத்திலும் ஜனங்கள் நெருங்கியிருக்க அதில், சிம்மாசனத்தில், இராஜா உயர இருக்கிருர். இதின் விவரம் அகத்தில் அறியுங்கள். காயமென்பது அசத்தியமுடையது. இராஜாவின் காயமும் இப்படிக்கே யென்று அறிய வேண்டும். அதைப்போல, ஆதிமுதல், சிருஷ்டியின் தத்துவரூபம் இராஜவின் சத்தையினல் நடக்கிறது. ஆனலும், எல்லாம் பஞ்சபூதங்கள், ஆதியில், அறிவின் அதிஷ்டமானது, அதிகமாயிருப்பது. அதில், விவேகத்தினல், வெகு பேர் பாய்ந்தார்கள். ஆனது கொண்டு, அவர்கள் அவதாரிகளென்பதாய்ச் சொல்லப்பட்டார்கள். மனுஷ சக்கரவர்த்திகள் இந்தப்படியே ஆனர்கள் எவர்களிடத்தில், மிகுதியும் அறிவு உண்டோ, அவர்களத்தனைபேரும் பாக்கியவான்கள். ஸ்வல்ப அறிவினல், பிராணிகள் நிர்பாக்கியர்களாகிருர்கள். வியாபகம் நிர்ணயம் பண்ணுகிறதற்கு அவதிப்படுவார்கள். இது, எப்போதும் அப்படியே நடந்து வருகிறது.

இது, மூர்க்க ஜனங்களுக்குத் தெரியாது. விவேக முடைய மனிதன் சகல காயயமும் அறிவான். ஆனபடி யினாலே, சிறியவனும், பெரியவனும் தன் புத்தியினாலே, நடப்பார்கள். இது சகஜமாக எல்லோருக்கும் தெரி யாது. முன்னமே பிறந்தவனைப் பெரியவனென்கிறார் கள். இராஜா, வயதில் சின்னவன். அவனை, விருத் தாள் நமஸ்காரம் பண்ணுகிறார்கள். விவேகத்தின் விசித்திரமான கதி தெரியவேண்டியது, சாமானிய ஜனங்களுடைய ஞானம் முழுமையும் அனுமான மாக் கும். தீக்ஷை, தண்டகத்தின் இலக்ஷணம் இப்படியே தான். இது அல்லவென்று எவன் சொல்லுவான்? சாமானியனுக்கு யென்னதெரியும்? யாருடன் எவ் வளவென்று பேசுவது? இளையவன் பாக்கியத்தில் உயர்ந்தான். ஆனால், அவனை துச்சமாய்ப் பண்ணு வான். ஆகையால், சனுகையுடையவாளை, சமீபத்தில் சேர்க்கலாகாது. செவ்வையான வசனந் தெரியாது. செவ்வையான இராஜகரணமுந் தெரியாது. மூர்க்க தனத்தினால், வீணாகப் பெரியத்தனம் பிடிப்பார்கள். செவ்வையாய் ஒன்றும் பண்ணமாட்டான். செவ்வை யாய் ஒருவரும் அவனை மதிக்கார். இப்படியிருக்க முன்னமே பிறந்த அந்தப் பெரியதனத்துக்காக யார் கேழ்க்கப்போகிறார்கள்? மூத்தவனுக்கு, மூத்தவ னென்கிற மரியாதையில்லை. இளையவனுக்கு இளையவ னென்கிற மரியாதையில்லை, இப்படி பேசுகிறவர் களுக்கு, சத்தியமாய் சமத்தில்லை. குணமில்லாத மூர்க் கத்தனம் அப்பிரமாணமாம். இதில், பெரியதனத்தின் சோதனையே பிரமாணம். ஆனாலும், மூத்தவனை மானிக்க வேண்டும். மூத்தவன் தன்னுடைய பெரிய

தனத்தை அறிய வேண்டும். அறியாமல், பெரியதனத்தினுல் [1]விர்தாவாய்க் கஷ்டப்பட வேண்டும். ஆகையால் அந்த்தர ஆத்துமாவே பெரியது. எவ்விடத்தில், [2]பக்திபிரபளித்ததோ, அவ்விடத்தில், மகிமையாகும். இது பிறகடமாகவேயிருக்கிறது. ஆனபடியினுலே, விவேகத்தினுல், புத்திக் கொள்ள வேண்டும். விவேகம் கற்றுக்கொள்ளாது போனுல், கணிசம் அற்றுப்போனதேயானுல், ஜென்மம் போயிற்று. பல வந்தமாய்த் தன்னை மூலையில் போட்டுவிட்டான். சகஜமாகப் பெண்டுகள் வைகிருர்கள். மூலையில் விழுந்தானென்கிருர்கள். ஆகையால், மூர்க்கத்தனத்தின் பிராப்தி வந்து லெபித்தது.

சர்வசார்த்தகமே பண்ணவேண்டும். தெரியாது போனுல், கிரந்தங்களை விவரிக்க வேண்டும். சமத்தனை யாரும் தேடுவாள். மூர்க்கனை, ஜனங்கள் துரத்திவிடுவார்கள். ஜீவனுக்கு, சம்பத்துப் பிரியமாகில், சமர்த்தனுக வேண்டும். ஓய்! இந்த சமத்துத் தனத்துக்காக, வெகு கஷ்டப்பட வேண்டும். ஆனுலும், சமத்துத் தனம் கற்றுக் கொள்ளுகிறது, உத்தமோத்தமம். எவன், வெகுபேரால் மதிக்தப்பட்டானே, அவன், சமர்த்தனுனென்று அறிய வேண்டும். உலகத்தில் சமத்தனை மனிதனுக்கு, யென்ன குறை?

---

1. வீணுய். 2. வலுத்ததோ.

உலகத்தில், தன்னுடைய ஹிதம் பண்ணுதவன், அவன் [1] ஆத்தும காதகியென்றும் அறிய வேண்டும். அந்த மூர்க்கனைப் போல பாதகன் ஒருவருமில்லை. பின்னையோ தான், சமுசாரத்தில் கஷ்டப்படுகிருன். ஜனங்களாலேயும் கோபிக்கப் படுகிருன். ஆனதினுலே, சமர்த்தனுனவன் இப்படிப் பண்ணுன். இது சாதனுக்கு சுபாவீகமாய்க் கற்றுக்கொடுக்கப்பட்டது. மானித்ததேயாகில், சுகமாய் வாங்கிக்கொள்ள வேண்டும். மானியாது [2] போனுல், ஒரு பக்கத்தில் விட்டுவிட வேண்டும். நீங்கள் கேழ்கிறவாள் பரம தெடசாள். இது சாமானியம் பிரத்தியக்ஷயமாய் அறிந்தே யிருக்கிறீர்கள்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
அந்த்தர ஆத்துமா சொல்லப்பட்ட
சர்க்கம் 3 முடிந்தது,

முற்றும்,

1. தன்னையே கொல்லுபவன்.
2. சம்மதம் மன்னியில்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

பிருதிவியினிடத்திலிருந்து மரங்களாயிற்று. அந்த மரமே விறகாயிற்று. அந்த விறகுகள் பஸ்மமாகி பிருதிவியாகின்றன. பிருதிவியினிடத்திலிருந்து கொடிகளாகின்றன. நானாதினுசாய்ப் படருகின்றன. அது காய்ந்து அழுகி, மறுபடி பிருதிவியே யாகிறது. நானா தானியத்தின் நானா அன்னங்கள் மனுஷ்யாள் போஜன பண்ணுகிறார்கள். அது விஷ்டியும், நானா [1] வமனமும் பிருதிவியே யாகும். நானா பசுவாதிகள் பக்ஷித்தது. அனாலும் மேலும் அந்தப்படியே யாயிற்று. காய்ந்து பஸ்மமாய்ப் போயிற்று. மறுபடியும் பிருதிவி. நானாத் [2] திரணங்கள், பதார்த்தக்கள், அழுகிப் போகின்றன. மேலும் அவை மண்ணாகின்றன. நானாவித பூச்சிகள் இறந்து போகின்றன. மேலும், அவை மண்ணாகின்றன. நானா மரம், தழைகள், பின்னும் திரணங்கள்; பசு, பக்ஷித்ததினால், சாணியாகிறது. பலவகை புலால்கள் சாப்பிட்ட பின் பஸ்மமாகி, கூடி மறுபடியும் பிருதிவியே ஆகின்றன. மனுஷ்யாள் இறந்த உடனே கேளுங்கள். கிருமிகள் இல்லாவிட்டால், பஸ்மம்

1. வாந்தி - வெளிவருதல்.
2. புற்பூண்டு.

அதுவும் மிருத்திகையே. இப்படிக்கு, அனேககாயங்கள் விழுந்து விடுகின்றன. அது, மறுபடியும் பிருதிவியே. உத்பத்தி ஸ்திதி, சம்வாரப்படுகிறது. பிருதிவியில் சேருகிறது. எவ்வளவு உண்டாகிறதோ, பின்னும் போகிறதோ, அவைகள் அத்தனையும் பிருதிவியே. பதார்த்தங்கள் அபாரமாய் நிறம்பியிருக்கின்றன. விஸ்தரித்து எவ்வளவு யென சொல்ல முடியும்?

பிருதிவியின ஆதாரம் எதற்கு யிருக்கிறது? நாநா விரையின் பேர்களாய் வளருகிறது. மரங்கள் ஆகாயத்தை உலாவுகின்றன. கடைசியில், பிருதிவியில் சேர்ந்து போகின்றன. ஜனங்கள் நாநா திரவியங்கள் புதைத்து வைக்கிறார்கள். வெகு நாளைகளுப் பிறகு மண்ணாய்ப் போகிறது. பொன்னும், கல்லும். அதுகள் கெதி. அப்படியே மண்ணேதான் பொன்னாகிறது. பின்னும், பிருதிவிதான் பாஷாணமும் அக்கினியினால் பஸ்மமாய்ப் பிருதிவியாகிறது. தங்கத்தினால் ஜரிகையாகிறது. அந்த ஜரிகை கடைசியில் மக்கிப்போகிறது. பின்னும், நீராகித் தெளிகிறது. அந்த நீரேக் கடினரூபமான பிருதிவியாகிறது. நாநா ஜலத்திற்கு நாற்றம் கிளம்புகிறது. அவ்விடத்தில், பிருதிவியின் ரூபம் பிறகடமாகிறது. நாளுக்கு நாள் ஜலம் வற்றிப்போகிறது. மறுபடியும்,அது பிருதிவியே. பத்திரம், புஷ்பம், பழங்கள் வருகின்றன. அதை,நாநா ஜீவராசிகள் புசித்துப் போகிறது. அந்த ஜீவராசிகள்

இறந்துபோனதின் பிறகு, பிருதிவியே யாகும் எத்தனை உருவப்பட்டதோ அத்தனையும், பிருதிவியினுதாரம். பிராணிகள் ஆகிறதும் போகிறதும், கடைசியில் பிருதிவியே. இவை எத்தனை யென்று சொல்ல வேண்டும். விவேகத்தினுல் எல்லாவற்றையும் அறிய வேண்டும். பின்னுமோ, துகை, வகை தள்ளுபடிகள் மூலம் இப்படிக்கென்று அறிய வேண்டும்.

ஜலஞ் சோஷித்துப் பிருதிவியே யாயிற்று. மறுபடி ஜலத்தில் கரைந்து போயிற்று. எப்படி என்ருல், அக்கினியினுலே யாம். பஸ்மமானபடியினுலே யாம். அந்த அப்பு தேயுவினிடத்திலே யிருந்து ஆயிற்று. அதை தேயுவே சோஷித்துக் கொண்டது அந்தத் தேயு வாயுவினுலாயிற்று. அதை வாயுவே இருஞ்சும். அந்த வாயு ககனத்தில் நிற்மாண மாயிற்று. மேல் காகனத்திலே தான் மாறிப்போயிற்று. இப்படிக்குத் தொகை வகையை நன்ருகப் பாருங்கள். எதெது எவ்விடத்தில் நிற்மாணமாகிறதோ, அதுவது, அவ்விடத்திலேயே லயமாய்ப் போகிறது. இந்தப்படி, பஞ்சபூதங்கள் நாசமடைகின்றன.

பூதமென்ருல், நிற்மாணமாயிற்று. மறுபடி திரும்பியும் அற்றுப் போயிற்று. மேல், சாசுவதம் மீந்தது. அதுவே, பரப்பிர்மம். அந்தப் பரப்பிர்மம் எதுவரைக்கும் தெரியவராதோ, அதுவரைக்கும் ஜெனன மரணம் தப்பாது. நான்கு வகையோனி, நாலு ஜீவராசிகள்

இவைகளாக வேண்டியதாய் முடியும். ஜடத்தின் மூலம் வந்தது சஞ்சலம். சஞ்சலத்தின் மூலம் அது நிற்சலம். நிர்ச்சலத்துக்கு மூலமில்லை. நன்ருகப் பாருங்கள். பூர்வ பக்ஷமென்ரல் ஆனது. சித்தாந்தம் யென்ருல், அற்றுப்போனது. பக்ஷாந்தமாய் எது நிறம்பினதோ, அதுவே பரப்பிர்மம் இது, சோதனை யினுல் அறிய வேண்டும். விசாறணையினுல் குறுகிச் சேர வேண்டும். விசாசறனை யில்லாமல் கஷ்டப்படு கிறது அதுவே மூர்க்கத்தனம். ஞானிதாக்ஷண்ணியத் தில் அகப்பட்டான். அவனுக்கு நிற்ச்சல பிர்மம் ஏது? சும்மா மாய்கையிலே இறைச்சல் செய்கிருன். அந்த மாய்கை, நிசேஷமாய் நசித்து மேல் ஸ்திதியெப்படி மீந்தது என்பதை, [1]விசக்ஷணன் சுயமாய் விவரிக்க வேண்டியது. நிசேஷமாய் மாய்கையின் ஒழிவு தோன் றினுல், ஆத்தும நிவேதனம் அவ்விடத்தில், வாச் சாம்சம் இல்லை. விக்ஞானமென்றும் எப்படிச் சொல் லுவது? ஜனங்கள் சொல்லில் எவன் சேர்ந்தானே, அவன் அனுமானத்திலேயே முழுகினுன். ஆனபடி யினுலே, சோதனை செய்து பார்த்ததே பார்க்க வேண் டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சாசுவதப் பிருமம்

சர்க்கம் -4. முடிந்தது.

முற்றும்.

---

1. முற்றுமறிந்தோன்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

இருவர் போலவே, மூன்றும்பேர் நடக்கிறார்கள். குணமில்லாத எட்டு விதப் பிரகிருதியில் மூழ்கியிருந்து, பூனையும் சர்ப்பம்¹ இந்திரபடம் போலே, நடக்கிறார்கள் மூப்பேரன்கள், முப்பாட்டன் பக்ஷிக்கிறான். பிள்ளை யாண்டான் தகப்பனை அடிக்கிறான். இராஜா தப்பித்துக்கொள்ளப் போகுன். அவன் சரீரமான கோவிலில் ஒளிந்தான். கோவிலைப் பூஜிக்கையில் அவனை அடைகிறான்.

ஒருவனுக்கு இரண்டுபேர் உண்டாயிற்று. உலகத்தார் நிச்சயமாய், கல்பித்து விவேகத்திலும், சோதனையிலும், பார்க்கப்பட்டது. அப்போது, ஒருவராவது புருஷாளில்லை, ஸ்திரீயுமில்லை. ஜனங்களாலல் கல்பித்தார்கள். இதில் செவ்வையாய் சோதித்தால், ஒன்றுமில்லை, அது, எப்படியென்றால், நதியென்றால், ஸ்திரீ பிரவாகம்; இறைச்சலென்றால், புருஷர். இப்படிக்கு, எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். தெளிவான விசாரணை செய்து பார்த்தால், தேகமில்லை தான் என்று தனக்குத் தெரியவராது. பார்க்கப்

---

1. ஜாலவித்தை காக்ஷியில் தோன்றும் படம்

போனாலும் சிக்காது. மிகுதியால், ஒன்றோடொன்றும் சேராது. ஒருவன் மிகுதியுமானான். அந்த மிகுதியையே ஒன்றாய் பார்க்கப்பட்டது. தன்னுடைய இறைச்சல் தனக்கு இளக்கக் கூடாது. ஒன்றாகயிருந்தும், விரிந்ததாயிற்று. விரிந்தாலும், ஸ்திதி ஒன்றாயிருப்பது.

பிராணிகள் என்கப் பட்டத்தில், எல்லாம் விசித்திரமான கலைபடர்ந்தது. கொடிக்குள்ளே ஜலம் சஞ்சரிக்கிறது. அது உணர்ச்சியுடன் சஞ்சரிக்கவில்லை. திரவம் வினை என்ன பண்ணினாலும் நில்லாது மரத்துக்குப் பாத்திசெய்தது. அம்மரங்கள் வேறு வேறாய் ஓடுகின்றன. சிறிது, ஆகாசததில் படர்ந்து போகிறது கல்பூமியை விட்டு வேறுபட்டது. ஆனாலும், அது, உணர்ந்து போகவில்லை. எங்கெங்கும் படர்கிறது. பலனுக்குப் பலப்பட்டது. ஆன்தினால், தெய்வத்தினால் செடிகள் விர்த்திப்படுகின்றன. தெய்வ மில்லாவிட்டால், கட்டையாய்ப் போகின்றன. இது, செவ்வையாகவே யிருப்பது, சர்வதா எதிலும் சிக்கவேயில்லை. செடிகளிடத்து செடிகளாகின்றன. அவைகளும் அந்தரத்தில் போகின்றன. அதின் வேர்கள் ஒரு காலமும் பூமியை போதிக்கவே யில்லை. செடிகளுக்கு எருவும் தண்ணீரும் போட்டுப் பிரதி தினமும் காப்பாற்றுகிறார்கள்.

[1] பேசுகிற மரங்கள் சப்தங்கடைகிறத்தில், விசாறணை யறிகிறது. ஆகவேண்டியதெல்லாம் முன்னமே ஆயிற்று. அப்பால், கல்பித்துக் கல்பித்துச் சொல்லப் பட்டது. அறிவுள்ளவனுக்கு, சகலமுந் தோன்றப் பட்டது. தோன்றபட்டாலும், கருதப்பட்டது. கருதி ணுலும், தோன்றப்படாது. சோதனை வினு, எதையும், அனுமானிக்கக் கூடாது.

சர்வத்திராளுக்கு மூத்தவன் எவன்? எவன் ஹரிமுகமே பார்க்க வேண்டும். அதினுல், தன்னைத் தானே ஜெகதாந்தரத்தில் சந்திப்பான். அந்தர நிஷ்டனுடைய மேன்மை உயர்ந்தது. பஹிரங்க மூத்திரையுடையவனுடைய சங்கத்தி பொய்யானது. இந்த, சொல்களை மூர்க்கன் என்ன அறியப் போகிருன்? சமர்தாளறிவார்கள். அந்தரங்கத்தை ராசியாய்க் காப்பாற்றினுல், எல்லோரும் தோத்திரம் பண்ணுவாள். அந்தரங்கம் காப்பாற்ருது போனுல், ஒன்றும் அகப்படாது. அகப்படவேமாட்டாது. இப்படிக்குப் பிரத்தியக்ஷமாய் நடந்து வருகிறது. ஆனது கொண்டு, [2] அலட்சியத்தை இலட்சியம் செய்ய வேண்டும். தெடசனைச் சந்தித்தால், தெடசமான சமாதான

---

1. மனிதவர்க்கத்தினர் பேசும் வன்மையினுல் தன் மனதிலுள்ளதை வார்த்தைகளினுல் தெளிவுறுத்துகின்றூர்கள்.
2. லட்சியமாய் கொள்ள முடியாததை.

மாகிவிடுகிறது. மனதோடே மனங்கலந்தால், நிறஞ் சனத்தைப் பார்த்துவருவார்கள். சஞ்சலாக்கிரத்தி லிருந்து புறப்பட்டு அப்புறப்படுவார்கள். ஒரு தரம் போய்ப் பார்த்து வந்துவிட்டால் அப்பாலது, சன்னதி யிலேயே பார்க்கப்படும். அதைச் சர்ம சக்ஷுவினால், ஒரு காலமும் இலட்சிக்க முடியாது. நான சரீரங்களில் சஞ்சலம் அகண்டமும் சலனம் பண்ணுகிறது. பரப் பிர்மம் சகல விடத்திலும் நிச்சலமாயிருப்பது.

சஞ்சலமொருபக்கத்தில் ஓடுகிறது. மற்றபக்கம் பாழாய்ப் போகிறது. ஆனபடியினாலே, சஞ்சலம், சர்வவிடததிலும் பூரிதமாகுமென்பது நடவாது சஞ்ச லம், சஞ்சலத்துக்குப் போதாது. முழுமையும் சஞ்சலம் விவறணைபடாது. இப்படியிருக்க அபாரமான நிச்சலம் யெப்படி அனுமானத்துக்கு வரும்? [1]ககனத்தில், பாணங்கிளம்பி ஓடுகிறது. அது அக்கரையான பதவி யை எப்படி அடையும்? போகையில், மத்தியிலேயே அணைய வேண்டும். இந்த தர்மமே பாணமானது கொண்டு, மனோதர்மம் ஏகதேசியாயிருப்பது. அது வஸ்துவிடம் எப்படி சிக்கிக்கொள்ளும்?

நிற்குணத்தை விட்டு விட்டு, அபகீர்த்தி, அபயெசை சுடையவாள், சர்வப்பிர்மம் என்கிறார்கள். சராச்சரம் எவ்விடத்திலில்லையோ, அவ்விடத்தில் முழுமையும் அந்த காரம். அது எப்படி யென்றால், அறியாத பையன்

1. ஆகாயத்தில்.

மெய்யை விட்டுப் போட்டு, பொய்யாயிருப்பதை அடைவது போலவாகும். பிர்மாண்டத்தின் மகாகாரணம் அவ்விடத்திலிருந்து இந்த பஞ்சீகறணம் மகா வாக்கியத்தின் விவறணை தனியேயிருப்பது. மகுத்துவம் மகத்பூதம் அதுவே பகவந்தனென்று அறிய வேண்டும். அவ்விடத்திலிருந்து உபாஸனை சமஸ்தமுமாயிற்று, கர்மம், உபாசினை, பின்னும், ஞானம், இது திரிகாண்டம். வேதப் பிரமாணம் பரப்பிர்மத்தில், ஞானத்தின் விஞ்ஞானமாகிறது.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சஞ்சல

சர்க்கம் 5 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் ஆறும் சர்க்கப் பிரசங்கம்.

[1]மஞ்சளலிருந்து கருப்பு ஆயிற்று. பூமண்டலத்தில் விஸ்தாரப்பட்டது. அது வினை தோன்றப்பட்டது என்பது முடியாது. இது இருப்பதானால், சொல்ப இலட்சணம். ஆனாலும் சர்வத்திராளுக்கும் இருப்பிடம். உத்தமமும், அதம குணமும், அவ்விடத்திலேயே யிருக்கப்பட்டது. பூமியின் சோதனையை, சீர்படுத்தி, துவிதம் பண்ணப்பட்டது. இரண்டுங் கூடி காரியபாகம் நடக்கிறது. வெள்ளையும், வெண்மையையுச் சேர்க்கிறார்கள். நடுவில் கறுப்பு கலந்ததினால், இகலோகத்தில் சார்த்தகம், ஆகிறது இதின் விசாறணை விவரீத்தால், மூர்க்கனே சதுரனாகிறான், சத்தியர்ய் சோதனை பின்னுமோ, பரலோகத்தின் ஸாக்ஷாத்காரம். சகலமானபேருக்கும் எது மானிதையோ, அதுவே சாமாணியமாகிறது. சாமாணியத்துக்கு, அனன்னியமாகிறதே யில்லை. உத்தமம், மத்திபம் கனிஷ்டரேகை, அதிஷ்டத்தின் குப்தரேகை. இந்த நான்கு அனுபவமும் சமானமாகிறதில்லை. பதிநான்குதலைமுறையின் பெருமையைச்சொல்லுகிறவர்கள்

---

1. மஞ்சள் நிறமான கடுக்காயிலிருந்து கருமை நிறமுள்ள மசி உண்டாகிறது. (இதைக் கொண்டு சாத்திரங்களை எழுதினார்கள்)

சமத்தாளோ, அபத்தாளோ, கேழ்கிறவர்கள், அது நடந்துயிருக்குமோ, இராதோ வென்று எண்ணிபார்க்க வேண்டும். ரேகை முழுமையும் கலைபட்டுப் போகும். பிரத்தியக்ஷம் சோதனைக்குவருகிறது. ஆகையால் எதன் நிமத்தியம் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும்? வெகு பேருடைய சொல்லில் எவன் துடங்கினனோ, அந்தப் பிராணி அனுமானத்தில் முழுகினன். சோதனையின் முக்கிய நிச்சயத்தை தப்பிப்போனன். வெகுபேருடைய வசனமும் கேழ்கவேண்டும். ஆனாலும், அது சோதனையினால் பார்க்க வேண்டும். கருத்தில் மெய், பொய் எது என்பதை விசாரிக்க வேண்டும். எவனையும் நிராகரிக்கலாது அபாயம், உபாயம் அறிந்துகொள்ள வேண்டும். மிகுதியும் பேசி யென்ன? சோதனையே உட்கொள்ள வேண்டும். அல்பனும், அல்பனும், சுவல்பபுத்தியுள்ளவனாக யிருந்தாலும், அவன் மொழியையும் மானிக்க வேண்டும். இந்தப்படிக்கு வெகுபேருடைய கருத்தை காப்பாற்ற வேண்டும். உள்ளுக்கு உள்ளில், மிகவும், முறுக்கும், சிக்குகள் இருந்தால், மிகுதியும் கல்பனை வளர்விக்கும். ஆனால், அப்பால் எப்படி சமத்தனாவான்? நிவர்த்திக்க அறியான். பைத்தியகாரனை சமத்தனாக்க வேண்டும். ஆனால் தான் பிழைப்பு சிலாக்கியமாகும். வீணாக வாதம் வளர வைக்கிறதே மூர்க்கத்தனம். சேர்ந்து பொய் சேர்க்க வேண்டும். களைத்துக் கொண்டு, பிறகு பிறட்ட வேண்டும். விவேக பலத்தினால், ஒன்றுந் தெரியவே கொடுக்கலாகாது. பிறத்தியானுடைய நடையே நடக்க வேண்டும்.

பிறத்தியான் சொல்லே சொல்ல வேண்டும். பிறத்தியானுடைய மனோகதத்தில் சேர்ந்து போக போக வேண்டும். எவன், பிறத்தியானுடைய ஹிதம் பார்ப்பானோ, அவன் ஒருக்காலமும் பகைக்கான். பின்னும், அவனுடைய கருத்தை மானிக்க, விவரிப்பான். முன்னமே கருத்தை மனதில் உட்கொள்ள வேண்டும். அப்பால், மெள்ள மெள்ள அவிழ்க வேண்டும். நான உபாயங்களினால், பரலோகத்துக் கொண்டு போக வேண்டும்.

அல்பனோடு, அல்பன் கூடினான். அவ்விடத்தில் இறைச்சலே ஆகிறது. கலகமுண்டாயின் சாதுரியத்துக்கு விடமேது ? வீணாக வாயாடுகிறார்கள். அகடம் பண்ணிக் காட்டுகிறார்கள். பரஸ்தலம் சாதிக்கிறது, மெத்த கடினமாயிருப்பது. இடி பிடி பொறுத்து ஜயிக்க வேண்டும். நீச்ச சப்தங்களை, ஸஹித்துக் கொண்டு போக வேண்டும். அப்பால், பராள் சிறமப்பட்டு, தன்னவர்களாவார்கள். பிரசங்கமறிந்து பேச வேண்டும். அறிவு தனமொன்றுங் காட்டலாகாது

குக்கிராமங்கள், பின்னும், பட்டணங்களிலும், வீட்டுக்கு வீடு பார்க்க வேண்டும். பிச்சை வியாச்சிய சாக்கினால், சின்னவாள், பெரியவாள், அவர்களைப் பரிக்ஷை செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால், மிகுதியில் எவ்வளவாகிலும் அகப்படும். தீட்சண ஜனங்களோடு, மித்திரத்துவம் லெபிக்கும். வீணாகத்திரியாமல் இருக்

தால், ஒன்றும் லெபியாது. சாவதானமாய், சகலமும் அறிய வேண்டும். முன்னமே வர்த்தமானம் செய்ய வேண்டும். போகுமிடத்திலேயே விவேகத்துடனே போக வேண்டும். நானு தினுசு பாடாந்தரங்கள் பார்த்து சகலமான பேருடைய கருத்து புரிந்து கொள்ள வேண்டும். உபகாரத்துக்காக எழுதிக்கொடுக்கிறதினுல் வையகமும், வானகமும், ஈடல்ல. எவனுக்கு யெதெது தேவையோ, அதுவது தாத்காலமே கொடுக்க வேண்டும். ஆனுல் தான் சகலமானபேருக்கும் மானியனுகி, கிரேஷ்டனேயாக வேண்டும். பூமண்டலத்தில், சகலமான பேருக்கும் மானியன். அவனே, சாமானியனென்கலாகாது. அந்தப் புருஷனே, சிலர் அனன்னிய பாவத்துடன் போற்றுவர்.

இப்படிக்கு சாத்துரியத்தின் இலட்சணங்கள். சாதுரியத்தினுல், திக்விஜயம் பண்ண வேண்டும். அப்பாலவனுக்கு, எங்கேயும் என்ன குறை !

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால உபதேச விளக்கத்தில், விவறணை சர்க்கம் 6 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்.

நானாவிகாரத்தின் மூலம் சஞ்சலத்தின் சூட்சம ரூபமாய் சஞ்சலம் எதுவோ, அதுவே, இந்த மூலமாய்கை, அறிவின் கொள்கை. பின்னும் ஆதியின் மூலசங்கல்பமுடையவன் இப்தப் பிரகாரமே, ஷட்குண ஈசுவரனுடைய அறிமுகம், பிரகிருதி புருஷன், ஜீவசக்தி, அர்த்தநாரீ நட்டேசுவரனென்பார்கள். ஆனாலும், அது முழுமையும் ஜெகஜ்ஜோதி. சங்கல்பத்தின் சஞ்சலம் எதுவோ, அதுவே மூலமாய்கை யென்றறீ. வாயுவுக்கு முன்னமே, திரிகுணம், பஞ்ச பூதங்கள், ஒரு வேளையில் பார்த்தால் அதின் வேர்கள், ஆழமாய் இருக்கப்பட்டவை. [1]பத்திர புஷ்ப பழங்கள், கேவலம் அந்தவேரினிடத்திலேயே உண்டானவை, நானா வர்ணங்கள். வேறில்லை. நானா [2]ஆக்காரம், [3]விகாரம், நானுவாஸனை, அந்தரங்கம், அந்தவேருக்குள்ளேயே. அந்த வேரைப் பிளந்து பார்த்தால், சர்வதாவொன்றுமில்லை.

மேல், கொடி வளர, வளரக் காணகப்படும். கணுவுக்கு மேலாய்க் கொடி வளர்ந்தது. அதோமுகமாய்

---

1. இலைகள். 2. உருவம். 3. மாறுதல்.

படர்ந்து, மேல் பூமண்டலத்தில் வந்தது அப்படியே மூல மாய்கை யென்றறீ. பஞ்ச பூதங்கள், திரிகுணம், வேரி லேயே யிருக்கப் பட்டவை, இது பிரமாணம். இது சோதனையினால் அறியவேண்டும். மேலும், அகண்ட மாய்க் கொடி வளர்ந்தது. நான விகாரத்தினால் சோபித் தது விகாரத்தின் விகாரம் அளவில்லாமல் ஆயிற்று. நானவிதம் அதற்குக் கிளைகள் ஓடின. நானத் [1]தூர்கள் வளர்ந்தன. சிருஷ்டியில், அனந்தம் கொழுந்துகள் உண்டாயின, சிறிது பழங்கள் விழுகின்றன. உடனே. பின்னும் காய்க்கிறது. இப்படி சர்வகாலமும் ஆகிறது, போகிறது. சிறிது கொடிகள் காய்ந்து போயின. மறு படி அங்கேயே வெடித்தது இப்படிக்குச் சிறிது கொடி கள் வளர்ந்தன. பின்னும் போயிற்று. இலைகள் உதிர் கின்றன, மறுபடி வெடிக்கின்றன. புஷ்பங்கள், பழங் கள், இந்த ரீதியே யாகும். அதற்குள்ளேயே ஜீவராசி கள் பிழைக்கின்றன. கொடிகள் முழுமையும் வாடிப் போகின்றன, மறுபடி ஆதியில், வேறிலே யிருந்தும் ஆகின்றன. இப்படி முழுவிபரம் வந்து சோதனையினால் அறியவேண்டும்.

வேர் வெட்டி யெடுக்கப்பட்டது. சோதனை ஞானத் தினால் நிர்மூலம் ஆயிற்று. ஆனால் மறுபடி சகலமும் வளருவது நின்று போயிற்று. வேரில் பீஜம். கடைசி யில் பீஜம், மத்தியில் ஜலரூப பீஜம். இப்படிப் பட்ட இந்த சகஜ சுபாவம் விஸ்தாரப்பட்டது. இந்த சொல்

---

1. தளிர்.

கள் வேர் மத்தியிலாகும் இந்த பீஜ சிருஷ்டி சொல்லு கையில் எவ்விடத்து அம்சமோ, அவ்விடத்தில் கஷ்டப் படாமல் போகிறது, பின்னும் வருகிறது, பின்னும் போகிறது. இப்படிப்பட்ட [1]பிரத்தியா விர்த்தி பண்ணு கிறது. ஆனாலும், ஆத்தும ஞானியானவன் அதை அன்னி [2]தாய் ஒப்புக்கொள்ளான். லெபியாது என்பத தாய்ச் சொல்லவேண்டும். ஆனாலும் எவ்வளவோ அறிய வேண்டியதாய் இருக்கும். அது உள்ளிலேயே யிருப் பது. ஆனாலும், சகலமான பேருக்கும் தெரிகிறதேது? ஆனாலும், அதினாலேயே விஷய போகங்கள் லெபிக் கின்றன. அது வினா, ஒன்றும் நடவாது. ஸ்தூலம் விட்டு விட்டு, சூட்சமத்தில் ஏற்படுகிறவனாக வேண்டியது. எது, தன்னுடைய அந்தரங்கமோ, தத்ரூபமே ஜெக தாந்தரம். சரீர பேதத்தின் விகாரங்கள் வேறு வேரு கவேயிருப்பது பின்னும், அதோடேயே காரியம் பண்ணுகிறார்கள். ஆனாலும், அதை அறியார்கள். காணா தேபோனால் [3]அப்பிராணி ஜனங்கள் என்ன பண்ணு வார்கள்? ஏனென்றால், ஒரு விரல் வேதனை. ஒரு விர லுக்குத்தெரியாது. கை, கால், நாசு அவயவங்களும் அந்தப்படியேயாம். இப்படியிருக்க அந்தப் [4]பராந்தரங் கத்தின் இனம் எப்படி அறியமுடியும்? ஆனதுகொண்டு பராந்தரம் அறியக்கூடாது. ஒரே ஜலத்தினால், வனஸ்

1. திரும்பத் திரும்ப செய்த காரியத்தையே செய்தல்.
2. மாறுன தாய்.
3, சாதாரண அறிவுடையோர்.
4. தன்னையன்றி பிறருடைய.

பதி, நானு ஒரு முனை பேதங்களாகிறது. கிள்ளப்பட்டதே, காய்கிறது. மற்றதெல்லாம் குழுமையாகவிருப்பது. இந்தப்படிக்குப் பேதமாயிற்று. ஒன்றுக்கு ஒன்று தெரியாது.

அறிவின் தனத்திஞல் ஆத்துமாவுக்குப் பேதமில்லை. ஆத்துமாவிடத்தில், பேதங்காணுது, தேகப்பிரகிருதியினுல் பேதம் தோன்றுகிறது. ஆனுலும், வெகு பேருக்குத் தெரிந்தேயிருக்கிறது. கண்டும், கேட்டும், அறிகிறுர்கள். சமத்தாள், அந்தரங்கத்தைப் பரிக்ஷிக்கிறுர்கள். தூரத்திலிருக்கிறவாள். குப்த ரூபமாய் முழுமையும் அறிவார்கள். எவன், வெகு பேருக்குப் பாலனம் பண்ணுவானே, அவன், வெகுபேருடைய அந்தரங்கத்தை விவரிப்பான். மூன்னமே மனோரதம் பார்ப்பார்கள், பிறகு விசுவாஸம் வைப்பார்கள் பிராணிகள் இந்த ரீதியாய் சிந்தனை பண்ணுகிறுர்கள். ஞாபகத்துக்கு பின்னுலே மறதி. இது சாசுவதமான பிரமாண சோதனை.

தன்னுடைய இருப்பு தான் தப்பிப் போகிறுன். தன்னுடையது தனக்கே ஞாபகத்துக்கு வராததினுல், தோன்றியதெல்லாம் நினைப்புக்கு வருகிறது. அனந்த கல்பனைகள் கிளம்புகின்றன. இப்படி இந்த சஞ்சல சக்கரம் சிறிது நல்லது, சிறிது கோணல், தீனனுகினும், [1]அதவா, சக்கிரவர்த்தியான தேவேந்திரனுகட்டும், ஞாபகமும் மறதியும் அவனுக்கு உண்டு.

---

1. அல்லது.

ஞாபகமென்றால் தேவதை; மறதியென்றால்[2] தானவாள்; ஞாபகத்தினாலும், மறதியினாலும், இப்போது மனிதர்கள் நடைபடுகிறார்கள்.

ஆனபடியினாலே, தெய்வ சம்பத்து, தானவ சம்பத்து, இரண்டுவித மென்றும் அறியவேண்டும். விவேகத்துடனே. சோதனையினால் மனதில் கொண்டுவர வேண்டும். விவேகத்தினால் விவேக மறிய வேண்டும். ஆத்துமாவினால், ஆத்துமாவை அறிமுகம் பண்ணிக் கொள்ள வேண்டும் பண்ணினால், கண்ணாடியில் தெரிகிற கண்ணைப் பார்க்கவேண்டும். ஸ்தூலத்தினால். ஸ்தூலம் தெரிந்து கொள்ள வேண்டும். சூட்சமத்தினால் சூட்சமத்தை அறிய வேண்டுப். குறியினால், குறியை அந்தரங்கத்தில் சேர்க்கவேண்டும். விசாறணையினால், விசாறணையை அறியவேண்டும். அந்தரங்கத்தினால், அந்தரங்கம் அறியவேண்டும். அந்தரங்கத்தினால், பராந்தரமாகி அறிய வேண்டும்.

ஞாபகத்துக்குள்ளேயே மறதி. இதுவே பேதத்தின் இலட்சணம். அது. ஏகதேசியராயிருக்கப்பட்டதே அல்லாமல், பரிபூறண மாகிறதில்லை. முன்னே கற்றுக் கொண்டு போகிறது, பின்னாலே மறந்து போகிறது, முன்னாலே வெளிச்சமாகிறது. பின்னோடே இருளாய் போகிறது. ஏதொரு சகலமும் முன்னாலே ஞாபகத்துக்கு வருகிறது; பின்னோடேயே ஞாபகந்தப்பிப்போ

2. அசுரர்கள்.

கிறது. துரிதத்தை ஞாபகமென்று அறியவேண்டும். சுழித்திலய மறதி என்று அறியவேண்டும். இது இரண்டும் சரீரத்தில் நடைவடை படுகிறது யென்றும் அறீ.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
அதோரத
சர்க்கம் 7 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

[1]ரேணுவைப்பார்க்கிலும் சூட்சமம் பூச்சிகள். அவைகளின் ஆயுசு மெத்த கொஞ்சமாம். அதற்கு, யுக்தி புத்தியும் அதற்குத்தக்கனைதான். இப்படி நாளு ஜீவராசிகள். பார்க்கப் போனால் கண்ணுக்குத் தெரியவராது அந்தக்காரணம் பஞ்சகத்தின் வாசம், அவைகளிடத்திலுமிருக்கிறது. அவைகளுக்கு ஞான விஷய இந்திரியங்களும் சமானமாம். சூட்சமசரீரங்களை

1. அணுவைப் போன்ற சிறிய அளவு.

எவன் விசாரித்துப்பார்க்கிறான்? அவைகளுக்கு எறும்பு மிகுதியும் பெரியது. அவைகளின் கண்ணுக்கு யானைகள்தான் நடந்துவருகிறதோவென்று தோன்றும். அந்த எறும்புக்கு மூத்திரமே மகாப் பிரவாகம் யென்பதாய் தோன்றுவதாக உலகத்தில் பேசிக்கொள்ளுகிறார்கள். அந்த எரும்புக்கு, சமானமான சரீரங்கள் சிறியதும், பெரியதுமாய், மிகுதியும் இருக்கின்றன. சமஸ்தத்திலேயும் ஜீவேசுவரன் வாசம் பண்ணுகிறான். இப்படி பூச்சிகளுடைய கூட்டங்கள் மிகுதியாய் நிறம்பியிருக்கின்றன.

அத்தியந்தம் அக்கரையுடைவன் நரன் எவனோ, அவன் விவரித்துப் பார்ப்பான். நானா க்ஷேத்திரங்களில் நானாவிதப் பூச்சிகள். அவைகளுக்கு, அந்த க்ஷேத்திரங்கள் [1]பர்வதாகாரமாய்த் தோன்றும். அதுவும்போலவே, ஆயிசும் மிகுதியாய்த் தோன்றும். பட்சிகளைப்போல பெரியதுமில்லை. சர்ப்பமும், மீனும், மச்சமும், அது போலவேயாம். ஆதி முதற்கொண்டு பெரிது பெரிதாய் வளர்ந்து கொண்டே வருகிறது. சரீரங்களையும், அதின் அந்தரங்கங்களையும் [2]நிற்தாரித்துப் பார்த்தால், தெரியவரும். நானாவர்ணங்கள், நானா மேனிகள், நானாவித ஜீவராசிகள், சிறிது [3]சுந்திரம், சிறிது [4]ஆபாசம். எத்தனை யென்று சொல்

---

1. மலை போன்ற அளவில்.
2. திடமான சோதனை. 3. அழகானவை.
4. விகாரமான.

வது ? சிறிது நுண்ணிய சரீரங்களுடையவை. சிறிது கடோர சரீரமுடையவை. இப்படி ஜெகதீசன் நிர்மித்தார். சுவர்ணமயமான சரீரங்கள் போலவே [1]தேதீப்பியமாயிருப்பன. சரீரபேதம், ஆகாரபேதம், வாச்சா பேதம், குணபேதம், இப்படிக்கு வெளித் தோற்றத்திலும் உள்ளில், ஏக ரூபமாய் அபேதம் வாசம் பண்ணுகிறது. அதில், சிறிது பயமுறுத்தப்பட்டவை. சிறிது கொன்று போடுகிறவை. பார்க்கப் போனுல் நானுவித ஆச்சரியங்கள் சிருஷ்டிக்குள்ளே. இவைகளை எல்லாம் விவரித்துப் பார்க்கிறவனுய் எந்தப் பிராணி இருக்கிறுன் ? தன் மட்டுக்கும் கிஞ்சித் மாத்திரம் விவரித்துப் பார்ப்பான்.

இந்த அகண்டமான பூமி, இதற்கு ஸப்த ஸமுத்திரங்களுடைய சுற்றுகள். பிர்மாண்டத்துக்கு அப்புறம் இருக்கிற ஜலத்தை எவன் அறிவான் ? எவ்விடத்தில் ஜலமோ, அவ்விடத்தில், ஜீவராசிகள் உற்பத்தியின் சுபாவம். இதைப்பற்றி விசாரிக்க வேண்டியது அதிகமாயுள்ளது. அந்த ஜலங்களுக்குள்ளே ஜீவராசிகள் இருக்கின்றன. பார்க்கப் போனுல், சங்கை கிடையது. அந்த விசாலமாயிருக்கிற ஜீவராசிகளுடைய ஸ்திதி எவன் அறிவான் ? பூமி கற்பத்தில் நானுவித வகையில் சிறியதும், பெரியதுமாய் சரீரங்கள் இருப்பதை எவனறிவான் ? சில பிராணிகள் ஆகாசத்தில் வாசம் பண்ணுகின்றன. அவைகள் பூமியைக்

---

1. ஒளிவிசிக் கொண்டிருப்பவை

காண்பதேயில்லை. முட்டை வெடித்து இறகு முளைத்த வுடனே பறந்து போகின்றன. நானு [1]கேச்சரம், பின்னும், [2]பூச்சரங்கள், நானு வனச்சரங்கள், பின்னும், ஜலச்சரங்கள், எண்பத்து நான்கு இலட்ச யோனிப் பிரகாரம் எவனறிவான்? உஷ்ணம், தேஜசு இவை இரண்டும் நீங்கலாக, எங்கேயும் ஜீவயோனிகள் கல்பனையிலிருந்தும் சிறிய பிராணிகள் உண்டாகின்றன. நானு சாமர்த்தியங்களினுல், சிலதுபேர் [3]சப்தத்துடனே [4]சாப தேகம் அடைந்தார்கள். சிலது தேகங்கள் சொப்படி வித்தையுடையவை. இராட்சத மாரீச வித்தை கொண்டவை சில தேகங்கள். மாயா வித்தை கொண்டவை சில இப்படி நானுபிரகாரமானவை தேவதைகளுக்கு சிறிதுபேர் குரோதத்தினுலானுர்கள். சிலர் மருத்து பேத பலத்தினுலே நிற்மிக்கப்பட்டார்கள். சிலர், வரத்தினுல் பூர்வ தேகமடைந்தாரகள். இப்படி [5]பகவந்தனுடைய செயல் எவ்வளவு யென்று செல்ல வேண்டும்? மாய்கையின் விசித்திர குணத்தினுல் உண்டாகிறதும், போகிறதுமாக நானுவித [6]அகடிதசெயல் பண்ணப்பட்டன். எவனுல் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை இப்படி விசித்திர கலை சர்வமும் அறிந்து கொள்ள வேண்டியது, அதில் கொஞ்சம் புரிந்தவன் வயிறு வளர்க்கிற மட்டுக்கும் வித்தை கற்றுக் கொண்டான். பிராணி, வீணுக,

---

1. வான் வாழ் புள்ளினங்கள்.
2. தரையில் வாழ்பவை.
3. சாபம். 4. சாபம் நீங்கி தன் சுய உடல்.
5. கடவுள். 6. ஆச்சரியமான.

நான்ஞாதா வென்று கர்வித்துப் போனன். ஒரே ஒரு அந்தர ஆத்துமா, சர்வத்துக் குள்ளே சர்வாத்துமா. அதின் மகிமை தெரிகிறதற்கு, புத்தி ஏது ?

சப்தகஞ்சுகம் என்கப்பட்ட இப்பிர்மாண்டத்தை தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பிர்மாண்டத்தில். ஸப்த கஞ்சுகங்கள் கொண்ட பிண்டமுள்ளது. அந்த பிர்மாண்டத்திற்குள்ளே பல பிராணிகள் இருக்கின்றன. தன்னுடைய தேகத்திலிருப்பது தெரியாது. இப்படி யிருக்க எல்லாம் தெரிய வருகிறதேது ? ஜனங்கள் அல்ப ஞானத்தினல், பதறிப்போகிருர்கள். அணு ரேணு போலப் பிராணிகளுடைய வகைகள். அந்த மனிதாள் [1]விருட் புருஷாள். இவைகளுடைய [2]தெண்டகங்கள், அனேகமாயிருப்பது சர்வாச்சரியமும் அறிகிறவனய், எவன் இருக்கிருன் ?

பரமேசுவரனுடைய செய்கை அந்தக்கறணத்திலும் அனுமானிக்க முடியாது. பாபீயான அகந்தை சுற்றிக் கொள்ளுகிறது. அந்த அகந்தையை விட்டு விட்டு, விவரிப்பவர் சிலர்தாம். அது தெய்வத்தின் செயலாகும்.

மனிதாளுடைய பிழைப்பை பார்க்கப் போனல், அது சிறிது காலம் யிருப்பது, கொஞ்சம் பிழைப்பு.

---

1. மிக்க பெரிய. 2. பழக்கவழக்கங்கள்.

பின்னும், அறைப்படி சரீரம். நாளைக்கே அழப்போகும் ஜீவன்கள் இன்று கர்விக்கிறார்கள். சரீரம் முழுமையும் விழுந்துபோக நேரம் அதிகமாகாது, அசங்கிதத்தில் பிறந்தது. அசங்கித ரசத்தினால் வளர்ந்தது. எந்த காரணத்தினால் பெரியது? அசங்கிதம் பின்னும் [1]க்ஷணபங்கூறம். [2]அகண்டமாய் சிந்தாதுறம்; இதில், ஜனங்கள் பைத்தியகாரத்தனத்தினால், வீணாய்ப் பெரியவன் என எண்ணுகிறான். தேகம் மாய்கை. இரண்டு நாளையது ஆதியிலும், அந்தியத்திலும் எல்லாம் எல்லாம் சீச்சீ. மூடி மூடி வைத்து வீணாகப் பெரிதனம் அடைகிறான். மூடினாலும், அது திறந்து கொள்ளும் பின்னுமோ, கண்டவிடமெல்லாம் துற்கந்தம் கிளம்பும். எவன் விவேகத்தில் வேசிப்பானோ அவனே [3]தன்னியன். வீணாக எதற்காகப் போராட்டம் செய்ய வேண்டும்? அகந்தையை விட்டு விடுங்கள் விவேகத்தினால் தெய்வத்தைத் தேட வேண்டும். இது உத்தமோத்தமம்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால உபதேச விளக்கத்தில், சூட்சம ஜீவன்கள் சொன்ன சர்க்கம் 8 முற்றும்.

---

1. இமைப் பொழுதில் அழியக் கூடியது.
2. எப்போதும்.
3. போற்றத்தக்கவன்

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் ஒன்பதாம் சர்க்கப் பிரசங்கம்.

நான்குவகை யோனியுடைய பிராணிகளாகிறார்கள். அவைகள் முழுமையும் ஜலத்திலேயே வளருகின்றன. இப்படி சங்கை யில்லாமல் ஆகிறதும், போகிறதும், தத்துவத்தின் சரீரமாயிற்று. அது அந்தர ஆத்துமாவாலேயே செய்யப்பட்டது. அதின் மூலம் எப்போது பார்க்கப்படுமோ, அப்போதே, ஜலரூபமாம். சம்போக காலத்தில். சரீரங்கள் சேர்ந்து பிழியப்பட்டன. உபயந்தராளிந்திரியம் ஒன்றாய் ரேதத்தில் கலக்கப்படுகிறது. அன்ன ரசம், தேக ரசம், இரத்தம், இந்திரியம், இதுகளினால் குகை கட்டப்படுகிறது. அதில் [1] ரசத்தோயம் சாவகாசமாய் வளர்கிறது. வளர, வளர, வளர்ந்து கோமளமானது, கடினமானது. மேல் ஜலம் நானா அவயங்களில் வியாபித்தது. சம்பூர்ணமானால், வெளியேவிழும். பூமியில் விழுந்ததின் மூலம் அழுகும். இப்படி இருந்து [2]தொக்கும் வளரும், துஷ்ட புத்தியும் வளரும். ஆதிமுதல் வரைக்கும், முழுமையும் உண்டாகிறது. பார்க்கப் பார்க்க எல்லாம் வளருகின்றன. பின்னும் இறக்கிறது.

---

1. ரசமெனும் நீர்.
2. மேல் தோல்.

எல்லோருடைய சரீரம் நாளுக்கு நாள் பெரியதாயிற்று. கொஞ்ச நஞ்சம் விசாறணை தோன்றுகிறது. அது பழத்துக்குள்ளே விதை இருப்பது போல. அந்த நியாயம் போலிவடமாயிற்று. கேழ்கையிலும், பார்க்கையிலும், சகலமும் கருதலாயிற்று. விதைகள் ஜலத்தினால் முளைமுளைக்கும். ஜலம் இலலாவிட்டால். கெட்டுப்போம். ஜலமும், மிருத்[1]திகையும், ஒருவிடத்தில் சேர்ந்தால். நல்லது. அந்த இரண்டுக்குள்ளே விதை யிருந்தால் நனைந்து ஸகஜமே முளையாகும். வளர. வளர, மேல் விருத்தி மிகுதியிருப்பது. பூமியில் வேர்கள் ஓடுகின்றன. மேல், கொழுந்துகள் விளங்குகிறதுகள். விதையிலிருந்து வேறும் கொழுந்தும் இரண்டாகிறது. வேர்கள் பாதாளத்தில் செல்லுகின்றன. கொழுந்துகள் ஆகாசத்தில் ஓடுகின்றன. நாறு இலைகள், புஷ்பங்கள், பழங்களினால் மாங்கள் தளைத்தது. பழத்துக்கு மூத்தது புஷ்பம். புஷ்பங்களுக்கு மூத்நது இலைகள். இலைக்கு மூத்தது, எல்லாம் காஷ்டங்கள் தான். அந்தக் காஷ்டத்துக்கு மூத்தது, சல்லியும், வேர்களும். வேர்களுக்கு மூத்தது ஜலம். அந்த ஜலச்சண்டி பூமண்டலத்தின் வேடிக்கை. இதின் [1]சோதனை இப்படியாக இருக்கிறது.

சகலதேதுக்கும் மூத்தது [1] பிருதிவி. அந்தப் பிருதிவிக்கு [2] அப்பு நாராயணமூர்த்தி. அதற்கு மூத்தது அக்

---

1. மண் 1, பூமி (தத்துவம்).

2. ஜலம்.

கினி தேவதை. அக்கினி தேவதைக்கு மூத்தது வாயு தேவதை. வாயுவுக்கு மூத்தது அந்தர ஆத்துமாவின் சுபாவீகம். ஆனதுகொண்டு சகலத்துக்கும் மூத்தது அந்தர ஆத்துமா.

அதை அறியாதவனே துராத்துமா. துராத்துமா வென்றால், அவனுக்கு ஆத்துமா தூரமாய்த்தப்பி அந்தரமாயிற்று. சமீபத்திலிருந்தும் தப்பினார்கள். ஏனென்றால். சோதனை செய்யாதே போனார்கள். தெய்வத்தினாலேயே வெகு பேர் வந்தார்கள். பின்னும் போனார்கள். ஆனபடியினாலே, சகலமான பேருக்கும் மூத்தது தெய்வம்.

அதற்கு மனது அனன்னிய பாவமானதேயாகில் இந்தப் பிரகிருதியின் சுபாவம் பிறண்டும் போகும். பின்னும் தன்னுடைய காரியம் முழுமையும் பண்ணுவான். பண்ணினாலும், ஒருகாலமும் தியானம் பங்கமாகாது. பேசுகையிலும். நடக்கையிலும், தவறமாட்டான். மூத்தவாள் யெதெது நிற்மித்தார்களோ, அததுதெரிய வேண்டியது. மூத்தவாளென்னன்ன பண்ணினார்களோ, அவைகளை என்னவென்று பார்க்க வேண்டும், அந்த [1] மூத்தவன் எவனிடத்தில் மிகுதியும் பிறகடித்தானோ, அவனே பாக்கிய புருஷன். உத்தமன், எவனிடத்தில் அல்பம் பிறகட்டமோ, அவனே அல்பபாக்கியன்.

---

1. பரமாத்துமா.

அந்த நாராயணனை மனதில் அகண்டமாய் தியானத்தில் மறக்கலாகாது. அப்பால் இலட்சுமி அவனிடத்திலிருந்தும் எங்கே போகப் போகிறாள்? அந்த நாராயணன் விசுவத்தில் இருக்கிறான். அவனைப் பூஜை பண்ணவேண்டும். ஆகையால், யாதாவொரு தேகத்தை சந்தோஷப் படுத்தி வைக்க வேண்டும். உபாசனை சோதித்துப் பார்த்தவிடத்தில், அது, விசுவத்தைப் பாலனம் பண்ணுகிறதாயிற்று. ஒருவனுக்கும் அந்த லீலையைப் பரிக்ஷிக்க வராதே. தெய்வத்தின் லீலை தெய்வம் வினைமற்றவன், பார்க்கத்தக்கவன் யார்? அவ்வளவும் தான் தெய்வமே! உபாசனை சகல விடத்திலும் இருப்பது. ஆத்துமா ராமன் எங்கே தான் இல்லை? ஆனபடியினாலே, எங்கெங்கும் ராமன் நிறைந்து இருக்கிறான். என்னுடைய உபாசனை இப்படிப்பட்டது. இதை, உபாசகாள் மனதில் கொண்டுவரவேண்டும். அது நிறஞ்சனத்துக்கப்பால் கொண்டுபோய்விட்டுவிடும். தெய்வத்திற்காக, கர்மங்கள் நடக்கின்றன. தெய்வத்திற்காக உபாசகாளாகிறார்கள். தெய்வத்திற்காக சிறிது பேர் ஞானிகளாகிறார்கள். நானா சாஸ்த்திரங்கள், நானா மதங்கள், சமஸ்தமும் தெய்வமே சொல்லிற்று. ஆனபடியினாலே, விவஸ்தை, அவ்விவஸ்தை. கர்மத்துக்குத் தக்க தெய்வத்திற்காகவே எல்லாம் செய்யவேண்டிதாய் முடிந்தது. அதில், எது அடையலாமோ, அதை அடையவேண்டும். ஆனால் தான் உத்தமம். ஆவாஹனம், விசர்ஜனம், இப்படியே விதாயம் சொல்லப்பட்டது, இதுவரைக்கும் பூர்வ பக்ஷமாயிற்று. மேல், வேதாங்

தம், சித்தாந்தம், பின்னும், தாதாந்தம். இதற்கு சோதனையே பிரமாண நிச்சயம் பஞ்சீகறணம் விட்டு, ஹிதமான வாக்கியார்த்தம் பார்க்க வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
பிண்டோற்ரத்தி
சர்க்கம் 9 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினைந்தாம் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்,

ஆகாசத்தில் முழுமையும் ஆகிறது போகிறது. ஆனாலும், அகாசத்தைப் போல நில்லாது. அப்படியே நிர்ச்சலத்தில் நானுவித சஞ்சலமாகத் தோன்றுகிறது. பலமாய் இருள் நிறம்பிற்று, அதினால் ஆகாசம் கறுப்பானதாய்த் தோன்றும். உடனே இரவி கிரணத்தினால், பீதமாய்த் தோன்றும். மிகிதியும் பனி எப்போது பெய்யுமோ அப்போது, ஆகாசம் சீதளமானதாய்த்

தோன்றும். உஷ்ணத்தினுல் உலர்ந்து போனதாய்த் தோன்றும் இப்படி எதெது தோன்றிற்ரூே, அதது ஆயிற்று. பின்னும் போயிற்று. ககனத்துவம் பேலவே நிற்கும் யென்பது நடவாது அறிவு உத்தமம் சாவகாசமாய் அறிந்து கொண்டு பார்.

ஆகாசம் நிருபாலம். தோன்றுதல் பாஸமாத்திரம். அது மித்தை ஜலம், பறக்கும் வாயு ஒழியும் ஆத்துமா, அத்தியந்தமாய்ப் பரவிப்போம். உள்ளில், தத்துவத்தினுல், தத்துவம் முழுமையும் விவரிக்கப்படும். சலிக்கிறதும், பின்னும் சலியாததும், உன்னில் முழுமையும் தெரிய வருகிறது. விவறணையினுல், பிராணி என்பதில் தெளிகிறது. விவரிக்க விவரிக்கக் கடைசியில், நிவர்த்தி பதத்தின் அகண்டம் சந்திக்கும். அந்த சந்திப்பினுல், பிரிவு ஆகவேமாட்டாது. அவ்விடத்தில் ஞானமே விக்ஞானமாகிறது. பின்னும், மனம், உன்மனமாகிறது. தத்துவமே, தரிசனத்தின் விவேகத்தினுல் அனன்னியமாகிறது, [1]மூத்தவனை சோதித்துப் பார்க்கப்பட்டது. அப்போது சஞ்சதமே நிச்சலமாயிற்று. தெய்வ பக்தனென்பது அந்த விடத்தில் போயிற்று. விடமென்ருல், பதார்த்தமே யில்லை. பதார்த்தமே பார்த்தால், ஆதியிலேயே யில்லை இப்போது எப்படியோ, அப்படியே தெரிய வேண்டியதற்காக இப்படிப் பேசுவோம்.

---

1. பரம்பொருளை.

அஞான சக்தி ஒழிந்தது. ஞான சக்தி மறைந்து போயிற்று. விரக்தி சூனியஸ்திதி எப்படியாயிற்று பாருங்கள். முக்கியமான சக்திபாகம் இப்படிப்பட்டது. அவ்விடத்தில், சஞ்சலத்தின் வஸாசைகளில்லே. நிவர்த்தத்தின் நிவந்தம் எப்படிப்பட்ட தென்றால், அது, நிர்விகாரி. சஞ்சலத்தின் விசாரம் பிறண்டுபொம். பின்னுமோ, சஞ்சலம் அவ்விடத்தில் வற்றிப்போம். சஞ்சலம் நிச்சலமும் இரண்டுங்கூடி, கனமாகும் யென்பது நடவாது. மகா வாக்கியத்தின் விவறணே, அங்கே சன்னியாசத்தின் ஆதாரம். தெய்வத்தின் கிருபையுடைய நரனெவனே அவன் விவரித்துப் பார்ப்பான். சன்னியாசியென்றால், சடனியாசி. விசாறணயுடையவன். சர்வத்தையும் நாசம் பண்ணுவான். தன்னுடையதே, தனக்கு நிச்சயத்தின் கிரியை. ஜெகதீசன் கிருபையுடையவனனதின் மேல், அவ்விடத்தில் அமானம் பண்ணுகிறவனெவன்? விசாறணயில், விவறணயில், விவிறணயறிவார்கள். எவரெவர்கள் விசாறண செய்தார்களோ, அவர்கள், நிஸங்கமாய்ப் போனார்கள்.

தேகாபிமானிகள் எவர்மீந்து இருப்பார்களோ அவர்கள் தேகாபிமானத்தை இரக்ஷிப்பார்கள். அலக்ஷியத்திலே, இலக்ஷியமிருந்து விட்டது. பூர்வபக்ஷம் பார்த்துப் போயிற்று. எதாரூபமான அந்த்ர சாக்ஷியும் மறைந்தது. ஆகாசமும், பின்னும், பாதாளமும், இரண்டும் கூடியது. அந்த்ராளம், நடுவே திரையாயிருக்கிற பிருதிவியை நீக்கினல் அகண்டமாயிற்று. அது

அகண்டமாகவே யிருக்கிறது. மனம் உபாதியை இலட்சித்துப் பார்க்கிறது. அந்த உபாதி நீங்கினல், அவ்விடத்தில் சப்தம் எப்படி ஜயிக்கும்? சப்தத்துக்கு அப்புறம், பரம். கல்பனைக்கு அப்புறம் மனம், புத்திக்கு அகோசரம். விசாறணையைப் பார்த்தால், உள்ளில் விசாறணைபடும். பார்க்கப் பார்க்கத் தெரியவருகிறது. தெரிந்ததவ்வளவும் வியர்த்தமாய் போகிறது. எப்படி, அவ்விடத்தை, எந்தப் பிரகாரம் பேசலாம்? வாச்சாமசம் சோதிக்கப்பட்டது. அலட்சியத்தில், இலட்சியாம்சம் முழுகிப் போயிற்று. சாசுவதத்தை, சோதித்துக் கொண்டு போனன். அதினல், ஞானிசாசுவதமானன். விகாரத்தை விட்டு விட்டு நிற்விகாரத்தில் சேர்ந்தான். மிகுதியும் துற்சொப்பனம் காணப்பட்டது. விழித்துக் கொண்டதினல், பொய்யாய் போயிற்று. மறுபடியும் அது ஞாபகத்துக்கு வந்ததேயாகில், அது மித்தை.

பிராரப்த யோகத்தினல் தேகம் இருக்கட்டும் அதவா அது நீங்கட்டும். உன்னில் விசாறணை சலிக்காதுயிருக்கட்டும். விரை, அக்கினியினல் வறுக்கப்பட்டது. அதின் வளருதல் நின்று போயிற்று. ஞானக்கினியினல், வாஸனபீஜம் அப்படி ஆயிற்று. விசாறணையினல், புத்தி நிர்ச்சலமாயிற்று. புத்தியினிடத்தில் காரிய சித்திகள். மூத்தவாளை சோதித்துப் பார்க்கையில், அந்த சோதனை நிற்சலத்தில் போயிற்று. நிற்ச்சலத்தை, தியானம் பண்ணுசிறவனே, நிற்ச்சலன். சஞ்சலத்தை, தியானம் பண்ணுகிறவனே சஞ்சலன். பூதத்

த்தை தியானம் பண்ணுகிறவன் கேவலம் பூதமேயாவான் எவன் கடைசி மட்டும் போய்ச் சேர்ந்தானோ, அவனுக்கு இவைகள் ஒன்றும் செய்யாது. அந்தர நிஷ்டனுக்கு, சொப்படி வித்தை எப்படியோ, அப்படிக்கு அவனுக்கு மாய்கையாம். பொய்யென்பதாய்த் தெரியவந்தது. விசாறணையினால், திற்டமாயிற்று. முழுமையும் ஆக சமீகமாய்ப் பறந்தது. உபாசனையின் உத்தாரணம் ஆகவேண்டும். பக்தனானவன், பஜனத்தை வளர வைக்க வேண்டும், உள்ளில், விவேகத்தினால் சகலமும் அறிந்து கொள்ள வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சித்தாந்த்த

சர்க்கம் 10 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாறும் தசகத்தில் முதற் சர்க்கப் பிரசங்கம்.

வன்மீக எனும் முனிவர் மிகவும் போற்றத்தக்கவர். ரிஷிகளில் புண்ய ஸ்லோகீ. அவரால் இம்மூஉலகமும் பவித்திர மாக்கப்பட்டது. இனிமேல் உண்டாக்கப் போவதும். கோடிக் கணக்கில காணப்படுவதுமான படைப்பில் இப்படிப்பட்ட (புலமை) காண்பதற்கரிது. எதிர்காலத்தைப் பற்றி சாதாரணமாய் ஒரு விஷயம் சொல்லி அது உண்மையாக நடந்தேறினால் அவரை எவ்வளவு போற்றுகிறோம்? இரகுநாதரின் அவதாரம் எடுக்குமுன்பே, வேறுசாத்திரங்களுமின்றி, விஸ்தார மாக இராம கதையை தொகுத்த பெருமை போற்றத் தகுந்ததே. இப்பேர்கொந்த வன்மீக முனிவரின் புலமையை சிவபெருமான் கண்டு களித்தனன். சத கோடி இராமாயணத்தை மூவுலகிலும் பரப்பினன். இக்காவ்யத்தின் இரகசியம் சிவமெருமான் ஒருவனே அறிவன். ஏனையோருக்குப் புலப்படுவதில்லை. இராம பக்தர்கள் இதைக்கண்டு சமாதானம் எய்கிறார்கள். பல கவிஞர்கள் தோன்றி மறைந்தனர் ஆகிலும் வன் மீகரைப் போன்று இதுவரை ஒருவரையும் காணோம். இனிதோன்றப்போவதுமில்லை.

ஆதியில் தீயக்ரூர கர்மாக்களைப் பண்ணி துஷ்டனுடைய வாழ்க்கை வாழ்ந்து வந்தார் இம்முனிவர். இராம நாமத்தின் மகிமையினால் பரமபாவனராக மாறி விட்டனர். இராமநாமத்தை திடமான விரதங்கொண்டு ஜபித்ததினால் அளவுகடந்த புண்யத்தை அடைந்தார். தலைகீழாக 'ராம' என்பதை 'மரா' என்று ஜபித்து, பாவமலை நொறுங்கி புண்யம் எனும் கொடி உயர்ந்தது அவர் வாழ்க்கையில்.

வால்மீகர் ஜபம் செய்து, தவங்களைச் செய்தவிடம், பவித்ரமான புண்யப்பிரதேசமாகிவிட்டது, உலர்ந்த கட்டையும் தளிர்விட்டது. இவ்வளவும் வன்மீக முனிவரின் தபோமகிமையால் அன்றோ! ஆதியில், கொலை பாதகத்திற்கு அஞ்சாத 'வால்ஹா' எனும் வேடுவன் பிற்காலத்தில் பெரிய முனிவர்ளொலும், கவிஞர்களாலும் பூஜீக்கப் பட்டவனன்.

வைரக்யம், செய்த தவறுதலுக்காக, ஆழ்ந்த பச்சாதாபம் இவைகள் முன் பாவங்கள் நிலைக்குமா! கட்டை விழும்வரை தவம்செய்ய மேற்கொண்டதினால் அவருக்கு மறு பிறவியே ஏற்பட்டது. அதுவும் புண்யஸ்வரூபமான ஓர் பிறவி.

வன்மீகம் என்றால் புற்று. தவத்தில் ஆழ்ந்து, தன் உடலின் மேல் புற்றை வளர்த்து கொண்டவரானதால் வாமீகர் எனப்பெயர் பெற்றார் இம்முனிவர். தவத்தின்

மகிமையோ என்ருல், தபஸ்விகள் எல்லோரும் இவர் தபஸைக்கண்டு மனது கலங்கினர்.

தபஸ்விகளில் சிரேஷ்டர். கவிஞர்களில் முதல்வர். அவர் வாச்கு தெளிவும் வார்த்தைகள் திடநிச்சயமும் கொண்டவை. நிஷ்டை வந்தாளுடைய அணிகலன். ரகுநாதரின் பக்தர்களின் பூஷணமாக விளங்கியவர். அவருடைய தாரணசக்தியோவெனில் அசாமான்ய மானது. மற்றை சாதகர்களிடம் உறுதியைக் கொண்டு வரும் சக்தியுடையது

இப்படிப்பட்ட வல்மீக முனிவர், இராமகதையை எழுதியவர். அவரை நான் சாஷ்டாங்கமாய் வணங்கு கிறேன். வல்மீகர் இயற்ருமலிருந்தால், இராமகதை நமக்கு எப்படி கிட்டும்? இப்பேர்கொந்த மகானுபா வரை எப்படி வர்ணிப்பேன்?

இரகுநாதனின் கீர்த்தியை உலகம் முழுவதும் அறிய வேண்டி அதை வெளிப்படுத்தியவர், அதன் மகிமையை உலகம் முழுவதும் பறையாற்றினுர். இப் புனிதமான சரித்தரத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே பக்த கோடிகள் புண்யமெய்துவார்கள்.

தன் வாழ்நாட்களை வீணுக்காமல் இரகுநாதனின் குணகாயனத்தில் மூழ்கி, தான் சுகம் அடைந்தது போதாதென்று, பாரில் வாழும் மாந்தர்களை மிகுதியும் கடைத்தேற்றினுர்.

இரகு நாதனின் பக்தகோடிகள் மிகமிகப் பெரியோர்கள். அபாரமான மகிமையுடையவர்கள். அவர்கள் எல்லாருடைய தொண்டன் நான் ராமதாஸன்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்,
வல்மீக ஸ்தவனம் எனும் பேர் கொண்டது
சர்க்கம் 1. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாரும் தசகத்தில்
ஸ்தவ சருக்கத்தில்
இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

வமிசங்களில் மிக்க மேன்மையுற்றது சூரிய வமிசம் இவ்வமிசத்தின் மூல காரணர் ஆதி சூரிய நாராயணனின் ஒளி பூமண்டலம் எங்கும் வியாபித்திருகிகிறது. திங்களின் உடலில் கருநிறமுள்ள கறை ஒன்று தோற்

றுகிறது. பதினைந்து நாட்கள் கொண்ட ஒரு பக்ஷம் முழுவதும் க்ஷீணித்துக் கொண்டு கலையை இழந்தவனுகிறுன் சந்திரன். மேலும் சூரியனின் ஒளி மிக்க கிரணங்கள் பட்டதும் தன் ஒளியில் குன்றும் தோஷமுடையவனுகிறுன். இந்தக் காரணங்களினுல் சூரியனுக்கொத்த உவமை உலகில் காண்கிலோம்.

பிராணி மாத்திரங்களுக் கெல்லாம் ஒளியை வீசி, இருளை நீக்குபவன் பகலவன். சுலபமான அல்லது கடினமான, கெட்ட அல்லது நல்ல, கார்யங்களும், நியமங்களும், தர்மங்களும் சூரியனைக் கொண்டே நடக்கின்றன. வேத, சாத்திர, புராணங்கள், மந்திர, யந்திரங்கள், பலவிதமான சாதனைகள், ஸ்நாநம், சந்தியா வந்தனை, ஜபம், த்யானம், பலவகை யோகங்கள், பல மதங்கள், பிரபஞ்சிகமானதோ, அல்லது பரமார்திகமானதோ, சகல கர்மங்கள் அனைத்தும் சூர்யஉதயத்தை ஒட்டி நடைபெறுகின்றன. பிரபஞ்சீக, பரமார்தீகமான காரியங்கள் பகலில் செய்யின் முற்றிலும் பலனளிப்பதாகவுள, பகலில் செய்யாவிடின் அவை பலனளியா.

மனிதனின் உடலிலுள்ள அங்கங்களுக்கு அதிஷ்டமான தேவதைகளுண்டு. சூரிய பகவன் கண்ணின் அதிஷ்டான தேவதை. கண்தெரியாவிடின் ஒரே இருள். ஆனதினுல் சூர்யனின்றி ஒன்றும் நடவாது.

'குருடர்கள், புலமை பெற்றுள்ளார்களே எனக் கூறுவீராஞல், இக்குருடர்களின் புத்திக்கு வேண்டிய ஒளி எங்கிருந்து கிடைத்தது ? சூர்ய பகவானைத்தவிர இருளை அறவே நீக்க வல்லோன் யார் ?

சூடுடன் பொருந்திய ஒளி சூரியனிடமும், சீதள மான ஒளி சந்திரனிடமும் உள. சூடு உடலை விட்டகன் ருல் வாழ்விற்கு முற்றுபுள்ளி தான். சூரியனின்றி வாழவே முடியாது. ஆகையால் பிரசங்கம் கேட்கும் புத்திசாலிகள் நன்று யோசித்து உணரலாம்.

ஹரிஹராளுடைய அவதாரங்கள் பலதடவைகள் ஆயின ஆஞல் சூர்யன் அவர்களுக்கு முன்பும் இருந்து வந்தான். இப்போதும் இருப்பதை நாம் காண்கிறோம். பிறவி எடுத்து, உலகில் தோன்றியோரெல்லாம், ஆத வனின் கீழே தன் நாட்களைக் கழித்தனர். அவனுடைய பார்வையில் தான் தன் பூத உடலை நீத்தனர்,

சந்திரன் இப்போதுதான் உதித்தவன், மகாலக்ஷ் மியின் சகோதரஞய், கடலைக்கடையும் போது. பதி ஞன்கு இரத்தினங்களுடன் வெளிவந்தவன்.

படைப்பிற்கே ஒரு கண்போன்றவன் சூரியன் என பெரியவர்களாயினும், சிறியவர்களாயினும் சொல்லு

1. ஸூரதாசர், மில்டன் முதலிய கவிஞர்கள்.

14

கின்றனர். ஆனதினால் அவன் எல்லோரிலும் மேன் பட்டவன்.

தினந்தோறும் சலியாமல் ஆகாய வழியை அவன் கடப்பதைக் காண்கிறோம் பரமாத்வின் கட்டளையினால் இப்பெரும் கடினமான வேலையை தான் மேற்கொண் டுள்ளான் சூரியன். ஆனால் அவ்வளவும் உலகத்திற்கு ஓர் பெரும் உபகாரத்தை செய்ய முன்னிட்டுதான் அல்லவா ?

பகல் பொழுதின்றேல் ஒரே காரிருள் மூண்டுவிடும். ஒளியின்றி எதொரு காரியமும் செவ்வையாய் நடவா. பகலற்ற பொழுதில் (இரவில்) திருடர்களும், ஆந்தை, கோட்டான்களும் தான் உலவ வெளிப்படும். பிரகாசத் தில் தனக்கு நிகரற்ற சூரியனுக்கு ஒப்பாக வேறு எதை யும் சொல்ல முடியாது. ஆனதினால் அவன் உவயம யற்றவன்.

இப்பேர்ப்பட்ட மகிமை பொருந்திய சூரிய பகவான் ரகுநாதனின் வம்சத்தின் மூலபுருஷன் ஆகிறான். இவனுடைய புழையும் சக்தியையும் வர்ணிக்கத்தகுந்த வர் யார் உள்ளார் ? இரகுநாதன் தோன்றிய இரகு வம்சம் ஆதிமுதற் கொண்டு மகான்களைக் கொண்டது. வமிசத்தில் தோன்றிய மகாபுருஷர்கள் ஒருவருக்கொரு வர் புகழில் சளைத்தவரில்லை. எல்லோருமே மேன்மை யுடையோர். மதியாற் சிறியோனாகிய என்னால் இவர் களைப்பற்றி எவ்வளவு சொல்லமுடியும். இருந்தும் ஸ்ரீ

ரகுநாதரின் சமூகத்திலேயே உழலும் என் மனதானது மிகக்குன்றிய புலமையை உடைத்ததாயினும், இம்மகாமைசத்தோர்களைப்பற்றி வர்ணிக்க அவா கொண்டுள்ளது. சூர்யதரிசனத்தாலும், நமஸ்காரத்தினலும் சகல தோஷங்களும் அகலும் புத்தி ஒளியுற்று ஓங்கும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சூரியஸ்துதி

கூறியது, சர்க்கம் 2

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாறும் தசகத்தில் ஸ்தவன சருக்கத்தில் மூன்றும் சர்க்கப் பிரசங்கம்.

வசுமதி எனும் பெயர் கொண்ட இத்தரணி மிக்க மேன்மையுடையது. பூமியை ஆதாரமாகக் கொண்டு தான் ஜீவன்கள் எல்லாம் வாழ்கின்றன. இதின் மகிமையை என்ன வென்று செல்வது? பூமியை விட்டு பறந்த வெளியே வாழும் ஜீவன்களிடம் கூட பூமியின் அம்சம் தான் காணப்படுகிறது. ஜடமான தேகம் இல்லை எனில் அவை எப்படி ஜீவன்களாக வாழமுடியும்? அந்த தேகம் பூமியின் அம்சத்தைக் கொண்டது தானே?

எரிப்பது, சுடுவது, இடிப்பது, உழுவது, கொத்துவது, சிறுநீர், மலம் முதலியவைகளை கழிப்பது, மேலும் வாந்தி எடுப்பது முதலியவைகளை எல்லோரும் பூமியின் பேரில்தான் செய்கிறார்கள்! கெட்டுப் போனதும், அழுகிவிட்டதும், வீணாய்ப்போனதையும் ஏற்றுக்கொள்வது பிருதிவி எனும் பூமிதானே. இயற்கை எய்தும் கால், சடலம் பூமியில் தானே விடுகிறது. நல்லது பொல்லாதது. எதுவுமே, பிருதிவியை யின்றி அடைக்கலம் வேறு எங்கே பெறக்கூடும்? பல உலோகங்

கள் திரவியப் பொருள்கள் பூமியின் மத்தியில் புதைப் பெற்றுள்ளன. ஒருவரை யொருவர் பிராணிகள் சம வாரம் செய்து கொள்ளுகின்றன. அதுவும் பூமியின் பேரில் தான்? அவர்கள் எங்கு போகமுடியும்?

பல கோட்டைகள், மதிற்சுவர் கொண்ட கட்டிடங் கள், ஊர்கள், பெரும் பட்டினங்கள் இவைகளைப் பற்றி எல்லாம் அறிவது எங்கனம், பூமியில் வெகுதூரம் பிர யாணம் செய்வதால்தானே, இவைகள் எல்லாம் பூமியில் தானே நிறுவப்பட்டுள்ளன. தேவாம்சம் கொண்டோர் மனிதர்கள், அசுராம்சம் பொருந்தியவர்கள் எல்லோ ருமே பூமியின்மேல் தானே வாழ்க்கையை நடத்து கிறார்கள். பல விலையுயர்ந்த கற்கள், பரிசுவேதைக்கல் பலவகையான தாதுப் பொருள்கள், புதைந்துள்ளது பூமியில். பாரில், மேரு, மந்தரம், ,இமயம், முதலிய பெரும் மலைகளும், எட்டுவித குலப்பர்வதங்கள், பல வகை பறவைகள், மீன்கள், பாம்புகள் எல்லாம் காணப் படுகின்றன. பெரிய கடல்கள். துண்டிக்கப்பட்ட மிக்க பிரும்மாண்டமான மலைத்துடர்கள் எல்லாம் பூமியின் பேரில் இருப்பவை. இவைகளில் பெறியதும், சிறியது மான பல குகைகளும், கனத்த இருள் நிரம்பியதாகவும் இருக்கின்றன. நில பாகத்தைச் சூழ்ந்த நீரின் பரப் பை எவரால் அளக்க முடியும்? அவைகளில் வாழும் பெரும் நீர்வாழ் பிராணிகளைச் கண்டவர் யார்? இப் பெரும் நீர் நிலையை அழுத்தி வைக்கும் பொருட்டு எங்கும் காற்று தன் அமுக்கத்துடன் பரவியுள்ளது. அதன்

அழுக்கம் இல்லை எனில் பெரும் கடல்கள் எல்லையில் நில்லாது வரம்புமீறி ஊர்களைஎல்லாம் மூழ்கடித்துவிடும்.

நீர் நிலைகளை வரம்பில் காக்கும் வாயுவிற்கு ஆதார மாயுள்ளது, தமோமயமான அகங்காரம். இப்படியாக விஸ்தாரமடைந்துள்ள பூமியைப்பற்றி முற்றிலும் வர்ணிக்க சக்தி யாருக்கு உண்டு ?

பல பொருள்களின் உறைவிடமானது பார். பல உலோகங்களின் சுரங்கங்கள், இரத்தினங்களில் சுரங்கங்கள் நிறைந்த குளங்கள், பல தீபகற்பங்கள், பல கண்டங்கள், பாலைவனங்கள், எல்லாம் இங்கு நிரம்பியுள்ளன. அச்சூழ்நிலைக்கேற்ப விசித்திரமான பிராணிகள் அங்கேவாழ்கின்றன.

மேரு போன்ற மலையில் பாறைகள் வெடித்துப் பாளங்கள், துண்டுகள் காண்கிறோம். இவைகளில் பயங்கரமான இருட்டு நிரம்பிய பிரதேசமும் உண்டு. அடர்ந்த பலவித மரங்கள் அங்கே வானளாவி நிற்கின்றன. இவைகளை அண்டி உகைங்களும், சூர்ய மண்டலம், சந்திர, த்ரோண, மைனகம் முதலிய மலைகளும், பலவகைப் பாறைகள், சாம்பல்கள், புதையல்கள் எல்லாம் இருக்கின்றன.

பல இரத்தினங்களைக் கொண்டது இவ்வசுந்தரை எங்கெங்கே அலைந்தாலும் இப்பேர்ப்பட்ட பொருள்கள் எங்கு கிடைக்கும் ? எங்கு போய் சுற்றிப்பார்த்தாலும் பூமியை ஒத்த வேரு ஒரு பொருள் காண்பதரிது.

பலவித கொடிகள், பயிர்கள், பலவித விதைகள் பார்க்கப்போனல் அவைகள் ஒன்றுக்கொன்று மாறுபடுகின்றன.

சுவர்கம், பூலோகம், பாதாளலோகம் இம்மூன்றும் அபூர்வமான படைப்புகள். பாதாளத்தில் பெரும் பாம்புகள் வசிக்கவும், படைக்கப்பட்டுள்ளது. விதவிதமான பயிர்கள், தான்யங்கள் பூமியில் பரவியுள்ளன. இப்படிப்பட்ட இத்தரணியானது, புது புதிதாக பிரம்மனுல் படைக்கப்பட்டுள்ளது.

கோட்டை, கொத்தளங்கள் பல பட்டினங்கள். அழகிய சிற்றூர்கள் எங்கும் பூமியில் நிறைந்துள்ளன, எங்கேயும் ஜகதீச்வரனை கடவுள் வசிக்கிருன். பரம பலாட்யர்கள் தோன்றினர். பலவகை சாமார்த்தியங்களைக் காட்டினர். ஆனல் பூமியைவிட்டு அவர்களால் வாழமுடிய வில்லை. அவர்கள் வாழ்க்கை, செயல் முழுவதும் இப்பாரின் பேரில்தான் நடத்த வேண்டி இருந்தது. பூமியின் பேரில் தான் கணக்கற்ற ஜீவன் பிறந்து இறந்தன. இன்னும் பிறந்து இருக்கின்றன. நூற்றுக்கணக்கான அவதார புருஷர்கள் தோன்றினர் எல்லாம் இப்புவியின் மீதே. இவை எல்லாம் ரொக்கமாக தெளிவுறுகின்றன. அனுமானிக்க வேண்டிய அவசியமில்லை. விதவிதமான ஜீவன்கள் பூமியை ஆதாரமாகக் கொண்டுதான் வாழுகின்றன.

சிலர் இந்த நிலம் என்னுடையது என சண்டை போடுகிருர்கள். இறுதியில் மரித்துப் போகிருர்கள்.

ஆனால் பூமி மாத்திரம் அகலவில்லை. இருந்தவிடத்தில் இருந்து கொண்டே வருகிறது.

இப்பேர் கொந்தது இப்பூமியின் மகிமை இதற்கு ஒத்ததாக எதைக் கூறலாம்? பிரம்மதேவன் முதற் கொண்டு, நம்மைப் போன்ற ஜீவன்கள் வரை, பூமியே ஆதாரமாக விருக்கிறது.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
பூமிஸ்துதி செய்யப்பட்டது
சர்க்கம் 3 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாறும் தசகத்தில் நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

எல்லாப்பிராணிகளுக்கும் பிறப்பிடமும் சகல ஜீவன் களுக்கும், ஜீவனமாயு மிருக்கும் தண்ணீரை ஆபோ நாராயணன் என்கிறார்கள் இப்பூமண்டலத்தைச் சுற்றி லும் ஆவரணம் போன்ற நீர் உள்ளது. ஏழு கடல்களி லுள்ள நீருக்கு சிந்து நீர் எனப்பெயர். மேகங்களினின் றும் வெளிப்படும் மழை நீர் முதலியவைகள் எல்லாம் பூமிக்கு ஓடி வருகின்றன.

பல நதிகள் பல தேசங்களிலும் ஓடி கடலில் ஒன்று சேருகின்றன. ஒவ்வொன்றும் புண்ய தீர்த்தங்கள். சிலது சிறியது சிலது பெரியவை. இவைகளின் மகிமை யை யாரால் வர்ணிக்க முடியும் ?

ஆறுகள் மலைகளினின்றும் பொங்கி எழுகின்றன. பல மலைதாக்குகளிலும் பிளவுகளின் வழியாகவும் நிரம்பி கோஷமிட்டுக் கொண்டு ஓடுகின்றன.

பல தேசங்களிலும், கிணறு, குளம், ஏரிகள், தூய மானத் தண்ணீரினால் ததும்பிக்கொண்டு இருக்கின் றன. வாய்க்கால்கள், நீரோடைகள், கால்வாய்கள்,

ஊற்றுகள் இவைகளில் நீர் நிரம்பிக் காணப்படுறது, மலையினின்றும் பிளந்து கொண்டு தண்ணீர் வெளிப் படுகிறது சில விடங்களில் கசிவு மாத்திரம் காண் கிறது சில இடங்களில இயற்கை ஊற்றுகளும், ஜல தாரைகளையும் காண்கிறோம். இப்படியாக பூமியில் ஜலத்தை எவ்வளவு தோற்றத்தில் காண்கிறோம்.

மலைகள் எவ்வளவோ அவ்வளவு ஊற்றுகள். நீரா னது அங்கங்கே. உடைப்புக்கொண்டு, சுழலுடன் வெகு வேகமாக விரைகின்றது. மாடுகள், நீர்த் தேக்கங்கள் சிறு நீர் நிலைகள், முதலியவைகளும் காணப்படுகின் றன.

பல புண்ய தீர்த்தங்களைப் பற்றி புராண – சரித் திரங்களில் கூறப்பட்டுள்ளன. ஒன்றை விட ஒன்று அதிக மகிமை பொருந்தியதாக உளது. பல புண்ய க்ஷேத்திரங்களில் புண்ணிய தீர்த்தங்கள் உள. பல விடங்களில் மிக்க குளிர்ச்சியான தண்ணீர் காணப்படும் வேறு சில இடங்களில் தண்ணீர் சூடுடன் கூடி இருக் கிறது.

கொடிகளிலும், பழங்கள். பூக்களிலும், கிழங்கு கள் வேர்களிலும், நீர் காண்கிறது. ஆனல் குணம் வேறு பாடுள்ளதாக இருக்கிறது

கர்ப்புடைய நீர், கடல் நீர், விஷங்கலந்த நீர், அம் ருதம் போன்ற நீர், இப்படி பலவிடத்து நீர் பலவிதம்,

பலவகை, கரும்பிலுள்ள பல சாறுகள் பலவித கனி களின் ரஸங்கள், கோரஸம் எனும் பால், தயிர், நெய் இவைகளிலும் ரஸம் நிரம்பியுள்ளது. மேலும் தேன், ரஸம், மூன்று வகை வெல்லத்தில் கசியும் ரஸம். பல முத்துக்களிலும் காணும் நீரோட்டம், இரத்தினங்களி லுள்ள நீர், பல ஆயுதங்களில் தோன்றும் நீரோட்டம் இப்படி பலவகைப்பட்டவை. மேலும் சுக்கிலம், சோணிதம், உமிழ் நீர், சிறு நீர், வியர்வை இப்படி வேறு விதவிதமான நீர்களைக் காணலாம். பிரித்துப் பார்க்கப் பார்க்க எண்ணிக்கை வளரும்.

ஜீவராசிகளின் உடலிலும் நீர் நிரம்பியுள்ளது. பூமியின் உள்ளும் நீர் நிறம்பியுள்ளது சூரியன், சந் திரன் இவர்கள் கூட நீரின் துடர்பு உடையவர்கள்.

உப்புக்கடல், பாற்கடல், மதுக்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், கறும்புச்சாற்றுக்கடல், இனிய நீருள்ள சுத்தக்கடல் இப்படி தண்ணீர் எங்கும் நிறைந்து உள் ளது. இப்படி விஸ்தரிக்கப்பட்ட ஜலமானது. உற்பத்தி யானதிலிருந்து கடைசீவரை இருக்கிறது. நடு நடுவே நன்கு புலனுகிறது. பல இடங்களில் மறைவாகவும் உள்ளது. எப்பேர்பட்ட விதையுடன் கூடியதோ அந் தக்குணத்தைப் பெற்று தோற்றமளிக்கும். மிக்க இனிப்புடன் கருப்பஞ் சாற்றில் தோன்றும். (பாகற் காயில் மிக்க கசப்புடன் தோற்றும்)

ஜலத்தினுல் ஆக்கப்பட்டுள்ளது இவ்வுடல், மேலும் அதன் வளர்ச்சிக்கும் தண்ணீர் வேண்டியிருக்கிறது. ஜலத்தின் உற்பத்தியை எவ்வளவு விஸ்தரிப்பாக விவரித்திடினும் அது குறையுள்ளதாகவே இருக்கும்.

ஜலமானது தாரகமாகவும், மாரகமாகவும், பல சௌக்யத்தை அளிப்பதில் வல்லதாகவும் இருப்பது. அதைப் பற்றி விசாரம் செய்வது மிக்க சிரம சாத்தியம்.

பூமியில் பலவகை சப்தஜாலங்களுடன் ஓடுகின்றது. சில விடங்களில், 'கல கல' வென்றும், சில விடங்களில் 'சல சல' வென்றும் சப்தித்துக் கொண்டும் ஓடும். 'ஹோ' என்ற இரைச்சலுடன் நீர் வீழ்ச்சியாக விழுகின்றது.

மடுவுகளில் ததும்பி இருக்கிறது ஜலம். பரந்த குளங்களில் கம்பீரமாய் தோற்றம் அளிக்கிறது. கால்வாய்களில் துள்ளித்துள்ளி ஓடுகிறது. சில நதிகள் பூமிக்குள் பங்கம் பிரவாஹிக்கின்றன. பக்கத்துத்தரையைத் தோண்டினுல், ஜலம் வெளியாகிறது. பூமியின் உட்புறத்திலும் நீர் நிலைகள் உள. யாரும் பார்த்தோ கேட்டிருக்க மாட்டார்கள். சில விடங்களில் இடி விழுந்து, நீரூற்றுக்கள் மேல்நோக்கி பீச்சுகின்றன. பூமியின் அடிப் பாகத்தில் நீர், நடுமையத்திலும் நீர்; இப்படியாக பூமியில் எங்கும் ஜலமதிகமாவே கணப்படுகிறது.

சுவர்க்கம், பூமி, பாதாள உலகம் இம்மூன்று உலகத்திலும் ஆறு ஓடுகிறது. ஆதாரமற்ற வெட்ட வெளியில் மேகங்கள் நீரைப் பொழிகின்றன.

பூமிக்கு மூலகாரணம் ஜலம். ஜலத்திற்கு காரணம் நெருப்பு. நெருப்பின் மூலம் காற்று. ஒன்றைக் காட்டிலும் ஒன்று உயர்வு. இதை எல்லாவற்றிற்கும் பரமேச்வரன், மஹாபூதங்கள் அவனைக்காட்டிலும் உயர்ந்தவை. அதையும் விட உயர்ந்தது பாரத்பரம் எனும் "பரப்பிருமம்"

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
ஆபநிருபணம் கூறியது
சர்க்கம் 4 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாரும் தசகத்தில் ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

வைச்வாநரன் உலகத்தில் மிக்க மகிமை வாய்ந்தவன். ரகுநாதனின் மாமனாரும் சகலவிடத்தில் வ்யாப்தனானவன். விச்வம்பரன். சீதா தேவியாரின் தந்தையுமவனே. கடவுள் அவனை முகமாகக் கொண்டு உணவை ஏற்றுக் கொள்கிறான். யாக, யஞ, ஹோமங்களில் அக்னியில்தானே சகலத்தையும் கடவுளுக்கு சமர்ப்பிக்கின்றனர். ஜீவராசிகள் உணவை வாயின் வழியே ஏற்றுக்கொள்வதைப் போன்று அக்கினியின் மூலமே, தனக்களிக்கும் உணவை கடவுள் ஏற்றுக் கொள்வதால் கடவுளின் முகம் போன்றவனாகிர் அக்கினி.

ரிஷி முனிவர்களின் கர்மாக்களுக்கு பலனளிப்பவர் அக்னிதேவர். இருள், பனி, பிணி இவைகளை அகற்றுபவர். விசுவஜனங்களை பரிபாலிப்பவரும் இவரே. உலகினில் பல வருணங்கள் விருப்பினும், பிர்மாதிகள் முதற்கொண்டு இவனையே பரம சுத்தனாகக் கருதுகின்றனர். ஜீவராசிகளிடமும் இவர் பேதமற்று விளங்குகிருர். அக்னியினுலேயே தான் உலகம் நடக்கிறது. ஜீவராசிகள் உணவையுண்டு திருப்தியடைகின்

றனர். அக்னியினலேயே இப்பூஉலகம் தோற்றியது ஜீவராசிகள் வசிக்க ஸ்தலம் கிட்டியது. தீவர்த்திகள், தீபங்கள் முதலியவைகளும் ஏற்பட்டன. வயிற்றில் வளரும் ஜடராக்னிதான் பசிக்குக் காரணம். அக்னி இருப்பதால்தான் உணவு உருசிக்கிறது. (அக்னி மாந்தியம் முதலிய பிணிகள் கண்டால் உணவு வேண்டி இருப்பதில்லை.)

உடலில் எங்கும் அக்னி வியாபித்துள்ளது. இவ்வக்னியின் காரணத்தினலேதான் சகலரும் ஜீவித்திருக்க முடிகிறது. அக்னி இல்லையேல் எல்லோரும் மரிக்க நேரிடும்.

முதலில் அக்னிக்குறைவு ஏற்படுகிறது, பிறகு பிணிகள் மனித உடலில் உலவுகிறது. சகல பிராணிகளுக்கும் இது அனுபவத்தில் உள்ளது. அக்னி உள்ள வரை, எதிரிகளை வெல்லுவதில் ஐயமில்லை அக்னி உள்ள வரை வாழ்வும் உண்டு. பலவித ரஸங்கள் உற்பத்தியாவதும் அக்னியைக் கொண்டே. பெரும் வியாதிகள் அக்னியினல் சொஸ்தமாக்கப்பட்டன.

எல்லோரிலும் விசேஷ வலுவுடையோன் பகலவன். அவனிடமும் அக்னியின் ஒளியைப் பார்க்கிறோம். இருள் நிறைந்த இரவில் அக்னியின் ஒளிதான் மனிதனுக்கு உதவுகிறது. எந்த வருணத்தினன் வீட்டிலும் அக்னியை எடுத்து வரலாம் அக்னி எவ்வெப்போதும், எங்கெங்கும் சுத்தமானவன்.

பல யாகங்கள், அக்னிஹோத்திரங்கள் ஆகியவை வைகளை முறையுடன் செய்துவரின் அக்னிதேவன் திருப்தியடைகிறான். பல நன்மைகளை அவன் செய்கிறான்.

தேவர்களாயினும், தானவர்களாயினும், மனிதர்களாயினும், அவர்களுடைய காரியமெல்லாமே அக்னியிலுலேதான் நடைபெறுகிறது. ஆனதினுல் அக்னியின் தேவை சகலருக்கும் உண்டு.

கலியாண கேளிக்கைகளில், வாண வேடிக்கைகளைக் காண்கிறோம். அங்கேயும் அக்னிபகவானின் லீலையின் அம்சத்தையே காண்கிறோம்.

பல பிணிகளில் அக்னி அம்சம் பொருந்திய சூடான மருந்துகளைக் கொண்டு பிணி அகற்றப் படுவதும் எதனுல்? அக்னியின் சக்தியினுலேயே. அந்தணர்களுக்கும், சூரியனும், அக்னியும் எக்காலமும் பூஜிக்க வேண்டிய தேவதைகளாக நியமித்திருப்பதும் இதனுலேயே. இங்கே அநுமானம் செய்ய துளிகூட இடம் கிடையாது.

உலகத்தில் ஜாடராக்னியாயும், கடலில் விடவாக்னியாயும், உலகத்திற் வெளிப்புறம் சுற்றிவர ஆவரண அக்னியாகவும், சிவபெருமானின் மூன்றும் கண்ணில் மின் ஒளி கொண்டும் இவன் எங்கும் நிறைந்தவன்.

குப்பிகளினின்றும் தோற்றுவன், உயர்ந்த கண்ணுடிகளினின்றும் தோற்றுவிக்கலாம். கட்டைகளை கடைவதால் அக்னி உண்டாகும். சிக்கிமுக்கிக் கற்களை உராய்ந்தும் அக்னியை தோற்றுவிக்கலாம். அக்னி எங்கும் நிரம்பியுள்ளவன். உராய்வதினுல் வெளியில் தோற்றமளிப்பவன்.

அக்னி கலந்த விஷத்தை தன் சீற்றலினுல் கக்கும் பாமபின் சீறலால், மலைகளில் நெருப்புப் பற்றிக்கொள்கிறது. அக்னியைக் கொண்டு பல நன்மைகளை அடையலாம். அதுபோலவே பல தீமைகளையும் விளைவிக்கும் அக்னி. ஆகையால் பகுத்தறிவினுல் அக்கினியின்றும் நன்மையோ தீமையோ காணலாம்.

பூவுலகில், சிறியவர், பெரியவர்கள் எல்லோருமே அக்னியினுல் நன்மையடைகின்றனர். அக்னியினுலேயேதான் பரமேசுவரன் சந்துஷ்டி அடைகிறுன்.

அக்னியின் பெருமை இப்படியாக வர்ணிக்க அசாத்தியமானது. எவ்வளவு சொல்லினும் அது குறைவுடன் தான் நிற்கும். சொல்லாததே அதிகமாகவிருக்கும். உயிருடன் வாழும்போது பலவிதங்களில் உபயோகப்படும் அக்னி, இறந்தபின் சடலத்தை எரிக்கும் காரியத்தில் உபயோகப்படுகிறுன். எதையும் சாம்பலாக்கும் பெரும் சக்தி படைத்த இவன் புகழை எவ்வளவென சொல்லமுடியும்?

படைப்பை எல்லாம் அழிக்க அக்னிதேவன் தான் முன்வரவேண்டி இருக்கிறது. இவன் வெகுண்டால் ஒன்றும் மிச்சப்படாது.

பலஹோமங்கள், வீடுதோறும் வைதிவ தேவ சடங்குகள், பல க்ஷேத்திரங்களில் தீபம் கொளுத்துதல், கடவுளுக்கு ஆராதனைராக திவாராதனை, சூடம் கொளுத்துவது, ஆலத்திகள் இவைகளுக் கெல்லாம் அக்னிதான் வேண்டி இருக்கிறது. எட்டுவிதமான பிரகிருதிகளைக் கொண்ட இப்படைப்பு, இம்மூவுலகங்கள் முழுவதும் அக்னி வியாபித்திருப்பவன். இவன் பெருமைச் சொல்லச் சொல்ல வளர்ந்து கொண்டே போகும்.

நான்கு கொம்புகளும், மூன்று பாதங்கள், இரு சிரசுகள், ஏழுகரங்கள் உடையவனென்று அக்னி பகவானை சாத்திரங்கள் வர்ணிக்கின்றன. இப்படியான இவ்வக்னி பகவானைப் பற்றி தெரிந்தவரைச் சொன்னோம். குற்றங்குறைகளை கேட்போர்கள் க்ஷமிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

'அக்னிஸ்துதி' கூறியது

சர்க்கம் 5 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாரும் தசகத்தில் ஆரும் சர்க்கப் பிரசங்கம்.

வாயுதேவன் மிகவும் போற்றப்பட்டவன். இவனுடைய சுவபாவம் மிக்க விசித்திரமானது, வாயுவினால் சகல ஜீவன்களும் வாழ்கின்றன. [1] உச்சுவாஸ, [2] நிச்சுவாஸம் வாயுவினால்தான் ஏற்படுகிறது. பலவித வித்தைகள் கற்க ஏதுவாகிறது. உடலில் சலனம் ஏற்படுவதே வாயுவினால்தான். அசைவு, வளைவு, பரவும் தன்மை, அடைப்பு, [3] சங்கோசிக்கும் சக்தி, பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் எனும் வாயுபேதங்கள், நாகன், கூர்மன், கிருகலன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற தனித்தனி தன்மையுடன் கூடியது வாயு. பிரம்மாண்டத்தில் முதலில் தோன்றிய வாயு, அங்குள்ள தேவர்களுக்கு போதுமான அளவில் வியாபித்து, மேலும் பிண்டம் எனும் பூ உலகிலும் தோன்றினன். அவன் அநேக குணங்கள் உடையவன்.

சுவர்க உலகில் வாழ் தேவர்கள், தன்னலமுடைய அசுரர்கள், பூ உலகில் வாழ் மாந்தர்கள், புகழ்பெற்ற

---

1. மேல் நோக்கி உள் இழுக்கப்பட்ட மூச்சு.
2. கீழ்நோக்கி வெளியே விடப்பட்ட மூச்சு.
2. சுருங்கும் தன்மை

அரசர்கள், (இப்படி மனித வர்க்கத்திலும் பாகு பாடு) பலவகை விலங்குகள், காடுவாழ் விலங்கினம், நீர்வாழ் பிராணி இனம் இப்படி பல விதம். இவைகள் எல்லாமே வாயுவை ஆதாரமாகக் கொண்டுள்ளன. புள்ளினங்கள் எல்லாம் வாயுவின் பலத்தினுல் பறக்கின்றன.

அக்னி வலுவடைய வேணும் என்ருல் வாயுவின் உதவி வேண்டும். மேகங்கள் வாயுவினுலேயே உற்பத்தியாகின்றன. (நீரிருந்து ஆவியை ஆகாயத்திற்கு எடுத்து செல்வது வாயுதான்) மேலும் மேகங்களை குளிர வைத்துப் பொழியும் படி செய்பவனும் வாயுவு தான். இவனுக்குள்ள அதிகாரம் மற்ற எவனிடமும் காணேம். ஆயினும் ஆத்துமாவின் அதிகாரத்திற்குட்பட்டு சரீரத்தில் இயங்குகிருன் எனினும் சர்வவியாபியாக இருக்கும் தன்மையில் இவனுக்கு ஈடாக ஒருவரும் இல்லை.

வாயுவின் சக்தியினுலேயே, முகில் படைகள் மலை உச்சியினின்றும். உலகத்திற்கு நன்மை செய்யும் பொருட்டு, கிளப்பப்படுகின்றன. அவைகள் கர்ஜிப்பதும், மின்னல் ஒளி வீசுவதும் வாயுவினுல் தான். வாயுவினுலேயே, சந்திர சூர்யர்கள், நக்ஷத்திர கூட்டங்கள், கிரக மண்டலங்கள், பிர்மாண்டத்தில் தோற்றும் பலவித கலைகள் அனைத்தும் வாயுவினுலேதான் இயங்குகின்றன.

பஞ்சபூதங்களின் சேர்க்கையினுல் ஆகிய இவைகள் எல்லாம் வாயுவின் காரணத்தினுலேயே ஒன்று பட்டன. அவைகளை வேறுபடுத்திக் காண்பிக்க முடியாது. இச் சிக்கல் ஏற்படக்காரணம் வாயுவேதான்.

பெருங்காற்று 'சோ' வென்று வீச பயங்கரமான, பனிக்கட்டி மழையாகி பொழிகின்றது. தண்ணீருக்கு வாயுவென்ற நாமரைதான் ஆதாரம். தண்ணீரின் ஆதாரத்தில், இப்பூமிமையை ஆதிசேஷன் தாங்கி வரு கிருன். ஆதிசேஷன் உணவு வாயு. வாயுவை உட் கொண்டு அவனுடைய உடல் பருக்கிறது. அந்த வாயு வின் பலத்தினுல் அவன் பூமியை தரிக்கின்றனன். மஹாகூர்மம் வாயுவின் பலத்தினுலேதான் பிர்மாண் டத்தையே பிரட்டும் சக்தி கொண்டனன். பூமண்ட லத்தை தன் கோரைப் பற்களினுல் வராஹப் பெரு மான் தூக்கினுன் எனில் அதுவும் வாயுவின் பலத்தி னுலேயே.

விவேக பலத்தினுல் பகுத்தறியும் ஞானிகள் அந்தராத்மா, பிரும்மா, விஷ்ணு, மகேச்வரன் எல்லோ ருமே வாயுரூபமாய் இருப்பதை அறிவார்கள். முப் பத்து மூவாயிரம் தேவர்கள். எண்பத்தெட்டு ஆயிரம் ரிஷிகள், சித்தர்கள், யோகிகள், அனைவரும் வாயுரூபர் கள் தான். ஒன்பது கோடி காத்யாயனிக்கள், ஐம்பத் தா.று கோடி சாமூண்டிகள், மூன்றரை கோடி பூத யோனிக்களில் ஜனித்த 'பிராணிகள், எல்லாம் வாயு

ரூபிகள். பூதங்கள், தேவதைகள், அநேக சக்திக்கள் எல்லாம் வாயு ரூபமாகவே இருக்கின்றனர். மேலும் இப்பிரம்மண்டத்தில் எவ்வளவு ஜீவன்கள் வாயு ரூப மாயுளர் என்பதைக் கணக்கிடமுடியா!

உலகம் முழுவதும் பரவி, பிர்மாண்டித்திலும் உலாவி, இதற்கப்பால் உறை போன்று வியாபித்திருப் பது வாயு. எல்லா விடங்களிலும் அவன் இருக்கின் ருன். அவன் மகா சமர்த்தன்.

இந்த சாமார்த்தியம் பொருந்திய வாயுவின் புதல் வனே அனுமன். இவன் சித்தம் எப்போதுமே ஸ்ரீ ராமஸ்மரணையில் ஈடுபட்டுள்ளது. தந்தையைப் போன்று கியாதி உடையவன் அனுமன் இருவரு டைய பராக்கிரமத்திலும் துளிக்கூட வித்தியாசம் காண முடியாது.

அனுமனுக்கு 'பிராண நாதன்' எனப் பெயரும் உண்டு. பிராணனுகிற வாயுவின் தலைவன் என்று பொருள். ஜீவன் இல்லை எனில் எல்லாம் வீண் ஆனதி ஞல் இவன் மிக்க வல்லவன். ஓர் காலத்தில் அனுமா னுடைய உயிர்க்கு ஆபத்து வந்தது. அச்சமயம் அவன் வாயுவையே உள்ளடக்கி விட்டான். இதனுல் சகல தேவதைகளுக்கும் திணறல் வந்து விட்டது. உயிருக்கு தீங்குவரும் போல் தோற்றியது. எல்லோரும் வாயு

தேவனை துதிக்கலாயினர் வாயுதேவனும் சந்தோஷப் பட்டு தேவர்களை இந்த இன்னல்களினின்றும் விடுவிக்க லாயினன். ஆனாலும் அனுமன் மிகவும் பிரதாபசாலி. ஈசுவரனின் அவதாரம். தேவர்கள் அனைவரும் இவ ருடைய பராக்கிரமத்தைக் கண்டு ஆச்சரியமுற்றனர்.

தேவர்கள் எல்லோரும் சிறையில் இராவணனால் அடைக்கப்பட்டனர். அனுமார் அவர்களைக்காண நேர்ந்தது. இலங்கை முற்றிலும் அரக்க கூட்டங்களை அழித்து விட்டனர். தேவர்களின் பக்ஷத்தை ஏற்றுக் கொண்டு அவர்களின் வேரைத்தேடி தன் வாலின் உதவியினாலேயே துளைத்தார். மேல் நோக்கிய வாலு டன், (கொடி போன்ற) தோற்றமளித்த அவ்வனுமனைத் தேவர்கள் போற்றினார்கள். துதித்தார்கள்.

தன் சிங்காதனத்தில் இறுமாப்புடன் அமர்ந்திருந் தான் இலங்கை வேந்தன் இராவணன். அவனுடைய இறுமாப்பையும் இறங்க வைத்தான். இலங்கையில் தன் மூச்சையையும், சுற்றி இருக்கும் ஜலத்தையும் நிரோதனம் செய்யவே, நீரற்று போயிற்று இலங்கை யில். இவ்வித பராக்கிரமத்தைக் கண்டு தேவர்கள் திகைத்தனர். தங்களுக்கு ஆதரவு கிடைத்தது என்று பரமதிருப்தி அடைந்தனர். பரமாத்துமாவான ஸ்ரீ ராம பகவானைக்குறித்து, அனுமனுக்கு மேலும், மேலும் அருள் புரியுமாறு துதித்தனர். அரக்கக்கூட்டங்களை

ஒழித்து, தேவர்களை விடுதலை செய்தனன். மூவுலகிலும் சகல ஜீவராசிகளுக்கும் இதனால் நன்மை கிட்டியது.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

வாயுதுதி நிருபணம் செய்தது

சர்க்கம் 6 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாறும் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்,

பிருதிவியின் மூலம் ஜலம். ஜலத்தின் மூலம் அக்னி. அக்னியின் மூலம் வாயு. இதை முன்பு நிரூபணம் செய்தோம். இப்போது வாயுவின் மூலத்தைக் கூறுவோம். அதுவோ கேவலம் உள்ளே வசிக்கும் அந்தராத்மவே. எல்லாவற்றிலும் மிக்க சஞ்சலமானது. அதுவருவதும் போவதும் தெரிவதில்லை (கண்ணுக்கு) ஸ்திரமாக ஓர் விடத்தில் நிற்பதில்லை. வேதங்களினாலேயும் அவன் உருவம் யாதென்று அனுமானிக்கக் கூடுவதில்லை.

பரப்பிரம்மத்தினிடம் தோன்றிய முதற்சலனம். இதுவே அந்தராத்மாவின் குறி. அவன் ஜகதீசன். ஜகதீசனின்றும் முக்குணங்கள் தோன்றின. த்ரிகுணங்களினின்றும் பூதங்கள் பிறந்தன இப்பூதங்களின் ஸ்வரூபங்களை விவேகத்தினாலறிய வேண்டும்.

இவைகளில் முக்கியமானது ஆகாச பூதம். ஐம்பூதங்களில், மற்ற நான்கைக் காட்டிலும் ஆகாச பூதம் விசேஷமானது. இதனால்தான் மற்ற பூதங்கள் பிரகாசிக்கின்றன. 'ஏகோ விஷ்ணுர் மஹத் பூதம்' என்ற

அந்த ஆகாச தத்துவத்தை பாராட்டுகின்றனர். இது எங்கும் வியாபித்துள்ள போதிலும், அதை நன்று சோதித்துப் பார்த்தால்தான் அது இயங்குவது விளங்கும். ஆத்துமாவின் சக்தியின் முன் வாயுவின் பெருமை எங்கே? அதைப் புரிந்துகொள்வது கடினம். இவ்வாத்துமா எனக்கூறப்படும் தத்துவமின்றி ஒன்றும் நடவாது. இதைக் கண்ணில் பார்க்கவோ, ஸ்பரிச உணர்ச்சியினுல் தொட்டுப் பார்த்து தெரிந்து கொள்வதென்பதோ முடியாத காரியம். மறைமுகமாகவே அது சஞ்சரிக்க பிண்ட பிர்மாண்டங்களில் வியாபித்து நின்றது. நானுவித சரீரங்களில் வசித்தது. உலகில் மிக்க விவேகமான புருஷர்களால் மட்டும் கண்டறியப்பட்டது. கல்பாந்தத்திலும் கூட இவ்வாத்துமாவின்றி தேகம் நிலைக்கமுடியாது. பிருகிருதியானது எட்டு வகையில் இயங்குவதைக் காண்கிறேம். முதலிலிருந்து இறுதிவரை சகலமும் ஆத்துமாவின் செயலே. ஆத்துமாவையும் தாண்டி அப்பால் பட்டு நிர்விகாரமான பரப்பிர்மம் தான் உளது.

ஆத்துமா சரீரத்தில் வசித்து, இந்திரிய சமூகங்களை இயக்குவிக்கிறது. தேஹாத்மச் சேர்க்கையினுல் சுக துக்கங்களையும் அனுபவிக்கியது.

ஏழு உறைகள் (அஞ்சுகம்) கொண்டது இந்த பிர்மாண்டம். அதில் ஆத்மா சிரேஷ்டன். இது விவேகத்திஞல் புரிய வரும்.

ஒலியினுல் கேட்டுத் தெரிகிறது. தெரிந்தும் பதிலும் கேட்ட ஒலிக்குக் கொடுக்கிருன். கடினம், மிருது, சீதம், உஷ்ணம் இவைகளையும் அறிகிருன், தோல்-த்வக் எனும் இந்திரியத்தினுல். கண்களால் நிரம்பப்பொருள் பெருள்களைக் காண்கிருன். பல பதார்த்தங்களை பரீக்ஷித்துப் பார்க்கிருன். நல்லது கெட்டது, ஔசத்தி தாழ்மை என்பதெல்லாம் மனதினுல் அறிகிருன்.

பல விதமான பார்வைகளை உணறுகிருன். க்ரூரமான பார்வை, சௌம்யமான பார்வை கபடமானது, கிருபையுடன் கூடியது பலவகையான திருஷ்டிகள். இவைகளின் வித்தியாசத்தையும் அறிகிருன்

நாக்கின் மூலம் பல சுவைகளை அறிகிருன். தனித்தனியாக அதைப் பிரிக்கிருன். புரிந்ததைப்பற்றி வர்ணிக்கத்துடங்குகிருன்.

சிறந்த உணவின் வாசனை, பல பழங்களின் நல்மணம். முகரும் இந்திரியத்தின் வழியே அறிகிருன்.

நாக்கினுல் சுவை உணருதலும், பேசுதலும் கைகளால் கொடுப்பதும் வாங்குவதும் காற்களினுல் வருவதும், போவதும், முதலிய செய்கைகளை எப்போதும் செய்கிருன். ஜனேந்திரியங்களால் சிற்றின்பங்களையும் குதம் எனும் இந்திரிய வழியே மலங்களை கழிப்பதும், மனதில் கற்பனைகள் பலதும் செய்கிருன்.

இவ்விதமான பல வியாபகங்களை மூவுலகிலும் செய்பவன் ஒருவனே. அவனுடையமகிமையை வருணிக்கவோ நிகரானவனோ ஒருவரும் கிடையது. அவனுடைய வியாபகத்தின் அளவையோ அவனுடைய சுறுங்கும் தன்மையின் திறமையையோ எடுத்துச் சொல்லக் கூடியவர் எவர் இருக்கிறார். முன்பும் இருந்ததில்லை, இனியும் ஏற்படப்போவதில்லை.

பதினான்கு வித்யைகள், அறுபத்து நான்கு கலைகள், திறமையை விளக்கும் பல கலைகள், வேத சாஸ்திர புராணங்கள் இவைகளில் ஆர்வம் அவனின்றி இருக்க முடியா! இவ்வுலக வாழ்க்கைக்கான நடத்தையைப் பற்றியும், பரலோகத்தில் நடக்கக் கூடிய சராச்சர விசாரமும் ஆகிய இரு உலகைப்பற்றிய முடிவான தீர்மானமும் செய்து முடிப்பவன ஆத்துமாதான். ஆத்மாவின் செயலாற்றல் தான் நாலுமதங்களும் அவைகளில் தோன்றும் வேற்றுமைக்குக் காரணமும். ஆத்மாவினுல் ஞான விவாதங்களும், சர்ச்சைகளும் நடைபெருகின்றன. பலவித கிர்மானங்களும் பாகு பாடுகளையும் தோற்றுவிப்பவன் ஆத்துமாதான்.

முக்யமான தத்துவமதை விஸ்தாரிக்கையில் அதற்கு ஓர் உருவம் உண்டாகிறது. எழுதுவது, படிப்பது, மனப்பாடம் செய்வது, கேட்டுத் தெரிந்து கொள்வது, பிறருக்கு விளக்குவது, கருத்தைத் துலக்குவது, பாட்டுப் பாடுவது, வாத்தியங்கள் வாசப்பது நாட்யமாடு

தல் முதலிய எல்லாச் செயல்களில் ஈடுபடுவதும் ஆத்மா வை முன்னிட்டே.

பலவித சுகங்களைக்கண்டு ஆநந்த மடைகிறான் மனிதன். அப்படியே பலவிததுக்கங்களினால் கஷ்டத்தை யும் அடைகிறான். பல விதமான சரீரங்களை தரித்து, விட்டு விடுகிறான். இவனே பல மதங்களை தரிசிறான். விடுகிறான். ஒருவனே துடர்ந்து நடிக்கிறான். நாடகம், நாட்டியம், கலைகள், நுட்பத்திறன்கள் எல்லாம் அவனின்றி நடவா. அவன் (ஆத்துமா) பல் ரூபங்களைக் கொண்டான். பல எருவங்களில் பலவித போக்கையுடையவனாகக் காண்கிறான். பல உருவங்களில் மிக்க கீர்த்தி வாய்ந்தவனையும் காண்கிறான். மிகுந்த பிரதாப சாலியான இவன் பயங்கொள்ளியாகவும் தோற்றமளிக்கிறான்.

ஒருவனே இப்படியாக எப்படி விஸ்தரித்தான்? எப்படி இப்பேர்பட்ட பல வேடிக்கைகளைக் காண்கிறான்? விஸ்தரிக்க ஏதுவான பார்யைக் காணோமே! எப்படி விஸ்தரிக்கிறான்?

ஸ்தீரீகளுக்கு புருஷன் வேண்டும். அதேபோல் புருஷனுக்கும் ஸ்திரீக்கள் வேண்டும். இப்படியாக பரஸ்பரம் ஆசையினால் சந்தோஷத்தை யடைவதை நாம் காண்கிறோம். ஸ்தூலமாக காணும் இவ்வுலகிற்குத் தான் இம்மாறுபாடு (ஸ்த்ரீ – புருஷன்) இம்மாறுபாட்

டைக் கொண்டு தான் உலகம் நடைபெறுகிறது. (எனினும இவ்விருவர்களிலும் உள்ளிருப்பவன் ஒருவனே). புருஷர்களுடைய ஆத்மாவானது ஆண் பாலாகவும் ஸ்திரீகளுடைய ஆத்துமாவானது பெண் பாலாகவும் மூடர்கள் கருதுகிறார்கள். ஆனால் இச்சூக்குமத்தைப் பற்றி தெளிவுகாணும் வரை விசாரணை செய்ய வேண்டும்.

ஸ்தூல உலகத் தோற்றத்தினால் தான் இம்மாறுதல் புலன் படுகிறது. சூக்குடத்தை சோதிக்கப்போனால் எல்லாம் ஒன்றுதான். மாறுதலே கிடையாது, என்பது நிச்சயமாக முடிவுக்கு வருகிறது. ஓர் ஸ்திரி மற்றொரு ஸ்திரீயைப் போகிப்பதில்லை. ஸ்திரீயின் மனது ஓர் புருஷன் பால்தான் போகிறது. ஸ்திரிக்கு எப்படி புருஷனிடம் நாட்டம் கொள்கிறதோ அதேபோலவே புருஷனுக்கும் ஸ்திரீயினிடம் தான் பற்றுதல் உண்டாகிறது. இந்த பிணைப்பானது உள் அந்தரங்கத்தில் உண்டாவது ஆகையால், சூக்குமத்தைத்தான் இவ் விஷயத்தில் சோதனை செய்ய வேண்டும். புருஷன் இச்சை எல்லாம் பிருகிருதியை நோக்கிப் போவது போன்று, பிருகிருதியின் இச்சைப் புருஷன்பால் உளது. இதைத்தான் பிருகிருதி புருஷன் எனவும் பிருகிருதி புருஷ நிலையமாகவும் பண்டிதர்கள் சொல்கிறார்கள்.

பிண்டத்தைக் கொண்டே பிர்மாண்டத்தைச் சோதனைச்குள்ளாக்க வேண்டும். ஓர் அனுபவத்தைக்

கொண்டு மற்றொன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். புரிவது கடினமாயிருப்பினும், கஷ்டபட்டுப் புரிந்து கொள்ள வேண்டும். திரும்பத்திரும்ப விவரணம் செய்து நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டும். தைவத இச்சை துவக்கத்தில் இருந்தபடியினால் தான். இவ்வுலகத்திலும் அது பரிணமிக்க ஆரம்பித்தது. உலகத்தையும், அதின் தோற்றுவாய்க்கு மூலகாரணம் யாது என்பதை சோதித்துப் பார்க்கவேண்டும்.

உயர்ந்த எண்ணங்களை மனதில் பதித்துக்கொள்ள வேண்டும். பிருகிருதி புருஷன் இவர்களைப் பற்றியே சோதனை நடத்தும், சபையோர்களின் சமுசயங்கள் விலகின.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்,
மனைத்பூத நிருபணம் பண்ணைப்பட்டது
சர்க்கம் 7. முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாறும் தசகத்தில்
எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

மங்கள மூர்த்தியான கணபதியைத் துதிப்போம். அவருடைய ஸ்தோத்திரத்தில் புத்திக்கு ஓர் புத்துணர்ச்சி உண்டாகி, ஆத்துமாவை துதிக்கவும், பழிக்கவும் முடிகிறது. பிறகு மொழி உருவாயுள்ள வாகீச்வரி (சரஸ்வதி)யைத் துதிப்போம். அவள் அந்தரங்கத்தில் ஒளிர்பவள். பல வித வித்தைகளையும், கலைகளையும் அவள் தரித்தவள்.

எல்லோராலும் போற்றப்படுவது ஸ்ரீ ராமநாமம். உத்தமோத்தமாக கருதப்படுகிறது. இந்நாமத்தைக் கொண்டு, சந்த்ரமௌளியான சிவபெருமான் தன் சிரமம் விலகி அமைதியைப் பெற்றார். நாமாக்களின் (ஆண்டவனின் திரு நாமங்கள்) உருவமும், மேலும் மேலும் ஓங்கிக் கொண்டு போகக்கூடியது.

பராத்பரன், பரமேஷ்வரன் மூவுலகையும் தரித்துக் கொண்டவன். அவன் நாலாபுறத்திலும் வியாபித்து உள்ளவன் (எங்கும் நிறைந்தவன்) ஜீவன்கள் பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர். அதற்கு எல்லாம் காரணபூதமானதாக உயிர் இருப்பதினால்

தான். ஆத்துமா அகன்றதானல், ஜீவன் உடலை விட்டகலும். மனிதனைப் பிணம் என்பர் அப்போது. ஆனதினல் ஆத்துமாவின் இருப்புத்தான் மதிப்புக்குக் காரணம் என தெளிகிருேம்.

ஆத்ம தத்துவத்தை ஜீவாத்துமா, சிவாத்துமா, பரமாத்துமா, ஜகதாத்துமா, விச்வாத்மா, குப்தாத்மா, ஆத்மா, அந்தராத்மா, சூக்ஷ்மாத்மா என தேவர்களிடையே, தானவர்களிடையே, மேலும் மானிடர்களிடையே பாகு பாடு படுத்திச் சொல்கின்றனர். சாதாரண மானிடரிடமும் அப்படியே, அவதார புருஷர்களாகிய மகான்களிடமும் செயலாற்றம் நிகழ்த்தும் அந்த ஆத்மா ஒருவனே தான். நாத உருவினனையும், ஜோதிரூபனையும், சாக்ஷி ரூபத்துடனும், அதிகார புருஷனையும், சைதன்ய ரூபனுகவும், தன் ஸ்வரூபத்துக்கு தானே காரணமானவனுகவும், சகலத்தையும் காணும் திரஷ்டா ரூபனுகவும் அவன் தான் உலவுகிறுன் என்பதை யறிய வேண்டும். நரோத்தமன், வீரோத்தமன் புருஷோத்தமன், ரகோத்தமன், சர்வ உத்தமன், உத்தமர்களில் உத்தமனையும் மூவுலகிலும் வசிப்போனுகவும் அவன் இருக்கிறுன். பலவித காரியங்கள், பலவித தொழில்கள், பலவித அவசரஜோலிகள், பலவித சலனங்கள் எல்லாம் ஆத்மா இல்லை என்றுல் எல்லாம் மறைந்துவிடும். ஆத்மா இல்லாது போனுல் எல்லாம்

சூன்யமாகிவிடும். சடலம் தான் எஞ்சும் எல்லாம் சமாதி ஆகிவிடும். ஆத்தும ஞானம் உடைய பெரியோர்கள் எல்லாவற்றையும், மூவுலகிலும் ஆத்ம ரூபமாகவே அறிகின்றனர். ஆத்மா இன்றி சர்வமும் பாழ்தான் எனத்தெரிந்தவர்கள் அவர்கள்.

மிக்க வனப்பும், திறனும் படைத்தவன் சராச்சரங்களை எல்லாம் முற்றிலும் அறிபவன் என்றால் ஆத்ம ஒளியின் காரணம் தான் அது. ஆத்ம ஒளி இல்லை என்றால் உலகில் இருள்தான் மிஞ்சி நிற்கும். சர்வ சித்திகளைப் பெற்றான். எப்போதும் புத்தி கூர்மையுடன் இருப்போன், பலவித மாறுபாடுகள், பலவித பிளவுகள், பல வருத்தங்கள், பல மகிழ்ச்சிகள இவை எல்லாம் அந்த ஆத்துமா ஒருவனின் காரணத்தினால்தான்.

படைப்பில் மிக்க எளிய ஜீவன் தொட்டு, மிக்க சிரேஷ்டமான பிரமதேவன் வரை எல்லாரையும் செயல்பட வைப்பவன் அவனே. இப்படியாக நித்ய அநித்ய விவேகத்தை ஞானியர்கள் காண்கிறார்கள். மிக்க எழில் வாய்ந்த பத்மினியை அடைந்த ஒருவன் அவளிடம் பரம ஆசை கொண்டுள்ளான் எது வரை? ஆத்மா அந்த உடலில் இருப்பு கொண்டுள்ளவரை, ஆத்துமா விட்டகன்றதென்றால், ஒளி, அழகு இவைகள் எப்படி நிற்கும்? அவைகளும் மறைந்துவிடுகின்றன.

ஆத்மாவை கண்ணினால் பார்க்க முடியாது. அது தோற்றமளிப்பதும் இல்லை. வெளிப்படையாக அனுமானித்து அதைப் புரிந்து கொள்ள முடியாது. மனது அவன் பலத்தைக் கொண்டுதான் பலவித கற்பனைகளை செய்கிறது. ஆத்மா சரீரத்தில் வசித்துக் கொண்டு, பிர்மாண்டத்தில் தன் விசாரத்தை செலுத்துகிறது. பலவித வாஸனைகளை ஏற்படுத்துவதும், பலவித பாவனைகளை தோற்றுவிப்பதும் அதுவேதான், எண்ணிறந்த பிராணிகளின் எல்லையற்ற கல்பனைகள் எழுவதும் இந்த ஆத்மாவினாலேயே. அரசியல், நல்ல யோசனை, துராலோசனை, இரகசிய ஆலோசனை ஏமாற்றும் யோசனை எல்லாமே ஆத்துமாவினால்தான் பலம் பெறுகிறது ஒருவன் மற்றொருவனை ஏமாற்றுகிறான். ஒருவன் பரோபகாரம் செய்வதில் கண்ணுங் கருத்துமாயுள்ளான். ஒருவன் மற்றொருவனுக்குச் சாதகமாக நடக்கிறான், ஒருவன் தருணம் பார்த்து நடப்பதில் பற்றுடையோன், ஒருவன் மறைந்து மறைந்து காரியங்களில் ஈடுபடுகிறான், ஒருவன் பகைமையே என்றும் தன்னில் கொள்கிறான். ஆனால் இவ்வளவு மாறுபாடான தன்னையுடைய மனதையும், சரீரத்தையும் கொண்ட ஆத்மா தான் மாத்திரம் பேதமடைவதில்லை.

புருஷனுக்கு, ஸ்திரீயினிடம் பாசம் பற்றுகிறது. ஸ்திரீகளுக்கு, புருஷனிடம் அதே போல் பாசம் உண்டாகிறது. கன்னிப் பெண் தன்னை போன்று கன்னிப் பெண்ணையே தேடுவது என்பது அசாத்தியம். புருஷர்

களின் ஜீவன், ஸ்திரீகளின் ஜீவன் என்பதான மாறு பாடு உண்டோ! கிடையாது. மாறுபாடு, விஷய சுகத்தை அனுபவிப்பதில் சரீர சம்பந்தமாய் தான் உள்ளது. சுவையில் மாறுபாடு இருந்தாலும், அதை அனுபவிக்கும் ஆத்துமா ஒருவனே. எந்த பிராணிக்கு எது உணவோ அதில்தான் அது ஆசையுடன் இருக்கும். விலங்குகளின் உணவில் மனிதர்கள் ஆசை வைப் பாரோ? உணவின் மாறுபாட்டினுல், சரீரம் மாறு பாடடைகிறது. சில மாறுபாடுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. சில மறைமுகமாக உள்ளவை. இம் மாதிரிதான் ஆநந்தமும் மாறுபாடுடையதே.

கடலில் அநேகம் பிராணிகள் வாழுகின்றன. ஆயி னும் பூமி பாகத்தைச் சுற்றி இருக்கும் ஆவரண நீர் பாகத்தில் வாழும் ஜீவராசிகள் மிக்க பெரியவை. சூக்ஷ்ம த்ருஷ்டியைக் கொண்டு கணக்கற்ற சரீரங்கள் இருப்பது தெரியவருகின்றது. அதைக் கணக்கிட்டு புரிந்துகொள்வது என்பது முடியாத காரியம். இப்படி இருக்க அனந்தமான அந்தராத்மாவின் நிலையை எப் படிஅனுமானத்தின் பலத்தினுல் கணக்கிட முடியும்?

தேஹம், ஆத்துமா இவ்விரண்டின் கூட்டினுல் ஏற் பட்ட கார்யங்களை சூக்ஷ்ம புத்தியுடன் சோதித்துப் பார்த்தால் ஆத்மாவைப்பற்றி சிறிது தெளிவுறலாம். ஸ்தூல சூக்ஷ்மங்களினுல் ஏற்பட்டுள்ள இம்மகா குழப் பத்தில் உண்மை கண்டுகொள்வது அரிது. இக்குழப்

பப் அடியோடு களைந்துபோக வேண்டியும், அந்ராத்மா வின் உண்மையான நிலைப் புரியும் பொருட்டும் இவ்வளவு நீண்ட பிரசங்கம் செய்யப்பட்டது. மேலும் செய்யப்பட்டும் வருகின்றது. இவைகளைக் கூட அந்த அந்தராத்மாவே, பல பெரியோர்கள் வாயிலால் மிக்க கருணை கூர்ந்து செய்து வைத்ததே.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

ஆத்ம இலக்ஷணைக் கூறியது

சர்க்கம் 8 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாறும் தசகத்தில் ஒன்பதாம் சர்க்கப் பிரசங்கம்.

பிருதிவியில் பல வகைப்பட்ட மனிதர்கள் வாசம் செய்கின்றனர். அவர்களிடையே பலவாறான உபாசனைகள் காண்கின்றன. தனது பாவனைக்குத் தோன்றியபடி வெவ்வேறு விஷயங்களில் பக்திசிரத்தையுடன் பூஜை செய்கிறார்கள். தன்னுடைய இஷ்ட தெய்வத்தை வணங்குகிறார்கள். பல வித தோத்திரங்கள், ஸ்தவனங்கள் மூலம் அதை சந்தோஷிக்க வைக்கிறார்கள், ஆனால் 'கடவுள் நிர்குணமானவன் உபாசனையும் நிர்குணமானது' என்று மட்டும் சொல்கிறார்கள். இதன் உண்மை தான் என்ன? எனக்கேட்க சுவாமிகளின் பிரதியுத்தரம்.

ஸ்தோத்திரம், துதி இவைகள் இப்படித்தான் இருப்பவை. அது அவைகளின் தன்மை. நிர்க்குணன் என்ற வார்த்தை பலகுணம் கொண்டவன் எனப் பொருளுடையது- அந்தராத்மாவிற்கு பலவித குணங்கள். எல்லாமே அவனுடைய அம்சமாக விளங்குகின்றன. இவை சோதனையினால் நன்கு தெளிவுறும். எத்தனை பேர் எத்தனை வகையில் உபாசனை செய்தாலும், அது கடைசியில் அந்தராத்மாவைத்தான் போய் அடையும்

ஆனது கொண்டு தன் அதிகாரத்துக்குத் தக்கப்படி எந்த தெய்வத்தைத் தொழுதுவரினும், அவன் அந்த நிர்குணனை அந்தராத்மாவைத் தான் பஜிக்கிறான். இதில் தோற்றத்தில் மாறுபாடு இருப்பினும், முடிவில் பலன் ஒன்றுதான்.

இதைக்கேட்டு கேட்கிறவாள் சொல்லுகிறார்கள். நிர்குண உபாசனையே எல்லோரும் பின்பற்ற வேண்டியது. பல தேவதைகளை பூஜிப்பதைவிட்டுவி வேண்டும். மரத்தின் வேரில் தண்ணீரை ஊற்றினால் அது பலகிளைகளிலுள்ள பல இலைகள், காம்புகள் போன்ற அங்கங்களைப் போய் அடைகிறப் போல், ஒரு நிர்குணத்தின் உபாசனையே கைக்கொள்ள வேண்டியதுதானே ?

இதைக்கேட்டு சுவாமிகள் ப்ரத்யுத்தரம் சொல்கிறார். துளசி என்னும் செடி இருக்கிறது. அதன் மேல் ஜலத்தை விட்டால், அதாவது, செடியின் நுனியிலோ, இலைகளிலோ, தண்ணீர் விழுந்தாலும் அது மேல் பாகத்திலேயே தங்கிவிடுவதில்லை. அது திரும்பவும் வேரை நோக்கிப் போகின்றது. அதைப் போன்றே பல தேவதைகளின் பூஜையும் பரமாத்மாவையே போய் சாறும்.

இதன்மேல் கேட்கிறவாள் கேட்கிறார்கள். மிகவும் சரி. சிறு செடிகளின் மேல் நுனியில் ஜலத்தை விடுவது எளிது. ஆலமரம் போன்ற பெரிய விருக்ஷங்

களின் மேல் பாகத்தில் எப்படி ஜலத்தை விடுவது? மேல் பாகத்திற்கு ஜலத்தை எப்படி கொண்டு போக முடியும்?

இதற்கு சுவாமிகளின் ப்ரதி உத்தரம். நீரை மேல் பாகத்திற்கு கொண்டுபோக முடியாவிட்டால் என்ன. மழைகாலங்களில் மழை நீர் மரங்களின் மேல் விழுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் மேல் விழுந்த ஜலம் மேலே தங்குவதில்லை. அது வேருக்கு இறங்கி விடுகிறது. எல்லோருக்கும் வேர் எளிதில் அகப்படாது. மிக்க புண்யம் செய்தவர்களுக்கின்றி, வேர் இருக்கும் இடம் மற்றவர்களுக்குப் புலப்படாது. விவேகத்தினால் தகுதி வாய்ந்த சாதுகள் மனதுத்தான் வேரைக்காணும். எப்படியும் மரத்தின் திருஷ்டாந்திரத்தினால், தண்ணீர் எங்கு, எப்படிவிடப்பட்டாலும் அது வேரைத்தான் அடைகிறது. அப்படியே பத்தியுடன் செய்த தேவதைகளின் உபாசனைகள், பலவிதப்படினும் அது ஒரே பரமாத்வைத் தான் போய் சேருகிறது.

கேட்கிறவாள் சமுசயங் கேட்கிறார்கள். ஜனங்கள் சகுணமானதை நிற்குணமானது என்று எப்படிச் சொல்கிறார்கள். நிர்குணத்தின் முதல் முதல் மாறுபாடு தானே சகுணம் என்பது நிர்குணத்தின் சஞ்சலம் தானே சகுணம்? அப்படி என்றால் சகுணத்தின் காரணமாக எப்போதும் நிர்குணம் இருப்பது தானே?

சுவாமிகள் ப்ரத் யுத்தரம் சொல்கிறார்கள். இது சரிதான் இதை நன்று விசாரித்துப் பார்க்க வேண்டும். [1]சாரச்சாரம் எது என்பதை புரிந்து கொண்டு, சாரத்தை மட்டும் கிரகிக்க வேண்டும். அதாவது 'தத்துவமசி' முதலிய வாக்கியங்களின் பிர்மத்திடம் ஐக்கியம் நிறுவிய பின் சகுணம் நிர்குணம் என்ற மாறுதல்கள் அங்கு தோன்றுவதில்லை. இது கேவலம் பெயரினால் உண்டாகும் மாறுதல். இதை விவேகத்தின் பலத்தினாலேயே உணர வேண்டும். பணியாளின் பெயர் 'ராஜா' எனவிருப்பின் அவன் உண்மையான அரச பதவியடைந்தவனாக மாட்டான். இது வீட்டில் அவனுக்கு செல்லமாக வைத்தப் பெயர் ஆனதினால் சகுணத்தை நிர்குணம் என்ற உடன், அது நிர்குணமாகி விடமுடியாது. கல்பாந்தத்தில் (கல்பத்தின் முடிவில்) பிரளயம் நிகழ்ந்த பிறகு மிகுதியாக நின்றது எதுவோ அதுவே நிர்க்குணப் பிர்மம், இதுவன்றி மிகுதி எல்லாம் மாயைதான்.

சகுணம், நிர்குணம் இதன் மாறுபாடு வார்த்தைகளுக்கப்பால் பட்டது. வார்த்தைகளால் அதை விளக்குவது கடினம். உலகின். பலவித சம்பிரதாயங்கள், மதங்கள். வழிகள் உள்ளன. பெயரினால் (வார்த்தைகளினால்) அவைகள் மாறுபாடடைந்து இருக்கின்றன. இவைகளின் பெயரில் உள்ள மாறுதல்களையும் பின்பற்றும் வழிகளிலுள்ள வித்தியாசங்களையும் எப்படி

---

1. உபயோகமுள்ளதும், அற்றதும்.

விளக்கிக் கொண்டு போக முடியும்? சேனை, நகரம், கடைவீதி, திருவிழாக்கள், புனிதமான யாத்திரைகள், இப்படியாக பல வித சப்தங்கள். பெரும் மழை பெய்து நடுநிசியில் ஓய்ந்து விட்டால் அநேக பிராணி களுடைய சப்தங்கள் கேட்கின்றன. இதை எல்லாம் புரிந்து கொள்வது எப்படி? பூமியில் பல தேசங்கள், பல மொழிகள், பல ரிஷிகள், பல விசாரங்கள் கொண்ட அநேகர், அநேக மதங்கள், அதை எல்லாம் புரிந்து கொள்வது கடினம். பறப்பன, ஊர்வன, நீரில் வாழ்வன என பலவகை பிராணிகள் உலகில் உள்ளன. பலவகைப்பட்டதும், நிறத்திலும் தோற்றத் திலும் மாறுபாடுள்ள பல ஜந்துக்கள் உள இவைகளைப் புரிந்து கொள்வது சாத்தியமானதா? மழை பெய்த உடன் பலவித முளைகள் விதையினின்றும் பூமியில் வெளிவருகின்றன. அவைகளை எல்லாம் புரிந்து கொள்ள முடிகிறதா? ஐந்து பூதங்களினாலும், முக் குணத்திலும் தோன்றிய இப்படைப்புக்குக் காரணம் மூல மாயை. இது சொல்லொணா மாறுபாடுகளைக் கொண்டு ஏராளமாய் விஸ்தரித்துக் கொண்டுள்ளது. இதைப் புரிந்து கொள்வது மிக்க சிரமம்.

வெட்டவெளியில், சிறிதும் பெறிதும் ஆக கந்தர்வ நகரங்கள் பல தோன்றியுள்ளன. பகல், இரவு, இருள் ஒளி, விசாரம், விசாரமின்மை, ஞாபகம், மறதி, ஒழுங்கு ஒழுங்கீனம், அனுபவம், தர்க்கம், நியாயம், அந்நியாயம், இருந்தது, இல்லாதது, இருப்பவை, இல்லாதவை,

இருக்க போகிறவை. இப்படியாக உலகத்தில் சிக்கல்கள் அதிகமாக உள்ளன. இச் சிக்கல்களை சரிவர புரிந்து கொள்ள விவேக புத்தி வேண்டும். இல்லை எனில் உண்மையை கண்டுகொள்ள முடியாது.

சமர்த்தன் - வீரன், சூரன் - தீயன், தர்மவான் அதர்மீ, பணக்காரன் - டம்பாச்சாரி, நீதிமான் - திருடன், உண்மை - பொய், பெரியோர் - சிறியோர், பிரஷ்டன் - நிஷ்டன், இவர்களிடையே உள்ள வித்தியாசம் நன்கு விளங்க வேண்டும். கருத்து என்னவென்றால் உலகத்தில் மாறுபாடுகள் பல காண்கின்றன. இம்மாறுதலின் காரணங்களாலேயே பலவித சம்பிரதாயங்களும் உபாசனைகளும் தோன்றுகின்றன. பலவித மாறுபாட்டிற்குக் காரணம் மாயையின் கூற்றுதான். அது நிச்சாரமாயுள்ளது. சாரமற்றதை விட்டு விட்டு விவேகத்தின் பலத்தினால் சாரமானதை கைப்பிடிக்க வேண்டும் சாரமானது எதுவோ அதுவே சாசுவதமானது, நிர்குணமானது.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
நாநா உபாசனை நிரூபித்தது
சர்க்கம் 9

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினாறும் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

பஞ்ச பூதங்களினால் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவைகளுடைய கூற்றே இவ்வுலகம். பஞ்ச பூதங்கள் மறைந்தால் பிறகு? இதை விசாரிக்குமுன் எழக்கூடிய ஓர் சமுசயத்திற்கு பதில் சொல்ல வேண்டும். பஞ்சபூதங்களின் மேன்மையைப் பற்றி புகழ்ந்தோம், அப்படி இருக்கையில் முக் குணங்கள் எங்கே போயின?

பிரத் யுத்திரமாக சொல்லப்படுகிறது. ஆகாசம் அதாவது அந்தராத்மா இது ஐந்தாவது பூதம். முக் குணங்கள் இதைப் பற்றியதே. முக்குணங்களும் ஆகாய தத்துவத்தில் உள்ளதே ஆகாயம் பஞ்ச பூதங்களில் ஒன்று ஆகையால், பஞ்ச பூதங்களின்றி வேறு ஒன்றும் இல்லை என்று முன் சொன்னது தான் நிலைக்கும். ஒன்றிலிருந்து ஒன்று உண்டாகிறவை பஞ்சபூதங்கள். ஆத்துமாவினின்றும் ஆகாயம், அதினின்றும் வாயு; வாயுவினின்று அக்னி; அக்னியிலிருந்து தண்ணீர். எங்கும் தண்ணீர் சூழ்ந்து கொண்டபோது, அது சூர்ய வெப்பத்தினால் சுறுங்க, அக்னி, வாயு இவைகளின் கூட்டினால் பூமி உண்டாயிற்று. அக்னி, வாய்வு,

சூரியன் இம்மூன்றும் இல்லை எனில், எங்கேயும் ஜலமே நிரம்பி இருக்கும். தண்ணீரிலிருந்து வெப்பம் உண்டாயிற்று. ஒன்றிற்கொன்று இப்படியிணைப்புள்ளது. ஆனதினாலேயே, உலகம் விஸ்தரித்துக் கொண்டே போயிற்று. பஞ்சபூதாத்கமான சரீரமும் பெற்றுள்ளோம். எங்கும் ஜலத்தின் சீதளமே இருக்குமேயாகில் பிராணிகள் குளிரினால் மாண்டுபோயிருக்கும். வெப்பமே அதிகரித்தால் எல்லாம் துவண்டு இறக்கும்.

மிகுந்த வெப்பத்தினால் சூரிய கிரணங்கள் கடினமான பூமியை உண்டாக்கின அது விஸ்தரிக்க வேண்டி மறுபடியும் மழை பெய்து, அதை சீதளமாகும்படி தெய்வம் செய்கிறது. கொஞ்ச காலம், வெப்பம், சிறிது காலம் குளிர். இப்படியாக பனிக்காலம் தோன்றியது. பனியினால் பிராணிகள் கஷ்டப்பட்டு மரங்களும் கருகிப் போகவே, வெய்யில் காலம் வரவேண்டியதாயிற்று மேலும் காலை, மத்தியானம், மாலை என மூன்று காலங்கள் வகுத்து அதிலும் வெப்பத்தின் ஏற்றத்தாழ்வை உண்டாக்கியது தெய்வம். இப்படி தொடர்ச்சியாக பிணைப்புள்ள ஓர் திட்டம் உள்ளதாலேயே ஜீவகோடிகள் உயிர் வாழ்கின்றன. பலவித ரஸங்களினால் பலவித உபாதைகள் தோன்றுவதால், அதைப் போக்குவதற்காக வேண்டி பலவித மூலிகைகளை படைக்கவேண்டியதாயிற்று. இப்படியாக, ஒன்றிற்காக மற்றொன்று என்று சங்கிலித் தொடரைப் போன்று படைப்பு இருப்

பதை விசாரத்தினல் நன்கு சோதித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சரீரத்தின் மூலமான காரணம் உதிரமும் விந்துவும். ஜல தத்துவத்தினின்றும் பற்கள் தோன்றுகின்றன. ஜலத்தினின்றும் பலவித ரத்தினங்கள் உண்டாகின்றன. தேஹம் முழுமையும் ஜலத்தினல் நிரம்பியுள்ளது. அதினின்றும் தோன்றி அதன் பலத்தாலேயே சர்வமும் வாழ்கின்றன. ஜலம் இல்லை என்றால் ஜீவன்கள் வாழ்வதெங்கனம்? அதற்கு பெயரே [1] ஜீவனம். தண்ணீரினலேயே, சுக்ரனைப்போன்ற ஒளியுள்ள முத்துக்கள், வைரங்கள், மாணிக்கங்கள் உண்டாகின்றன. தண்ணீரின் அம்சத்தினலே தான் காந்தியுடன் பிரகாசிக்கின்றன. இது ஆப தத்துவத்தின் மேன்மை. மற்ற பூதங்களும் இப்படிப்பட்ட பெருமை கொண்டதே.

படைப்பு, இவ்வைந்து பூதங்களின் சேர்க்கையாலே ஆனது. பூதங்களைத் தனித்தனியேப் படுத்திக் காண்பிக்க முடியாது. விவேகத்தினல் அறிய வேண்டியதற்கு வழி காண்பிக்கப்பட்டது. இதைக் கொண்டு புத்திசாலிகள் பயனடைய வேண்டும். எல்லாவற்றை

1. வடமொழியில் தண்ணீருக்கு 'ஜீவனம்' என்று பெயர்.

யும் எல்லோரும் அறிய முடியாது. என்பதினுல் தான் பல சாத்திர நூல்கள் ஒன்றுக் கொன்று வேறுபாட்டைத் தோற்றுவிக்கின்றன. அனுமானத்தினுல் மாத்திரம் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள முடியாது.

பகவானின் குணவிசேஷங்கள் பல. அவைகளை வர்ணிப்பது என்பது ஆதிசேஷனுலும் முடியாது. வேதமோ, பிர்மதேவனோ எவராலும் முடியாது. அந்தராத்மாவாகிய நாராயணன் எல்லாவற்றையும் இரக்ஷித்து வருகின்ருன். மூவுலகங்களையும் காப்பாற்றி வருகிருன் அவனின்றி எல்லாம மண்ணுகி இருக்கும். அந்தராத்மா இல்லாதவிடத்தில் ஒன்றுமே இருக்க முடியாது. இம் மூவுலகமும் அவனின்றி, வெறும் சடலமாகிவிடும். அவன் இல்லை என்ருல் சாவு. அவனுல் தான் வாழ்க்கை. இந்த விவேகத்தை விசாரித்து அறிதல் வேண்டும், இவ்விவேக, விசாரம் முழுமையும் அந்தராத்மாவின் பலத்தினுலே தான். என்பதினுலேயே. அந்த ஆத்மா ராமனை,ஜகதீசனைப் பஜிக்க வேண்டும். உபாசனைப் பலப்பட்டால் இந்த ஆத்தும விசாரம் தெளிவுறுகிறது. ஆனதினுலே அந்தராத்மாவான தெய்வத்தைப்பற்றி விசாரிக்க வேண்டும். உபாசனையின் பலன் மிக்க பெரிது. உபாசனை இல்லாத ஜீவன் ஆச்ரயம் அற்றது ஆகிவிடும். எப்பேர்ப்பட்ட ஓர் சா

தனையும் அவனின்றி பலன் கொடாது. அந்ராத்மா வின் பலம் பெருவிடின், மனத்தின் போக்கில் இழுக்கப் பட்டு அமைதி நீங்கும். ஆனதினலே, தெய்வத்தை பகுத்தறிந்து அவனை பூஜிக்க வேண்டும். பஜனை முத லிய சாதனங்களினுல், ஏனைய உலகத்தை யடையும் பலன் கிட்டுகிறது என்பதில் திட நம்பிக்கை வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

குணபூத நிருபணம் சொல்லியது

சர்க்கம் 10 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் முதல் சர்க்கப் பிரசங்கம்.

பிர்மம் நிச்சலமானது. அதினின்றும் சஞ்சலமான ஆத்மா (மூலமாயை) தோன்றியது. அவன் சகலத்திற்கும் அப்பாற்பட்டவன். அதாவது பஞ்ச பூதங்கள், முக்குணங்கள் இவைகளை தாண்டியுள்ளவன் அவனை, பரமாத்மா, சைதன்யம், சாக்ஷி, ஞானத்துமா, ஷட்குணேச்வரன் எனப்பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவன் எல்லாவற்றிற்கும் மேல் திகழ்வதால் 'ஜகதீச்வரன்' என்றும் அவனை அழைப்பார்கள். அவனின்றும் தான் இவ்விஸ்தாரமான படைப்பு விஸ்தரிப்பை மேலும் மேலும் அடைகிறது. சிவசக்தி, ஜகதீச்வரி, ப்ருக்ருதி, புருஷன், மூலமாயை, குணமாயை, க்ஷேத்திரஞன், த்ரஷ்டா, கூடஸ்தன், சுத்த ஸத்துவம், மஹத்தத்துவம், எனப்பல பெயர்களினால் இந்த சஞ்சல ஆத்மாவை அழைக்கின்றனர். அவன் பிர்ம, விஷ்ணு, ஹரன், எல்லையற்ற பிண்டத்திலுள்ள ஜீவராசிகள், சர்வ பிராணிகளையும் அறிகிறான். தேகம் எனும் இக்கோயிலில் அமர்ந்து அவன், எந்த தேஹம் அவனைப் பஜிப்பதில்லையோ, அதை அவன் தண்டிக்கிறான். இத்தண்டனையின் பயத்தினாலேயே எல்லோரும் அவனை

பஜிக்கிறார்கள். பஜனையில் தவறுகிறவர்களை அவன் தண்டிப்பதினால், அவனை எல்லோரும் வணங்குகிறார்கள். மேலும் அவனிடம் கேட்டதை எல்லாம் கொடுக்கும் சக்தியுள்ளவனானதால் மூஉலகிலும் அவன் புகழ்பரவி எல்லோரும் இவனைப் பூஜிக்கிறார்கள். சப்தாதியான ஐந்து விஷயங்களின் நிவேதனத்தை அவனுக்களிக்க வில்லை என்றால் பலவித பிணிகளை அவன் ஏவி விடுகிறான், நிவேதனம் எப்போது அவனுக்குக் கிடைப்பதில்லையோ, அவ்விடத்தில், அப்போதிருந்து அவன் தங்குவதில்லை. மனிதனின் வைபவம், பல பதார்த்தங்களையும் கோபத்துடன் தடைபடுத்திப் போகிறான். அவன் போய்விட்ட சமாச்சாரம் ஒருவருக்கும் தெரிவதில்லை. அவன் தெரிய விடுவதில்லை. அவனை அனன்யமான பக்தியுடன் கூடினவருக் கின்றி மற்றவருக்கு அவன் தன்னைக் காண்பித்துக் கொடுப்பதில்லை. அவனைக்காண வேண்டி, கோயில்களில் எல்லாம் சுற்றித் திரிய வேண்டி இருக்கிறது. எங்கேயாகிலும் கோயில் கொண்டு அவன் புலனாகிறான் (சத்குருவின் உருவத்தில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறான்.

கோயில் எது ? சரீரம் தான். இதல் ஜீவேச்வரன் வசிக்கிறான். பலவித சரீரங்கள் பலவித மாறுபாடுகள் அவைகளில் காணுகிறோம். பேசுவதும் சஞ்சரிப்பதுமாயுள்ள இக்கோவிலில் தான், கடவுள் வசிக்கிறான். எல்லாக் கோவில்களிலும் கடவுளின் வசிப்பு உள்ளது. மத்ஸய, கூர்ம, வராஹம், பூவுலகில் காண்

சர்வ பிராணிகளிலும், அவைகளில் மிக்க பயங்கரமான வைகளிலும், அவன் திகழ்கிருன்.

சில கோயில்களில் அவன் சுகத்தையே காண்பவனுக இருக்கிருன். சுகம் எனில் எப்பேர்ப்பட்டது. கடல் பொங்குவதை போன்று கட்டுக்கடங்கா சுகம். அது நீண்டகாலம் லெபிப்பதில்லே. காரணம் அது சாச்வதமானதல்ல. அசாசுவதமாகியுள்ள இப்படைப்பின் முடிவில் விளங்கும் மணியைப்போன்ற அவன், தன்னுடைய எல்லேயற்ற படைப்பைத் தோற்றுவித்து, கண்ணுக்கு புலனுகமல் இருக்கின்ருன். கண்களுக்கு புலனுகவில்லே எனில் என்ன ? அவனேத்தான் ஜீவன்கள் தன் எஜமானனுய்க் கருதவேண்டும்.

அப்படி எல்லாவற்றிற்கும் காரணபூதமான அவனிடம் நம் திருஷ்டி செல்லுமேயாகில், நாம் அவனுடன் ஒன்று படுகிருேம். அவனேப் புறக்கணித்தோமாகில் ஒரே வருத்தம் சூழ்கிறது அவனுடைய தொடர்பினுல் சுகமும், அவனுடைய பிரிவினுல் துக்கமும் கிடைக்கின்றன. எல்லாருடைய அந்தராத்மாவும், வெளிப்படையாக புலனுவதில்லே. அவன் மகாதேஜஸ்வி யாயினும், புலனுக்குத் தோற்றமாவதில்லே. ஓரிடத்திலும் ஸ்திரப்படுவதும் இல்லே. இப்படியாக இக்கடவுள் மிகவும் பெரியவன். இவன் மகிமையை அறிந்தோர்கள் யார் ? மகிமையை வர்ணிப்பவர் யார் ?

இகலோகம், பரலோகம், இவ்விரண்டிலும், அவனை தன் விவேக புத்தியினால் கண்டு கொண்டவனே ஜென்மம் கடைத்தேறினவன். சதா மனத்தில் அவனை நினைத்துக் கொண்டுள்ள ஜனங்களிடம், ஆதி அந்த மற்ற அந்த பரமேச்வரன் எப்போதும் நிரந்தரமாய் வசித்து வருகிறான். அவனிடம் எப்போதும் சிந்தனை கொண்டவர்களின் பூர்வபுண்யம் அளவற்றது. அவர்களைத்தான் உண்மையில் 'யோகி' எனக்கூற வேண்டும். ஏனெனில் அவனுடன் யோகம் கொண்டவர்கள் அல்லவா இவர்கள்? நியோகி, யோகமற்றவன். கடவுளின்றும் தூர அகன்றவன். அவனும் மனனம் முதலிய சாதனைகளின் பலத்தினால் கடவுளிடம் நிரந்தர பக்தியையுடையவனாகிறான். தவிரவும் நல்ல புருஷனுடைய மகிமையைக் கேளுங்கள். அவன் பிறருக்கும் வழி காட்டி விடுகிறான். நீச்சல் நன்கு தெரிந்தவன், மூழ்கப்போகிறவனை, மூழ்கிப்போகவிடான்.

ஸ்துலம், சூக்ஷ்மம் இவைகளின் தத்துவங்களைப் பற்றி விசாரித்து அறிவர் இப்பூவுலகில் மிக சிலர் தான் கிடைப்பார்கள். வேதாந்த சாத்திரங்களில் கண்ட பஞ்சீகரணம், மூலமாய் கையிலிருந்து, பிண்டம் வரையிலுள்ள எல்லாப் படைப்பின் விசாரம் செய்து தன்னுள் கடவுளை மஹாவாக்யத்தின் விவரணம் பண்ணி காண்கிறான். இப்பேர்பட்ட மகான்களின் சகவாசம் மிகவும் மேன்மையானது அவர்களுடைய உபதேச மொழியின் வாயிலாக பிராணிகள் முன்னேற்றமடைகின்றன.

அவர்கள் இருக்கும் இடத்தில் நற்சவகாஸமும், நல்ல சாத்திரங்களின் சிரவணமும், கிட்டி, பரோபகாரம் எனும் சிறந்த குணம் மனிதனின் உடம்பில் ஏறுகிறது. இப்படிப்பட்டக் கீர்த்தியுடைய சத்புருஷர்கள் கடவுளின் அம்சமான பிறவிகள். அவர்களுக்கு, தர்மத்தை நிலை நாட்டுவதிலேயே நாட்டம். மெய்யறிவைப் பெற்று ஜீவன்களின் முன்னேற்றத்தைச் செய்து, தான் [1]சங்கத் யாகம் செய்து, தன் ஸ்வரூபத்தில் லயமடைகின்றனர்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,
தாச பால உபதேச விளக்கத்தில்,
'தெய்வபலாத்காரம்' எனும்
முதற் சர்க்கம் கூறியது

முற்றும்.

1. எல்லா துடர்புகளையும் நீக்கி.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

பிர்மமானது ஆகாயத்தைப் போன்று, நிச்சலமாகவும், நிர்மலமாகவும், ஆதாரம் அற்றதாயும், விகாரம் அடையாததாயும் இருக்கிறது. அதை அநந்தம் எனச் சொல்வதின் காரணம், அதற்கு முடிவு கிடையாது. அது சாச்வதமாகவுளது. சதோதிமாயும், நல்லதாயும் இருப்பது. பரப்பிர்மம் அழிவற்றது. ஆகாயம் எப்படி வெட்ட வெளியோ, அதை உடைப்பதோ, துண்டிப்பதோ எப்படி முடியாதோ அப்படியே பரப்பிர்மமும். அங்கு ஞானம் அல்லது அஞானம் இரண்டுமில்லை நினைவு மறதிகள் கிடையா. காரணம் அது எப்போதும் நிர்குணமாகவிருப்பது. அதற்கு எதனுடைய பற்றும் கிடையாது. சூரியன், சந்திரன், அக்னி இவைகள் இல்லை. மேலும் இருளும் இன்றி ஒளியுமின்றி, இந்த குணங்கள் இல்லாமல் தனித்து ஒன்ருக உளது.

இப்பேர்ப்பட்ட நிச்சலமான பிர்மத்தில் சலனம் கண்டு, நினைவுகள் தோன்ற சைதன்யமானது முக்குணங்களாகிய சத்வ, இரஜ, தமம் மூன்றும் பிறக்க வைத்து. இம்முக்குணங்களும் சமமான நிலையிலிருந்து வருவதே மூலமாயை. நிச்சலமான ஆகாயத்தில் மேகங்

கள் பரவுகின்றன. பரவவோ, அகலவோ, அதற்கு வெகுநேரம் பிடிப்பதில்லை. இப்படியே பிர்மத்தின் மீது மூல மாயை பரவுகிறது. நிர்குணத்தின் இடையே மேகத்தைப் போன்ற விகாரம் தோன்றுகிறது அதுவே மூலமாய்கை. ஷட்குணமுள்ள ஐச்வர்யம் அர்த்தநாரியான நடேசுவரர், ஆதி சக்தி, சிவ சக்தி என்று அழைக்கப்படுகிறது. இந்த மூலமாய்கையில் தான் படைப்புக்குக் காரணமாக உள்ள பலவித விதை களும், பலவித சக்திகளும் நிறைந்து அதினின்றும் பல தத்துவங்கள் வெளித் தோன்றுகிறன. அதி னின்றுமே சுத்த தத்துவம் எனப்படும் குணமாயை, மனத்தத்துவம் தோன்றியது. இத்தத்துவத்திலும் இராஜ, தமம் சூக்ஷ்ம ரூபமாக விருக்கின்றன.

மூல மாய்கை வ்யக்தமாக தோற்றுமலிருந்தால், அங்கே சிவ சக்தி எங்கிருந்து தோற்றியது? கருத் துடன் கேளுங்கள் இதற்கு பதிலை.

பிண்டத்தினிடமிருந்து, பிர்மாண்டம் தோன்றியதா அல்லது பிர்மாண்டத்திலிருந்து பிண்டம் தோன்றியதா என்று சமுசயம். நன்றாக யோசனை செய்து பார்த்தால் விளங்கும்.

வித்துக்களை உடைத்து உள்ளே பார்த்தால் அதில் பழங்கள் காணுமா - இல்லை. ஆனால் அதை பூமியில் விதைத்து சீராக கவனித்து வளர்த்தால பெரும் மர மாகிறது. மரத்தில் நிரம்ப பழங்கள் காய்க்கின்றன.

பழங்களை சோதித்துப் பார்த்தால் அதில் விதைகள் தென்படுகின்றன. ஆயினும் விதைகளில் பழங்களைக் காணமுடிவதில்லை. இப்படியேதான் பிண்டமும் பிர் மாண்டமும். ஆண் - பெண் என்ற பிரிவு பிண்டத்தில் காண்கிறோம். இப்பிரிவு ஆதியிலே சம்பவிக்காவிட்டால் இப்போது எப்படி வந்தது? வித்து உருபமாக உள்ள கற்பனையில் உள்ளே பல கற்பனைகள் சூக்கும மாக உள்ளன. அவை சூக்குமமாக இருப்பதினால் வெளியில் புலப்படுவதில்லை. ஸ்தூலமாக தோற்றும் தோற்றுதலுக்கு மூல காரணம் வாசனை வாசனையினால் தான் இத்தூல சரீரம் நிர்மாணிக்கப்படுகிறது ஆனால் வாசனையைப் பார்க்க முடியாது. ஸ்தூலத்தினால். சூக்குமத்தை உணரலாம், புலனாகுபவைகளைக் கொண்டு, புலனாகாத பலதை அறிவது போல் தான் இங்கேயும். கல்பனை தான் இவ்வகில படைப்புக்கும் காரணம் எனவே சாத்திரங்கள் கூறுகின்றன. கல்பனையைக் காணமுடியுமா? காணக் கூடாததினால் வேத சாஸ்திரங்களின் தீர்மானம் பொய்யாகுமா? ஒவ்வோர் பிறப்பும் ஓர் திரையைப்போன்றது. ஆனதால், பல திசைகளைத் தாண்டியுள்ள, மூலகாரணம் எளிதில் விளங்குகிறதில்லை. ஆனால் நிச்சலமான இரகசியங்கள் இவ்வகையைச் சார்ந்தவை. விவேக விசாரணை யின்றி புலனாகாது.

ஆண் - பெண் பலர் இருக்கின்றனர். அவர்கள் உடல் ஒன்றிற்கொன்று வேறுபாடுள்ளவைகள்.

பெண்ணிற்கு இயற்கையாக ஆணினிடம் ப்ரியமும் ஆணுக்குப் பெண்ணிடம் ஆசையும் இருப்பவை இது தான் பிண்டத்தில் காணும் ஓர் நியதி. இதைக் கொண்டு பிர்மாண்டத்திற்கு வித்து போல் இருந்து வரும் மூலமாய்கையைப்பற்றி விசாரியுங்கள். வாசனை ஓர்வகைப் பட்டதே ஆனால் தேஹ சம்பந்தம் கொண்டவுடன் அது பலவகையாகத் தேற்றமளிக் கிறது. தேஹஸந்துடர்பு நீங்கினல் இவ்வேற்றுமையும் மறைந்துவிடும். பிண்டத்தில் ஆண் பெண் என்ற பேதம் தென்படுவதைப் போல், மூல மாய்கையில் இவ் வேற்றுமை சிவன் - சக்தி என்று சூக்குமமாக விருக்க வேண்டும் என்பது மேலும் மேலும் விசாரணை செய் திடில் விளங்கும். ப்ரீதியின் சூக்குமமான வாசனைகள் பல. ஆனல் ஒன்றுக்கொன்று அது புலப்படுவதில்லை, கூர்ந்து ஆராய்ந்தால் அது ஓரளவு புலப்படுகிறது.

தாய் சேயை அன்புடன் வளர்க்கிருள். இந்த காரியம் புருஷனுல் முடியாது. பலவித பந்தங்கள் ஏற் படுவதும் பெண்ணினுல் தான். வெறுப்புத் துளிகூட கிடையாது. சோம்பலும் தென்படுவதில்லை, சோர்வும் காண்பதில்லை, சிரமம் தோணுவதில்லை. ஆயினும் அன்பு மாத்திரம் எல்லையற்று உளது. இப்படி தாயி டத்தில் தவிர வேறெங்கும் இக்குணங்களை ஒன்று கூடிக் காண முடியாது. பல பந்தங்களைக் கொணர்வது, மாயையில் மூழ்கடிப்பது, ப்ரீதி என்னும் பாசத்தினுல் உலகப்பற்று ஏற்படச் செய்வது இவைகள் தாயினுலே தான் முடியும்.

புருஷர்களிடமே விச்வாசம் ஸ்த்ரீகளுக்கும், நன் மகிழ்ச்சியின் உறைவிடமாக ஸ்த்ரீ புருஷனுக்குமாக வாசனையின் பலத்தினுல் பிணைக்கப்பட்டுள்ளனர் சர்வ ஸ்த்ரீ - புருஷர்கள். கடவுள் இந்த மகா வல்லமை பொருந்திய பாசக்கயிற்றை உண்டாக்கி, அதினின்றும் விடுபட முடியாத அன்பு எனும் வலையை வீசி விடுகிருன். இக்காதல் மூலமாய்கையின் ஸ்தானத்திலேயே உண்டாகிவிடுகிறது அதை தெளிவுப் படுத்துவோம். மூல மாய்கையில், சிவன் - சக்தி என்ற இருவகை சக்திகள் இருக்கின்றன. அது தான் படைப்புத் தொழிலுக்கு தெம்பு அளிக்கிறது. சூக்குமத்தில் காணம் சிவ - சக்தி தான் ஸ்த்ரீ - புருஷர்கள். ஆகையால் தான் எண்பத்து நான்கு லக்ஷம் யோனிகள் உற்பத்தியாயின.

சிவன் - சக்தி இவைகளைப்பற்றி நாம் ஏதோ சர்ச்சைகள் நிகழ்த்திளும் இதைத் திரும்பத்திரும்ப எல்லோரும் நினைத்துப்பார்க்க வேண்டும். மனனம் செய்தாலன்றி சிரவணம் அனைத்தும் விருதாவாகும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

சிவசக்தி நிரூபணம் பெயர் கொண்டது

சர்க்கம் 2 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினேழாம் தசகத்தில் மூன்றும் சர்க்கப் பிரசங்கம்.

பொறுமையுடன் நன்கு கேளுங்கள். முழுவதும் கேட்குமுன்னேயே, பொறுமையை இழந்து கிரந்த ச்ரவணத்தை நிறுத்திவிட வேண்டாம். சொல்லுவதை பொறுமையுடன் கேட்டுக் கொள்ளவும். சிரவணம செய்வதில் மிகவும் மேன்பட்டது, அத்யாத்ம நிருபணத்தை சிரவணம் செய்வதுதான். மனதை ஒரு முகபடுத்தி இந்நூலில் ஈடுபடுத்த வேண்டும். சிரவணம், பின் மனனம் செய்தாக வேண்டும். பிறகு நிதித்யாசனம் எனும் தொடர்ந்த சிந்தனையை செய்ய வேண்டும் இதனால் உடனே சகலமும் புலப்படும். மோக்ஷம் ரொக்கமாக அனுபவத்துக்கு வருகிறது. கடன் வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. பலவகை ரத்தினங்கள், முத்துக்கள், வைரங்களை, நிறுத்திப் பார்க்கும் போதோ, பரீக்ஷை செய்யும் போதோ, தங்கத்தை மூசையில் வைக்கும் போதோ மனிதன் எவ்வளவு கூர்மையுடன் இருக்கிறான், அதே போல் விவேகமுள்ளவர்களும் மிக்கவும் பொறுமையுடன் இருக்க வேண்டிய தவசியமாகும்.

தான்ய வகையை எண்ணிப் பொறுக்குகையில், பெண்கள் எவ்வளவு ஜாக்கிரதையுடன் இருக்கிறார்கள்! அரசியல் விஷயமாக தனிச்சர்ச்சை செய்யும் போது மனிதன் எவ்வளவு கூர்மையாகவும் உன்னிப்பாயும் உள்ளான். இதைப் போன்று மிக்க உன்னிப்பு. வேதாந்த விஷயத்தைச் சொல்லும் போது வேண்டி இருக்கிறது. கதைகள், கவிதைகள், அவதார மகிமைகள், இவை யாவற்றையும் விடமேலானது, வேதாந்த வித்தை. முன்பு வாழ்ந்து வந்த மகானின் வாழ்க்கை வரலாறு தெரிந்து ஆவது என்ன? புண்ணியம் கிட்டுகிறது என்பார்கள். புண்யம் கண்களுக்குப் புலப்படுவதில்லை. அத்யாத்ம வித்தையின் பெருமை இப்பேர்ப்பட்டது. உடனேயே மோக்ஷத்தைக் கொடுத்து விடும்.

இந்த அத்யத்ம அனுபவம் வந்தவர்களுக்கு, அனுமானத்தினால் ஏற்படும் சமுசயங்கள் அகலும். மிக்க புகழ்வாய்ந்து வாழ்ந்தவர்கள் எல்லோருமே, அத்யாத்ம வித்தையைப் போற்றி வளர்த்தனர். இவ்வித்தையின் மகிமையை வர்ணிப்பது என்பது எவரால் இயலும்? யுக யுகங்களாய், இம்மூவுலகையும் நடத்தி வைப்பவன் இவ்வாத்மாவே. அவனைப்பற்றி முதன் முதல் சிந்தனை செய்ய வேண்டியது அவசியம். படைப்பில் கணக்கற்ற ஜீவராசிகள் தோன்றி மறைந்தன. அவைகளின் சரித்திரம் எல்லாம் சொல்லப்பட்டது. ஆனாலும் ஆத்தும விசாரத்தின் முன் இவைகள் எம்மாத்திரம்?

ஆத்துமா இல்லை எனில் கட்டையாகி விடுவான் பிராணி. அவனுக்கு அறிவு என்பதே இல்லாது போய்விடும். இப்படி ஆத்ம ஞானம் மற்ற எல்லா வற்றையும் விட மேன் பட்டது. இதற்கு நிகரானது வேறு எது இருக்கிறது. விவேகமுள்ள நல்லோர்கள் இதன் பெருமையை அறியவல்லார். பூமி, ஜலம், தேயு, இவைகள் பூமியில் கலந்த பின்பும் ஆகாயம் (ஆகாசதத்துவம் அந்தராத்மா) தனிமையில் நிற்பது. அது எல்லாதத்துவங்களுக்கும் வித்தாக அமைந்துள்ளது. வாயு தத்வத்தைத் தாண்டி விசாரணையை செலுத்துபவனுக்கு அந்தராத்மா எளிதில் நெருங்கிவிடும். வாயு அதன் பிறகு ஆகாயம், பிறகு குணமாயை, மேல் பிரகிருதி-புருஷாள், அதாவது மூலமாய்கை, இது மேலும் மேலும் ஒன்றுக்கொன்று சூக்குமமாக விருப்பது. அதை அனுபவமான அறிவிற்குக் கொண்டுவர வேண்டுமென்றால் சூக்குவமான புத்தியினாலே தான் முடியும். மாயையின் சுழலில் அகப்பட்டுக் கொண்ட ஜீவன்கள் அநேகமாய் இவ்வளவு சூக்குமமான விஷயத்தில் தன் மதியைப் புகல விடுவதில்லை. ஆயினும் விவேகம் முள்ளவன் இதை ஆராய்ந்தால் அவன் சமுசயமற்றவனாகிறான்.

மூல மாய்கை என்பது பிர்மாண்டத்தின் நான்காவது தேஹம் எனக்கூறலாம். அதைப்புரிந்துகொள்ள விவேகம் பொருந்திய விசாரம் ஒன்றுதான் உதவும். எல்லா தேகத்தையும் களைந்த (எட்டு விதமான) வனே மிகவும் மேலானவன். சிந்தனையை மேல் நோக்கி

செலுத்துபவர்கள் அவர்களுக்கு மேன்மையே கிடைக்கும். மற்ற பதார்த்த ஞானத்தில் உழலுபவர்களுக்கெல்லாம் அதோகதிதான் கிட்டும். பதார்த்தங்கள் அழகாகத் தோற்றமளிக்கின்றன. ஆனால் அவைகள் நாசமடைபவை. ஆனதினால் பிராணிகள் உறுதியின்றி இங்கேயோ, அங்கேயோ (தெய்வமும் இன்றி உலகமும் இன்றி) என பலனற்ற பிறப்புகளில் அல்லல் படுகின்றனர். பதார்த்த ஞானம் முற்றிலும் அனுமானத்தினால் ஏற்பட்டவை என்பதினால், அதைத்தள்ளி நிரஞ்சனாகிய பரம் பொருளைத் தேடவேண்டும். அஷ்டாங்க யோகம், பிண்ட ஞானம் இவைகள் கீழ்த்தரப் பட்டவைகள். ஆத்தும ஞானம் அதினும் சிறந்தது. அதைப்பற்றித்தான் சிந்தனை செய்ய வேண்டும். தத்துவஞானத்தையும் விட சிறந்தது ஆத்தும ஞானம். மூலமாய்கைக்கு அப்பால், நிலவும் விமலமான பிர்மம் எது உண்டோ அதில் முதன் முதலாக தோன்றும் சங்கல்பத்தை, உபாசனையின் பலத்தால் சர்வார்ப்பணம் செய்ய வேண்டியது அதற்கும் அப்பால், சாசுவதமான பிர்மம் இருப்பது. அது ஆகாயத்தைப் போன்று நிச்சலமானதும், நிர்மயமானதுமாக விருக்கிறது. மூலமாய்கையிலிருந்து பிண்டம்வரை பரவி இருப்பது ஜீவராசிகளிலும் சரி, ஜடப்பொருள்களிலும் சரி அது முழுவதும் வ்யாபித்துள்ளது. இதை விடமேன்பட்டது ஒன்றும் இல்லை. அதி சூக்ஷ்மமான சிந்தனையால், பிண்டபிர்மாண்டமாகிய எட்டு தேகங்களினின்றும் விடு

தலை கிடைத்தால் அது புலப்படும். பிண்டபிர்மாண்டம் இருக்கையிலே விவேகத்தின் பிரளயத்தை விளக்கிக் கொண்டு விடின் சாசுவதமான பிர்மம் நன்று விளங்கும். எல்லா தத்துவங்களையும் அலசிப் பார்க்க வேண்டும், சாராசார விசாரத்தின் மூலம் சுத்த பிர்மத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகு புத்தகங்களும், சாத்திரங்களும் ஏன், அவைகளை விட்டுவிடலாம்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
சர்க்கம் 3 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

பலருக்கும் நன்மையைபயக்க வைக்கும் ஓர் வழி தெரிய வேண்டும் என கேட்கிறவர்கள் கேட்டாளே யானல், கேள்வியைக்கண்டு, வெறுப்படையவோ, பயப் படவோ, துன்பப்படவோ வேண்டுவதில்லை, மேலும் பதில் சொல்லுகையில் முன் துடர்பை விட்டு விடவும் கூடாது. கேட்பவர்கள் எந்தவிதமான சமுசயத்தைச் சொல்லினும் அதற்கு சமாதானம் சொல்ல வேண்டியதே. தான் முன் சொல்லிய ஓர் சொல்லினல் மேலே கூறப்படும் விஷயம் தட்டுப்படலாகாது. இப்போது சொல்வது, முன் சொன்னதிற்கு முரண்பாடாகவும், முன் சொன்னது இப்போதைய சொல்லுக்கு சம்பந்தமின்றியும் இருப்பதாகில், கேட்போர் எப்படி கிரகிக்க முடியும்? நீச்சல் அடிப்பவன், தண்ணீர் குடிக்கத் துடங்கினல், மற்றவரை எப்படி இவன் காப்பாற்றுவான்? இப்படியாக முடிந்தால், கேட்பவரின் சமுசயங்கள் அவ்வப்படியே நின்று போம்.

படைப்பு எவ்விதமாக அழிக்கப்படுகிறது என்பதை விளக்கிய அதே மூச்சில், எல்லாம் பிர்மமயம்தான் அதற்கு அழிவு என்பதே கிடையாது என ஒருவன்

சொல்லிக் கொண்டுபோனால், மூலமாய்கையினின்றும் விடுதலைபெற கேட்கும் ஜனங்களுக்கு எப்படிப் புரியும்? சூக்ஷமத்திலுள்ளவைகளின் பெயர்கள் எவ்வளவு சொல்லப்பட்டதோ, அவ்வளவின் உருவம் முதலியது கேட்போர் மனதில் நிலைப்பட்டுப் போகும்படி வர்ணிக்க வேண்டும். அப்போதுதான் இக்கடினமான விஷயம் தெளிவடையும். பிர்மம் எப்படி இருப்பது, மூலமாய்கையின் தோற்றம் எப்பேர் கொண்டது, எட்டுவித பிரகிருதிகள், சிவசக்தி, ஆறுகுணங்கள் – ஐச்வர்யங்கள் என்ற பெயர் ஏன் மூலமாய்கைக்குக் கொடுத்தார்கள். குணங்களின் ஒற்றுமையைக் கொண்ட குணமாய்கை என்பது எது. முக்குணங்கள் எது? பூர்வபக்ஷம் என்பது என்ன? அது எதுவரை? வாச்யாம்சம் என்பது என்ன? லக்ஷயாம்சம் என்பது என்ன என்பவைகளைப் பற்றி சுத்தமாக தெளிவுகண்டால்தான் உபயோகப்படும். இப்பேர்ப்பட்டவன் தான் சாது. அவர்தான் பிறருக்கு இவ்விஷயத்தை எடுத்துச்சொல்ல தகுந்தவர். இப்படிப்பட்டவர், சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வதையோ, வீண்வார்த்தைகளை வளர்ப்பதோ செய்யமாட்டார் வார்த்தையின் விளக்கம் எதனிடத்தில் முற்றுபெறுகின்றதோ அப்பேர்ப்பட்ட பிர்மத்தைப் பற்றி வார்த்தைகளைக் கொண்டு விளக்கம் கொடுக்க அவன் சமர்த்தன்.

பிர்மமானது, நிர்மலமானது, நிச்சலமானது என்று சொல்லி விட்டு எல்லாமே பிர்மம் என்று சொல்லுவதும்

சாக்ஷியாகவிருக்கும் தன்மையையும், ஒப்பற்ற அதிகாரத்தையும் பிர்மத்தினிடம் இருப்தென்றும், நிச்சலம் எதுவோ அதுதான் சஞ்சலம், சஞ்சலம் எதுவோ அதுவே நிச்சலம் என்றும், சர்பந்தமற்ற சொற்களைச் சொல்லிக் கொண்டு போனல் அதனல் யாருக்கு நஷ்டம்? இப்பேர்ப்பட்டவன் பிரசங்கம் என்ன உபயோகம்? தீர்மானமாக ஒன்றையும் கூறமுடியாவிடில் அவன் பேசுவதற்கு தகுதியற்றவன். சஞ்சலமானது, நிச்சலமானது இவ்விரண்டும் சைதன்யம் எனச்சொல்லும் குருவிற்கு இது இரண்டும் வெவ்வேருனது என தெளிவுப் படுத்த முடியவில்லை. தானே குழப்பத்தில் சிக்கியவன் பிறருக்கு தெளிவான அறிவை எப்படி புகட்டுவான்? பலவிதமான தீர்மானங்களைச் சொல்வானேயானல் குழப்பம் அதிகரிக்குமே தவிர குறைபடாது குழப்பமாகிய பிரமையை பரப்பிர்மம் என்றும், பரப்பிர்மத்தை பிரமை என்றும் சொல்லித்தான் ஞானி எனப் புகழ்படுத்திக் கொள்பவன் எதற்கு பிரயோசனமானவன்? சாஸ்திர வாக்கியங்களை பல எடுத்துக்கூறுகிருனே ஒழிய ஆனல் அனுபவத்தில் ஒன்றும் தெளிவுபடாதவனுகவிருப்பின் பிறருக்கு விளக்கம் எப்படி கொடுப்பான்? தனக்கே ஓர் தீர்மானம் வரவில்லையானதால், பிறர் ஏதாவது சந்தேகம் கேட்டால் அவனுக்கு கோபம் வருகிறது. அழியும் பொருட்களில் ஆசை வைக்கும் இப்பாமரன், பிர்மத்தைப்பற்றி என்ன அறிவுரை யாற்றக்கூடும்?

எது சாரம், எது அசாரம் என்பதைப்பற்றி தெளிவான சிந்தனை இருக்கவேண்டும். வைத்தியன், தன் மாத்திரைகளைப்பற்றி வானளாவிப் புகழ்ந்து கொள்கிறான், நோயாளிக்கு அம்மாத்திரையின் குணம் தெரியவில்லை என்பது போல், ஞான வார்த்தைகள் பலதை இவன் புலம்ப, கேட்பவர்களின் மனதிற்கு கிஞ்சித்தும். தெளிவாகவில்லை என்றால் அதன் பிரயோஜனம் என்ன? சாரம் அசாரம் இவைகளின் தெளிவு ஏற்படாதவரை, அது அனுமானத்தினால் உண்டாகும் ஞானம். அதை அஞ்ஞானம் என்றே சொல்ல வேண்டும். அங்கு உண்மை எது, பொய் எது என்ற பரீக்ஷை யார் செய்ய முடியும்? 'எல்லாம் பிர்மம்' என வாதிப்பவர்களுக்கு, பாப புண்யங்கள், சுவர்க்க நரகங்கள், விசாரம் – அவிசாரம், வீழ்ச்சி – முன்னேற்றம். எல்லாம் ஒரேபோலத்தான். சமுசயமும், நிச்சயமும் இரண்டும் அவர்களுக்கு பரப்பிர்மந்தான். எல்லாம் இவர்களுக்கு பிர்மரூபமானது. எல்லாம் சர்க்கரை என்றால் அங்கு தெளிவடைய விஷயமே ஒன்றுங்கிடையாது நல்லது கெட்டது இரண்டும் ஒரே மாதிரியாகிவிட்டது அவர்களுக்கு. இம்மாதிரியாக 'சர்வபிரும்ம' வாதிகளுடைய பேச்சுகள் எல்லாம் அவிசாரமானது கொண்டு அவர்கள் பேச்சில் சாரம் என்பதே கிடையாது. பூஜிக்கத்தகுந்ததும் விலக்கக் கூடியதும் ஒன்றே என்போருக்கு நிச்சயப்பட வேண்டியது என்னவிருக்கிறது? அதிகாரம் அதிகரித்தும் அறிவீனன், கண்டபடி பேசுவதைப் போன்று அஞான பிரமையினால் மூர்க்கன்,

மஹாபாபியானவனையும், மகாசாதுவானவனையும் ஒன்ருகக்கருதுகிருன். சர்வசங்கத்தையும் த்யாகம் செய்வனையும், ஸ்வேச்சையின் போக்குடையவனுய் சர்வ விஷயங்களையும் அனுபவிப்பவனையும் ஒன்று என்று சொல்லிவிட்டால், இதில் எதைப் பின்பற்றுவது? வேற்றுமையைத் தோற்றுவித்தது கடவுள். அதை மாற்ற முடியாது. வாயின் வழியே முடியுமா? இந்திரியங்களுககு எந்த எந்த செயலோ, அதில் தான் அதை ஈடுபடுத்த வேண்டும். இயற்கையின் சூழ்முறைகளை தவிர்க்க முடியாது. ஆனதினுல் அனுபவத்துக்கு ஒட்டாத சொற்கள், பைத்தியக் காரனின் புலம்பலாகவே கொள்ள வேண்டும். தன் சுய அனுபவத்தினின்றும், தெளிந்தவனுமாகிய போதகன் வழியே கூறப்படும். மொழிகள் தற்காலத்திலேயே, தன் சயரூபத்தின் அறிகுறிகளை மனதில் பதியவைக்கிறது. ஆனுதினுல் நல்லது எது கெட்டது எது என உணர்தல் வேண்டும். பிசகான அடி, குருடனுடையது, ஆகையினுல் தவருன சொல் கேட்டால், உடனே வாந்தி எடுப்பது போல் அதை உடனே வெளியேற்றிவிட வேண்டியது.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
சர்க்கம் 4 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

தினசரி ஒவ்வோர் பிராணியும், 21600 மூச்சுகள் விடுகின்றன. அந்த உச்சுவாஸ, நிச்சுவாஸத்தின் பேரில் கவனம் வைப்பதேயே 'அஜபா' ஜபம் எனச் சொல்கிறார்கள். நன்றுயோசித்துப்பார்த்தால் இப்படி கவனம் வைப்பதை சாதிப்பது ஒன்றும் மிகக்கடின மானதல்ல எனத்தெரியவரும். மூக்கு, வாய்ப்புறம் இவைகளில் பிராணவாயுவின், போக்கு வரத்தாகிய, உச்வாஸ, நிச்வாசங்கள் துடர்ந்து நடைபெறுகிறது. அதை சூக்கும திருஷ்டியினால் நோக்கவேண்டும்.

ஆதியில் ஒரே ஸ்வரத்தை, தாரம் (மேல் ஷட்ஜம்) மந்திரம் (மையமான ஷட்ஜம்) கோரம் (கீழேயுள்ள ஷட்ஜம்) என மூவகையாகப் பிரிக்கிறார்கள். கீழ் ஷட்ஜத்தையும்விட அஜபாவின் கதி சூக்ஷமமானது. ச, ரி, க, ம, ப, த, நி என ஏழு ஸ்வரங்கள் இவை களையே மாத்ருகைகளாக நினைத்துப் பார்க்கலாம். ஏழு ஸ்வரங்களில் எதையேனும் முதல் எனக்கொண்டு மற்றதைப்பார். நாபிஸ்தானத்திலிருக்கும் 'பரா' என் னும் சப்தவகைக்கு இப்பால், அதாவது, மேல், ஹ்ரு

தயம் உள்ள இடத்தில் 'பச்யந்தி' எனும் சப்த வகை ஸ்புரிக்கும் இடமாகிய நாபி - ஹ்ருதயம் இவைகளுக் கிடையில் உள்ள இடத்தில் ஸ்வரங்கள் உற்பத்தியாகின் றன. ஏகாந்தமான விடத்தில் உட்கார்ந்து இதை அனுபவத்தில் காணலாம். பிராணவாயுவை, உள் ளிழுப்பதும், வெளிவிடுவதுமாக இருந்து கொண்டு, மௌனமாகவிருந்து, கவனித்துப்பார்த்தால் 'சோஅஹம்' எனச்சொற்கள், ஒலிப்பதைக்கேட்கலாம். ஆனல் அந்த ஒலி புலனாகுவதில்லை. இதையும் கேட் பதை விட்டு வாழ்க்கை நடத்துபவன் ஞானியேயாவன். உச்சாரம் ஆகாமல் இச்சொற்கள் கிளம்புவதால் இதற்கு 'ஸஹஜம்' எனப்பெயரிட்டுள்ளனர். இதற்கும் அப்பால் சொன்னதைக் கவனிப்பவனே மௌனி. யோகாப்யாசம் செய்பவர்கள் இதைக்காண வேண்டியே இவ்வளவு சாயாசம் கொள்கிருர்கள். ஏகாந்தத்தில் இம்மாதிரி மௌனமாகவிருக்கையில் 'ஸோஹம்' என்ற சொல் உள்ளூர ஏற்படுவதுபோல் தோன்றுகிறது. சுவாஸத்தை உள்வாங்கும்போது 'ஸ' என்றும் 'அஹம்' என்று வெளி ஏற்றும்போதுமாக இந்த 'ஸோஹம்' ஜபமானது இடைவிடாது நடந்து கொண்டிருக்கிறது, இதைப்பற்றி இங்கு அதிகம் கூறினல். மிக்க விஸ்தாரப் பட்டுவிடும். நான்குவகை ஜீவன்களாகிய, ஜாரஜம் அண் டஜம், ஸ்வேதஜம், உத்பிஜம் ஆகிய எல்லாமே இவ் வஜபா ஜெபத்தை இயற்கையாக செய்துவருகின்றன.

மூச்சுவிடாமல் அவைகள் வாழமுடியாது. ஆனதி னால் இவ்வஜபா ஜபம் நடந்து கொண்டிருக்கிறது. அறி வாளிகளுக்கு இது நன்று புலப்படுகிறது.

இம்மாதிரியான சகஜமான ஜபத்தை விட்டு விட்டு கடினமான மற்ற ஜபங்களைச் செய்யக்கூடாது. இயற் கையாகவுள்ள, நிச்சலமான கடவுள் எப்போதும் அப் படியே இருக்கிறது. கஷ்டப்பட்டு செய்த கடவுளானது உடைந்துபோம், கிழிந்துபோம். ஆனதினால் நாச மடையக் கூடிய கடவுளின்பேரில் நம்பிக்கை யார் வைப்பார்? உலகெல்லாம் நிரம்பிய அவ்வுலகநாத னின் தர்சனம் பெற்றால், தியானம் இயற்கையாகவும், இடைவிடாமலும், நடைபெறும்.

அவன் இச்சைப்படித்தான் பிராணிகள் எல்லாம் நடக்கின்றன. தன் சாப்பாடு, முதலியவைகள் எல்லாம் அவனுக்கு சாந்தியைக் கொடுக்கவே. தெரிந்து சமர்ப் பணம் செய்தாலும், செய்யாவிட்டாலும் எல்லாம் அந்த ஆத்துமாராமனிடமே போய் அடைகின்றன. நம் வயிற்றில் வைச்வாநர ரூபமாக வீற்றிருக்கும் யஞ புருஷ னுக்கே நாம் ஆஹாராதிகளைக் கொடுத்து வருகிறோம். அவன் ஆணைப்படித்தான் நாம் எல்லோரும் நடக்கி றோம். ஜபம், தியானம், ஸ்துதி, ஸ்தவனம், நாம

இயற்கையாகவே செய்து வருகிறோம். இயற்கையாக நாம் செய்வது எல்லாம் கடவுளைச் சாருகின்றன. இது இயற்கையாகவே, நிகழ்கிறது என்பதை அறிந்து கொள்ளவே ஹடயோகம் முதலிய அப்பியாசங்கள் ஜனங்கள் பயிலுகின்றனர். ஆனால் அது தானாக புலப் படுவது கடினம். புதையல் இருக்கும் இடம் தெரி வராததால் தாரித்ரியத்தில் நாட்களை கழிக்கிறான் இவன் உட்கார்ந்து கொண்டிருக்கும் இடத்தில் கீழேயே அது புதைக்கப்பட்டு, அதன் பேரில் உட்கார்ந்து கொண்டு இவன் உபவாசம் செய்து கோண்டிருக்கிறான். அரிய பொக்கிஷம் தன்னிடமுள்ளது என்பதை தெரிந்து கொள்ளாமல் தவிக்கிறான். தரையின் கீழ், சுவற்றில் தூணில், உத்திரங்களில் எங்கும் திரவியம் மறைத்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் லக்ஷ்மியின் இல்லத்தில் உட்கார்ந்து கொண்டு, தரித்ரன் ஏழ்மையை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். பரமானந்தமான பரமாத்மா எப்பேர்ப்பட்ட ஆச்சரியத்தை விளைவித் துள்ளான்! ஒருவன் புசிக்க மற்றொருவன் பார்த்துக் கொண்டு இருக்கிறான். இதன் மூலகாரணம், விவேக சக்தியிலுள்ளது. விவேகமதிகமாகிய விடத்தில் பாக் கியமும் வளர்படும். அறிவு குறைபடுவதினால் ஏழ்மை அதிகரிக்கிறது. பிரவ்ருத்தியிலோ, நிவ்ருத்தியிலோ காணும் மாறுபடுக்குக் காரணம், மூளையின் வித்தியாசத் தினாலேதான், ஏற்பட்டுள்ளது. இருக்கட்டும். அறிவு

எனும் திருமால், மனதில் வீற்றிருக்க திருமகள் அங்கு இருப்பதில் என்ன விந்தை? ஆனதினாலே திருமகள் எவனுக்கு மனையாளோ அப்பேர்ப்பட்ட திருமாலை மனதில் கொள்ள வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 5

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் ஆருவது சர்க்கப் பிரசங்கம்.

அந்தராத்துமா சரீரத்தில் வசித்து பல சுகத்துக்கங்களை அனுபவித்து கடைசியில், திடீரென ஒரு நாள் சரீரத்தை விட்டுச் செல்கிருன். சரீரத்தில் யௌவன பிராயத்தில் சக்தியின் மிகப்பால் மனிதன் பல சுகங்களையும் அனுபவிக்கிருன். விருத்தாப்பியத்தில் சக்தி குன்றிடவே அவன் துக்கங்களை அனுபவிக்கத்துடங்குகிருன். சாவை ஏற்கபிரியமில்லை ஆனதால் கைகால்களை உதைத்துக்கொண்டு, இறுதிகாலத்தில் பிராணனை விடுகிருன். சொல்லொணு துயரம் காண்கிருன். உடலின் உறவைக்கொண்டு உழன்ற ஆத்துமா, துடித்துக்கொண்டுதான் சரீரத்தை களைகிறது. இப்படியாக பெருந்துயரத்தை அனுபவிக்கிறது ஒருவன் உயிரை மற்றொருவன் பறிக்கிருன். இறுதியில் பலன் என்ன? இந்த ஆத்மாவானது இருநாள் நிலைத்த பொய் தோற்றம். இதை பரப்பிர்மம் எனப்போற்றி துதிப்போர் பலர். பல துயரங்களை ஆத்துமாவானது தான் ஜீவன் என்ற நினைப்பால் சுகமாக கருதுகிறது. துக்கத்தினுல் துடிக்கும் ஜீவனுக்கு என்ன சமாதானம்? ஏதோ கொஞ்சம் சுகம் என்ருல் அடுத்து உடனே துக்கம்.

ஜன்மம் தொடங்கியது முதல் நிகழ்ச்சிகளை கணக்குப் போட்டுப் பார்த்தால் எவ்வளவு துக்கங்கள் அனுபவிக்க வேண்டி இருந்தது எனத்தெரியவரும்

ஜீவனுடைய தொடர்பால் பலவித துக்கங்கள் மேலிட பிராணிகள் கஷ்டமடைந்தார்கள். கொஞ்சம் சுகம், மறுபடியும் துக்கம் இப்படியே வாழ்நாள் முழுவதும் பிராணிகள் அனுபவம். தூங்கும்போது மூட்டுப் பூச்சி போன்ற உபத்திரவங்கள். விரட்ட முயன்ருல் அவைகளுக்கு உபத்திரவம். உணவருந்துகையில் ஈக்கள் தொல்லை செய்கின்றன. எலிகள் விட்டில் சேகரித்த வஸ்துக்களை திருடிச்செல்கின்றன. அவைகளை பூனைகள் கவனித்துக் கொள்கின்றன. பேன், வெள்ளை உன்னி, குளவி, பாய்பு இவைகள் பரஸ்பரம் தொல்லைகள் கொடுக்கின்றன. தேள், பாம்பு, புலி, கரடி, மனிதர்களுக்கு மனிதர்கள் இப்படி பிராணிகள் ஒருவரையொருவர் தொல்லை கொடுப்பதிலும், அடித்துக் கொள்வதிலும் ஈடுபடுகின்றனர். ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியை கொடுக்க விரும்புவதில்லை. எண்பத்து நான்கு யோனிகளில் ஒன்றை ஒன்று புசிக்கின்றன. பலவித இன்னல்கள் துயரங்கள் கணக்கிட்டு சொல்பவர் யார்?

பலவித ஜீவன்கள் உலகில் கூடினார்கள். ஒருவரையொருவர் சம்ஹாரம் செய்வதிலேயே ஈடுபட்டுள்ளனர். இதுதான் இவ்வாத்மாவின் வாழ்க்கை. அழுவது, துடி துடிப்பது, துவண்டு துவண்டு உயிரை விடு

கிறது. இப்படியாக அனுபவிக்கும் இந்த ஜீவனை, மூடர்கள் பரப்பிரம்மம் என்பர்.

பரப்பிர்மம் நிச்சலமானது அது ஒருவருக்கும் துயரத்தை அளிக்கவில்லை. அங்கு நிந்தையோ, ஸ்துதியோ, போய் அடைவதில்லை. எவ்வளவு திட்டினாலும் அது பரப்பிர்மத்தைச் சார்வதில்லை. கணக்கற்ற வசைமொழிகள் அவைகள் பரப்பிர்மத்தைத் தொடுவதில்லை. கல்பனை அண்ட முடிவதில்லை அவ்விடத்தில். இரண்டாவதின் கலப்பற்ற ஒன்ருய்த் திகழும் அதைப்பற்றி எவர்விசாரம் செய்கிருர்? கணக்கற்றவர்கள் ஜனனம் எடுக்கிருர்கள் எல்லோருக்கும். புகழ் கிட்டுகிறதா? எனவே தெய்வம் செய்துள்ள திட்டம் உசிதமானதே. கடைத்தெருவில் பல வகைப்பட்ட வஸ்துக்கள் விற்பனைக்கு வருகின்றன. அவைகள் விற்பனையும் ஆகிவிடுகின்றன. ஆனுல் நல்ல வஸ்து, பாக்கியசாலிகளுக்கே கிடைக்கின்றன. அதேபோல், அன்னவஸ்திரம், தேவதைகளை பூஜிப்பது, பிர்மஞானமெனும் பேரறிவு இவைகள், அவரவர் பூர்வவினையை யொட்டி ஜீவன்களிடம் காணப்படுகின்றன. எல்லோரும் சுகம் அனுபவிக்க இச்சைப்படுகின்றனர். எல்லோரும் சுகமடைகின்றனர். ஆயினும் அரசு பதவியில் ஒருவன் அனுபவிக்கும் சுகத்திற்கும், ஏழையானவன் களிக்கும் சுகத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்? எப்படியும் கடைசியில் துக்கத்தை அனுபவிக்க வேண்டி வருகிறது. யௌவனத்தில் சுகத்தையே அனுபவித்துக் கொண்டு வந்தமையால் பிற்காலத்

தில் துக்கமின்றி உயிரைவிட முடியவில்லை. உயிர் போகும் நிலை எல்லோருக்கும் துக்கமளிப்பதாக உள்ளது. ரூபலாவண்யங்கள் மறைந்துவிடுகின்றன. வரவும் குன்றிவிடுகிறது. பிறர் ஒருவரும் உதவ முடியாது. தானே பொறுத்துக்கொண்டு மரணமடைய வேண்டி இருக்கிறது. கடைசி நேரத்தில் எல்லோருமே தீனமாகவேப் போகிறார்கள். இது பிறப்பெடுத்த எல்லோராலும் ஒரே மாதிரியாக அனுபவிக்கப்படுகிறது. இப்படியாக ஜீவன் எனப்படும் அந்தராத்தும சஞ்சலமும் அவலக்ஷணமும் துக்கமுடையதாகவும் உள்ளது. சர்வத்தையும் அனுபவிக்கும் இந்த அந்தராத்மாவை 'அபோக்தா' அனுபவமற்றவன் என்று உலகம் கூறுவது எவ்வளவு பிசகானது? இறுதிகாலம் மிகவும் சிரமமாக உள்ளது. பிராணன் சிரமப்பட்டுத்தான் நீங்குகிறது எல்லோருக்கும். மிகவும் எளியஸ்திதியை மரணத்தறுவாயில் ஜீவன்கள் எய்துகின்றனர்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
தேக ஆத்துமா இலக்கணம் கூறியது
சர்க்கம் 6 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்.

ஜலமானது நிர்மலமாக உள்ளது. அது பலவித செடிகொடிகளில் கலந்து, புளிப்பாகவும், உறைப்புள்ளதாகவும், கசப்பானதாகவும் ஆகிறது. அப்படியே ஆத்துமா, நிர்மலமானது. அது சரீரத்தின் தொடர்பைப் பெற்ற உடன் மாறுதலைப் பெறுகிறது, அபிமானுதிகள் அதைப் பற்றிக்கொள்ள அது வேறு வழியில் பிரவேசிக்கிறது. நல்ல சேர்க்கையால், கரும்பில் காணும் இனிப்புப்போன்று, தேக புத்தியை விலக்கி, விவேகத்தின் பலத்தினுல் சமுசார சாகரத்தைத் தாண்டி விடுகின்றனர். கெட்ட சேர்க்கையினுல் விஷக்கொடி மாதிரி அது நஷ்டமடைய ஏதுவாகிறது. பதினெண் கோடி தாவரங்களின் வகைகள். அதின் குணங்களைப் பற்றி எவ்வளவு என விவரிப்பது? சரீரத்தின் சேர்க்கையினுல் குணங்களும் ஆத்மாவில் தோன்றுகின்றன. சரீரம் எடுத்தவர்களில் பலர் நல்லோர்கள். அவர்கள் நற்சேர்க்கையினுல் தேகாபிமானம் விடுத்து, விவேகத்தினுல் தேறிவிட்டார்கள். ஜலம் எப்படி பிரிகிறதோ, அப்படியே, ஆத்துமாவும் விவேகத்தினுல் பிரிந்து போம். விவேகத்தினுல் எல்லோரும் அனுபவித்தறியலாம். தன் நலனைச் சரியாக உணர்ந்தவனுக்கு அதிகம்

எடுத்துறைக்க வேண்டியதில்லை. அவரவர்களே, தன் சுய அறிவால் இவைகளை அறியக்கூடும். தன் நலனைத் தானே கருதுபவன் பரம நண்பன். தன்னைத்தானே இழித்துக் கொள்பவன் பரம பகைவன் எனத் தெரிந்து கொள்ளல் வேண்டும். தன்னையே அழித்துக் கொள்ள முயலுபவனை யார் தடுக்க முடியும்? அவன் எங்காவது தனித்துத் தற்கொலை செய்து கொள்வான். தன்னை அழித்துக்கொள்பவன் ஆத்மகாதகீ எனப்படுவான். ஆனது கொண்டு தன்னைத்தான் முன்னேற்றி கொள்பவன் தான் சாது. புண்யசாலிகளுக்கு நல்ல சேர்கையும், பாவிகளுக்கு கெட்டசேர்க்கையும் கிடைக்கின்றன. நற்கதி அல்லது அதோகதிக்கு சேர்க்கை தான் காரணம் ஆனதினாலேயே நல்ல சங்கம் தான் பிடிக்கவேண்டும். தான் விடுதலைப் பெறதானே முயல வேண்டும். விவேகசாலியான பெரியோர்கள் எப்படி தன்னைக் காத்துக் கொள்கிறார்கள் என்று விசாரணை செய்து விடுதலைக் காணவேண்டும். உலக வாழ்க்கையிலாகட்டும், பரமார்த்த வாழ்க்கையிலாகட்டும், விவேகியின் தொடர்பு நன்மையை பயப்பதாகவும், அவிவேகியின் சேர்க்கை தீமையைத் தருவதாகவும் உள்ளது. விவேகி, தேவாம்சம் எனவும், அவிவேகி, அசுராம்சம் எனவும் அறிந்து கொள்ள வேண்டும். இவைகளில் எது நன்மையை அளிக்கவல்லதோ அந்த தொடர்பைக் கொள்ள வேண்டும். விவேகி எல்லாராலும் போற்றப்

படுகிறான். அவ்விவேகி போற்றப்படுவதில்லை. ஆகையால் நல்ல சேர்க்கையைக் கொண்டு தான் முன்னேறுவதில் அக்கரைக் கொள்ள வேண்டியது. முயற்சி உடையவனான சமர்த்தனின் சேர்க்கையால் தானும் எப்போதும் முயற்சியுடையோனாகவும் அறிவுள்ளவனாயும் ஆகிறான். கெட்ட சேர்க்கையினால் துர்பலன்களையே அடைகிறான். சுகத்தை நிராகரித்து, துக்கத்தை எவனும் வேண்டுவானோ? உலகில் வெளிப்படையாக தெரியும் விஷயம் இது. அறிவுள்ளவன் சேர்மானத்தினால் எல்லாவித சுகமும் கிடைக்கிறது. அறிவீனனின் சேர்க்கையினால் துக்கம்தான் சூழுகிறது. ஆகையால் அறிவின் உதவி கொண்டு தான் எல்லா காரியங்களையும் செய்ய வேண்டும் முன்பின்தெரியாது இன்னல்களில் அகப்பட்டுக் கொண்டால் அதினின்றும் விடுதலை அடைந்தால் சமாதானமும், மேன்மையும் சம்பவிக்கும். பலவித கெட்ட சேர்க்கையின் காரணமாய் ஒவ்வோர் பொழுதும் மனதிற்கு துக்கம் கண்டு, கஷ்டம் ஏற்படுகிறது. என்பதினாலேயே தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அறிவுடையோன், முயற்சியுள்ளவனாகயிருக்கிறான். அவனுக்கு குறைவு ஏற்படுவதில்லை சுகம், சந்தோஷம், மேன்மை எல்லாம் அவனுக்கு உலகில் வந்தடைகிறது. இதை விசாரித்து அறிபவனுக்கு நன்கு புலப்படும்.

இவ்வுலகத்தை இரத்தினங்கள் நிறம்பியது, 'பஹுரத்தினா' என்கிறார்கள். நல்ல சேர்க்கையால் இதன்

உண்மை புலப்படும். பலவீனர்கள். பலசாலிகள், அறிவாளிகள் மூடர்கள், இப்படியாக பலர் இவ்வுலகில் நிறைந்து இருக்கின்றனர். ஏழைகள் பலர் பாக்கிய சாலி யாகின்றனர். பாக்கியவந்தர்கள் ஏழ்மை நிலைக்கு வந்து விடுகிறார்கள். அறிவும் இதே போலத்தான். ஓரிடம் நிறம்பினால் மற்றோர் இடம் காலியாகிவிடும். நிறம்பினால் போல் காலாந்தரத்தில் காலியாகிவிடுகிறது. இப்படியே உலகம் சக்கரம் போன்று சுழல்கிறது. சுகமான சூழ்நிலை என்பது மத்தியான நேரத்தில் தோன்றும் நிழல்.

ஆயுள் தினந்தோறும் குறுகுகின்றது குழந்தைப் பருவம், யௌவனப் பருவம், விருத்தாப்பியம் இவைகளுக்கப்பால் காலன் நிற்கிறான் என்பதை உணர்ந்து, ஆயுளை மனிதன் நல்ல காரியங்களில் செலவழிக்க வேண்டும். தேகத்தைக் கொண்டு காரியத்தில் ஈடுபாடும், முயற்சியினால் வெற்றியும் காணலாம் என்பதை உணர்ந்தவன் துக்கம் ஏன் அடையவேண்டும்?

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்,
உலக வாழ்வுப் பற்றிக் கூறியது
சர்க்கம் 7

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

நாபி என்னும் பிரதேசத்தினின்றும் மேல் எழுவது 'பரா' என்னும் ஒலியின் முதற் தோற்றம். ஒலியாக ஹிருதயதானத்தை அது அடைந்ததும் அதற்கு 'பச்யந்தி' என்ற பெயர் கொடுபட்டது. கழுத்துஸ்தானத்தில் நாத உருவாக அது ஆகும் போது அதற்கு 'மத்யமா' எனப்பெயர். நாக்கை அடைந்து உச்சரிப்பாகும் போது, 'வைகரி' எனப்படும். நாபி ஸ்தானத்தில் தோன்றும் பரா என்றும் ஒலியின் ஸ்திதியே அந்தகரணத்தின் ஸ்தானம்.

எதுவுமே அந்தக்கரணத்தில் முதலில் தோன்றுகிறது. உண்டா, இல்லையா, செய்வதா, வேண்டாமா என ஐயுறுவது, சஞ்சலமாக விருப்பது மனது. செய்யலாம் அல்லது கூடாது எனத்தீர்மானிப்பது அது புத்தி. நிச்சயம் செய்த ஒன்றைப்பற்றி மேலும் மேலும் சிந்திப்பது சித்தம். கார்யத்தில் அபிமானம் கொண்டு ஈடுபடுவது அஹங்காரம். இவைகள் அந்தகரண பஞ்சகம் எனப்படும். இவ்வைந்து விருத்திகளும் கூடி ஒன்ருகின்றன. கார்யம் நடக்கும் பஞ்சகம் வேறு வகையானது.

வாயு ஒன்றுதான் எனினும் கார்யவசமாய் ஐந்து பிராணன்களாக தோன்றுகிறது. உடல் முழுவதும் வியாபித்து நிற்கும் வாயு 'வியானன்'. நாபி ஸ்தானத்தில் இருப்பது 'சமானன்'. கழுத்து ஸ்தானத்தில் உள்ளது 'உதானன்'. 'குதம்' எனும் மலத்துவாரத்தருகில் உள்ள இடத்தில் இருப்பது 'அபானன்'. மூக்கில் சஞ்சரிப்பது 'பிராணன்' இவ்வைந்தும் 'பஞ்ச ப்ராணன்கள்' எனப்படுபவை.

ஞான இந்திரியங்கள் ஐந்து. காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்பவைகள். வாய், கை, கால், ஜனனக்கருவி, மல நிவருத்தி ஸ்தானம் ஆகிய இவ்வைந்தும் ஐந்து கர்மேந்திரியங்கள்.

வார்த்தை, ஸ்பரிசம், உருவம், சுவை, வாடை, என்பன ஐந்தும் 'விஷய பஞ்சகம்' எனப்படும். இப்படியாக ஐந்து பஞ்சகங்கள் அதாவது, அந்தகரண பஞ்சகம், பிராண பஞ்சகம், ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சகம், மேலும் விஷய பஞ்சகம் ஆக ஐந்து.

இந்த 25 குணங்கள் கூடினது சூக்குமசரீரம் எனப்படும். அதைப்பற்றி கூறுகிறோம் கேளுங்கள்.

அந்தகரணம், வ்யானன், செவி, வாக்கு, ஒலி இவைகள் ஆகாசத்தின் தர்மம். வாயுவைப் பற்றி

விஸ்தாரமாக ஏற்கனவே கூறினோம். மனது, சமானன், த்வக்தோல், கை, ஸ்பர்சம், உருவம் இவைகள் வாயுவினுடையது. இவைகளை சாதுவானவன் வசத்தில் வைக்க வேண்டும். புத்தி, உதானன், கண், பாதம், தோற்றம் இவைகள் தேஜஸின் தர்மங்கள், சித்தம், அபானன், நாக்கு, ஜனனக்கருவி, சுவை முதலியன அப்பு எனும் ஜலத்தின் தர்மங்கள், அகங்காரம், பிராணன், மூக்கு, குதம், வாசனை இவ்வைந்தும், பிருதிவி எனும் பூமியின் தர்மங்கள். என சாஸ்திரங்கள் கூறுகின்றன. இப்படியாக உள்ளது இந்த சூக்கும சரீரம். மனதை செலுத்தி கூர்ந்து பார்ப்பவர்களுக்கே இது புலப் படும்.

இனி ஸ்தூல சரீரத்தைப் பற்றி ஆராய்வோம். ஆகாயத்தின் ஐந்து வித குணங்களாகிய, காமம், க்ரோதம், சோகம், மோஹம், பயம் இவைகள் புலனாகின்றன வாயுவின் ஐந்து குணங்கள் சஞ்சரிப்பது, திருப்புவது, பரவுவது, அடைத்துக்கொள்ளுவது, சுருங்குவது ஆகிய ஐந்து ஸ்தூலத்தில் புலனாகின்றவை. பசி, தாகம், சோம்பல், தூக்கம், புணருதல் இவைகள் தேயுவின் ஸ்தூல குணங்கள். சுக்கிலம்,ச்ரோணிதம், உமிழ், மூத்திரம், வியர்வை இவைகள் 'ஆபம்' எனும் ஜலதத்வத் ஸ்தூல தர்மங்கள். எலும்பு, மாமிசம், தோல், நாடி, ரோமம் இவ்வைந்தும் பிருதிவி எனும் பூமி தத்துவத்தின் ஸ்தூல குணங்கள். இப்படியாக, பிருதிவி, அப்பு

தேயு, வாயு, ஆகாயம் எனும் ஐந்தின் ஐந்து குணக்கள் கொண்டது ஸ்தூல சரீரம்.

மேலும் மூன்ருவதாக காரண சரீரம் எனும் அஞ்ஞானமும், மஹாகாரணம் எனும் ஞான சரீரங்கள் உள.

இந்த நான்கு சரீரங்களில் தெளிவு ஏற்பட்டு, விசார சக்தியினுல் ஆத்துமா சரீரத்தினின்றும் வேருக உள்ளது என்பது புலப்படடு, அகங்காரமும், தத்துவங்களுடன் கலந்தால், இரண்டற்ற பரப்பிர்மத்தினிடம் ஆத்ம நிவேதனம் செய்ததாகக் கருதப்படுகிறது. இந்த விவேகத்தினுல் பிறப்பு, இறப்பு ஒழிந்து, தேகம் எடுத்ததற்கு பலன் கிட்டி, பரப்ரும்மத்தினிடம், ஒன்ருக கலப்பதினுல் நான் செய்த பக்தியும் பலனுள்ளதாகும். இப்பஞ்சிகரணம் எனும் ஆராய்ச்சியை அடிக்கடி செய்ய வேண்டியது எப்படி பரிசவேதைக் கல்லின் துடர்பினுல், இரும்பு, பொன்ஞகிறதோ அப்படியே பரப்பிரும்மத்தில் ஒற்றுமை கொண்ட ஜீவன் மேன்மையை யடைகிறது. இந்த உவமையும் கூட சரிவர இல்லை ஏன் என்ருல் இரும்பு, தங்கமாக மாறுமே அன்றி பரிச வேதைக் கல்லாக மாறுவதில்லை. இவ்விடத்திலோ, ஜீவன், பரப்பிரும்மாகவே மாறி விடுகிருன். மோக்ஷத்தை விரும்பியவன் சாதுவாகவே ஆகிவிடுகிருன்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில்பாலதசா
உபதேச விளக்கத்தில்
தத்துவ ஆராய்ச்சி எனும்
சர்க்கம் 8 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் ஒன்பதாம் சர்க்கப் ரிரசங்கம்.

ஸ்தூலம், சூக்குமம், காரணம், மகா காரணம் என்ற நாங்கு தேகங்கள் முன் கூறியவை. அவை விழிப்பு நிலை, சுவப்ன நிலை சுழுப்தி நிலை, துர்யம் எனும் பூரண நிலை என்ற நான்கு நிலைகளைக் கொண்டவை. இந் நால்வகை சரீரத்தில் அபிமானம் கொண்டவர்கள் விச்வம், தேஜசு, ப்ராஞ்ஞன், பிரத்யகாத்மா இவர்கள். கண், கழுத்து, மார்பு, சிரசு இவைகள் அவைகளின் ஸ்தானங்கள், நான்கு சரீரங்களும் நான்குவகை அனுப வங்களைக் கொண்டுள்ள. ஸ்தூலம், கஉ, ஆநந்தம், ஆநந்தாவபாஸம் என்பவை இவ்வனுபோகங்கள். அகாரம், உகாரம், மகாரம், அர்தமாத்திரை என்பவை அவைகளின் மாத்திரைகள். தமோகுணம், ரஜோ குணம், சத்துவகுணம், சுத்த சத்துவகுணம் இவைகள் இத்தேஹங்களின் குணங்கள் க்ரியாசக்தி, திரவிய சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி எனும் நான்கு சக்தி களைக் கொண்டவை இத்தேஹங்கள். இப்படியாக முப்பத்து இரண்டு தத்துவங்கள் ஆகும். முற்கூறிய ஸ்தூல சரீரத்தின் இருபத்தைந்தும், சூக்கும சரீரத் தின் இருபத்தைந்துமாக, ஐம்பது தத்துவங்களையும் கூட்ட, எண்பத்து இரண்டு தத்துவங்கள் மொத்தம்.

இத்தத்துவங்கள் மாயையினால் தோற்றபவை. தான் சாக்ஷி என்பதை யுணர்ந்ததும் இவைகள் மறைந்துவிடும். சாக்ஷியாக விருக்கும் நிலையே ஞானம். ஞானத்தினால் அஞ்ஞானத்தை ஆராய்ந்தறிய வேண்டும். ஞானம், அஞ்ஞானம் இதை இரண்டையுமே அப்புறப்படுத்தி சாக்ஷித்தன்மை உணர்வதே மெய்யுணர்வு.

பிர்மாண்டத்தில் தோற்றும் சரீரங்களுக்கு விராட், ஹிரண்யகர்பன் எனப் பெயரிட்டுள்ளனர். மேலும் 'அவ்யாகிருதம், மூலமாய்கை' என இரு தேகங்களும் சூசிக்கப்படுகின்றன. ஆனால் இந்நான்கு தேகங்களும் விஷயங்களை புரிந்து கொள்வதற்காக சூசிக்கப்பட்டவை. அவைகளையும் தாண்டிச் செல்ல வேண்டு. ஆத்துமா, அநாத்மா இவைகளைப் பற்றிய விசாரணை முன் கூறப்பட்டுள்ளது. இவைகளினால் ஐம்பூதங்களாகிய பிண்ட பிர்மாண்டத்தை முற்றிலும் புரிந்து கொள்ளல் வேண்டும். தன்னிலையாகிய பிர்ம நிலையை உணர வேண்டும்.

எலும்பு, மாமிசம், தோல், நாடிகள், உரோமம் இவைகள் பூமியின் குணங்கள் கொண்டவை. தன் சரீரத்திலேயே இதைப்பற்றி ஆராய வேண்டும். சுக்கிலம், ச்ரேணிதம், உமிழ் நீர், வியர்வை இவ்வைந்தும் ஜலத்தத்துவத்தின் குணங்கள். பசி, தாகம், சோம்பல், தூக்கம், புணருதல் இவ்வைந்தும் தேஜஸ்தத்துவத்தின் கிரியைகள். சலனமடைவது, சுழலுகிறது, பரவு

வது, தம்பித்துப் போவது, சுருங்குவது இவைகள் வாயுவின் குணங்கள். காம, க்ரோத, சோக, மோஹ பயங்கள் ஆகாய தத்துவத்தின் விசேஷங்கள். இப்படியானது ஸ்தூல சரீரம் இருபத்தைந்து தத்துவங் கொண்டது.

சூக்கும சரீரம், மனது, அந்தகரணம், புத்தி, சித்தம், அஹங்காரம் எனும் ஆகாய பஞ்சகத்தின் விசாரம் செய்து, வாயுவின் அம்சமாகிய, வியானன், சமானன், உதானன், பிராணன் அபானன் இப்படியாக ஐந்து குணங்சள், காது, தோல், கண், நாக்கு, மூக்கு என்ற, தேஜஸ்தத்துவத்தின் ஐங்குணங்கள், வாய், கை, கால், ஜனனக்கருவி, மலநிவிருத்தித் தானம் இவைகள் ஜல தத்துவத்தின் குணங்கள், பூமியின் குணங்களாகிய, சொல், ஸ்பரிசம், ரூபம், சுவை, வாடை என்பதான இருபத்ந்தைந்தையும் கொண்டது.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யான் தர்க்கத்தில் தாச பால
உபதேச விளக்கத்தில்
தனுசதுஷ்டயம் கூறியது
சர்க்கம் 9 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

ஜம்பூத்வீபம் முதலிய ஏழு த்வீபங்கள் கொண்டது உலகம். பால், மது, நெய், தயிர், கரும்புச்சார், உப்பு நீர், சுத்தமான ஜலம் இவைகளாகிய ஏழு கடல்கள் ஆவரணமாக அமைந்துள்ளன. இவைகளின் நடுவில் 'ஹாடகேச்சரர்' எனும் பெயர் கொண்ட பரமசிவனுடைய பாதாளலிங்கம் இருக்கிறது. இங்கிருந்தே செய்யப்படும் வழிபாடு அங்கே போய் அடையும். அதன் மகிமை சொல்லொணாதது. அங்கே போகமுடியாது. இந்த சரீரத்தால் அதை தரிசிக்க முடியாது. விவேகத்தினால் அதை தியானத்திலமர்த்த வேண்டும். ஏழ் கடல் தாண்டி திறந்த பூமி இருக்கிறது. பூமியின் எல்லை அதுதான். ஏழ்கடலைத் தாண்டினால் தான் அங்கே செல்ல முடியும். அது எளிதல்ல ஆகையால் விவேகிகளின் சகவாசம் கொள்ள வேண்டும். தனக்குத் தெரியாததை தெரிந்தவர்களிடமிருந்து கற்றுணர வேண்டும். மனோவேகத்தினால், சரீரத்தைக் கொண்டு உலகத்தைச் சுற்றிவர முடியாதாகையால் உட்கார்ந்த

இடத்திலேயிருந்து பிர்மாண்டத்தை தியானத்தில் கொண்டுவந்து சமாதானமடைய வேண்டும். ஊனக் கண்ணுக்கு புலனாகாததை அகக்கண்ணினாலேயே பார்க்க வேண்டும். பூமி நடுவே இருப்பதால் மேலே ஆகாயம், கீழே பாதாளம் எனும் பிரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பூபாகம் இல்லை என கல்பித்தால் எங்கும் வெட்டவெளிதான் தோன்றும். அவ்வெட்டவெளியின் உபாதிகளை நீக்கிப் பார்த்தால் அது பிர்மம் தான். கண்களுக்கும் புலனுக்கும் படைப்பின் குறிகள் அங்கே தோன்றா. கண்களால் அறிவதை 'திரச்யம்' எனவும் மனதினால் புலனாக்கிக் கொள்ளப்படுவதை 'பாஸம்' எனவும் சொல்வார்கள். பரப்பிர்மம் இவ்விரண்டிற்கும் அப்பாலானது. இந்திரியங்கள், மனது இவைகளுக்கப்பால்பட்டது. அங்கே விவேகத்தின் பலத்தினால் போகவேண்டும். சூக்குமதிருஷ்டியினால் ஆகாயத்தின் அப்பால் உள்ள கேவல பிர்மத்தை தரிசிக்கும் ஞானிகள் சிலரே. வாச்யாம்சமானதை சொற்களால் அறிவிக்கலாம். லக்ஷ்யாம்சத்தை சொற்களின்றி புரிந்து கொள்ளலாம். நிர்குணத்தை சகுணம் எனும் மூலமாய்கையின் வழியே தெரிந்து கொள்ளலாம். குணங்கள் மறைபவை, நிர்குணம் என்று நிலைத்துள்ளது. ஸ்தூல திருஷ்டியைவிட சூக்கும திருஷ்டியின் நோக்கம் சாலவும் சிறந்தது. புறக்கணக்கிற்கு தோற்

ருதனை, சிரவணம், மனனம் முதலானதுகளால் அறிய வேண்டும். எட்டுவித பிரகிருதிகளினுல் பலவிதமான படைப்புகள் தோன்றியுள்ளன. அதை எல்லாவற்றையும் யார் பார்க்க முடியும்? எல்லாவற்றையும் ஒன்று என்று நினைப்பது தவறு. எல்லாவற்றையும் ஒன்ருக பாவிப்பது தெரிந்தோர்களின் வழியல்ல.

சுவை தெரியாத நாக்குடையவன் எல்லாவற்றையும் கலந்து புசிக்கிருன். மூர்க்கனை, தடியனுக்கு சுவாரஸ்யம் விளங்குவதில்லை. சாரமாயுள்ளதை அறிவினுல் தேர்ந்தெடுக்க வேண்டும் என அவனுக்குத் தெரிவதில்லை. விவேகம் அவிவேகம் அவனுக்கு இரண்டுமே சமமாகத் தெரிகிறது. சரிவரத் தெரிகிறது. சரிவர அப்பியாசிக்காததினுல் உயர்வு தாழ்வு புரிவதில்லை. பலவித மார்க்கங்களை அணுகுவதால் விடுதலை அடைய முடியாது. எல்லாவற்றையும் ஒன்று எனச்சொல்பவன் அறிவீனன். எது தினம் அழிவுறுகிறதைக் காண்கிருேமோ அதை அவிநாசி என்பவரை என்னவென்று சொல்வது? கடவுள் பலவகையான மாறுபாடுகளை படைத்துள்ளான். மாறுபாட்டின் அடிப்படையாலே தான் உலகம் ஓடிக்கொண்டிருக்கிறது. பரீக்ஷை செய்பவர் குருடராயின் பயன் என்ன? பரீக்ஷை இல்லாத சமூகத்தை மூர்க்கக் கூட்டம் என்று தான் சொல்ல வேண்டும். இவர்களிடம் எந்த குணமும் இருக்காது.

குணமின்றி கௌரவம் எப்படி அடைகிறது? மெய்யும் பொய்யும் ஒன்ருக தோன்றுபவனுக்கு அறிவு எங்கு ஏற்படுகிறது? ஞானிகள் அசாரமானதைவிடுத்து சார மானதை ஏற்றுக் கொண்டார்கள். அறிவீனனிற்கு உத்தமமான வஸ்துவின் பரீக்ஷை எப்படி புரியும்? தீக்ஷை இல்லாதவன் பிறருக்கு தீக்ஷை கொடுப்பது எப்படி? தான் சுதாவாக மலினன் ஆக இருப்பவனே, தன் அசுத்தத்தைப் போக்கிக் கொள்ள விரும்பாத வனே, வேதம் சாஸ்திரம், புராணங்கள் என்ன செய்யும்? என்பதாலேயே முதலில் ஆசார நியமங்களை கைக் கொள்ள வேண்டும், பிறகு நிர்மலமான விசாரம் செய்ய வேண்டும் ஆசாரம், விசாரம் இரண்டு வாய்த்தவென் ருல் அக்கரையை எளிதில் அடையலாம். நியமத்துடன் நடப்பவனுக்கே புரிவதற்கு கடினமானதை, நியமம் குன்றி நடப்பவனுக்கு எப்படி எளிதில் புரியவரும்? கண்ணுள்ளவர்களே இடருகிருர்கள் எனில் குருடன் கதி என்ன?

புண்யம் - பாவம், ஸ்வர்க்கம் - நரகம், விவேகம் அவிவேகம், எப்படி ஒன்ருகும்? அமிர்தமும் விஷமும் எப்படி ஒன்ருகும்? விஷமருந்துவதினுல் பிராணன் அகன்று விடும் என்பது தெளிந்த உண்மை. கெட்ட காரியங்களால், ஏளனப்படுவதும், நற்செய்கைகளால் கீர்த்தி யடைவதும் நன்கு புரிந்த விஷயம். இஹ

லோகம், பரலோகம் இவ்விரண்டிலும் அறிவின்றி நடந்தால் முழுமையும் வியர்த்தமாய்விடும். ஆனதினல் சத்சங்கத்தை பெற வேண்டும். நல்ல சாஸ்திரங்களை சிரவணம் செய்ய வேண்டும். பற்பல முயற்சிகளால் உத்தமமான குணங்களைப் பழக வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

மூர்க்கள் - அறிவாளிகளின் இலக்ஷணங் கூறியது.

சர்க்கம் 10 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினேட்டாம் தசகத்தில் முதற் சர்க்கப் பிரசங்கம்.

யானைமுகக் கடவுளே உன்னை நமஸ்கரிக்கிறேன். உன் மகிமையை யார் அறிவார்கள். புத்தியும், வித்தைகளும் நீ ஜனங்களுக்கு புகட்டுகிறாய். பெரியோர் சிறியோர் யாவருக்கும் நீ உன் கருணையைக் காண்பிக்கிறாய்.

சரஸ்வதி தேவியே உன்னை வணங்குகிறேன். உன்னிடமிருந்து தான் நால்வகைப்பட்ட வாக்குகள் உண்டாகின்றன. உன் குணங்களை விவரிப்போர் சிலரே.

பிர்மதேவருக்கு என் வணக்கம். படைப்புக்கு அவர்தான் காரணம் வேதசாஸ்திரங்களை தோற்றுவித்தவரும் அவர்தான்.

தன் ஒரு அம்சத்தைக் கொண்டு உலகம் யாவையும் ரக்ஷிக்கிறவர் ஸ்ரீ மகாவிஷ்ணு. சகல ஜீவராசிகளும் பரிபாலிக்கப்படுவது உன்னாலே தான். உன் மகிமை தான் என்ன !

ராமநாமாவை நிரந்தரமாக ஜபித்துக் கொண்டிருக்கும் பரமசிவனின் மகிமைதான் என்ன? அவன் ஈகைக்கு அளவு உண்டோ.

சகல தேவர்களுக்கும் கோனாகிய இந்திரனின் மகிமைதான் எப்பேர்ப்பட்டது? இந்திரபுரியின் வைபவங்களை எவரால் வர்ணிக்க முடியும்?

காலனாகிய எமதர்மனின் மகிமை எப்பேர்பட்டது. சகல பிராணிகளின் தர்ம - அதர்ம செயல்களையும் கண்டு கொள்கிறார். பிராணிகள் அந்தரங்கம் யாவும் புரிகின்றது அவருக்கு.

நின்று கொண்டே, வடை, அப்பம் முதலியவைகளை மலை மீதினில், கம கம என நல் மணம்வீச விரும்பும் வெங்கடேசா உன் மகிமைதான் என்ன?

வனசங்கரி தேவியே உன் மகிமை எப்பேர் கொந்தது? உன்னருளால் எங்கும் பயிர்கள் நிரம்புகின்றனவல்லவா.

வடைமாலைகளை தரித்து சமாதானம் பெறும், ஹனுமானே உன் மகிமையை என்னவென்று வர்ணிப்பது?

மஞ்சப்பொடியால் தூவப்பட்ட சரீரத்தை உடைய கண்டோபா தெய்வமே உன்னுடைய மகிமை தனிப்பட்டது. வெங்காயம், பச்சடி, ரொட்டி முதலியவைகளை யன்றோ உனக்கு நிவேதனம் செய்கிறார்கள்.

துளஜா பவானியே உன் மகிமை மிகவும் போற்றத் தக்கது. நீ பக்தர்களுக்கு பிரசன்னமானவர். நீ பிரசன்னமாகிவிடின் குணவைபவங்களுக் அங்கு ஏது குறை ?

பாண்டுரங்கா நீ அகாத மகிமையுடையவன். நிரந்தரமாக உன்னருகில், கதை கீர்த்தனங்கள் நடைபெறுகின்றன பாட்டுக்களும், பாடல்களும் பலவகையாக உன் எதிரில் பாடப்படுகின்றன.

க்ஷேத்திரபால தெய்வமே நீ மகிமை வாய்ந்தவன். (பைரவன்) அநேக பக்தர்கள் உன்னை பஜித்து, தங் காலமே மனோரதங்களை அடைந்துள்ளார்கள்.

ராமகிருஷ்ணாதி அவதாரங்களைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியது இல்லை. அபார மகிமை உடைய இவ்விரு அவதாரங்களையும், உபாசிக்கும் பக்த கோடிகள் அதிகமாக விருக்கின்றனர்.

இவ்வெல்லா தைவங்களுக்கும் மூலம் இந்த அந்தராத்துமா தான். அவன் பூ உலகில் பலன்கள் எல்லாம்

அவனைத்தான் சேருகின்றன. சில தேகங்களில் இருந்து கொண்டு கார்யங்களை நடத்துபவனுகவும் வேறு சில தேகங்களில் இருந்து பலனை அனுபவிக்கும் போக்தா வாகவும் இருக்கிறான். பலவித சக்திகளைப் பெற்ற உருவம் தாங்கினவனுகவும் அவன் தான் இருக்கிறான் இப்படியாக விசாரம் செய்து கொண்டே போனால், இது நீண்டு கொண்டே போகும். கணக்கற்ற தெய்வங்களும், கணக்கற்ற பக்தர்களும் உண்டாகினர்.

புகழும் நிந்தையும் எவ்வளவோ? இவ்வளவும் போய்சேருமிடம் அந்தராத்மா. செய்வதும், அனுபவிப்பதும் போகி, தியாகி, வீதராகி அனைத்தும் அந்த அந்தராத்மா ஒருவனே. சுய அபிமானங் கொண்டு பிராணிகள் நவிக்கின்றனர். சரீர நினைவிலேயே காலம் கழிக்கின்றனர். முக்கியமான அந்தராத்மாவை மறந்து விட்டார்கள் அவனே உள்ளேயே வீற்றிருக்கிறான். ஆத்மாவின் நடத்தைகளை கவனிப்பவன் எவன் இருக்கிறான்?

மிகுந்த புண்யம் இருக்குமேயாகில், நினைவு உண்டாகும். இந்த நினைவினால், பாவங்கள் அனைத்தும் தகித்துப் போம். ஆனது கொண்டு அந்தர்நிஷ்டமான ஞானிகள் இதையே நினைத்துக் கொண்டு, மேலும் மேலும் சிந்தனை செய்கிறார்கள். அந்தர்நிஷ்டையி

வீடுபட்டோர் அக்கரை சேறுகின்றனர். பஹிர்முக மானவர்கள் மூழ்கிவிடுகின்றனர். வெளிப்படையான வௌகீகங்களிலேயே இவர்கள் ஈடுபட்டு அல்லலுறு கின்றனர்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

பல தேவதைகளை நிருபணம் பண்ணப்பட்டது

சர்க்கம் 1 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேட்டாம் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

தெரியாத்தனத்தினல் நடந்தது நடந்தபோயிற்று. இதுவரை போனது போகட்டும். இனியாவது கட்டுப் பாடுடன் அறிவுடன் செயல்பட முயற்சியுங்கள். புத்தி சாலியின் சகவாஸத்தை அடைந்து, அவனுக்கு தொண்டு புரிந்து அவனுடைய நற்புத்தியை சிறிது சிறிதாக கிர கிக்க வேண்டும். இப்படி செய்தால் அநாயாசமாய் புத்திசாலியாக சீக்கிரம் மாறிவிடலாம். அவனிடம், எழுதப்படிக்க கற்றுக்கொள்ளலாம். சமுசயங்களைக் கேட்டு தெளிந்து கொள்ளலாம். அறிவாளியின் சிநேகி தத்தில் கஷ்டம் செய்யவும் ஆநந்தமாக வாழவும் கற்றுக் கொள்ள வேண்டும். அவன் அடிபணிய வேண்டும். அவனைப்போன்று நாட்களை கழிக்க முயல வேண்டும். அவன் சொல்லும் கதைகள், விஷயங்கள், யுக்திகள், பேச்சு, நடத்தை எல்லாவற்றையும் கற்க வேண்டும். அவன் உலகமக்களின் சிக்கல்களை எப்படி விலக்கு கிருன். அவர்களுடன் கலந்து எப்படி பழகுகிருன் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவனுக்கு உண்டாகும் உற்சாகம், அவனுடைய திட்டங்கள், தர்க்க ரீதிகள், அவன் காட்டும் தைர்யம் எல்லாவற்றையும் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அவன் செய்

யும் கவிகள், அவன் பேசும் இனிய பேச்சுக்கள், அவன் பலபேருடன் புரியும் சாம்பாஷணை அவனுடைய தீக்ஷ்யண்யமான புத்தி, அவனுடைய பொறுமை, தீர்க தரிசனம், அத்யாத்ம வித்தையில் அவன் கொண்டுள்ள விவேக புத்தி. பக்தி, யோகம், ஞானம், த்யானம், பற்றற்ற தன்மை, வைராக்கியம் ஆன எல்லா குணங் களையும் கிரகிக்க வேண்டும்.

அறிவு படைத்தவன் அந்த அந்தராத்மா ஒருவன் தான். அவனுடைய குணங்களைப் புகழ்ந்து பாடுதல் அவசியம். அவனுடைய அறிவு, குணம் இவைகளின் எல்லையை அறிந்தோர் யார்? பரமேச்வரனின் குணம் மேன்மேலும் பாட வேண்டும். எப்போதும் அவனைப் பற்றியே பேசவேண்டும், இப்படியாக செய்தால் ஆநந்தம் அதிகரிக்கும்.

பரமேச்வரனல் நிற்மிக்கப்பட்டவை அநந்தம். அவைகளைப்பற்றி விவேகத்தினுல் புரிந்து கொள்ள வேண்டியது. அவன் சிருஷ்டியை அப்புறப்படுத்தி பார்க்க வேண்டும். அவன் பிராணிகளை நிர்மாணிக் கிறுன். அவனைக்காணவோ முடிவதில்லை. விவேகத் தின் உதவியினுல், அனுமானித்து அறிய வேண்டும். அவன் தியானத்தை துடர்ந்து செய்தால், கிருபையுடன் அவன் உணவளிக்கிறுன். அவனைப்பற்றியே சர்வ காலமும் சம்பாஷணை செய்ய வேண்டும்.

த்யானம் செய்யாதவன் அபக்தன். தியானம் செய்பவனே பக்தன். பக்தன் இச்சம்சாரத்தினின் றும் விடுதலைப் பெறுகிறான் உபாசினையின் கடைசியில் தெய்வதைக்கும் பக்தனுக்கும் நீண்ட சந்திப்பு ஏற்படுகிறது. இவ்விஷயங்கள் அனுபவத்தில், சோதனைக்கு வரும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 2 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேட்டாம் தசகத்தில் மூன்றும் சர்க்கப் பிரசங்கம்.

நரதேஹம் கிடைப்பதே துர்லபம். அதில் நல்ல ஆயுள் கிடைப்பது சிரமம். ஆனதினால் அதை அழிய விடக் கூடாது. முக்யமாக விவேக பலம்தான் வேண்டியது. விவேகம் இல்லாத பிராணி தீனனாகிவிடுவான், கெட்டசங்கத்தினாலும், சோம்பலினாலும், தனக்குத் தானே, தீங்கிழைத்துக் கொள்ளக்கூடாது. மூர்க்கத் தன்மையின் பழக்கம், மூடமான நடத்தை, விவேகமற்ற யௌவனப் பிராயம், இவைகளின் முடிவு தைன்யம். ஏழ்மை வேண்டிய பொருள் கிடைக்காமல் போவதே தைன்யத்தின் குறி. அன்னவஸ்திரம் இல்லை. உத்தமமான குணங்கள் இல்லை. பேசத்தெரியாது, மரியாதையானவர்களுடன் உட்காரக்கூடத் தெரியாது, எப்போது எப்படி பழகவேண்டும் என்பதும் தெரியாது. சரீரம், மனது அடங்குவதில்லை. உள்ளொன்றும் புறமொன்றுமாக உள்ள விவேகத்துடன் கூடிய ஒருவன் பரலோகங்களை அடையும் பாக்யம் எப்படி அடைவான்? இப்படியாக ஒருவனுடைய இகலோக வாழ்க்கை பாழாகிவிட்டால், அவன் பச்சாதாபம் கொண்டு விவேகத்தின் பலத்தினால் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். மனதை ஓர் நிலைப்படுத்தி, பலவித சாதனைகள் புரிந்து

சோம்பலிற்கு இடம் கொடாமல், துர்குணங்களை விடுத்து, நற்குணங்களை பழக வேண்டும். பிரபந்தங்களை பாடம் செய்தல் வேண்டும். மிகவும் ஆழ்ந்த கருத்துக்களைப்பற்றி சிந்தனை செய்ய வேண்டும். பல இலக்ஷணங்கள் கொண்ட, பல விருத்தங்களிலுள்ள செய்யுள்களைப் பாடம் செய்ய வேண்டும். அவைகளில் கூறிய கருத்துக்கள் புரிந்தால் மனதிற்கு ஆநந்தம் உண்டாகிறது.

எந்த சமயம் எதை பேசவேண்டும் என்பதில் கவனம் இருக்க வேண்டும். ஏன் வீணில் கஷ்டப்பட வேண்டும்? பிறர் அந்தரங்கத்தை தெரிந்து கொள்ள வேண்டும். அவர்கட்கு செவிசாய்க்க விருப்பம் காணில் எதையும் விளக்க வேண்டும். தன் மனதிற்கு தோன்றியது என்று சொல்லிக் கொண்டு போவது மூர்க்கத் தன்மை. யார் எந்த வழியில் உபாசினை செய்கிறானோ அவனுக்கு அந்த வழியின் மேன்மையை அவனுக்கு எடுத்துரைக்க வேண்டும். இதில் பிசகவே கூடாது.

தாளம், ராகம், இவைகளின் ஞானத்தைப் பெறுதல் அவசியம். ஸாஹித்யம், சங்கீதம் இவைகளின் பலத்தினால், பிரசங்கங்களில் சுகத்தை தருவிக்க வேண்டும். பாடாந்தரம் நிரம்ப செய்ய வேண்டும். சிரவணம்

மனனம் இதுகளினால் பல கருத்துக்களை தெரிந்து கொள்ள வேண்டும். அடிக்கடி மனதிற்கு கொண்டு வந்து அது நினைவில் புதிதாகவே இருக்கும்படி செய்து கொள்ளல் வேண்டும். எப்போதும் நூல்களைப் படிக்க வேண்டும். அனுபவத்துக்கு வரும் பொருளை மனதில் ஒன்றுபதிந்து கொள்ளல் வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 3

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினெட்டாம் தசகத்தில் நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

தேஹம் தாரணம் செய்வதினுலே அதாவது சரீரம் இருப்பதினுலேதான் உலகத்திலும், பரமார்த்தத்திலும் சதா பல காரியங்கள் நடைபெறுகின்றன. விநாயகர் சரஸ்வதி முதலியோரின் துதி, பலவித கவிதைகள், படிப்பு, நூலாக்கம், நல்லோர் சேர்க்கை, தீர்த்தயாத் திரைகள், கதைகள் கேட்பது, மனனம் செய்வது, கர்ம மார்க்கத்தில் உழைப்பது, உபாசினே செய்வது, ஞான விசாரம் எல்லாம் இத்தேகத்தினுல்தான். யோகிகள் ராகத்துவேஷம் அகன்ற வீதிராகிகள், தவசிகள் எல், லோரும், தேகத்தின் பொருட்டுத்தான் இவ்வளவு சிர மப்படுகிருர்கள். தேகத்தினுல்தான் ஆத்துமா வெளிப் படையாகிறது. இகலோகமோ, பரலோகமோ தேகத் தினுல்தான் ஒருவன் பெறக்கூடும். தேகமன்னியில் சகலமும் நிரர்தகம். புரச்சரணுதி அனுஷ்டானங்கள் பஞ்சாக்னி சாதனங்கள், தேகத்தின் பொருட்டுத்தான். புண்யசீலன்எனப்போற்றப்படுவதும்,கேவலமான பாபி என ஒருவன் இகழப்படுவதும், சரீரத்திற்காக அவன் செய்யும் செய்கைகளைக் கொண்டுதான். தேகத்தின் பொருட்டே ஒருவன் பிறப்பது. பல வேஷங்களை தரிப்

பது. பலவித செயல்களும் தேஹத்திற்காகவே புரிகி ருன். விஷயங்களை அனுவிப்பதும், தேஹத்தினுல் தான் சகலவித த்யாகங்களை ஏற்றுக்கொள்வதும் தேகத்திற்காகவே. வியாதிகள் வருவதும், மறைவதும் தேகத்தினுல் தான். நவவிதமான பக்தி செய்வது தேகத்தின் பொருட்டுத்தான். தேகத்தின் பொருட்டு நான்குவித முக்தி. பலவித மதங்கள். தான தர்மங் கள், பூர்வ கர்ம சிந்தனை, பலவித நலங்கள், பக்தி மார் கத்தில் சிரத்தை, பலவித சன்மார்க்கங்களைக் கடைப் பிடித்தல், பலவித பந்தனங்களை அறுத்து மோக்ஷ மடைவதும் தேகத்தின் காரணமே இப்படியாக சரீரம் மிக உத்தமமானது.

புருஷோத்தமனுகிய கடவுள் சரீரத்தில் தான் வீற் றிருக்கின்ருன். எங்கும் நிறைந்தவன் அவன். தேக காரணத்தினுல் தான் பல பிரமைகள். பல ஆர்பாட்டங் கள். தேகத்தினுல் தான் உத்தமோத்தமான பதவி களை மனிதன் அனுபவிக்கிருன். தேகத்தினுல் தான் இவ்வளவும் நடைபெறுகிறது. தேகமில்லை எனில் எங் கும் ஆத்துமாவே நிரம்பி இருக்கும். அது வெளிப்படை யாக தெரியவராது. கலைகளை பயிலவோ, வெளிக் கொண்டுவரவோ, பலவித விசாரங்கள் புரியவோ, தேகம்தான் தேவை. பிர்மாண்டத்தின் பலனுக இது லெபித்துள்ளது. இது கிடைப்பதற்கரிது. தேகதா ரிகள் எல்லோரும் தன்தன் செயல்களைபுரிந்து வந்த னர். தேகம் இருந்ததினுலன்ருே.

நேகங்கொண்டவர்கள் எல்லோரும் பல செயல்கள் புரிந்துள்ளனர். பலர் ஹரிபஜனையினால் தன்னை பாவனமாக்கிக் கொண்டவர்கள்.

எட்டுப்ருகிருதிகளை மூலமாகக் கொண்டு, சங்கல்ப ரூபமாகவே திகழும் வாழ்க்கை தேகத்தை யொட்டியதே.

ஹரியின் சங்கல்பம் ஆதிகாரணமாதலால் இப்போது அதன் பலனாகிய சரீரங்கள் கிடைக்கின்றன. இது சோதனையினால் புரியவரும்.

கொடிகளைப் பார்த்தால், அதின் மூலம், விதைகள். பழங்களிலும் விதைகள். ஆதியிலும் விதை, பலனடையும் இறுதியிலும் விதை. நடுவில் ஜலமயமான கொடி. மலரிலிருந்து விதை. விதையிலிருந்து வேர். இப்படியாக சிருஷ்டி கார்யம் நடைபெறுகிறது. ஆகையால் தேஹம் எல்லாக் காரியங்களுக்கும் அவசியமாகவிருக்கிறது. தேகம் இன்றி எதுவும் நடைபெறாததினால் தேகத்தை நற்பயன் அடையும் வழிகளில் ஈடுபடுத்த வேண்டும். தேகத்தைக் கொண்டு ஆத்துமாவும், ஆத்மாவைக் கொண்டு தேகமுமாக பரஸ்பரம் ஒன்றுக்கொன்று இணைந்து உலகம் நடக்கிறது.

ஆத்மாவிற்கு தெரியாமல், ஒளித்து ஒருகாரியமும் செய்யமுடியாது. ஏன் எனில் எதையும் செய்பவன் அவனே; செயலாற்றும் சக்தி இவனுடையதே. தேகத்

தில் ஆத்மா வாசம் செய்கிறான். தேகத்தைப் பூஜிப்பதினால் ஆத்மா சந்தோஷப்படுவதும், தேகத்தைப் பீடித்தால் ஆத்மா துக்கம் அடைவதும் எல்லோரும் அறிந்தது. தேகம் இல்லாது செயலாற்ற முடியாது. செயலை ஏற்பது என்பதும் சரீரமின்றி நடைபெறாது. ஆனதினால், மனிதனில் கடவுள் வசிப்பதால் மனிதனை இதே பாவனையுடன் சந்தோஷப்படுத்த வேண்டும். பெரும் புண்ய சீலர்களாகிய, நல்லோர்களிடமிருந்து சிந்தனை கிடைக்கிறது. சிந்தனையில் நன்று தேறுகின்றனர் பலர். இப்படியாக தர்மம் நிலை நாட்டப்படுகிறது' என்பதினாலேயே பூஜையின் அதிகாரம் இப் பெரியவர்களிடம் உளது.

ஜனங்களில் ஜனார்தனன் இருக்கிறான் என்ற பாவனையுடன் ஜனங்களை சந்தோஷப்படுத்துவது நியாயம் என்று, சர்வத்திராளையும் பூஜைக்குப் பாத்திரமானவர்களாய் கருதுவது மதியீனம். கழுதையை பூஜப்பதினால் என்ன பலன்? அதற்கு பூஜையைப் பற்றி என்ன புரியும்? பூஜிக்கத் தகுந்தவர்களைத்தான் பூஜை செய்ய வேண்டும். மற்றவர்களை சந்தோஷிக்கச் செய்ய வேண்டும். வருத்தப்பட வைக்கக் கூடாது. சர்வத்ராளுடைய அந்தரங்கத்திலும், குடிகொண்டுள்ள கடவுளை, துக்கப்படுத்துவது என்றால், தான்

மாத்திரம் எப்படி சந்தோஷப்பட முடியும் ? சமூகத்தை விட்டு எங்கு ஓட முடியும் மனிதன் ?

பரமேச்வரனின் குணங்கள் அநந்தம். அதை மனிதன் எப்படி சொற்களின் மூலமாக வெளிப்படுத்த முடியும் ? ஆயினும் அத்யாத்ம நூல்களைப் படிப்பதினால் ஓரளவு தெரிந்து கொள்ள முடியும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தசபால

போத விளக்கத்தில்

தேஹத்தின் முக்யத்வம் சொல்லப்பட்டது

சர்க்கம் 4 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினேழாம் தசகத்தில் ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

மரக்காலைக் கொண்டு கணக்கற்ற தானியங்கள் அளந்து கொட்டப்படுகின்றன. ஆயினும் அளவைக் கருவியாகிய மரக்கால் அதைப் புசிப்பதில்லை. அதே போல் பல நூல்களைப் படித்து, ஆயிரக்கணக்கான பாட்டுகள் பாடம் பண்ணி யாது பயன்? அதைப்பற்றியே விசாரமற்று இருந்தால், அவன் மரக்காலுக்கு ஒப்பானவன் எனக்கொள்ள வேண்டியதே. ஓர் சருக்கம், ஓர் அத்தியாயம் பல அத்தியாயங்கள் வரைப் பாடம் செய்து ஒப்பிப்பார்கள், தங்கு தடையின்றி. ஆனால் ஒரு பாட்டிற்கும் கருத்து, அர்த்தம் எடுத்து விளக்கத் தெரியாது. தன் சொந்த அனுமானத்திலேயே இம்மாதிரியானவர்கள் மூழ்கிக்கிடக்கின்றனர். அனுபவம் இல்லாமையினால் இவர்கள் அனுமானம் உண்மைக்கு வெகு அப்பால் உள்ளது. ஆனது கொண்டு, வெறும் மனப்பாடம் செய்வதினால் ஒன்றும் பயனில்லை. வார்த்தைகளை நன்கு சோதிக்க வேண்டும் பொருத்தமானவைகளை ஏற்க வேண்டும். மற்றவைகளை தள்ளிவிட வேண்டும். பெயர் உருவம் (நாமரூபம்) இவைகளை விலக்கி அனுபவம் கொள்ள வேண்டும்.

நன்மை பயப்பவை, தீமை பயப்பவை இவைகள் இரண்டையும் ஒன்ருக கருதுவது மிகவும் பிசகு. எழுதிய விஷயங்களின் பொருளைப் புரிந்து கொண்டு படிக்க வேண்டும். பொருள் விளங்காது எழுத்துக்களை மட்டும் படிக்கத் தெரிந்து கொள்வதில் பயன் கிடையாது. நன்கு விளக்க முடியாதவன் எப்போதும் சந்துஷ்டியற்றவனுக இருப்பான். இவனிடம் பொருளை விளக்க எவரேனும் கேட்டால், அவன் கேட்பாரிடம் கோபம் கொள்வான். நிரம்ப விஷயங்களை மனப்பாடம் செய்து கொள்கிருன். ஆனல் தன்னுடைய பழக்கத்தில் ஒன்றையும் கொண்டுவரவில்லையானல் அதின் பயன் என்ன? ஆபத்து காலங்களிலோ, சரியான சமயங்களிலோ, இது உதவாது போய்விடும். அறைக்கும் இயந்திரத்தில் (ஏந்திரக்கல்) மிகச்சிறிதளவு தானியம் போட்டு அறைத்தால் மாவு நன்று பொடியாக்கப்பட்டு வருவதில்லை. அதேபோல் பற்களால் நன்கு மென்று சாப்பிடாத உணவில் நன்மை பயக்காது.

ஒரு பொழுதும் ஆநந்தமற்றதாய் கழிக்காமல், எல்லோரையும் கூட்டி மகிழ்ச்சியுற வைப்பவனே தலைவன். அத்யாத்ம சாத்திரங்களில், வெகு சூக்குமமான பொருளைக் கொண்ட பல வார்த்தைகள் தென்படுகின்றன. அவைகளின் சரியான கருத்துக்களை சபையோரின் (கேடபவரின்) மனதில் புகவைப்பதே தலைவன் என்பவனின் குறியாக விருக்க வேண்டும். விடுவிக்க முடியாத பிரச்னைகளை விடுவிப்பதினுலேயும், புரியாத

விஷயங்களை நன்கு விளக்குவதினாலேயும் கேட்பவரின் மனது சந்தோஷப்படுகிறது. அவர்கள் மேலும் மேலும் தலைவனைப் புகழுகின்றனர் இல்லை என்றால் அவர்கள் அவனை நிந்திக்கத் தலைப்படுகின்றனர். அதி பனுக்கும் மனது கஷ்டப்படுகிறது. பொன் சுத்தமான தாக வாங்க வேண்டும். அதை பொடிவைத்து நன்கு ஊத வேண்டும். இதைப் போலவே சிரவணம் மனனம் எனும் கிரியைகளினால் அனுபவத்தில் ஆழ்ந்து இருக்க வேண்டும். வைத்தியனின் திறமை வெளிப்படுவதில்லை. நோயாளியின் பிணியும் குறைவுபடவில்லை இந்நிலையில் வைத்தியன் கோபித்துக் கொள்வதில் என்ன பயன்? உலகத்தில் பொய் எங்கும் செல்லாது. ஒருவரும் அதை மதிக்கமாட்டார்கள். ஆனதினால் உண்மையை தெரிந்து கொள்ள வேண்டும். தெரியாத விஷயத்தில் கணக்கு எழுதிக் கொண்டே ஒருவன் போவானாகில் சில நாட்கள் காலம் தள்ளலாம். தெரிந்தவன் பரிசோதிக் கையில் பிசகுகள் வெளிப்படுகின்றன. சோதனை செய் பவன் அவைகளை வெளிக்கொணர்ந்தே தீருவான். கஷ்டப்பட நேரிடும்.

சைன்யங்களினின்றி சண்டைக்குப் போனால் தன் னுடையதை எல்லாம் இழக்கிறான். இதில் பிறர் குற்றம் என்ன இருக்கிறது? எது அனுபவத்திற்கு வருகிறதோ அதை மிகவும் ஆதரவுடன் ஏற்க வேண்டும். அனுபவ மற்றச் சொற்கள் பயனற்றவை. இப்படிப்பட்டவர் களுக்கு எவராது சொல்லிக்கொடுக்க முற்பட்டால் அவர்

கள் பேரில் கோபம் உண்டாகிறது. தெரிந்து கொள்ளாவிடில் அதனால் பெருந்தொல்லை ஏற்படும். பொய் சீக்கிரமே வெளிப்பட்டு விடும். உண்மையை விட்டு, பலாத்காரமாய் பொய்யை ஏற்று கண்டபடி ஒருவன் பிதற்றுவானானல், தன் படைப்பில், நியாயம் கூற கடவுள் ஒருவன் எப்போதும் தலைப்படுவான். நியாயத்தை கைவிட்டு நடந்தால் உலகம் அவனைத்துடர்ந்து சீர் திருத்தும். ஜனங்களுடன் சண்டைப்போட்டுத் தன் வேலையைக் கழிக்க நேரிடும். பொய் எல்லோராலும் விருப்பபட்டு நீடித்ததாக இதுகாறும் எங்கும் கேள்விப் படவில்லை. பார்வைக்கும் வரவில்லை.

அசத்தியம் எதுவோ அதுதான் பாவம். சத்தியம் பிர்மஸ்வரூபமானது. இரண்டிலும் நன்மையை பயக்கும் கக்ஷி எது என்பதை நிர்ணயத்துக் கொள்வது அவசியம். பேசுவது, செய்வது முதலான கிரியைகள் எல்லாம் மாயைக்கு உட்பது. மாயைக்கு அப்பால்பட்ட மாயையற்ற பேச்சு எப்படி இருக்க முடியும்? என்பதிலேயே, வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட பரபிர்மத்தின் மூலத்தை சோதிக்க வேண்டும். லக்ஷியாம்சத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனல் சமுசயங்கள் அற்று பிர்மஸ்வரூபத்தின் அறிவு எட்டும். எட்டு வித பிருகிருதி எனும் பூர்வபக்ஷத்தை தன்னறிவினல் விலக்கி, அலக்ஷ்யமான பிர்மத்திடம் லக்ஷ்யத்தை வைக்க வேணடும். எவன் துண்டிக்கப்படாத மனனத்

துடன் விழித்துக்கொண்டு இருக்கிருனே அவனுக்குத் தான் இவ்வறிவு புலனுகும். உமியையும், நெல்லையும் ஒன்று எனக்கொள்வது முட்டாள் தனம். உள் நிரம்பிய ரஸத்தைத் தள்ளி சக்கையை எவனும் ஏற்றுக் கொள்ளான். நித்தியா நித்திய விவேகத்திஞல், பிண்டத்தையும், சாராசார விவேகத்திஞல் பிர்மாண்டத்தையும், விலக்கி, இவைகள் சாரமற்றவை என உணர்ந்து, சாரமான பரபிர்மத்தையே ஏற்கவேண்டும். மாயையை அகற்ற அன்வய - வ்யதிரேக முறையை கையாள வேண்டும். மாயையை அகற்றிவிட்டால் உண்மை ஞானம் தானே உதிக்கும். தத்துவங்களிஞலேயே தத்துவங்களை பரிசோதித்து, மஹாவாக்யங்களின் கருத்துக்களில் புகவேண்டும். ஆத்ம நிவேதனமாகிய பராபக்தியிஞல், பரம ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

சர்க்கம் 5 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினெட்டாம் தசகத்தில் ஆரும் சர்க்கப் பிரசங்கம்.

நானு வஸ்திரங்களாலும், பலவித அலங்காரங்களினுலும், உடலே அழகு படுத்திக் கொள்வதைப் போன்று விவேகம், விசாரணே, அரசியல் இவைகளால், சுகத்தையும் அழகுபடுத்த வேண்டும். பளபளப்பானதும் அழகானதுமான, ஆடை உடைகளாலும், அலகாரங்களாலும், உடல் எவ்வளவு, அழகுபடுத்தப் படினும் அகத்தில் சாதுர்யம் எனும் தன்மை இல்லே எனில் மனிதன் அழகானவனுகக கருதப்படுவதில்லே.

வாயாடி, பிடிவாதக்காரன், கடினசொல்களேயே சொல்பவன், அஹங்காரத்திலேயே சதா மிதப்பவன். நியாயா நியாயங்களேப் பொருட் படுத்தாதவன், அரசியல் விஷயங்களில் பிறருடன் கலவாதவன், பலபோக்கு உடையவன், சீக்கிரத்தில் கோபம் கொள்பவன், பொய்யன், நாணயமற்றவன், பாவங்களேயே புரிபவன், பிறரை துன்புறுத்துவதிலேயே அவாக் கொண்டவன் இப்பேர்கொரந்தவர்களே அரக்கர்கள் எனக்கருதவேண்டியது. சந்தர்ப்பங்கள் ஒரே வகையாக இருப்பதில்லே. புதிது புதிதாக தோன்றுகின்றன. தினசரி நியமங்கள் சரிவர நடத்த முடிவதில்லே. நியமம் எனும் பந்தத்தில்

மிகவும் கட்டுப்படுத்திக் கொண்டால், 'அரசியல் விவகாரங்களில் ஈடுபாடு குன்றிவிடுகிறது. ஆனதினால் எதிலும் அதிக ஈடுபாட்டை வைத்துக் கொள்ளக் கூடாது சந்தர்ப்ப சூழ்நிலைகளை கவனித்து நடந்துகொள்ள வேண்டும். விவேகமுள்ள புருஷன் பிடிவாதத்தில் இறங்கக் கூடாது. பிடிவாதம் பிடித்தால், தடைக்கக்ஷிகள் ஏற்படின் ஒரு காரியமும் சீக்கிரம் செயலுறா.

ஈசுவரன் உங்களை இரக்ஷிப்பதன் பொருட்டு இருக்கிறான். துளஜாபவானியின் அன்பைப் பெற்ற நீங்கள் மிகுந்த விசாரணையின் பிறகே கார்யங்களில் ஈடுபடவேண்டும். எப்போதும் தீவிரமான ஊக்கத்துடனும், கவனிப்புடனும் இருக்க வேண்டும். அதிகம் இதில் என்ன சூசிப்பதற்கு இருக்கிறது? ஓர் முடிவுக்கு சீக்கிரம் வரவேண்டியது தான். வல்லவனுடன் பலர் சூழ்ந்திருப்பார்கள். அவர்களிடம் ஒற்றுமை வேண்டும். அப்படிப் பழகினால் அவர்கள் சஞ்சலம் நீங்கி, உறுதியாக விருப்பார்கள்.

மிலேச்சர்களாகிய துஷ்டர்கள் பல நாட்களாக இன்னல்கள் புரிந்து வருகின்றனர். கலகங்களை தூண்டுகிறார்கள் ஆனதினால் மிக்க உஷாராக இருக்க வேண்டும்.

---

1. இச்சொல்லை ஆசிரியர் எந்த கருத்துடன் உபயோகப் படுத்துகிறார் என்பதில் சர்ச்சைகள் ஓய்ந்த பாடில்லை. சாதாரணமாக 'வெளிவிவகாரங்கள்' எனும் கருத்தில் எனக்கொள்ளலாம்.

சர்வகர்த்தாவாகிய சர்வேச்வரன் எவனை அங்கீகரித்துள்ளானோ, யாருடைய பக்கம் துணைபுரிகின்றானோ அப்பேர்ப்பட்ட புருஷனின் விசாரத்தை அறியக்கூடியவன் எவன்? நியாயம், நீதி, விவேகம், விசாரம், முதலிய சக்திகளையும், பலவித சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பிறர்மனத்தை சோதிக்கும் தன்மையையும் கொடுத்தவன் சர்வேச்வரனே. யஸஸ், கீர்த்தி, பிரதாபம், இவைகளை தன் செயல்களால் கிட்டிய பலன் எனக்கருதுவதை விட்டு 'இவைகள் கடவுளின் அன்பளிப்புகள்' எனக் கருதுவதே சரி, நியாயமான பாதையில் செல்லும் பான்மை, விவேகமும், விசாரமும் என்றென்றும் விழித்து நிற்கும் தன்மை சூழ்நிலைக் கேற்ப நடக்கும் தன்மை, பிறருடைய நோக்கங்களைப் புரிந்து கொள்ளும் வன்மை ஆகியவைகள் ஈசுவரனுடையது கிருபையால் லபிக்கின்றன. பொறுமையுடன் பெரும் சாதனைகளில் ஈடுபடுவது, சமயத்தில் தைரியமாக இருப்பது. இக்குணங்கள் சர்வேச்வரனால் கொடுக்கப்பட்டவை. யசசு, கீர்த்தி, பிரதாபம், மகிமை, பெருமளவில் இருப்பது, நற்குணங்கள் மிகவும் உடலில் காணுவது, தேவதைகள், அந்தணர்கள், ஆசார நியமங்கள் இவைகளில் ஊக்கமிருப்பது, பலருக்கு ஆதாரளிப்பது, எப்போதும் பிறருக்கு உபகாரம் செய்வதில் முனைவது, இகம்பரம், எப்போதும் விழிப்புடன் இருப்பது பலருடைய தொல்லைகளைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை, தெய்வங்கள் அந்தணர்கள் இவர்களிடம் ஆதரவு காட்டுவது, பலரைக்காப்பாற்றி இரக்ஷிப்பது ஆகிய

வைகள் எல்லாமே சர்வேச்வரன் அளித்த சக்தியின் பலனே. தர்மத்தை ஸ்தாபிக்கும் வன்மை படைத்தவர்கள் ஈசனுடைய அவதாரம் எனக்கருத வேண்டும். இம்மாதிரியான அவதாரங்கள் முன்பு தோன்றியுள்ளன. இப்போதும் தோன்றுகின்றன. இனியும் தோன்றப்போவன. இவர்கள் தோற்றுவாய் ஈசுவரனுடைய ஈகையாகும்.

குணங்களை கிரகிக்கும் சக்தி, தீக்ஷணமான தர்க்க அறிவு, சுத்தமான விவேக, தெள்ளிய தர்மபுத்தி இவைகள் 'புண்யச்லோகராகிய மகான்களிடம் காணும் குணங்களாகும். இவைகளை அவர்களிடம் அளிப்பவன் ஈசுவரன். இவ்வுலக விவகாரங்களில் செவ்வென ஈடுபட்டு, நித்தியா நித்ய விவேகத்தை கைக்கொண்டு, சாராசார சோதினையினல், இகபரம் இவைகள் இரண்டிலும் மேன்மையுறுவதே எல்லாக் குணங்க்ளிலும் முக்யமான குணமாகும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 6 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினெட்டாம் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்.

ஜனங்களின் சுபாவம் லோபித்தன்மையுடையது. கடவுள் என எண்ணும் போதே, தந்நலம் சூழ்ந்து கொள்கிறது. அவன் தன் இச்சைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் எனும் நோக்கமே எழுகிறது. முதலாளியிடம் தான் செய்ய வேண்டிய வேலைகளைச் சரிவர செய்யாது, ஊதியம் கோறுபவனின் தன்மை, அசட்டுத் தன்மையே. முயற்சி இன்றி பலன் கிடைக்காது, பெரும் முயற்சி இன்றி அரசு கிட்டாது, செய்தாலன்றி ஒன்றும் உருவாகாது. சோம்பலனினல் சர்வகார்யங்களும் தடையுறுகின்றன. கடினகார்யங்களைச் செய்து கஷ்டங்களை அனுபவித்தாலன்றி, சுகம் எனும் பலன் கிடைப்பதில்லை. முதலில் யார் சோம்பலைச் சுகமெனக் கருதி சுகப்படுகிறார்களோ அவர்கள் பிறகு துக்கத்தையே அனுபவிக்கிறார்கள். உலகவியவகாரங்களிலும் பரலோக சாதனைகளிலும் சரி, விவேகம் என்பது துல்லியமாக இருக்க வேண்டும். முன் வரக்கூடியதை ஓரளவு அறியும் நுண்ணறிவு வேண்டும். ஈட்டிய பொருளை எல்லாம் செலவழித்து விடுவோன் இறுதிகாலத்தில் கஷ்டம் அடைய வேண்டியிருக்கிறது. ஆனது கொண்டு முன்யோசனையுடன் நடப்பவனே சமர்த்தன் ஆகிறான்.

பூவுலகில் செயலற்ற, பொருள் மிக்க சேர்க்க வேண்டும். இவ்விரண்டிற்கும் வேண்டியதை சேர்த்துக் கொள்ளாதவன், உயிருடன் இருந்தும், பிணம்போன்றவனே யாகுவன். இறந்து, இறந்து எவன் களைப்படையவில்லையோ, தன்னை பிழைத்து வைத்துக் கொள்ளாமல், மரித்துக் கொள்ளச் செய்கிறானோ அவன் 'தற்கொலை' புரிபவனாவான். இப்படி பிறவி தோறும் தற்கொலைப் புரிந்து கொள்பவனைப் பற்றி என்னவென்று கூறுவது ?

ஜனன மரணங்களின் துன்பத்திலிருந்து விடுவித்து கொள்ள முற்படவேண்டும். அனைத்தையும் தெய்வம் நடத்துகிறது என எல்லோரும் புகல்கின்றனர். அப்படியாகில் அவனிடம் (தெய்வத்தினிடம்) துடர்புகொள்ள வேண்டும். விவேகம் வளர பரமாத்மாவை நெருங்குகிறான் பிராணி, கடவுள் ஒருவன் தான். அவ்வொருவனிடமிருந்து பல உண்டாயின. ஆனால் பல என்பது ஒன்றாகாது ஒன்றைமட்டும் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும். கடவுளைப்பற்றியும், அவன் செய்கைகளைப் பற்றியும் நன்று விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும். கடவுளைப்பற்றி உண்மையில் ஒன்றும் தெரிந்து கொள்ளாமலே ஜனங்கள் கடவுளைப் பற்றி பேசுகிறார்கள். மூடத்தன்மையால், அறிவாளியின் பேச்சுக்கள் போன்று பிதற்றுகிறார்கள்.

உண்மையைக் கண்டு கொள்ள முயற்சி பட்டால் தான் முடியும். கஷ்டங்களை ஏற்றவர்கள் தான் பின்

சுகமடைகின்றனர். சோம்பேரிகள் வாய்ச் சொல்லு டன் நிறுத்திக் கொள்கின்றனர். சோம்பேறிகளின் குறைபாடு எங்கு உளது என்பதை பாடுபடுபவன் ஊகித் தறிந்து கொள்கிருன். பாடுபடுபவனின் சாமார்த்தியம் எப்படியானது என்பதை சோம்பேறி அறிவதில்லை. சோம்பேறியிடம் துர்புத்தி குடிகொள்ளாது, ஆகவே நற்புத்தி என்று புலப்படுகிறது. துர்புத்தி ஓங்கிவிட் டால் தெளிவு எப்படி ஏற்படும்? தெளிவு இழந்தவ னின் செயல்களையோ, சொற்களையோ எப்படி ஏற்பது? சோதனை என்பது அங்கே பூஜ்யமாகிவிட்டது. சோதனையினுல் தான் இகலோகம் பரலோகம் இரண் டிலும் வெற்றியும், விசாரத்தினுல், நித்தியா நித்திய விவேகமும் காண்கிருர்கள்

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

சர்க்கம் 7

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பதினெட்டாம் தசகத்தில் எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

பிர்மம் நிராகாரமானது நிற்சலமானது ஆத்துமா, விகாரமுடையாது சஞ்சலமானது. ஆத்துமாவைத் தான் எல்லோரும் கடவுள் எனச்சொல்கிறார்கள். கடவுள் இவர்களுக்கு நிச்சயப்படுவதில்லை. தெய்வம் ஒன்றுதான் என்பது புலப்படுவதில்லை. பல தெய்வங்களிடையில் முக்யமான ஒரு தெய்வத்தைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆகையால் சோதனையால் முக்யமான தெய்வத்தை அறிய வேண்டும். பல தெய்வங்கள் எனும் சிக்கலில் சிக்கிக்கொள்ளக்கூடாது. க்ஷேத்திரங்களிலுள்ள மூர்த்திகளைப் போன்று, விக்ரஹங்களைச் செய்து வழிபடுவதே சாதாரண பழக்கமாகியுள்ளது ஆனதினால் பூ உலகில் பல க்ஷேத்திரகளாகிய வாசஸ்தலங்களில் கடவுளைக்காண முயலுகின்றனர். அவதாரம் எடுத்தவர்கள், சரீரத்தை தரித்து, தன் அவதார காரியம் முடிந்த உடன், தன் மூலஸ்தானத்தை அடைந்தனர். அவர்களைவிட, பிர்மா, விஷ்ணு, மகேஸ்வரன் மேன்பட்டவர்கள். இம்மூவர்களையும்,

செயல்பட வைக்கும், அந்தராத்மாதான், கர்தாவும், போக்தாவாகவும் இருப்பவன். யுககணக்கில். மூவுலகையும் நடத்துபவன் இவனே. இப்படியாகத் தான் வேதசாஸ்திரங்கள், நிச்சயித்திருக்கின்றன. அறிவாகிற, விவேகத் தன்மையினால் சரீரத்தை இயங்க வைக்கும் அந்தராத்மாதான் தெய்வம். இந்த உள் தெய்வத்தை அறியாமல் தெய்வத்தைக்காண, தீர்தாடனம், பல க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை முதலியவைகளை ஏற்றுக் கொள்கின்றனர் பலர். யாத்திரைகள் புரிந்து களைத்த பிறகு சோதனையில் ஈடுபடுகின்றனர். உண்மையில் ஒவ்வோர் க்ஷேத்திரத்திலும், கல்லையும், குளத்தையும் தவிர வேறு என்ன விருக்கிறது? துடர்ந்து திரிந்து கொண்டிருப்பதால் என்ன உபயோகம்? என்று விசாரம் செய்து பிறகு நல்லோர்களின் நட்பைப் பெறுகின்றார்கள். நல்லோர்களின் சேர்க்கையினால் பலர் கடவுளைக் காண்கிறார்கள். இது விவேக முடையவர்களின் அறிவு, மூடர்கள் குழம்பிக் கொண்டே இருப்பவர்கள். அந்தர்முகமான விருத்திகளையுடையவர்கள், உள்ளே வீற்றுள்ள பகவானை அறிகிறார்கள், வெளிமுகப்பட்ட விருத்தியுடைய மூடர்கள் இதை எப்படி அறிய முடியும்? அறிவாளிகள் உள் புறத்தை அறிவதில் முனைகிறார்கள். விவேகமற்ற விருத்திகளை பிசகானதாக தள்ளி விடுகிறார்கள். பிரதிமைகள் மூடர்களுக்கானது என்பது பிரசித்திபெற்ற விஷயம்.

பிரதிமையை முதலாகக் கொண்டு விவேகத்தின் பலத்தைக் கொண்டு, மூலபுருஷன் வரை சோதித்து அறிபவனே விவேகி. அவன் மாயையின் தத்துவங் களை அறிந்து, களைந்து, மாயைக்கு அப்பாற் உள்ள பரப்பிர்மத்தினிடம் அடைகிறான். உருவம் கொள்ளும் எதுவுமே நாசமடையும், பரப்பிர்மம், பெயர், உருவம் இதற்கு அப்பால் உளது. அந்தராத்மாவான தெய்வம் சஞ்சலமானது. பரப்பிர்மம் நிற்சலமானது. இந்த அனுபவத்தை மேலும் மேலும் சோதினையாலறிந்து பிரமம் ஆகிய குழப்பத்தைத் தாண்டிப்போக வேண் டும். பிர்மஸ்திதியின் அனுபவம் காண வேண்டும். அந்த அனுபவ மின்றி செய்யும் கர்மாக்கள் எல்லாம் விருதாவாக போகின்றன. கர்மாவின் குழப்பலில் சிக்கி அப்பிராணிகள் வீணில் உழன்று கொண்டு இருக் கின்றார்கள். இதனால் கர்மாவினின்றும் விடுபட முடி யாது.

அப்படி எனில் தெய்வ உபாசனை வழிகளில் ஏன் ஈடுபடவேண்டும்? விசாரத்தில் உறுதியானால், உள்ளி ருக்கும் தெய்வம் (சஞ்சலமான ஆத்மா) புலப்பட்டு, அதன் மூலம் நிற்சலமான பிர்மபதவியை எட்டுகின்ற னர். சகுணத்தைக் காண காண, நிற்குணத்தை அடை கிறோம். சகுணத்தின் சேர்க்கையை விட்டு, நிற்குணத் தை அடைய இயலும் அந்தராத்மாவை அனுசந்தா

னம் செய்து கொண்டிருப்பதே அறிவின் சோதினே. மிகவும் சாந்தமான மனதைக் கொண்டு இதைக்காண வேண்டும். நித்யாநித்ய விவேகத்தினுல் உலகம் முன்னேற்றமடையும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 8 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினெட்டாம் தசகத்தில் ஒன்பதாம் சர்க்கப் பிரசங்கம்,

ஆதி புருஷனை வந்தனை செய்து, அவனிடமிருந்து தோன்றிய மாயையாகிய நித்திரையின் விளையாட்டுகளை வர்ணிக்கிறோம்.

நித்திரை வந்தவன் ஸ்தூல தேகம் படுத்து விடுகிறது. நன்றாக நித்திரைவந்தவனை எழுப்பினாலும் கூட அவனுக்கு உடனே தெளிவு ஏற்படுவதில்லை. கொட்டாவி, பாதி உறக்கத்தால் தலை ஆடுகிறது, சோம்பல் முறிக்கிறான். எலும்புச் சந்திகளில் நெட்டி உடைகிறது. முழங்கால்களில் தலையைத் தாங்கி உட்காருகிறான். தலையணையில் ஒரு புறமாகப் படுத்துக்கொள்கிறான். பிதற்றிக் கொண்டே விழிக்கிறான். முனகிக் கொண்டே விழித்துக் கொள்வோர் சிலர் சிலருக்கு அபானம் பிரிகிறது முன் துயில் எழுந்தால் பிறகு விழிப்பு நிலை எய்தி தன் வேலைகளில் ஈடுபடுகிறான். மாயையின் தூக்கத்தினின்றும் விடுபட்டு தன் சுயஸ்வரூபத்தில் விழித்தெழுபவனும் சாதனை எனும் வேலையில் ஈடுபடுகிறான்,

தத்துவங்களை விசாரணையினுல் அறிந்து கொண்டு, தத்துவத்தினின்றும் தன் வேற்றுமையை யுணர்ந்து அறிவாளி நான்காம் அவஸ்தையின் பிற்பாடு உள்ள நிலையை அடைகிறுன். ஆத்தும நிவேதன பக்தியினுல் பிர்ம ஸ்வரூபமாகிறுன்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாசபால

போத விளக்கத்தில்

நித்ரா நிரூபணம் எனும்

சர்க்கம் 9 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பதினெட்டாம் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

எந்த ஒரு கார்யத்தையும் மனிதன் மேற்கொண்டு முயற்சி செய்யும்போது, சில இடையூறுகள் தோன்று கின்றன. இருந்தபோதும் அனுகூலமான வேளை இருந்தால் அக்காரியம், அநாயாசமாய் முடிவு எய்கிறது. காரியத்தில் மேலும் மேலும் பலன் கிட்டிக் கொண்டு போனால் மனிதன் உற்சாகம் நிறைந்தவனாக விருப்பான் அதனால் அவனுடைய விசாரணை செய்யும் சக்தி அதிக ரிக்கிறது. பிறவியை அடைந்த எவனும் அனுகூல மான காலத்தை அனுபவிக்காமல் போவதில்லை. தயா ளுவான சர்வேச்வரன் துன்பத்தின் பிறகு அவச்யம் இன்பத்தைக் கொடுக்கிறான். நாள் முழுவதும் அனு கூலமாக விருந்தால் எல்லோரும் அரசனாகவே இருப் பார்கள். ஆளப்படுவர்கள் இருந்தால்தானே ஆளு பவன் இருக்க முடியும்! ஆனாலும் சிலகாலம் அனுகூலமாகவும், சிலகாலம் அனுகூலமற்றதாயும் வாழ் நாடுகளில் அமைந்துள்ளன. முக்யமாக விவேக சக்தி இவ்வுலகிலும், பரமார்தத்திலும விழிப்புடன் கூடி இயங்கினால், ஈசுவரனின் கிருபையினால் எளிதில் சில அற்புதங்கள் நிகழ்கின்றன.

கேட்காமல் தெரிந்து கொண்டதாகவோ, அல்லது சொல்லிக் கொடுக்காமல் புத்தி வந்ததாகவோ பூமியில் எங்கும் கேட்டதோ, பார்த்ததோ கிடையாது. கேட்க, கேட்க, மேலும் மேலும் விஷயங்கள் தெரிய வருகின்றன. தெரியத்தெரிய, மனதின் விருத்தி தெளிவு அடைகிறது மேலும் சித்தத்தில் சாராசார விசாரம் ஸ்புரணையடைகிறது.

"சிரவணம்", என்ற சொல்லிற்கு கேட்பது என்றும் "மனனம்" என்ற சொல்லிற்கு விசாரம் செய்வது என்றும் பொருள். சிரவண, மனனங்களால், மூவுலகின் ஆளுகை நடைபெறுகிறது. சிரவணத்திற்கு இடையூராக பல தடைகள் தோன்றுகின்றன. அவைகளை விவரிக்கிறேன். சாவதானமாக விசரித்தால் அவைகள் நன்கு புவப்படும்.

சிரவணம் செய்ய, ஆரம்பம் முதற்கொண்டு வரும் ஜனங்கள், பிரசங்கத்தில் ஒருமுகமாக விருந்து கேட்கிறார்கள். நடுவில் அநேகவிஷயங்களை கேட்டும், திரிந்தும் வந்தமையால், அவைகள் அவர்கள் மனதில் உழன்று கோண்டே இருக்கின்றன. சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு நடப்போர் மிக்க சிலர்.

சிரவணத்தின் இடை தோன்றும் தடைகள் கேளுங்கள். சிரவணம் செய்ய உட்கார்ந்தால், சௌகரிய

22

மான இடம் கிடைப்பதில்லை. ஆகையால் சிலருக்கு மிக அசௌகரியமாக உட்கார நேரிடும். நித்திரையின் ஆதிக்கத்தின் கீழ் சிலர் கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பவர். மனதை ஒரு முகப் படுத்த முயற்சிக்கினும் அது ஓர் இடத்தில் நிலைப்பதில்லை, முன்கேட்டதையே நினைத்தவாறும், மேலும் பலவித கற்பனைகளைச் செய்தவாறும் அது இருக்கிறது. காதில் புகும் சொற்கள் நன்ருய் பொருள்பட்டு, அதை மனனம் பண்ணினுல் தான் சிரவணத்தின் பலன் கிட்டும்.

மனது என்பது புலனுகாத ஓர் வஸ்து. அதை பிடித்து வைப்பது எளிதல்ல. ஆகையால் அது தானுகவே நிலைக்க வேண்டும். மனது நிலைத்து, விவேகத்தினுல் பொறுக்தப்பட வேண்டும். விலாபுடைக்க விருந்து உண்டு சிரவணத்திற்கு உட்கார்ந்தால், தாகத்தினுல் அடிக்கடி தொந்தரவு தோன்றுகிறது அதிக நீரைக் குடித்துவிட்டாலோ, வயிற்றில் பிரட்டல் காணும். ஏப்பம் வருகிறது. விக்கல் எடுக்கிறது. வாயுவு பிரிந்து ஏளனம் ஏற்படுகிறது. அடிக்கடி சிறு நீர் பிரிகிறது. பிறகு மிக அவசரமாய் மலங்கழிக்க வேண்டி வருகிறது என்பது போன்று. சிரவணத்தின் முன் அதிகமாய் உட்கொள்ளுவதினுல், இவ்வகையான தொல்லைகள் ஏற்பட்டு, பிரசங்கத்தில் ஸ்வாரஸ்யம் நிரம்பிய கட்டம் ஏற்படும்போது, இவன் அவ்விடத்தை விட்டு அகல்கிருன். தவிரவும் உவமைகள், திருஷ்டாந்திரமான உபகதைகள் சொல்லும் போது, அதில் சுவாரஸ்யப்பட்டு, நிரு

பணத்திற்கு எடுத்துக் கொண்ட விஷயத்தையும் சில சமயம் மறந்து விடுவதுவும் உண்டு கேட்டு கொண்டிருக்கும்போது தேள் முதலிய விஷஜந்துக்களால் தீண்டப்படின், மருந்து, மந்திரம் முதலியவைகளைத் தேடிப் போக வேண்டிவருகிறது. வயிற்றுவலி, முதுகில் சுளுக்கு, சிரங்கு, சேற்றுப்புண் முதலியவைகளால் தொல்லைகள், பூச்சிகளால் தொல்லைகள் பலவும் ஏற்படுகின்றன. அக்கம் பக்கங்களில் குழப்பங்கள் கண்டு, அங்கு ஓடுவது, இப்படிப்பட்ட தொல்லைகள் நேரிடும். சஞ்சலமான சித்தமுடையவர்கள் கூடியிருக்கும் பெண்பாலர்களையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். திருடர்கள் பாதரக்ஷைகளின்மேல் நோக்கங் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள்.

கேட்கும் வார்த்தைகளின் பொருளைப்பற்று சர்ச்சைகள் கிளம்பி, சண்டையாக மாறிவிடும் சிலசமயம். வீண் வம்பு பேசும் கோஷ்டிகள் பல. கௌரவ பிச்சைக்காக கூடிய கோஷ்டியினர் பலர். சபையில் படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கின் அவரவர்கள் தங்கள் அறிவுக் கெட்டிய விளக்கங்களை கொடுக்கத் துடங்குகின்றனர். இவைகளால் கேட்போர்க்கு எழக்கூடிய ஐயங்கள் தீர்க்கப்படாமல், நின்றுவிடும். தான் சொல்வதே உண்மை, சரியானது என்றும் பிறர் சொல்வது எல்லாம் பொய் அல்லது பிசகு என்றும் டம்பத்துடன் வாதம்பண்ணி பிறரைக் குழப்பத்திலுள்ளாக்குபவர் சிலர்.

அஹங்காரத்தினல் உறுமும் மகான்கள், பலர் கோபத்தினல் குமறுவர் இப்படியாக சபையில் பலர் நிறைந்துள்ளார்கள். உண்மையான அறிவாளியைத் தேர்ந்து எடுப்பது எப்படி ? நிஜமான அறிவாளிகள், மூடத்தன்மை ஏற்று, நான் எளியவன், எனக்கு ஒன் றும் தெரியாது என தோற்றமளிப்பார்கள். தன்னை விட கடவுள் அறிவாளி எனும் உண்மையை அறிந்த வன், எல்லோருடைய மனதையும் சந்தோஷமாக விருக் கச்செய்ய முயலுவான். சபையில் வாத விவாதங்கள் சர்ச்சைகள் தோன்றின், அது அறிவாளியானவனுக்கு குறைவு அல்லவா ? சபையோரின் மனதை ஒருமுகப் படுத்த முடியாதவன் அறிவாளி ஆகமாட்டான். எதிர்ப் பினல், எதிர்ப்பு வளரும். விளைவு இன்னல் தான். இந்த நுட்பத்தை அறிவாளி அறிந்து இருக்கிறன். மேலும் தனது மனதின் போக்கைக் கட்டுப்படுத்தி வைக்கிறன். சிறிய மனப்பான்மை நெருங்க விடுவ தில்லை.

அறிவாளிகளாகிய பெரியோர்கள், சாந்தம், பொறு மை ஆகிய குணங்களை அவச்யமாக கைக்கொள்ள வேண்டும். குணங்குன்றியவனுடன் குணங்களால் நிறைந்தவன் சேர்ந்தால், குறைகள் நன்ருக வெளிப் படும். விவேகம் கொண்ட மனிதனின் எல்லா நடவடிக் கைகளும் அறிவு நிறைந்ததாகவே இருக்கும். அறி வின் பலத்தால் பல உபாயங்களை கைக்கொள்ளும் சா மார்த்தியங்களை அறிவாளியே அறிவான். துர்ஜனங்

கள் வாதங்கள் புரிந்து தொல்லைக் கொடுத்தோ அல்லது வாயாடிகள் அவதூருகப் பேசி மனதை சிதற அடித்தால் அறிவை இழப்பவன் எப்படி அறிவாளியாவான் ?

நியாயமான பாதையும், பல உபாயங்களை கையாளும் திறன் மூர்க்கர்களுக்கேது ? மூர்க்கர்களினுல்தான், சபையில் அமைதி குன்றுகிறது. அப்போது அறிவாளிகள் நிலைமையை சாமாளிக்கிருர்கள். தான் பொறுமையைக் கையாண்டு, பிறருக்கும் கற்பிக்கிருர்கள். பெரும் சாதனைகள் செய்து, ஜனங்களிடமிருந்து செய்விக்கின்றனர். உலகில் ஜனங்களுக்குக் குறைவு ஏது ? ஆனுல் நல்லவர்களினுல் தான் சமாதானம் கிடைக்கிறது. மனதை துன்புருமல் வைத்துக் கொள்ள அறிவாளிக்குத்தான் பயிற்சியுண்டு. அவனுக்கு சமய சந்தர்ப்பம் தெரியும். மேலும் உணர்ச்சிமேலிட்ட ஜனங்களை, சமாதானமடைய வைக்கும் பலவழிகள் அவனுக்குத் தெரியும். இப்பேர்கொந்த அறிவாளியின் அறிவு சிரேஷ்டமானது அவனுடைய காரியங்கள் எல்லோருக்கும் புரியவராது.

ஜனசமூகத்தைத் தாண்டி, பல செயற்பாடுகளில் ஈடுபாடு செய்விப்பான், அவனுக்குத்தான் ‘சமர்த்தன், எனும் பதவி கிடைக்கிறது.

ஏகாந்தத்தில் விவேக விசாரம் செய்ய வேண்டும். தியானம், தாரணை இவைகளால் பரமாத்துமாவை வசப் படுத்திக் கொள்ள வேண்டும். தான் - பிறர் எனும் பேத பாவங்கள் தோன்ற இடை கொடுக்கக் கூடாது. ஏகாந்தத்தில் தான் விவேகம் பலப்படும். முயற்சிக் கான மார்க்கம் புலப்படும். தர்கத்திஞல், பிர்மாண்ட கோளத்தைப் புரிந்து கொள்ளலாம். ஏகாந்தத்தில், ஸ்மரணை செய்வதிஞல், தவறுகள் புலஞகும். அந்த ராத்மாவைப் போல் விரிவடைந்து, பிர்மாண்டம் முழு வதும் திரியவேண்டும். எவனுக்கு ஏகாந்தம் பிடிக்கி றதோ, அவனுக்கு முதன்மையாக எல்லாம் தெளிவுறும். மேலும் மேன்மை அடைய வேறு வழியே இல்லை.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 10 முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் முதற் சர்க்கப் பிரசங்கம்.

அந்தணன் பாலபோத எழுத்துக்களை படிந்தகையினுல், அதை பார்த்த உடனேயே மனதிற்கு சந்தோஷம் உண்டாகுமாறு, அழகாக எழுதவேண்டும். கறுப்பு மசியினுல், குண்டு குண்டாக எழுத்துக்களை தனித்தனியே எழுதவேண்டும். முத்துமாலையைப் போன்று வரிகள் சற்றும் வழுவாமல் எழுதவேண்டும். ஒவ்வொர் எழுத்தும் முழுவதும் இருக்க வேண்டும். இடைவெளிகள் ஒரே சீராகவும், கால்கள், கொம்புகள், தலைக்கோடுகள் எல்லாம் வெகு சீராக இருக்கும்படி எழுதவேண்டும், நூலின் முதல் எழுத்திலிருந்து, கடைசிவரை ஒரே சமயத்தில், ஒரே எழுதுகோலால் எழுதியது போன்று தோற்றம் இருக்கும்படி எழுத வேண்டும். எழுத்துக்கள், மசி நிறம்பி, கம்பீரமாகவும், வளைவுகள், கோணங்கள் சீராகவும் காணவேண்டும். வரி மற்றொரு வரியை பிளக்கக்கூடாது. எழுத்துக்கள் அதிகமாக நீண்டு இருக்கக்கூடாது. புத்தகத்தின் பக்கங்களில் முதலில் கோடுகள் வரைந்து கச்சிதமாக

கோட்டிலேயே எழுதிக் கொண்டு போகவேண்டும். வரிக்குவரி இடைவெளி ஒரே சீராக விட வேண்டு. திருத்தம் செய்ய வேண்டி வரின் இடைஞ்சலாக விருக்க கூடாது. எழுத்தில் பிழைகள் இருக்கக் கூடாது. எழுத்துக்களை விட்டுவிடவோ, கூட்டவோ கூடாது.

சிறுவயதில் மாணவர்கள் எழுத்துக்களை நன்றாக நிறுத்தி எழுதவேண்டும். அதை பார்த்தாலே படிக்க ஆசை தோன்ற வேண்டும். வாலிபப்பருவத்தில் மிக்க மெல்லியதாக எழுத்துக்கள், விருத்தாப்யத்தில் படிக்க முடியாது. மிக்கவும் மெல்லியதாகவும், மிகவும் பெரிய தாகவும் எழுதாமல், நடுத்தரமாக எழுத்துக்களை எழுத வேண்டும்.

நான்கு பக்கங்களில் இடைவெளி கொடுத்து நடுவில் பெரிதாக எழுத்துக்களை எழுத வேண்டும். எழுதிய காகிதம் அழிந்தாலும், எழுத்துக்கள் அழியாதவாறு இருக்க வேண்டும். இப்படியாக நூலை முதலிலிருந்து இறுதிவரை எழுத வேண்டும். பார்த்த மாத்திரத்தில் தன்னிடம் ஓர் பிரதி இருக்க வேண்டும் என அவாக் கொள்ளும்படியாக விருக்க வேண்டும்.

சரீரத்தை நன்கு உழைக்க வைக்க வேண்டும். மிக்க கீர்த்தியடைய வேண்டும். உலகத்தில் பிறர்குப் புலனாகும்படியான குணங்களைப் பழக வேண்டும்.

காகிதம் உறுதியான காகிதம் கொணர்ந்து அதை (துரிசு நீரில்) நன்றாகக் துவைக்க வேண்டும். எழுது வதற்கான எல்லா சாதனைகளையும் தயாராக வைத்தி ருக்கவேண்டும். கத்தி, கத்திரிக்கோல், பலகைகள், பிசின்கள், கலக்குக்கோல், முதலானவைகள் தயாராக வைத்திருக்க வேண்டும். பலவித வர்ணங்களையும் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும். பலவித எழுது கோல்கள், சன்னமானது, மொத்தமானது, நடுத்தரமானது எல்லாம் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். கோடு வரைவதற்கான உருளைக் கோல், எழுது கோலின் முனைகள் மை உறிஞ்சிகள் முதலியவை களைத் தயாரித்து வைத்திருக்க வேண்டும் மசியின் மாத்திரைகளை நினைத்து மசியாக்க தயாராக வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

நூலின் கடைசியில் 'இதி ஸ்ரீ' என்பதை எழுத வேண்டும். மலைப்பிராந்தியத்தினின்றும் கொணர்ந்த பலகைகளைக் கொண்டு அழகான சித்திரங்களை தீட்ட வேண்டும். பலவித கயிறுகள், மூட்டை கட்டும் துணி கள், மெழுகுத்துணி, பெட்டி, பூட்டு இவைகளை ஒழுங் காக சேகரித்து எழுதிய நூலை பத்திரப்படுத்த வேண் டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 1 முடிந்தது.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

முன் அத்தியாயத்தில் எழுத்துக்கலையைப் பற்றி விவரித்தோம். இப்போது அர்த்தத்தில் உள்ள மாறுபாடுகளைப் பற்றி பேசுகிறோம். எல்லா விஷயங்களையும் கண்டுகொள்ள வேண்டும். பலவார்த்தைகள். பல வகைப்பட்ட பொருள்கள், பல வித முத்திரைகள், பல வகையானப் பிரபந்தங்கள். வார்த்தைகளின் பல வகைப்பட்ட அர்த்தங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பலவகை ஐயங்கள், பல வகையான சமாதானங்கள், நானுவித அனுபவங்கள், தோற்றங்கள் எல்லாவற்றையும் ஜனங்கள் ஆச்சரியப்படும் வகையில் சொல்ல வேண்டும். பல பூர்வபக்ஷங்கள், பல சித்தாந்தங்கள், சொந்த அநுபவங்கள், அநுபவங்கள் மூலமாக அறிந்த ஞானம், இவைகளை எடுத்து விவரிக்க வேண்டும். படித்த சொற்களையே திருப்பித் திருப்பி சொல்வதில் பயன் என்ன ? பிரபஞ்சத்திலும் சரி, பரமார்த்தமாயிருந்தாலும் சரி, அனுபவமற்ற சொற்கள் வீண். குப்பை, கூளங்களில், தீ சுலபமாகப் பிடிப்பதில்லை. அது போலவே, அநுமான அறிவைக் கொண்டு சொல்லும் சொற்களால் ஞானத் தீ சுடர் விடாது. பிறர் மனதி

னுள்ளதை அறிந்து பேசவேண்டும். அவனுடைய கருத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இதுதான் சமார்த்தியத்தின் முக்கிய இலக்ஷணம்.

சாமார்த்திய மற்ற அறிவு விருதாவாகும். கேட்போர் ரசிக்க முடியவில்லை எனில் அங்கு சமாதானம் எப்படி நிலவும்? நிரம்ப கேட்கவேண்டும், நடுவேதான் பேசக்கூடாது. கொஞ்சமளவிலேயே இங்கிதம் புரிந்து கொள்ள வேண்டும். வீணர்கள் நடுவில் உட்காரவே கூடாது. பிடிவாதக்காரர்களுடன் வாக்குவாதம் செய்யக் கூடாது. தன் ஒருவனுக்காக ஜனங்களின் சமாதானத்தைக் குறைக்கக் கூடாது. அறிவாளியாக வேண்டும். அறிவினால் கர்விக்கக் கூடாது. மிருதுவான சொற்களால் ஜனங்களின் மனதைத் தன் பக்கம் திருப்பிக் கொள்ள வெண்டும்.

சந்தர்ப்பங்களை நன்று புரிந்து கொள்ளல் வேண்டும். பலருக்கு எதிராக கலகம் விளைவிக்கக் கூடாது. தன் கக்ஷி உண்மையாய் இருந்தாலும் சபைநடுவே அதை ஸ்தாபித்து சபையை கலைக்கக் கூடாது. சோதனை செய்வதில் சோம்பல் கொள்ளக் கூடாது. பிரஷ்டர்கள் இடையில் உட்காரக் கூடாது. உட்கார நேரிடின் ஒருவரைப் பற்றியும் இகழக்கூடாது. துக்கமடைந்தவனுக்கோ, உற்சாகம் கொண்டவனுக்கோ,

அவன் சமாதானம் அடையவேண்டி, நூல்களை சிறி தளவு படித்துக் காட்டவேண்டும். (படித்துக் காட்டி யதை அவன் நினைத்துப்பார்க்க வேண்டும்.) நல்ல ஜனங்களுக்கு அவா உண்டாக்கிவிட வேண்டும்.

சபை நடுவே உட்கருதல் கூடாது. சமாராதனை யில் உட்கொள்ளக் கூடாது. அப்படி உட்கொள்வ தால் கௌரவஹானி ஏற்படும். உத்தமமான குணங் கள் வெளிப்பட வேண்டும் என்றால் எல்லோருடனும் பேச வேண்டும். நட்பு மாத்திரம் நல்லோர்களைத் தேடி அவர்களுடன் வைத்துக் கொள்ள வேண்டும். உபா சனையில் சொல்லியவாறு பேச வேண்டும் அல்லது மற்ற வர்களின் உபாசினையைத் ஒட்டிப் பேசவேண்டும். எல் லோரையும் சந்தோஷப்படுத்த வேண்டும். எல்லோ ரும் ஒரே மாதிரியான நன் மதிப்பை அளிக்கும்படி பழக வேண்டும்.

பலவிடங்களைப் பற்றி அறிந்து கொண்டு ஊரில் பிறகு பிரவேசிக்க வேண்டும். பிராணி மாத்திரத்திற்கு திருப்தி உண்டாகும் வகையில் பேச வேண்டும். பெரி யோர், தாழ்ந்தோர், பணக்காரர், ஏழை என்ற பேத பாவங்களை மனதிற் கொள்ளாமல், எல்லோருடைய ஆத் துமாவையும் சுகமடையச் செய்ய வேண்டும்.

இருட்டடையும் நேரத்தில் புதிய ஊரில் நுழையக் கூடாது. உலகில், எல்லோருக்கும் நண்பனுவதற்கு முக்யமான இரகசியம் நாக்கில் உள்ளது. இப்படி எல் லாருக்கும் தோழமையைக் காட்டவேண்டும். ஆனல் நல்லோர்களைத் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். கதை நடக்கும் இடத்திற்கு போக வேண்டும். ஆனல் எளியவனைப் போன்று, பின்னல் உட்கார்ந்து கொள்ள வேண்டும். அங்கு உட்கார்ந்தவாறே, அங்குள்ள சூழ் நிலையும், மனப்போக்கையும் அறிந்து கொள்ள வேண் டும்.

அங்கு நல்லவர்கள் யார், வியாபகம் உள்ளவர்கள் யார் எனத்தெரிய வரும். கொஞ்சம் கொஞ்சமாக அவர் களுடன் கலக்க வேண்டும். சிரவணம் சிறந்தது. மன னம் அதைக்காட்டினும் மேன்பட்டது. ஆகையால் சிரவண மனனங்களினல், ஜனங்களுக்கு உற்சாகம் ஊட்டி எல்லோரையும் இன்புறச்செய்ய வேண்டும். தந் திரமாக எல்லவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும் மனதினல் மனதைப் புரியப்படுத்த வேண்டும். புரியா விடில் கொண்ட சிரமம் அனைத்தும் வீணுகும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 2 முடிந்தது.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் மூன்றும் சர்க்கப் பிரசங்கம்.

அந்தக் கரணத்தை ஸ்திரம் செய்து கொண்டு மூர்க்க இலக்ஷணத்தை கேளுங்கள். இந்த இலக்ஷணங் களை தியாகம் செய்திடில் பாக்யவந்தாளின் இலக்ஷணங் கள் தானே வந்தடையும். பாவம் அதிகரித்தால், தாரித்திரியம் வந்தடைகிறது. தாரித்திரியத்தால் பாவம் அதிகரிக்கிறது. இந்த பிணைப்பு நிரந்தரமாய் இருந்து வருகிறது. மூர்க்க லக்ஷணத்தை தெரிந்து கொண்டு உடனே கைவிட வேண்டும். அப்படிச் செய் யின் பாக்கியத்தின் இலக்ஷணங்கள் தானே வந்து சாரும்.

மூர்க்கனுக்கு சோம்பல் மிகவும் பிடிக்கும். முயற்சி பிடிப்பதில்லை. அவனுடைய வாசனைகள் அதர்மத்தை நோக்கியே ஓடுகிறது. எப்போதும் பிரமை கொண்டவ னும், துக்கமுடையவனுகவே இருக்கிறுன். கண்டபடி உளறுவான். ஒருவருக்கும் அவனைக் கண்டால் பிடிப் பதில்லை. எழுதப்படிக்கத் தெரியாதவன். கடைக் கண்ணிக்குப் போகத்தெரியாது அவனுக்கு. கணக்கு வழக்குகள் தெரியாது. தாரணை எனும் ஞாபகசக்தி

அவனுக்குக் கிடையாது. கெட்டுப்போக்குகிறது, கீழே தவற விடுகிறது, இடிப்பது, உடைப்பது, மறப்பது, தவறுவது, பலவித விஷமத்தனம் செய்வது இவைகள் எல்லாம் சுபாவமாகக் கொண்டவன். சற்ஜனங்களின் சேர்க்கை கிடையாது. வம்பன், துர்நடத்தையுடையவன், நடிப்புக்காண்பிப்பவன், பாவச் செயல்களில் ஈடுபட்டவன் இவர்களுடைய நேசம் கொள்வான்.

எல்லோரிடமும் சச்சரவு, எப்போதும் திருட்டு சுபாவமுடையவன், பிறர்க்கு இன்னல் விளைவிப்பதிலேயே நாட்டம், வழிப்பறிக் கொள்ளை அடிப்பது, தீர்க ஆலோசனையற்றவன், நியாயம், நீதி இவைகளில் பற்று அற்றவன். பிறரை ஏமாற்றும் தன்மை கொண்டவன், தேகம் சோம்பலின் வசமானது, வயிற்றுக்கு பிழைப்பு கிடையாது, போர்த்திக் கொள்ள கிழிந்த ஆடைகிடையாது, தலையைச் சொறிந்து கொண்டும், புறண்டு கொண்டும் துயில்பவன், இவை அனைத்தும் மூர்க லக்ஷணங்களேயாம்.

ஒருவருடனும் சிநேகம் வளர்க்கத் தெரிகிறதில்லை, கடினமான சொற்களால் பிறரை துன்புறுத்துவது, மூர்க்கத் தன்மையினுல் ஒருவருக்கும் அடங்குவதில்லை. நல்லோர்களின் கூட்டத்தில் போக சங்கோஜம், கெட்டவர்களின் கூட்டத்தில் வரையின்றி போக்கு வரத்து, உலகத்தில் வெறுக்கப்பட்ட காரியங்களில் எல்லாவற்றிலும் பற்றுதல், பலருடைய நஷ்டத்தினுல் தான் லாப

மடையும் இவன், பரோபகாரம் என்பது என்ன என்பதே எண்ணுதவன், பாபி, அனர்த்தம் விளைவிப்பவன். பிரமையுடையவன், வார்த்தைகளை நிறுத்திப் பேசத் தெரியாதவன், மேலும் இவன் சொல்லை ஒருவரும் மதிப்பதே இல்லை. நம்பிக்கை, நட்பு, நற்கல்வியினுல் வைபவங்கள் இவைகளில் ஒன்று கூட இல்லாமல், வெறும் டம்பம் அடித்துக் கொள்வது, உலகத்தில் எல்லோருடனும் பிரியமாகப் பழகுவது இந்த குணங்கள் சாலவும் நன்று; இவைகளினுல் பாக்கிய தேவதை நெருங்குவாள் என்று நல்லவார்த்தை எடுத்துச் சொன்னுல் எவன் விரும்புகிறுன் ?

கல்பனைக் கூட்டங்கள் குவியாக குவிந்துவிட லக்ஷியாம்சம் இன்றி, எப்போதும் சமுசயங்காண்கிறது புண்ணிய மார்க்கம் மனதில் இடம் பெறவில்லை, என்றுல், பாவங்கள் அகல இவனுக்கு என்ன வழி ? சரிவர ஒன்றும் புரியாதவன், ஆயினும் சபைகளில் பேசாமல் இருப்பதில்லை. இவன் வாயாடி, வீணன் என எல்லோருக்கும் தெரிந்து இருக்கும். இவன் சில நியமங்களுடன் செல்பவன் எனப் பலபேருக்குத் தெரிந்தால்தான் அவன் உலகில் கௌரவம் அடைவான். இல்லை எனில் முடியது.

தேகம் உழைத்தாலன்றி கீர்த்தி கிட்டாது. மான்யம் ஒரு காரிய காரணமின்றி கொடுப்பார்களா ? அவ

லக்ஷணத்தினுல் ஜனங்களிடம் 'சீ, தூ'' எனும் மரியாதையைப் பெறலாம். நல்லோரின் சேர்க்கை வேண்டாம், தன்னை அறிவாளியாக்கிக்கொள்ள முயலாதவன், தன் நன்மை தெரிந்து கொள்ளாதவன், இவர்கள் தற்கொலை புரிந்து கொள்பவர்கள், உலகத்தின் நன்மைக்காக பாடுவதினுல், தனக்கு நன்மை உண்டாகும் என்பதை எவன் அறிவதில்லையோ, மேலும் எவனிடம் நற்குணம் ஏதும் கிடையாதோ, அவன் மூர்க்கன் என்பதை அறிய வேண்டும்.

மூர்க்கத்தன்மை பலருக்கு பிடிக்காது கொண்டு, இவைகளை அவலக்ஷணங்கள் என்றழைக்கிருர்கள். உலகம் கார்யகாரணத்தை - கொடுக்கல் வாங்குதலை மூலமாகக் கொண்டது. இங்கு உழைப்பாலின்றி பலன் கிடைப்பதில்லை. அதாவது உழைப்பற்றவன். துக்க வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்படுவான். எவன் பலரால் புறக்கணிக்கப் படுகிருனே, பாவியாகிய அம்மனிதன், எங்கும் ஆதரவின்றி தவிப்பான், என்பதினுலேயே அவலக்குணத்தை நீக்கிக்கொண்டு, உத்தமகுணங்களை அவலம்பித்தானேயாகில், எல்லாம் அவன் மனது நினைப்பதுபோல் நிகழும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

மூர்க்க லக்ஷணம் கூறியது'

சர்க்கம் 3 முடிந்தது.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

முதலில் மூர்க்க லக்ஷணங்களைப் பற்றி விவரித்தோம். விவேகத்தினுல் இம்மாதிரியான அவகுணங்களிருப்பின் அவைகளை களைந்துவிட வேண்டும். இப்போது பாக்யவந்தனின் இலக்ஷணங்கள் கூறப்படும். அவைகளைதான் பின்பற்றி சுகமடைய வேண்டும்.

பிறவியிலிருந்தே பரோபகாரம் செய்யும் தன்மை எல்லோருக்கும் பிடித்த வகையிலிருப்பது. அழகான எழுத்துக்களை எழுதுவது துரிதநடையுடன் சுத்தமாக வாசிப்பது பொருளை விளக்குவதில் மிக்கதிறன் படைத்திருப்பது, எப்போதும் நல்லோர் சகவாசத்தில் காலம் கழிப்பது, ஒருவருடைய மனதும் கோணுமல் நடப்பது ஆகிய குணங்களைக் கொண்டவன் பாக்கியசாலி என அறியவும். அவனை எப்போதும் எல்லோரும் விரும்புகிருர்கள். அவன் மூர்க்கத்தன்மையின் சிக்கலில் அகப்படமாட்டான். உத்தமமான குணங்கள் பெற்றிருப்பதால், உலகத்திற்கே வேண்டியவனுகிருன். அவனுடைய

புகழ் சுயமாகவே அவன் குணங்களினுல் பரவுகிறது. ஒருவருடைய சிபார்சு, ஆதாரம் வேண்டி நிற்பதில்லை. எல்லோருடைய மனதையும் களிக்கச் செய்கிருன். அவனுடைய கல்வி உறுதியானதும் பல கிரந்தங்களைக் கற்றதுமாக உள்ளது. அவன் லௌகீக வழக்கங்களை ஒட்டி நடப்பதினின்றும் வழுவுவதில்லை.

ஏதாவது தெரிந்துகொள்ள வேண்டி இருந்தால், மிகவும் வணங்கி கேட்டுக் கொள்வான். சீரான பொருள் எவரேனும், இவனிடம் தெரிந்து கொள்ள விரும்பினுல் ஆதரவுடன் விளக்கிச்சொல்வது, நடத்தையிலும் வார்த்தையிலும் மாறுபாடு இன்றி இருப்பது, ஆசாரங்களை ஒழுங்காக கார்த்து வருவது, தன்பேரில் குற்றம் காண முடியாமல் நடந்து கொள்வது, ஒளி நிறைந்த புண்யபுருஷன், லோகப்ரியன், பரோபகாரி இப்படி குணம் படைத்திருப்பவனுக்கு பூ உலகில் என்ன குறை உண்டாகும்? பலர் அவனுடைய உதவியைக் கோறுகின்றனர். அவனும் அங்கங்கே தயாராக நிற்கிருன். பிறருடைய குறைகளைக் காண சகியாது, அவைகளை தீர்க்க முயலுபவன், பதினுன்கு வித்தைகளும், அறுபத்து நான்கு கலைகளும் அவனிடம் உறவாடுகின்றன. பாட்டு, சங்கீதம் அறிகிருன். அத்யாத்தும விஷயத்தில் அவா மிகுந்து காண்கிறது. எல்லோரையும் வணங்குபவனுகவும், எல்லோருடைய மனதிற்

குகந்தவாறு நடப்பவனும், ஒருவர் மனதை நோகச் செய்யாமலும் நியாயம் நீதி குன்றாதவனும், பூஜை, பஜனைகள் இப்படியாக பொழுதை பயனுள்ள காரியங்களில் கழிப்பவனுமாக இருக்கும் அறிவாளியாகிய பாக்யசாலியிடம், தாரித்திரியம் ஏன் அணுகுகிறது ?

இப்படியான பாக்யவந்தன் வாழும் சமூகத்தில் கலகங்கள் ஏன் பிறக்கும் ? உத்தம குணங்களால் அழகான இந்த பாக்கியவான் பிரதாப சூர்யனைப் போன்று பிராகாசிக்கிறான்.

இந்த குணங்கள் இல்லாதவனை அபாக்யசாலி என அறிய வேண்டும். இவ்வுலகில் அரசியலை நன்றாக அறிகிறான். பரமார்த்த வித்தையை அழகாக விவரிக்கிறான். சிரேஷ்டமான குணங்களை அனுபவிப்பதில் ஆநந்தம் கொள்கிறான், இப்படியாகப் பட்டவன் பாக்யவான். முன்னும் பின்னும் முரணாக இருதலைப்படுவது அவனிடம் காணமுடியா. எல்லோரும் அவனைப் போற்றுகின்றனர். அவன் ஒருவனுடைய மனதையும் நோகச் செய்வதில்லை. எங்கும் அறிவையே பரப்புகிறான்.

சுய கர்மம், உபாசினை, ஞானம், வைராக்யம், அறிவுடையோனின் பரந்த நிலையான புத்தி இவைகள் அவனிடம் குடிகொண்டுள்ளன. அவனை தூஷிப்பவன்

யார்? எல்லாவற்றிலும் ஆத்துமாராமன் திகழ்வதைப் போன்று, அப்படியே அவன் எல்லோருடைய உள்ளத்திலும், பிரியத்துடன் தோன்றுகிறான். முதியோர் சிறியோர் எவரும் தத்தம் காரியங்களில் கண்ணும் கருத்துமாக ஈடுபடுவதைப் போன்று, இவன் பிறர் காரியங்களில் கருத்துடன் ஈடுபடுகிறான். பிறர் துக்கத்தில்தான் வருத்தமுறுகிறான். பிறர் மகிழ்ச்சியில்தான் இன்பம் காண்கிறான். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்ற சுத்த வாசனையையே அவன் உள்ளம் கொண்டுள்ளது. பலவித சுவாபவங்களைக் கொண்ட மக்கட் பலர் இருப்பினும், பெற்றோர் மனது எப்படி எல்லோர் பாலும் ஒரே மாதிரியான பற்றுகொண்டுள்ளதோ அதே போல், மகாபுருஷன் எல்லோருடைய சுகத்தையும் நாடுகிறான். நாசமடையும் தன்மை கொண்ட, பொய்யான இப்பூத உடலை எவரேனும் தூஷித்தாலும் இவன் பொருட்படுத்துவதில்லை. அறிவாளியை, தேகபுத்தியினால் ஒருவரும் ஜயித்துவிட முடியாது. தேகபுத்தி அவலக்ஷணம் - அபாக்யசாலியின் குணம். அறிவாளி தான், சரீரத்தினின்றும் வேறுபட்டவன் என்பதை முற்றிலும் உணர்ந்தவன்.

பிறப்பெடுத்தவன் ஏதாவது உத்தமகுணத்தை வெளிப்படுத்த வேண்டும். உத்தம குணங்களினால் எல்லோருமே கவரப்படுகிறார்கள், தீய குணங்கள் உலகத்தில் விரும்பப்படாதவை. சாதாரண மனிதனுக்கு அறி

வாளியின் அறிவின் ஆழம் எப்படி புரிபடும்? என் பதினல் அறிவாளி மிகவும், பொறுமையுடன் உலகத் தோரின் தீய குணங்களை மன்னித்துவிடுகிருன். இவ னுடைய இப்பெருந் தன்மை உலகில் வெளிப்படும் போது, ஜனங்கள் இவனை மெச்சுகிருர்கள். இவனைப் பின்பற்றி ஆதரவு அளிக்கிருர்கள்.

பலர்தான் சிறந்தவன் என எண்ணமடைகின்றனர் பலரால் சிறந்தவன் எனப்போற்றப் படுபவனே மிகவும் சிறந்தவன். மகாபுருஷர்கள் எப்போதும், தீரனுகவும், பரந்த நோக்கமுள்ளவருகவும், கம்பீரமாகவும் இருக் கிருள். இக்குணங்கள் எல்லாம் பாக்யசாலியான அறி வாளிகள் பெற்றிருப்பவை. இவைகளுக்கு நேர்மாரு னதும், தோஷம் நிறைந்ததுமான அவலக்ஷணங்கள் எல்லாம் அபாக்யசாலியான மூர்க்கனிடம் காண்பவை.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 4 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

மண்ணைக் கொண்டு செய்யப்பட்ட தேவதையின் பிரதிமைகள், கல்லைக்கொண்டு உருவாக்கப்பட்டவை, தங்கம், வெள்ளி இவைகளில் வார்த்தவை, வெண்கலம் பித்தளைகளாலான மூர்த்திகள், செம்பினால் செய்யப் பட்டவை, தீட்டப்பட்ட சித்திரம் அதாவது, படமாகவோ சுவற்றில் தீட்டிய சித்திரங்கள், எருக்கங் கட்டையினால் செய்யப்பட்ட உருவம், பவளத்தினால் செய்தது, பாணம் நர்மதையினின்றும் எடுக்கப்பட்டவை, காச்மீரக்கல்லி னால் செய்தது, சந்திரகாந்தம், சூர்யகாந்த மணிகளி லிருந்த செய்த உருவகம், தங்கநாணயம் அல்லது செப்பு நாணயங்கள், சக்ரதீர்த்தனின்றும் கொணர்ந்த சக்ரசின்னங்கள் பதிந்தது இப்படியாக பலவற்றை கடவுள் என பூஜிக்கிறார்கள். உபாசனையின் வழிகளும் பலவாறு இருக்கின்றன. அவைகளை வர்ணிப்பது என்பது அசாத்தியம். அவனவன் தன் மனதிற்குகந்த வாறு பூஜை செய்கிறான். இவற்றிற்கெல்லாம் கார ணம் மூலமாய்கை. அவளை ஸ்மரிக்க வேண்டும். சிந்

தனை, முதல்ஸ்புரணை, மூலமாய்கை, இதுதான் முக்ய மான தெய்வம்.

இம்மூல தெய்வத்தின் அம்சம் தான் பற்பல தேவ தையின் சொரூபம். முதற் துவககத்தில் புலனுடைய தெய்வம் ஒன்றுதான். அது பலதாகிவிட்டது. இதை விவேகத்தினல் சோதித்தறிந்தால் நன்கு விளங்கும். தேகமின்றி பக்தி செய்யமுடியாது, தேகமின்றி கடவுளை அடையமுடியாது; பஜனைக்கு மூல காரணம் ஆகையால் தேகம். தேகத்தைப் பொய்யெனக் கருதிடில் பஜனை முதலிய உபாசனைகள் முற்றுப்பெறும். தேகத்தைவிட்டு விட்டால் பஜனை பூஜினை, உற்சவங்கள், சந்தனம், புஷ்பங்கள், தாம்பூலம், தூபதீபங்கள், பலவகை பூஜை திரவியங்கள் எல்லாமே தேககாரியங்களுக்குத் தானே. தெய்வத்தின் தீர்தத்தை எப்படி வாங்க வேண்டும், சந்தனம் எங்கு இட்டுக்கொள்ள வேண்டும், மந்திர புஷ் பங்களை எவ்விடத்தில் பூஜிக்க வேண்டுய், என்பதெல் லாம் தேகமின்றி எப்படி சாத்தியமாகும்? தேகம் உள்ளபடியினல்தான் பஜனை செய்ய முடிகிறது. தெய் வங்கள், பூதங்கள், தேவதைகள் இவைகளிடம் மூலபுரு ஷனின் சக்தி இருப்பதினலேதான் இவைகளை பூஜிக்க வேண்டும். பல தேவதைகளைப் பூஜித்தாலும், அது மூல புருஷன் ஒருவனையே அடையும். அவசியம் ஆகை

யால் எல்லா தெய்வங்களையும் திருப்தியடையச் செய்ய வேண்டும்.

மூலமாய்கையினின்றும், படைப்பு விஸ்தரிக்க, விஸ்தரிக்க பல தெய்வங்கள் வளர்ந்தன. அதாவது தேகம் மூலமாய்கை எனும் கொடியின் பழம் என்பதாலேயே மூலமாய்கையின் அறிவு எல்லோரிடம் தோன்றுகிறது, பல தெய்வங்களை பூஜிப்பதை ஆகையால் வெறுப்புடன் தள்ளக்கூடாது. மூலபுருஷனைக் கண்டு கொண்டு சமாதானத்துடன் வாளாவிருக்க வேண்டும். அநேக தெய்வங்களிடம் மூலபுருஷனின் தொடர்பைத் தான் காண்கிறோம் என்பதை யறிந்து அவனை ஸ்மரிப்பதில் துஷ்டியடைய வேண்டும்.

எல்லோரும் தன் [1]சம்சாரத்தை விட்டு விட்டு தெய்வங்களை தேடிக் கொண்டு அலைகின்றனர் அநேகமாய் ஐயங்களால் குழப்பமடைகின்றனர். உலக [2]ரூடி என்ன வென்றால், ஜனங்கள் தெய்வதை பூஜை செய்கிறார்கள் அல்லது பல க்ஷேத்திரங்களில் போய் அங்குள்ள தெய்வத்தை வணங்குகிறார்கள் அவதார சரித்திரங்களை கேட்டு குறிப்பிட்ட அவதார மூர்த்தியின் மேல் நம்பிக்கைக் கொள்கிறார்கள். அல்லது பிர்ம, விஷ்ணு, மகேசர்

1. குடும்பப்பொறுப்புகளை.

2. சுவடு - பலகாலந்தொட்டு நடந்த வழி.

களை வணங்குகிறார்கள். இவைகள் எல்லாம் போற்றத் தக்கவையே, ஆயினும் இத்தெய்வங்கள் குணங்களுடன் கூடியவர்கள் ஆதலின், குணத்திற்கப்பாற்பட்ட தெய்வம் ஒன்றையே குறிக்கோளாக்கிக் கொள்ள வேண்டும். கடவுள் நிற்குணன் என்பதால் அவனுடைய பஜினை எப்படி சாத்தியம் என்று கேட்டாலோ, குழப்பந்தான் மிஞ்சும். தேவதர்சனம் ஆகாவிடில், கடைத்தேற முடியாது என்பதினால், உபசனை மார்க்கத்தை கடைபிடிக்கும் மகான்கள் போற்றதக்கவர்கள்!

ஆகையால் பலதெய்வங்கள் உள. இத்தெய்வங்களின் குழாம் குறைவதில்லை. முக்கிய தெய்வம் எது எனப்புலப்படுவதில்லை. கடமைகளை தூரச்செய்து, பிறகு நிற்குணமான, நிற்சலமான தெய்வத்தைக் கண்டாலின்றி இந்த அத்யாத்ம ரஹஸ்யத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. அந்த மூல தெய்வம், நிர்குணப் பிர்மம், தென்படாது. தோற்றமளிக்காதது, கல்பங்களின் முடிவிலும் அழிவு அற்றது, புண்யம் மிகுந்தவர்களால் அன்றி மற்றவர்களால் மனதில் இவனைக் கொள்ள முடியாது.

மனிதன் தேகபுத்தியைக் கொண்டுள்ள மட்டும் கணக்கற்ற கல்பனைகள், பழம் வாசனைகளினின்றும் அலைகள் எழுவதினாலும் துன்பப்படுகிறான். தேக

புத்தியை விலக்கி, நிற்விகற்பமானதும், சாசுவதமான துமான பரப்பிர்மத்தைக் காணவேண்டும். இதை ஞானககண்ணினுல் பார்த்து அதில் ஈடுபட்டு நிலைக்க வேண்டும். தானுகிய அந்த பிர்மத்தின் ஒரு முகப்பட்ட தியானத்தினுல், சேர்க்கையை ஒழித்து அதினிடம் ஐக்ய மாகிவிட வேண்டும். இந்த ஐக்கியம் லபித்து விட்டால் அதன் சுகத்தை என்ன வென்று சொல்வது ? அப்பி ராணிகளுக்கு அந்த ஆநந்தம் எப்படி விளங்கும். சத் சங்கத்தினுலும், ஸ்வானுபவத்தினுலும் தான் அந்த ஸ்திதி புலனுகும். இந்த நிலையின், பரமானுபவம் கிடைத்தால் பிறகு வீழ்ச்சி என்பது அவனுக்கு இல்லை. சத்குருவின் கிருபாகடாக்ஷத்தினுல் தான் இந்நிலை கிடைக்க வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷான் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

சர்க்கம் 5

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் ஆரும் சர்க்கப் பிரசங்கம்.

பரார்திகளாயும், விவேகிகளாயும் உள்ளவர்களின் செய்கைகளை உலகத்தோர் மதிக்கின்றனர். காரணம் அவர்கள் நன்று விசாரித்து தன் காரியங்களில் குற்றம் வராமல் செய்கிறார்கள் என்பதுதான். உலகத்தாரின் மனதில் ஐயம் எழும்படியாக அவன் எதுவும் செய்வதில்லை. ஒவ்வொரு காரியத்தின் துவக்கத்தையும், முடிவையும் அவன் யோசித்து தான் வைத்திருக்கிறான். யார் பற்றற்றவனாக இல்லையோ அவன் வார்த்தைகளை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். ஜனங்களாகிய ஜனார்தனனை திருப்தி படுத்துவது மிகவும் கஷ்டம்.

சிலர் பலாத்காரமாக உபதேசிக்கிறார்கள். சிலர் பிறர் மூலம் உபதேசிக்கிறார்கள். அவர்களுடைய லோபித்தனம் பின் வெளிக்கு வருகிறது அவர்களுடைய கவுரவமும் குறைந்து விடுகிறது. யாரிடம் உபதேசிக்கிறார்களோ அவர்களே பிரதி கூலமாகிவிடுகிறார்கள். அவர்களுடைய அதிகாரம் முழுவதும் வீணாகிவிடுகிறது. சகோதரனுக்கு உபதேசம் கொடுப்பதால்

அவமானம்தான் மிஞ்சுகிறது. ஆகையால் தெரிந்தவர்களிடம் பெருமை படுத்திக்கொள்ளக் கூடாது. துவக்கத்தில் ஆடம்பரமாக விருந்து பிறகு நிலைக்காமல் போய்விடுகிறது. விவேகமுள்ள சீடனுக்கு இது பிடிப்பதில்லை. விசாலமற்ற ஜனங்கள் மாத்திரம் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கணவனை சீடனாகச் செய்து, பிறகு தானும் சிஷ்யையாக பெண்சாதி ஆவதும் புரட்டலைச்சார்ந்ததேயொழிய நல்லது ஆகாது. தவறி விடுவதற்கு அநேக வழிகள். அதில் இதுவும் கணக்கு செய்ய வேண்டியதே.

ஜனங்களுக்கு எதிரில் நேர்முகமான பாதையைக் காண்பியாது, மறைவில் உபதேசிப்பது, முக்கியமான ஆத்ம, நிச்சயம் பெற வழிகாட்ட முடியாதவன், மனதிற்கு வந்தபடி நடப்பவன், ஒருவருடைய யோசனையையும் மேல் கொள்வதில்லை இப்படி இருப்பவன், தூரதர்சியான சாதுவாக மாட்டான்.

ஒருவரிடமும் பிரதிபலன் எதிர்பார்க்காது, பற்றற்றவனாய் ஜனங்களை பக்தியில் பாதையிட்டுச் செல்ல வேண்டும். அவர்களுடைய விவேக புத்தியை தூண்டிவிட்டு அவர்களை பஜனைகளில் ஈடுபெறச் செய்ய வேண்டும். பிறர் மனதை புரிந்து கொண்டு அதை காப்பாற்றும் விவேகமும், நுட்பமதியும் இருப்பது மிகவும் அரிது. தன் இச்சைப்படி, தன் தர்மத்தின் போக்கில் உலகப்

போக்கை கொண்டு போக வேண்டும். குரு மிலேச்சன் சீடன் செக்கிலி என்ற நீச சேர்க்கையால் லோக சமுதாயம் சீரழிந்துவிடும். அந்தணர்கள், பக்திமான்கள் இவர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். சாதுக்களின் குழாமை சோதித்து ஆதரிக்க வேண்டும்.

மேன்மையானது எதுவோ உலகத்தாரால் போற்றப் படுவது எதுவோ அதையே ஸ்வீகரிக்க வேண்டும். மற்ற கிடைத்தப் பொருளை தியாகம் செய்துவிட வேண்டும். பற்றற்ற மொழிகளால் மூவுலகிலும் புகழ் அடைய வேண்டும்.

நன்ருக எழுத்துக்களை எழுதத் தெரிந்து, படிப்பும் தெளிவாகவிருந்து, விளக்கம் கொடுப்பது மிகவும் எளிதாகவிருந்து,கீத நாட்டியங்கள், பல பாடாந்திரங்கள் பயின்று, தீக்ஷை, சிநேகம் இவைகள் உத்தமம், விவகாரங்களில் நுண்ணறிவு.இவைகள் படைத்து, சமூக நலனுக்காக இவைகளை உபயோகப்படுத்தி, தனது பற்றற்ற தன்மையையும் சிறிதும் வழுவாது எவன் காக்கிருனே அவன்தான் சிரேஷ்டனுவான்.

அவன் ஹரிகதைகள் செய்வதில் பற்று கொண்டு, ஜனங்களை நாமஸ்மரணைகளில் ஈடுறச் செய்து, சூர்ய ஒளியைப் போன்று மாசற்ற, சிறந்த உபதேசங்களைப் பண்ணுவான்.

தீயோரையும் கலந்து கொள்ளச் செய்கிறான். நல்லோர்களுக்கு சாந்தியும், சமாதானமும் கிட்டும்படி செய்கிறான். எல்லோருடைய மனமும் காத்து நடக்கிறான். அவன் சகவாசத்தினால் மனிதனுடைய சுவபாவம் மாறி அவர்கள் அகத்தில் மறைந்து கிடந்த நற்குணங்கள் வெளியுறச் செய்கிறான். ஆயிரகணக்கான மக்கள் பயிலத் துடங்குகிறார்கள். இவன் போகுமிடம் எல்லாம் தினம் புதிய மணம் வீச, இவன் எல்லோருக்கும் பிடித்தவனாக ஆகிறான். ஆனால் தன்னலத்தைப் பேணுவதில்லை. பக்தி, ஞானம், சாமார்த்தியம், பஜனை, யோகம் அனுஷ்டானங்கள், பற்றற்றத் தன்மை ஆகிய குணங்கள் மேலிட்டு நிற்பதால், அவன் கீர்த்தி பூ உலகில் ஒளி விட்டு நிலவுகிறது, ஏதாகிலும் ஓர் குணமாவது ஓங்காவிடில் புகழ்கிடைக்காது.

விருதாவாக திரிந்து என்ன உபயோகம்? உடல் சாசுவதமானதன்று, உயிர் எப்போது உடலைவிட்டுப் போகும் என்பது சொல்லமுடியாது. எந்த நேரத்தில் எது நேரும் என யாருக்குத் தெரியும்? ஆகையால் ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் முடிந்தவரை நற்கர்மங்கள் புரிய வேண்டும். பகவானுடைய கீர்த்தியை பூ உலகம் முழுமையும் பரவவைக்க வேண்டும். அனுகூலமானதை உடனே செய்ய வேண்டும். செய்வதற்கு கடினமாயுள்ளதை நன்று விசாரித்து செய்ய

முற்பட வேண்டும். விவேகத்தினால் செய்ய முடியாத காரியம் ஒன்றும் இல்லை. ஆகையால் ஏகாந்தத்தில் விவேகத்தினால் தீர விசாரிக்க வேண்டும். எங்கு இடைவிடா ஏற்பாடுகளும், விசாரணையும் இருக்கின்றனவோ, அங்கு என்ன குறைவு காணும். ஏகாந்தத்தில் தான் மனிதனுக்கு விசாரங்கள் தெரியவரும். ஆனது கொண்டே ஏகாந்தத்தை வற்புறுத்துவது. ஆத்துமா இராமனை அறிமுகமாக்கிக் கொண்டால், ஆரம்பத்திலிருந்து, இறுதிவரை, சிக்கல்கள் தோன்றாது.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாசபால

போத விளக்கத்தில்

சர்க்கம் 6 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்,

ஹரி கீர்தனைகளில், சகுண பக்தியைப் பற்றி நிரம்ப பேச வேண்டும். நிருபணங்கள் செய்யும் போது அத்யாத்தும விஷயங்களை விவரிக்க வேண்டும். எந்த விஷயத்திலும் குறைவு ஏற்படக்கூடாது. பஜனை செய்பவன் அல்லது ஞானமார்க்கத்தில் உள்ள ஞாதா வழி இடரினால், அது அறிவாளிக்கே புலனாகும். சாமான்ய ஜனங்கள் விழித்துக் கொண்டு நோக்குவர். கேள்விக்கு பதில் கொடுக்க விலம்பம் ஏற்பட்டால், இவன் அறிவைப் பற்றி குறைவாக ஜனங்கள் எண்ணத்தலைப்படுவார்கள். கொஞ்சம் சமாதானமாக ஏதாவது சொல்லவேண்டியது அவசியம். கோபம் வந்தாலும் அதை அடக்கிக் கொண்டு மனதை சகஜமாக வைத்துக்கொள்ள வேண்டும். எல்லா ஜனங்களுக்கும் ஸ்வாரஸ்யம் காணும்படி செய்ய வேண்டும். ஹரிதாசர்கள் சிடு சிடுவெனப்பழகினால், அவர்களுடைய கோப சுபாவம் வெளிப்பட்டு, ஜனங்களின் மதிப்பு குறைந்துவிடும். எவருடைய

மனது நோகிறது, எவருடைய மனது களிப்பெய்துகிறது என்பதை அவ்வப்போது தெரிந்து கொள்ள வேண்டும் சீடனுடைய மனதில் விகல்பம் தோன்றின் அவன் குருவை விட்டகலுகிறான். குரு அவன் மனதை சரிப்படுத்த அவன் பின் போகிறான். இங்கு இருவருமே விகல்பமான மனதை யுடையவராகிறார்கள்.

ஆசை நிரம்பியும், ஆசாரமற்றும், சாமார்த்தியம் குறைந்தவனான குருவினுடைய மானம் கப்பலேறிவிடும். அதற்கு கட்டுப்பாடு ஏது? இப்படிப்பட்ட ஹரிதாசர்கள், கோஸ்வாமிகள், நாளடைவில் பதவியை இழக்கிறார்கள். அவர்கள் மகத்துவம் குறைந்ததும் அவர்களே கஷ்டமுறுகின்றனர். அப்படியிருக்க அவர்களை சூழ்ந்த ஜனங்கள் மாத்திரம் எப்படிச் சுகமடைய முடியும்?

எங்கும் கீர்த்தி, பரவ, எல்லோராலும் இச்சிக்கப்படும்படியாக, எல்லோர் மனதிற்கும் துஷ்டியாகும்படி நடக்க வேண்டும். தூரதேசத்திற்குப் போய், தன்சம்பிரதாயத்தில் வந்தவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை உற்று நோக்குதல் வேண்டும், ஒருவரிடமும் இறைந்து கேட்பது கூடாது. எங்கும் கடவுள் இருக்கிறான் என்பதை நினைவுறுத்திக் கொண்டே இருக்க

வேண்டும். விசாரசாலிகள் இதை எப்போதும் நிலை நாட்டப் பாடுபடுகிறார்கள்.

தான் காணும் மனிதர்களிடம் எல்லாம் குறை கண்டு கொண்டிருந்தால், எல்லோரும் குறைப்பட்டவர்கள், தான் மாத்திரம் நிறைந்தவன் என ஆகிவிடும். மனித ரற்ற பாலைவனத்தில் போய் என்ன செய்யமுடியும்? உடைத்தினரை விட்டு வேறு எங்கு போய் வாழப்போகி றோம்? ஆகையால் குறைகளை பொருட்படுத்தாமல் இருக்கப் பழகவேண்டும். உலகத்தில் இப்படி பழகத் தெரியாதவன் பிறருக்கு உபதேசிக்கும் பதவியை ஏற்கலாகாது. பரலோக சாதனையாகிய சிரவணம் செய் வதுடன் அவன் காலம் கழிக்க வேண்டியவன்.

தனக்கு நீந்த த்தெரியாவிடின், ஜனங்களை நீரில் மூழ்கடிக்காமலிருக்கலாம் அல்லவா? அன்பிற்கு இத னல் பெரும் இன்னல் விளையும். பயிற்சி முற்றிலும் பெற்று தயாராகி இருந்தால் ஜனங்களின் முன் வர வேண்டும், இல்லை எனில், மறைவாக விருக்க வேண்டி யதே. வெளிப்படையாக தோன்றி கௌரவத்தை இழக்கக்கூடாது. மந்தனைவன் தட்டு தடுமாறிக் கொண்டு நடக்கிறான் அவன் ஓட்டப்பந்தயக்காரனுடன் ஓடமுடியுமா? அரபிக்குதிரைகளில் சவாரி செய்பவன்

மிகத்துரிதமானவனுக இருக்க வேண்டும். சிக்கலான காரியங்களில் நுண்ணிய அறிவு இன்றி என்ன செய்ய இயலும்? சாதாரணமான பனிதர்களால் இது செய்து முடிக்க முடியாதது. வயற்காடுகளில் விவசாயம் செய்ய தெரியாது, வைரம் முதலிய கற்களைக் கொண்டு போய் நாலு ஊர்களில் விற்பனை செய்யவும் தெரியாது. நாலு மனிதர்களைக் கூட்டி ஒற்றுமையுடன் பழகவும் தெரியாது என்ருல் பெருந்தன்மை எப்படி கிடைக்கும்? ஜனங்களிடம் விருப்பம் அதிகரித்ததே யானல் தான் பரமார்த்த வழி நிலைக்கும். ஒற்றுமை குறைந்தால் ஜனங்கள் மனது உடைந்து போய்விடும். தன் செயல்கள் ஜனங்களுக்குப் பிடிக்கவில்லை, ஜனங்களுடைய நடத்தைத் தனக்கு பிடிக்க வில்லை என்ருல், பின் சமாதானம் எப்படி நிலை கொள்ளும் அங்கே? அழிவில் முடியம் தீக்ஷை, பொய்யர்களின் சமூகம், இரண்டும் கூடிஞல் அங்கு விசாரம் எப்படி தலைத்தூக்கும்? விசாரமற்றக் கூட்டத்தில் வாழ்வது உசிதமற்றது. பல நாட்கள் கஷ்டப்பட்டு இறுதியில் வீண் ஆகிவிடும். குழப்புங்களை சாமாளிக்கத் தெரியாதவன் கூட்டம் சேர்த்து பயன் யாது?

சீருக நிறைவேறில் புகழ், இல்லை எனில் சினம் அடிக்கடி இடையூறும், சினமும் எவ்வளவு எனக் கணக் கொடுக்க முடியும்? மூர்க்கர்கள் தன் அறிவீலித்தனத்

தால் இடரினால், அறிவாளிகள் அறிவின் கர்வத்தினால் சண்டையிடுகின்றனர். இருவருக்கும் அகௌரவம். ஒழுங்காக காரியம் நடத்தும் திறன் கிடையாது, கடமை புணர்ச்சியும் கிடையாது, வாளாவிருக்கவும் முடியாது என்றால் இவர்களை என்னவென்று அழைப்பது? நாசகாரியான போக்குகளை களைய வேண்டும். தன் வாழ்நாட்களை லாபகரமான வழியில் கழிக்க வேண்டும். எங்காவது சுற்றிக்கொண்டே இருக்கவேண்டும் சுற்றித் திரியவும் முடியாது, பிறர் குறைகளை சகித்துக்கொள்ள வும் முடியாது என்றால் துக்கத்தில் மூழ்கவேண்டியது தான் வழி. இவர்கள் எல்லாம் தன்னிடம் தான் உள்ள வைகள். தன் மனதில் விசாரம் செய்ய வேண்டும். எது அனுகூலமாகப் படுகிறதோ அவ்வழி செல்ல வேண்டும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாசபால

போத விளக்கத்தில்

சர்க்கம் 7 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

உலகத்தில் பலவித மக்கள் இருக்கின்றனர். உலகத்தைச் சுற்றிவரின் எவ்வளவு வகையில் மாந்தர் உள்ளார்கள் என்பது தெரியவரும், பல அறிஞர்கள் தென்படுவார்கள். சிலர் உலகில் வாழ்ந்துகொண்டே பற்றற்றவர்களாக இருக்கிறார்கள். சுகங்களினாலோ, துக்கத்தினாலோ, அவர்கள் மனது சம நிலையை விட்டு நெகிழ்வதில்லை. அவர்கள் நடத்தையில் மரியாதை திகழ்கிறது அவர்கள் பேச்சை எல்லோரும் ஏற்கிறார்கள். தாளம், இராகம் இவைகளின் அறிவும் அவர்களிடம் காண்கிறது. அவர்களிடம் நியாயமும் நீதியும் இருப்பது தெரியவருகிறது. பராக்கிரமம் வாய்ந்தவர்களையும் காண்கிறோம். ஜனங்கள் எப்போதும் அவனுக்கு அனுகூலமாக நடக்கிறார்கள். ஜனங்களுக்கு அவனைக்காணும் போதெல்லாம் புதியதோர் பிரீதி. பல விஷயங்கள் பார்க்கப்படுகின்றன. மேல் ஸ்தானம் வகிக்கும் மதிப்புள்ளவரைக் காணலாம். மகான்களின் இலக்ஷணங்கள் சகஜமாய் அவனிடம் காணலாம். சிலரிடம் குணங்

களை எல்லாம் கிரகிக்கும் சக்தி தென்படுகிறது. அவர்கள் பேச்சிலும், நடத்தையிலும், அனுபவம் வாய்ந்த எழில் ஒன்று தென்படுகிறது.

தன் குற்றம், குற்றமல்ல, நேர்மை எனத்தோன்றுவது மிகப்பெரிய பிசகு. இந்த தோஷம் யாரைப்பற்றியுள்ளதோ அவனுடைய முந்திய வினைகளும், பாவத்தினுல் விளைதரித்திரியமும் என்றுமே அகலாது. பிறருடைய தயவு இன்றியே, பிறரால் செய்து முடிக்க முடியாத காரியத்தை எளிதில் முடிக்கும் செயலாற்றம் சிலரிடம்காணும். அவன் மேற்கொண்ட பணியை, சுணக்கம் முனகல், முணுமுணுப்பின்றி செய்து முடிப்பான். குறுக்குவழிகளில் பிரவேசிக்க வேண்டியது அவனுக்கு அவசியம் இல்லை. பெரும் முயற்சியால் ஒருவனுக்கு சாதிக்கமுடியாததை, எளிதில் மற்றவன் செய்து முடிக்கிருன். பகவானின் லீலையின் மகிமை.

பெருந்திட்டங்கள் தோல்வியுறுகின்றன. அரசியல் திட்டங்களில், முற்றுகை முதலிய கட்டங்களில் தவறுதல் ஏற்பட்டு ஜனங்கள் அவமதிப்பிற்கு ஆளாகவேண்டி வரும். தவறுதலால் உபாயம், அபாயமாக மாறுகிறது, பிசகற்ற திட்டங்களை வகுப்பவனுக்கு புதிதான உபாயங்கள் தோன்றுகின்றன. பிசகு எங்கே என்பது புரி

யாமல் போனால், மனது நிலைத்து தவறைக் கண்டுபிடிக்க மறுக்கிறது. இருசாராரும் கோபமுறுகின்றனர். சபை கலைகிறது, ஜனங்களின் மனது அல்லல்படும். தவறு எங்கே எனக்கண்டுகொள்ள யுக்தி மாத்திரம் புலப்படுவதில்லை. தன்னிடம் சமாளிக்கும் சக்தி இல்லாத போது, வெறும் டம்பம் அடித்துக் கொள்பவன், ஏமாற்றமடைகிறான். நீண்ட யோசனை செய்து பழக்கம் இருந்தால் தானே ?

ஒருவன் உற்சாக மற்றவனும், காரியங்களை சீரின்றி செய்பவனும், எப்போதும் சந்தேகங்கள் நிறம்பியவனாகவும் இருக்கிறான். தான் செய்த சிக்கல்களை தன்னாலேயே, சரி செய்ய முடியாதென்றால், பிறருக்கு அதில் என்ன புலப்படும் ? அவனது மனதில் மறைவாக நிறம்பியுள்ள கல்பனைகளை யார் கணக்கிட முடியும் ? அதை நிறுத்தத் தான் எவரால் முடியும் ? தானாகவே திருட புத்தியுடன் அவைகளை அடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். எவனால் கற்பனைகளை அடக்க முடியவில்லையோ அவன் கற்பனைகளை வளர்க்கக் கூடாது. மனதை ஸ்திரப்படுத்தி, சமாதானத்தை நிலை நாட்டி இருக்க வேண்டும். அங்கும் இங்கும் ஓடி, கற்பனைகளையும் அலுவல்களையும் வளர்த்திக் கொண்டு, தனக்கும் பிறருக்கும் சிரமத்தை தருவித்துக் கொள்வதில் பயன் யாது ? ஜனங்களுக்கும் வீண் சிரமம்,

தனக்கும் துக்கம் எனில் அப்படிப்பட்ட அலுவல்கள் எதற்கு? அலுவல்களின் தன்மையே, சிலது நேருக வும், சிலது கோணலாகவும் முடிவது. இவைகள் எல் லாம் தெரிந்து கொண்டு நடக்க வேண்டும்.

ஜனங்களிடையே உணர்ச்சிகள் ஏது? அதை நாமே விழிக்கச் செய்து, தூண்டியும் விட வேண்டும். இறுதியில் சிக்கல்கள் வரும்படி செய்து விடக் கூடாது. சஞ்சலமானதிற்கெல்லாம் இருப்பிடம் அந்தராத்மா. எல்லா புரட்டும் அவனைச் சார்ந்தது. நிற்குணப் பிர்மத் தினிடம் அணுகாது. பிர்மம் எல்லாருக்கும் ஓய்வு கொடுக்கும் ஸ்தானம். அங்கு விகாரங்கள் எல்லாம் நிர்விகாரமாய் போகின்றன. லயமடைந்துவிடுகின்றன, மனதின் உணர்ச்சிகள் எல்லாம் அங்கு மறைந்து விடுகின்றன.

மனது ஓய்வடையும் அத்தானத்தில் பரப்பிர்ம நிலை நிலைக்கிறது. இதை விவேகத்தினுல் நிலை நாட்ட வேண்டும். சுயமாகத் தான் உபாதிகள் அற்றவன். வினைப்பற்றுகளாலே, உறவினர், சுற்றத் தார் கூடுகிருர்கள். யார் வந்தால் என்ன, போனுல் என்ன எனும் பற்றற்ற வைராக்கியம் தோன்ற வேண்டும். அலுவல்களில் வெறுப்புற்றவன், தனிமை யில் காலம் கழிக்க வேண்டும். எந்த அலுவல்களை தன் வசப்படுத்த முடியவில்லையோ அவைகளை நாடிப்பயன்

என்ன ? சிலகாலம் தனிமையிலும், சில காலம் அலு வல்கள் கவனிப்பதிலுமாக வாழ்க்கையை அமர்த்திக் கொண்டால், ஓய்வு பெற சமயம் வாய்க்கும். அலுவல் கள் நாம் தன்னை கவனிக்கவில்லை என்பதற்காக தடைப்பட்டுப் போவதில்லை. ஆத்ம சமாதானத்தைப் போன்று உயர்ந்தது எதுவும் இல்லை. மனித உடலில் தான் அதை எய்ய முடியும். மனித உடல், நினைக்கும் போதெல்லாம், அடிக்கடி கிடைப்பதும் இல்லை.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

சர்க்கம் 8

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், பத்தொன்பதாம் தசகத்தில் ஒன்பதாம் சர்க்கப் பிரசங்கம்.

ஞானியாகவிருந்து, பற்றும் அற்று இருந்து, மேலும் சமூகத்தை முன்னேற்றும் அவாக்கொண்டவன், அமைதியான மனதுடன் ஏகாந்தத்தில் இருக்கவேண்டும். ஏகாந்தத்தில் பலவித உபாயங்கள் மனதில் தோற்றும். பலவித பிரச்னைகளைச் சர்ச்சை செய்யலாம். ஜனங்களின் இருப்பும், போக்கும் தெளிவாக புரியவரும். இந்த சர்ச்சை செய்யவிடில், கடன் கணக்குப் போட்டு பாக்கி வைக்காது தீர்க்காதவன் கதியர்கும். அதாவது, கடன் வளருவது போல் சர்ச்சைக்கு விஷயங்கள் அதிகரித்துக் கொண்டுவரும். ஐயங்கள், பிசகுகள் வளர ஏதுவாகும். சமாதானம் குன்றிவிடும். சிலர் புதிய சொத்துக்களை வாங்கி சேகரம் செய்கிறார்கள். சிலர் இருப்பவைகளையும் இழக்கிறார்கள்.

முயற்சி செய்பவர்களில் மேற்சொன்ன இருவகையினர்களும் உளர். பிறருடைய மனோகதம் முன்கூட்டி தெரிந்திருந்தால், அவன் நம்மை ஏமாற்ற முடியாது. செயற்கை வேடம் சீக்கிரம் புலனாகிவிடும். ஜனங்களு

டன் அப்போதும் இருந்துவந்தால் நட்பு வளர்ந்துவிடு கிறது. அதிக பரிசயத்தினுல் அவமரியாதைக்குக் காரணம் ஏற்படுகிறது, என்று தனிமையானவிடத்தில் ஓய்வாக வாழக்கூடாது. தேசாடனம் செய்ய வேண்டும். சோம்பலினுல், சோம்பல் வளர்ந்து கொண்டு போகிறது. வேலை ஒன்றும் முடிவதில்லை. சமூக முன்னேற்றம் தடையுற்று மனநிலேயே நின்றுவிடுகிறது.

உபாசினைக்கான தினசரி கர்மாக்களை ஜனங்களுக்குப் பழக்கிக் கொடுத்தால், கபடம், பொய் முதலிய ஈன கிருத்தியங்களில் ஈடுபட அவர்களுக்கு அவகாசம் கிடைக்காது. திருடனின் கையில், நகை அறையின் சாவிக்கொத்துக்களைக் கொடுத்து, அவனை அதற்கு அதிகாரியாக வைத்துவிட வேண்டும். தவறு நேரும் போலிருந்தால் அவனை சீர் திருத்த வேண்டும். அவன் மனதில் தேங்கிய மூர்க்க விசாரங்களை சிறிது சிறிதாக வெளிப்படுத்திட வேண்டும். இவைகள் புதிதாக கண்டு பிடித்துக் கூறபட்டவையல்ல. ஒருவரையும் மனது நோகாதபடி பல அலுவல்களில் ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும். திருடனைக் கண்காணிக்க திருடனையே அமர்த்த வேண்டும். வாயாடியின் வாய்க்கு பூட்டுபோட அதிகமாக வாயாடுபவனை நியமிக்க வேண்டும், இப்படி தான் ஒரு விஷயத்திலும் பட்டுக்கொள்ளக் கூடாது. முள்ளினுல்தான் முள்ளை அகற்ற வேண்டும். ஆனுல் தெரிவித்துக் கொள்ளக் கூடாது.

சச்சரவிற்கு இடம் கொடுக்கலாகாது பிறருக்குத் தெரிவிக்காமல் செய்யும் காரியம் உடனே பலனடைகிறது. அது எல்லோருக்கும் முதலிலேயே தெரிந்து விட்டால், நவீனம் என்ற கவர்ச்சி அற்றுப் போகிறது. பரஸ்பரம் பேசினால்தான் பற்று அதிகரிக்கும். பிரத்யக்ஷமாய் கண்டுகொண்டால் பற்று திருடமாக்கப்படும். பற்று அதிகரிக்க சேவை புரியும் எண்ணம் வளர்கிறது. இப்படியாக சமுதாய நலனை வளர்க்க வேண்டும்.

எந்த காரியமும் பாடுபட்டால்தான் முடிவு அடையும். இல்லை எனில் பின்னடைந்து விடும். பின்னடைந்தும் மனத்தளர்ச்சி அடையக் கூடாது. தன் கார்ய பூர்த்திக்கு எவன் பிறர் கையை நாடுகிறானோ, அவன் காரியம் பலிப்பதில்லை. எவன் தானே கஷ்டப்பட்டு காரியத்தை முடிக்க முயல்கிறானோ, அவன் தான் அறிவாளி. எல்லோரிடமும், எல்லா விஷயங்களைத் தெரிவிப்பதால், காரியம் கெட்டுவிடும். யாரிடம் எவ்வளவு தெரிவிக்கலாமோ அவ்வளவு தான் தெரிவிக்க வேண்டும். முக்யமான விஷயத்தை தன் கைகளில் வைத்துக் கொண்டு, மற்ற வேலைகளை பிறர் மூலம் செய்விக்க வேண்டியது. பல தந்திரசாலிகளை அலுவல்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

சச்சரவு செய்வதில் முதன்மைத் தானம் வகிப்பவருடன் தான் விவாதம் செய்ய வேண்டும். தீயோர்களின் செயல்களால் அலுவல்கள் தடையுறுமாறு

வைத்துக் கொள்ளக் கூடாது. கிராம நலனுக்கு தீங் கிழைப்பவனே, தீயோர்களின் குழாமின் தலைவனே, எதிர்த்தால், லாகவமாக பிடிக்கச் செய்து சிக்ஷிக்க வேண்டும். திரும்பவும் நற்சொற்களால் இவனை வயப் படுத்திக் கொள்ளல் வேண்டும. அவனை கீழே பாதா ளத்தில் தள்ளிவிடக் கூடாது. துர்ஜனங்கள், போக் கிரிகளினின்றும் பயப்பட்டு அலுவல்களை சமாளிக்கா விட்டால், நல்லது கெட்டது எல்லாம் ஒன்ருகி எடுத்த காரியம் கெட்டுவிடும்.

சமுதாய வளர்ச்சிக்கான அவா இருந்தால், பொ றுப்பு சக்தி வலுத்து இருக்க வேண்டும். மடம் கட்டிக் கொண்டு டாம்பீக வாழ்க்கையில் ஈடுபடக்கூடாது. துர் ஜனங்களை சந்தோஷப் படுத்த வேண்டும். ஆனல் வெளிப்படுத்தக் கூடாது. நல்லோர்களிடம் காட்டும் மரியாதைகளைக் காட்டி அவர்களை அடக்கி வைக்க வேண்டும். சமுதாயத்தில் தீயோன் வெளிப்பட்டானே யாஞல் பலவித இன்னல்கள் தோன்றும். ஆகையால் அவ்வழியைப் பற்றக்கூடாது.

சத்ருக்களின் படைகளைக் கண்டதுமே, போர்வீர ராகிய அரசர்களின் புஜங்கள் துடிக்கின்றன. இப் பேர்ப்பட்ட அரசன் உலகத்தை இரக்ஷிப்போனுகவும், பரமார்த்தத்தில் பற்றுடையவனுகவும் இருப்பவன். இவனைக் கண்டமாத்திரத்தில் துஷ்டர்களுக்கு, பயம் ஏற்பட வேண்டும். அவனுடைய பராக்கிரமத்தின் கசை

யடிகளினால் அவர்களுக்கு அனுபவம் ஏற்பட வேண்டும், கலகக்காரர்களும், பாஷாண்டிகளும் ஓடி ஒளிய வேண்டும்.

இவைகள் இராஜதந்திர அலுவல்கள். அலுவல்களை தீர்மானித்துச் செய்ய வேண்டும். மந்த நடையில் அலுவல்கள் செல்லாமல், துரிதமாக்கப்பட வேண்டும். அவன் அடிக்கடி எல்லோருக்கும் எதிர்படுவதில்லை. ஆனால் எல்லோரும், வீடு தோறும் அவனைப்பற்றிப் பேசுகிறார்கள், தன் மொழித்திறனால் ஜனங்கள் மனதை வசப்படுத்திக் கொள்கிறான். அழுமூஞ்சிக்கு, ஒரு அழுமூஞ்சி, தடியனுக்கு மற்றொரு தடியன், பொய்யனுக்கு, பொய்யன், முரடனுக்கு, முரடன், போக்கிரிக்குப் போக்கிரி, கபடனுக்கு கபடன்-அதாவது அவன் அவனுக்குத் தகுந்தவன் கூடினால் சபையில் உற்சாகம் காணும். பரஸ்பரம் இவ்வளவும் நடக்கையில் கூட்டி வைத்த தலைவன் அங்கு காணப்பட மாட்டான்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 9 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் பத்தொன்பதாம் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

எவனிருக்கும் இடத்தில், பலவித சர்ச்சைகள், விசாரங்கள், தாரணைகள், அரசியல் வாதங்கள். நடக்கிறதோ, படைப்பில் உள்ள உயர்ந்த விஷயங்களைப் பற்றி பிரசங்கம் நிகழ்கிறதோ, சர்ச்சையின்றி ஒரு நிமிடங்கூட வீண் போவதில்லையோ சங்கை, சமாதானங்கள், மெய் - பொய் இவைகளின் நிர்ணயம் சாஸ்திர ஆதாரத்துடன் உணர்ந்த அறிவாளிகள் செய்கிறார்களோ, பக்தி, உபாசனை, ஞானம், வைராக்யம், அலுவல்களில் ஈடுபட்டு, பற்றற்று இருப்பது, என்பன போன்ற அருங்குணங்கள் சுலபமாகப் பிறருக்கு அனுபவ பூர்வமாகத் தெரியும்படி சொற்பொழிவுகள் நடக்கிறதோ, அழகான காவியங்களின் பாடாந்திரங்கள், தகுதியான பதிலும், சமாதானங்களும், எல்லோர் மனதையும் கவரும்படியாக சாஸ்திரயுக்தமான சம்பாஷணைகள், முதலியன நடக்கின்றனவோ அப்பேர்பட்ட மஹாபுருஷர்களிடம், ஜனங்களுக்கு ஒரு தடவை பற்று உண்டானால் அவனை எப்பேர்ப்பட்டவனும் ஒன்றும் செய்துவிட முடியாது. அவனைச் சுற்றி ஓர் மனிதக்கடல் சூழ்ந்திருப்பினும், அவனுடைய உள்ளத்தின் போக்கை சரிவர புரிந்து கொள்ளக் கூடியவர்கள் யார்?

உபாசனை மார்க்கத்தை வளரச்செய்ய வேண்டி அவன் எல்லா விடத்திலும் சஞ்சரிக்கிறான். அவனை எல்லோரும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவன் அந்தரங்கத்தை அறிந்தவர்கள் எவர்? அவன் மனது என்ன செய்கிறது என்பது ஒருவருக்கும் தெரியாது. பல தேசத்திலிருந்து பலவகைப்பட்ட ஜனங்கள் அவனைச் சந்தித்துச் செல்கிறார்கள். எல்லோரும் அவனிடம் வசப்படுகின்றனர். விவேக விசாரங்களினால் அவர்கள் உள்ளத்தை நிறப்புகிறான். சஞ்சலமான பரிபக்குவமடையாத அவர்கள் மனதை விவரணம் செய்யும்படி தூண்டிவிடுகிறான். அவனுடைய சமுதாயம் எவ்வளவு பெரிது எனக்கணக்கிட முடியவில்லை. ஆயினும் எல்லோரையும் சிரவணம் - மனனம் என்னும் வழியில் சேர்த்து விடுகிறான்.

பாட்டுகள், வசனங்கள் மூலம் யாருக்கு எப்படிச் சொல்லி ருசி ஏற்படுத்த வேண்டுமோ அவ்வழியிலே சுவைக்காண வைக்கிறான். தளராத விவேகத்துடன் போகும் பாதைதான் அவன் காட்டும் வழி. இப்படிப்பட்ட, எப்போதும் விழிப்புடன் கூடிய மகாபுருஷனின் முன் மூர்க்கத்தனம் எப்படி நிற்கும்? தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் சிறிது சிறிதாக பிறருக்குக் சொல்லி அவர்களை அறிவாளிகளாக்க முயலுகிறான்.

சிறுக சிறுகச் சொல்லிக் கொடுத்து, ஐயங்கள் தோன்றும் போது அதற்கான சமாதானங்களைப் புகட்டி, பற்றற்றவர்களிடம் காணும் சிறு சமுசயங்களை நீக்குவான். தன்னாலானதை தானே செய்வான். தன்னால் முடியாததை பிறரைக் கொண்டு செய்விப்பான். பக்தி மார்கத்தை தடுப்பதில்லை. துடர்ந்து பகவத்பஜனை புரிவதுதான் தர்மம். ஆனதினால் தான் பஜனை செய்து கொண்டு, பிறரையும் செய்விக்க வேண்டும். தான் கதைகள் செய்து, பிறரையும் செய்விக்க வேண்டும். எல்லோருடனும் சேர்ந்து பக்தி மார்க்கத்தை வளர்க்க வேண்டும். பழகிய ஜனங்களுக்கு அலுப்பு ஏற்படின் புதிய க்ஷேத்திரங்களில் போக வேண்டும். அதாவது வாலிபர்களைத் தூண்டி அவர்களிடமுள்ள, அலஷியத்தை அகற்ற வேண்டும். பகவத்பஜனத்தில் தேகம் தேய்வது குன்றிப்போகுமானால் மகத்துவம் குறைகிறது எனக்கொள்ள வேண்டும். புதியவர்களை அறிவாளிகளாக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

அலுவல்களை வளர்க்க வேண்டும். ஆனால் தான் அதில் ஈடுபடக்கூடாது. அலுவல்களைக்கண்டு பயப்படகூடாது. சோம்பேரித்தனம் சர்வ கார்யங்களுக்கும் எதிரி. வேலை கெடுவது கெட்டுக்கொண்டே இருக்க அறிவீனன் பார்த்துக் கொண்டே இருக்கிறான். சோம்

பனும், உற்சாக மிழந்த தன்மையுடையவனுக்கு, சீர் கெடும் வேலையை சீர்படுத்தத் திறமை ஏது? பல வீனன் பிரச்னைகள் நிறைந்த காரிங்களினின்றும் விலகி ஓடுகிருன் ஆகையால் வலுவுள்ளவனும், உற்சாகமுள்ள வனுமாகப் பார்த்து அவனுக்கு பல யுக்திகள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

வியாபகத்தையும், அடக்குதலையும் தன்னல் முடிந்த வரை செய்ய வேண்டும். பிறகு அவ்விடத்தை விட்டு அகன்று, ஆனந்தமாக காலம் கழிக்க வேண்டியது. அலுவல்களினின்றும் அகன்றவனுடைய வைராக்யம் சீக்கிரம் வளர்ச்சியுறுகிறது. எங்கு தனக்கு அனுகூல மாக உள்ளதோ அங்கே செல்கிருன். கீர்த்தி வேண் டும் என்ருல் தேகசுகத்தை விட்டுவிட வேண்டும். தேக சுகம் முக்கியம் எனில் கீர்த்தியைத் தேடித் திரியக் கூடாது. எப்போதும் செய்தாலின்றி காரியங்கள் முடி வதில்லை. எந்தக் கருமமும் ஒருவருக்காக வேண்டி தடையுறுவதில்லை. ஆகவேண்டியது முடிந்தே தீறும். ஆனல் மனிதன், தன்னிடம், திறமைக் குறைவு, செய லாற்றலின்மை எனும் குணங்களை சுமர்த்திக் கொள் கிருன்.

ஆரம்பத்தில், தைரியம், உற்சாகம் இரண்டையும் கைவிட்டு விட்டான். இப்போது நம்பிக்கையையும்

இழந்து விட்டானே யாகில், நடத்திவரும் குடும்பச்சக டம் தன்னிடத்தை அடைவது எங்ஙனம்? குடும்பம் என்பதின் அலுவல்கள் மிக்க சீரானதன்று. அதை விவேகத்தின் மூலம் சீர்படுத்த வேண்டும். சீர் படுத்திக் கொண்டு போனால் அதில் பற்றுக்குறைந்து விடும். குடும்ப அலுவல்களின் இயற்கையே இதுதான், விவே கத்துடன் நடப்பவனுக்கு இது நன்கு புலப்படும். ஆனால் தைரியத்தை விடக்கூடாது. தைரிய மிழக்கின் பயன்யாது? அனுபவிக்க வேண்டியது எதுவும் குறை படப்போவதில்லை. பல வகை புத்திகளையும், அபிப்பி ராயங்களையும் அறிவாளி நன்கு உணர்ந்து கொள் கிறான்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 10 முற்றும்.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

பூர்ண சதகம்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் முதல் சர்க்கப் பிரசங்கம்.

பிராணி வியாபகத் தன்மையுடையவன், மனது வ்யாபகத் தன்மையுடையது, அப்படியே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், எனும் ஐம்பூதங்களும் வியாபகமானவை. எல்லாமே ஒரே தன்மையுடையது என்றால் அதில் ஏதாவது வித்தியாசம் உண்டா அல்லது ஒரே மாதிரியானதா என்பது புரிய வேண்டும். மேலும் ஆத்துமாவை நிரஞ்சனன் எனக்கூறுவதைப்பற்றியும் ஐயம் ஏற்படுகிறது. ஆத்துமா சகுணமா நிற்குணமா அல்லது நிரஞ்சனமா என்பதும் சரிவர புரிய வேண்டும் என சபையோர்கள் கேட்க, சுவாமிகள் ப்ரதியுத்திரம் சொல்கிறார்.

முதல் கேள்விக்கு பதில் சொல்கிறோம். சவாதானமாய்க் கேட்க வேண்டும். விவேகத்தை விழிக்க வைத்து அனுபவத்தினால் அறிந்து கொள்ளல் வேண்டும். தன்சரீர சாமார்த்தியத்தின் ஆதாரத்தைக் கொண்டு பிராணி வியாபகங்கள் எல்லாம் செய்கிறான்

என்றாலும், நன்குவிசாரிக்குங்கால், மனதைப் போன்று வியாபகமுள்ளது எதுவும் இல்லை. மனது சபலமானதும், தவிரவும் ஓர் இடத்தில்தான் ஒரு சமயத்தில் இருக்க முடியும் என்பதையும் கொண்டு அது பரிபூரணமாக வியாபகத் தன்மை கொண்டதல்ல. ஆனால் ஆகாயமும், நிரஞ்சனமும் (நிர்குணமும்) பூர்ணமான வியாபகத் தன்மையை கொண்டவை. முக்குணங்கள், மூலமாய்கை இவைகள் ஓர் நாள் மறையுந்தன்மையுடையவை, தவிரவும் இவைகளும், அபூர்ணமாகவும், ஏகதேசியுமாக இருப்பவை. பரிபூர்ணமாக எங்கும் வியாபிக்கும் தன்மையுடையவை அல்ல.

ஆத்துமா (ஜீவாத்துமா), நிரஞ்சனன் (நிர்குணன்) இவ்விரு பெயர்களும் அந்தராத்துமா, மூலமாய்கை இவைகளின் பெயராகவும் உபயோகத்தில் இருந்து வருகிறது, எந்த கருத்தைக் கொண்டு எவ்விடத்தில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது என்பதை சந்தர்ப்பத்திலுல்தான் தெளிவுற வேண்டும். ஜீவாத்துமா, மனது மிகவும் சபலத்தன்மை கொண்டது. அதாவது பரிபூர்ணமாக வியாபிக்கும் தன்மை கொண்டதல்ல. அந்தக்கரணத்தில் மிகவும் சூக்குமமாக இதை விசாரிக்க வேண்டும். அது பாதாளத்தில் இருக்கைக் கொண்டபோது, ஆகாயத்தின் இருப்பதில்லை. அவ்வகையாக ஆகாயத்தில் இருப்பு கொண்டபோது பாதளத்தில்

தோற்றமளிக்க முடியாதது. முன்புரம் இருந்தால் பின் பக்கம் இருக்கமுடியாதது. இடது பக்கம் பார்த்தால், வலது பக்கத்தில் கானமுடியாது. அப்படியே அது வலது புறத்தில் காணப்பட்டால் அதை இடது புறத்தில் பார்க்கமுடியாது. ஒரேசமயத்தில் பத்துத் திக்குகளிலும் வியாபித்து நிற்கும் திறனற்றதாகையால் அது பூர்ணமாக வியாபிக்கும் தன்மை யற்றது. நாலா பக்கங்களில் தொடுவதற்கான குறிகளைப் பொறுத்தி ஞல், எல்லாக் குறிகளையும் ஒரே சமயத்தில் தொடுவதற் கான சாமார்த்தியம் இல்லை என்பது விளங்குகிறது. ஆகையினுல் மனதும் ஆத்துமாவும் எல்லாசமயத்திலும், எல்லாவிடத்திலும் இருக்கைக் கொள்ள முடியாது என நன்கு புலப்படுகிறது.

ஆதவன் உதித்ததும், நீர் நிலைகளில் அவனுடைய பிரதி பிம்பம் தெரிகிறது. எனினும் அந்த தோற்றம் சூரியனுகமாட்டாது. அப்படியே நிர்குண பிர்மமானது, மனது, புத்தி ஆகிய உபாதிகளைக் கொண்டு, ஜீவன் (ஆத்துமா) அல்லது சிவன் (மூலமாய்கை) என இலக்ஷ ணப் பெயருடன் கூடி இருப்பினும் அவைகள் நிர்குணப் பிர்மம் ஆகா. ஆதவனுக்கு உதயமாவது, அஸ்தமிப் பது என்பவைகள் இருக்கின்றன. ஆனல் பூர்ண பிர்மம் எப்போதும் இருந்து கொண்டே இருப்பது ஆகையினுல் ஆதவனின், திருஷ்டாந்தத்தைக் கொண்டு

பூர்ணபிர்மத்தின், பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்திக் காண்பிக்க முடியவில்லை. ஆதவனின் உதாரணத்தைக் காட்டிலும் ஆகாயத்தின், திருஷ்டாந்தம் பொருந்துமோ எனில், அதைவிட இதற்கு பொருத்தம் அதிகமாக உளது. ஆகாயத்திற்கும் நிர்குணப் பிர்மத்திற்கும் பொருத்தங்கள் உள. கடத்தில் (பாண்டம்) உள்ள ஆகாயம் போல் தேகத்துள் அடைப்பட்ட ஜீவாத்துமாவும், படத்தில் தோன்றும் ஆகாயத்தைப் போல் பிர்மாண்டம் முழுமையும் பரவியுள்ள சீவாத்துமாவும் இருக்கின்றன எனக்கொள்வோம். பாண்டமும் மடமும் தோன்றி, மறைபவை, ஆகாயம் வியாபித்து நிலைப்பது. இதேபோல் ஜீவ - சிவர்களின் கற்பனையை அகற்றி நிற்குண பிர்மத்தைப் புரிந்துகொள்ள முற்படவேண்டும்.

பிர்மத்தின் அம்சமாக ஆகாயமாகவும், ஆகாயத்தின் அம்சமானது. மனதைவிட பலமடங்கு ஆகாயம் வியாபகத்தன்மை யுடையது, இதே மாதிரி கணக்கிட்டுக் கொண்டுபோனால் ஆகாயத்தைவிட நிர்குணன் பலமடங்கு வியாபகன் என்பதை உணரலாம். மனது ஆகாயத்தின் தன்மைக்கு முழுவதும் ஒற்றுமைக்கொண்டதல்ல. அப்படி இருக்க அது நிர்குணனுடன் போட்டியிட முடியுமா! (மனதைக் காட்டிலும், உயர்நிலையிலுள்ளது ஆகாயம். ஆகாயத்தை விட நிலையில் உயர்ந்

தது பரப்பிர்மம். அதைவிட மேலானது ஒன்றும் இருப்பது தெரியவில்லை. மனது முன் இருப்பதைப் பற்றிக் கொள்ளுமானல், பின்னல் பற்றியதை விட்டு விடுகிறது. ஆகாயம் அப்பேர்கொண்டது அல்ல. முன் பின் எங்கும் நிறம்பியுள்ளது. ஆனதினல் மனதைக் காட்டிலும் வியாபகமானது,

பரப்பிர்மத்தை அசலமானது (நிலையானது) என்கிறோம். மலையையும் அசலம் எனப்பெயர் கொண்டு அழைக்கிறோம். ஆகையால் இரண்டும் ஒருபோல எனக்கொள்ள முடியாது. அது வேறுதான். இது வேறுதான். (அதுபோல நிரஞ்சனன் என்ற வாத்தையால் ஜீவ - சிவர்கள் சிற்சில சமயங்களில் அழைக்கப் படினும் அவர்கள் முற்றிலும் பரபிர்மத்தைப் போன்றவர்கள் ஆகார்).

ஞானம், அஞானம், விபரீத ஞானம் இம்மூன்றிலும் 'ஞானம்' என்ற சொல்லைக் காண்கிறோம். ஆயினும் மூன்றும், ஒன்ருகிவிடுமா ? ஞானம் என்ருல் அறிவு. அஞானம் என்ருல் தெரியாமை. விபரீத ஞானம் என்ருல் ஒன்றிருக்க மற்ருென்ருக அறிவது. (பிர்மம் சத்தியமானது என்பது அறிவு. இதைத் தெரிந்துகொள்ளாதது தெரியாமை. பிர்மம் சத்தியமானது இருக்க உலகத்தை சத்தியமாக அரிவது விபரீத ஞானம்)

ஞானம், அஞானம் இவைகளை விட்டு, ஸ்தூலமான, ஐம் பூதங்களால் நிலவும் தோற்றங்களை, சத்தியப் பொரு ளாகபாவிப்பது விபரீத ஞானம்.

காண்போனுகவும் (திரஷ்டா), சாக்ஷியாகவும் இருப் பது அந்தராத்மா. ஜீவாத்துமாவே சிவாத்துமா ஆகிறுன். சிவாத்மாதான், பிறவி எடுத்து ஸ்வாத்து மாவாக இருக்கிறுன். ஆத்துமா, பிறவி, இறப்பு இவை களுள்ளவன். ஜனனமரணத்தினின்றும் விடுபடுவன் அல்ல.' ஆனதினுலேயே, 'சம்பவாமியுகே, யுகே' என்று, சிவாத்துமாவின், அடிப்படையில் பகவான் (கீதையில்) முழங்குகிறுர். ஜீவன் முற்றிலும் ஏகதேசி யானவன். (சரீரம் முதலிய உபாதியுடன் கூடியவன்) விசாரத்தின் பெருமையால், உலகமுற்றிலும் வியா பிக்க முற்படும் சிவன் ஆகிறுன். உலக முழுவதும் வியாபித்தால் சமுசாரத் தொல்லை அவனை விடுவதில்லை. அஞானம் எப்படி ஒரு விருத்தியாக கணக்கிடப்பட் டதோ, அப்படியே, ஞானமும் ஒரு விருத்திதான். விருத்தி என்னும் தன்மையில் இரண்டும் ஒன்று தான். ஆகையால் நிவிருத்தி (விருத்தியற்ற நிலை) யுடன் விஞானத்தைக் கொள்ள வேண்டும். (ஜீவன் கொண்டுள்ள சரீர அபிமானம், சிவன் கொண் டுள்ள பிர்மாண்ட அபிமானம் இவைகளால் ஜீவனும் சிவனும் சமுசாரத்தில் உழன்று கொண்டேதான்

இருக்க வேண்டும். இரு உபாதிகளும் அகன்றால், நிர்குணபதவி கிட்டுகிறது). ஞானம் வாஸ்தவத்தில் அஞானமாகவே கருதப்பட வேண்டும். காரணம் இது விகாரமடையக்கூடியது. பிண்டத்தில் நான்கு சரீரங்கள் அதேபோல் பிர்மாண்டத்திற்கும் நான்கு நிலைகள். இரண்டும் சமமானதே. ஆகையால் ஞானம் என்பது மூலமாய்கை. அதினின்றும் பிர்மாண்டம் தோன்றியது. அதுதான் அதை வளர்க்கிறது. அதாவது அறிவு பலமாறுதல்களுக்கு உட்பட்டது. பிர்மாண்டத்தின் எட்டாதது நிலை. மூலமாய்கை. அதைத்தான் ஞானம் என்கிறார்கள். அந்த ஞானம் விஞானமாக வேண்டும் அப்போதுதான் அதற்கு நிரஞ்சன பதவி கிடைக்கும்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யரன் தர்க்கத்தில் தாசபால

போத விளக்கத்தில்

சர்க்கம் 1 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் இருபதாம் தசகத்தில் இரண்டாம் சர்க்கப் பிரசங்கம்.

சஞ்சலமான மூலமாய்கை இல்லையானால், ஆகாயத்தைப் போன்று நிர்குணமான பிர்மமே எங்கும் இருப்பது தெரியவரும். திரச்யம் தோன்றித் தோன்றி மறைந்தாலும், ககனத்தைப் போன்று பரப்பிர்மம் நாலாபக்கமும், நிலவி இருப்பது. எங்கு நோக்கினாலும் பிர்மத்தின் நிறைவு எல்லை இன்றி நிறைந்துள்ளது பிர்மம். பிர்மாண்டத்தின் அப்பால் மனதை செலுத்தி அங்கு ஒன்றுமில்லை, சூன்யம் என கல்பனையின் திறனினால் முடிவு செய்தாலும், அங்கும் சஞ்சலத்துடன் வியாபிக்கும் மூலமாய்கைக்கு இடம் கிடையாது. திரசியத்தை விவேகத்தின் பலத்தினால் விலக்கி, பரப்பிர்மமே எங்கும் நிறைந்திருப்பதைக் காணலாம். அதை முழுவதும் கண்டாரில்லை. மேலும், கீழும் பிர்மம், அதாவது, மூலமாய்கைக்கு முன்னேயோ, அப்பாலோ. நிர்குண பரப்பிர்மமே நிறம்பியுள்ளது. அதை சஞ்சலமான மனது முற்றும் புரிந்து கொள்ளமுடியாது.

திரசியம் மாறுகிறது. தெரிந்துகொள்ளக் கூடியது. பிர்மம் நிலையானது. அறிவுக்கு எட்டியதல்ல. கல்பனை அங்கே நெருங்கமுடியாது. கற்பனை என்பது

சூன்யம். பிர்மம் இரண்டற்ற ஒன்ருகவும், நிலைத்து இருப்பதாகவும் உளது. மஹாவாக்கியங்களை விவரித்துப் பார்க்கின் நன்கு துலங்கும். பரப்பிர்மத்தைக் காட்டிலும் பெரிது ஏதுவும் இல்லை. சிரவணம் செய்வது போன்று பெரியசாதனம் ஒன்றும் இல்லை. [1]புரிந்தாலன்றி சமாதானம் ஏற்படப் போவதுமில்லை.

[2]பிபிலிகா மார்க்த்தை கைப்பிடித்து மெதுவாக பிர்மபதவியை அடைய முடியும்.

[3]விஹங்கமம் எனும் பக்ஷிமார்க்கமோ எனில் உடனே அதை (பிர்மத்தை) கைப்பற்றலாம். சாதகன் மனனத்தில் மூழ்கியே இருக்க வேண்டும். பரப்பிர்மத்தைப் போன்று மற்றென்று கிடையாது. அதைப் புகழ்ச்சியோ, இகழ்ச்சியோ நெருங்காது. இப்படியாக தன்னைப்போன்று தானே யாகவிருக்கும், துலையற்ற அந்நிலையை, புண்யாத்துமாவர்களான, மகா புருஷர்கள் போய் அடைகிருர்கள், சஞ்சலத்தினுல்

---

1. பிர்மத்தைப் புரிந்து கொண்டாலன்றி மனதின் சஞ்சலம் அகலப்போவதில்லை. எவ்வளவு தெரிந்தாலும் மனது நிறைவு கொள்ளாது.
2. எறும்பு தன்சுவட்டில், மெதுவாக முன்னேறுவது போல், கர்மம் - ஞானம், உபாசினை இவைகளைக் கொண்டு முன்னேறுவது.
3. பறவைகளைப்போன்று ஒரே எட்டில், பறந்து உயர்ந்த நிலையை அடைவது.

துக்கம்தான் கிட்டும். நிச்சலத்தினால், நிச்சங்கத்தினும் சுகம் பிராப்தியாகும். மகானுபாவர்கள் அதை பிரத்யக்ஷமாக அனுபவிக்கிறார்கள்.

மூலமாய்கையிலிருந்து, தேகம் வரை ஒவ்வொன்றையும் அலசிப்பார்த்து விசாரணை செய்து, சஞ்சலமென எல்லாவற்றையும், ஒதுக்கிவைத்து, தன்னுள், ஸ்வானுபவத்தின் நிச்சயம் கொண்டு, நிச்சயத்திலேயே இருக்கைக்கொள்கிறார்கள்.

படைப்பு முழுவதும் கற்பனையின் அடிப்படையில் தோற்றமளித்து மூன்று விதமாக தென்படுகிறது. இந்த சூக்ஷ்மத்தை நன்கு சோதினை புரிந்து அறிய வேண்டும். அதாவது, மூலமாய்கையிலிருந்து குணமாயை வரை, (திரிகுணங்கள் வரை) முக்குணங்களிலிருந்து பிருதிவி எனும் பூதத்துவம் வரை, மேலும் பூதத்துவத்திலிருந்து நான்கு ஒலிகள் வரை என்பது இம்முப்பிரிவு.

முதல் பிரிவின் அடிப்படையில் ஓர் முகமான இலக்ஷணங்கள் கொண்டு படைப்பும், இரண்டாம் பிரிவினில் ஸ்துலமான பஞ்சபூதங்களும், மேலும் மூன்றுவது பிரிவில் பலவகைப்பட்ட ஜீவஜந்துக்களும் படைக்கப்பட்டு, படைப்பு முற்றுப்பெறுகிறது.

அறிவு எனும் மூலமாய்கை, முதல் ஸ்புரணத்தைக் கொண்டு, நாபிஸ்தானத்தில் பரா எனும் நிலையில் முதல் தோற்றத்தை யளிக்கிறது அதே போல் பிர்மத்தில் மூலமாய்கை தான் தோற்றமாக முதலில் காணப்படு கிறது. அது இரண்டாக தோற்றமளிப்பினும் இரண்டு பட்டதல்ல.

மூலமாய்கைதான், எட்டுவித பிரகிருதியின் காரண மாகவிருப்பது. முக்குணங்களும், பஞ்சபூதங்களும், முதலில் சூக்குமமான உருவத்தில் அங்குதான் பிறப்பை அடைகின்றன. மூலமாய்கை, ஜடமானதை, அறிவு கொள்ளச் செய்வதினல் அதற்கு சைதன்ய சக்தி எனப் பெயரிட்டழைக்கிறார்கள். அம்மாய்கையின் சூக்கும தோற்றத்தைப் புரிந்துகொள்ளவே அதை பல பெயர் களால் அறிவிக்கிறார்கள். அதுதான் அர்த்தநாரி நடேசன் மூல மாய்கையில், முக்குணங்களும் மறை முகமாக விருப்பதால் அதை மகத்தத்துவம் என்கிறார் கள். சுத்த தத்துவம் என்பது இதுவே. இந்நிலையில் மாறுதல் கண்டதும் அது குணமாயை எனும் நிலையை அடைகிறது. முக்குணங்களின், யதார்தமான ஸ்வரூ பத்தை அறியும் மகான்கள் மிகவும் பெரியதோர் நிலை யை எய்தினவர்கள்.

முக்குணங்கள், சௌம்யமான உருவத்தில் அம் மாயையில் இருப்பதினல் அதை குணசாம்யம் எனக் கூறுகிறார்கள். பல பெயர்களில் உள் நின்ற இப்பலவ

கைப்பட்ட சூக்கும சங்கேதங்களைப் புரிந்து கொள்வது பலருக்குக் கடினமாகவிருக்கும் மூலமாய்கையினின்றும் முக்குணங்கள் சூக்கும உருவத்தில் முதலில் உண்டாகின்றன. அந்நிலையில் அவைகள் சஞ்சலமாகவும், ஒன்றுபட்டும் இருக்கின்றன. இதை அனுபவத்தில் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

முக்குணங்களினின்றும், பூமி தத்துவம்வரை முன் சொன்னபடி இரண்டாவது பிரிவு.

இந்நிலையில் பஞ்சபூதங்கள் கலகங்கள் செய்து கொண்டு, ஸ்தூல தசையில் காண்கின்றன. இதினின்று அநந்தமான பிர்மாண்டம், ஏழுத்வீபங்கள் ஒன்பது கண்டங்கள் கொண்ட பூபாகமும் தோன்றியவை. பூமியிலிருந்து பல பிராணிகள் - அண்டஜ, ஜாரஜ,ஸ்வேதஜ, உத்பிஜங்கள் என்பவைகளும், பரா, பச்யந்தி. மத்யமா, வைகரீ எனும் நான்குவித படைப்புகள் தோன்றியவை. இந்த நாள்கு வகைப் பிராணிகளும் - வாணிகளும், வெகு சீக்கிரம் தோன்றித் தோன்றி அழியும். ஆனல் பூமி அப்படியேத் தான் இருக்கிறது. இதன் பேரில் பல பிராணிகள் தோன்றுவதும், மறைவதுமாக இருக்கின்றன.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 2 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் மூன்ரும் சர்க்கப் பிரசங்கம்.

மூல மாய்கையினின்றும், படைப்பு மூவகையாக எப்படித் தோன்றியது என விளக்கப்பட்டது. இந்த விசாரத்தில் ஊன்றி, விருத்தியை மூலமாய்கையிடம், திரும்பவும் கொண்டுபோக வேண்டும். நான்குவகைப் படைப்புகள், நான்கு வகைப்பட்ட ஒலிகள், எண்பத்து நான்கு வகை ஜீவன்கள் என பலவகை பிறப்புகள் காண்கின்றன. எல்லாம் பூமியில் தோன்றி, பூமியில் மறைகின்றன பல படைப்புகள் தோன்றி மறையும். பூமி அப்படியே இருக்கிறது. ஆனல் இப்பூமி, மூன்ருவது நுனியாக விருக்கிறது. மற்ற இருபாகங்கள் பஞ்சபூதங் களைக்கொண்டதும், மூலமாய்கையினின்றும் உதித்த முக்கோணங்கள் என சூக்குமத்தைக் கொண்டது. இதற்கு பலபெயர்களுண்டு.

ஸ்தூலத்தை விட்டு, சூக்குமத்தை விசாரித்து அறிய வேண்டும். குணங்களைக் காட்டிலும் சூக்கும மான மூலமாய்கை வரை பிறகு விசாரித்துப் புரிந்து கொள்ள வேண்டும். மடமை, அறிவு இவ்விரண்டும்,

குணங்களின் மாறுபாடுதான். அதைப்பற்றியும் சோதி னைப்பண்ணி தெரிந்து கொள்ளல் வேண்டும். மிக சூக்குமமான விசாரணை இனிமேல்தான் வேண்டும்.

சுத்தமான மடமை தமோகுணம். சுத்தமான அறிவு சத்துவகுணம். சிறிது மடமையும், சிறிது அறிவும் கலப்புற்றிருப்பது ரஜோகுணம். சூக்கும விசாரணையினுல் முக்குணங்களின் தோற்றங்களின் அறிவு தனக்குத்தானே விளங்கும். குணங்களுடன், கர்தமம் எனும் சேறு எது கலந்துள்ளதோ அதை குணமாயை எனச்சொல்கிருர்கள். முக்குணங்களிலுள்ள மிக்க சூக்குமத் தன்மையை, மஹாதத்துவம், பிரகிருதி புருஷன், சிவசக்தி, மூலமாயை, அர்த்தநாரி நடேசன், எனவும் அழைக்கிருர்கள். இந்த மகாதத்துவம் எனும் மூலமாய்கை கர்தமம் என்ற சேற்றுடன் கூடியதாகவிருக்கிறது. அதுதான் குனசாம்யம் எனும் சைதன்யம். மூல மாய்கை பலவகையானது.

பிர்மாண்டத்தின், நான்கு தேகங்களினுல் ஒன்ருகச் சொல்லப்படும் 'மகாகாரணம்' எதுவோ அது தான் மூலமாய்கை. நான்கு வகைப் படைப்புகளையும், ஐம்பூதங்களையும், மூலமாய்கையில் தான் சோதித்துப் பார்க்க வேண்டும். மேலானவாரியாக பார்த்தால் இது

தெரியவராது. அஞானத்திலல் பலர் ஐயத்தில் மூழ்கு கிருர்கள். மூலமாய்கையின் பதினன்கு மாறுபாடுகள், ஐம்பூதங்கள், நான்குவிதப் படைப்புகள், ஆக இவ்விரு பத்து மூன்றுகளிலும், மூலமாய்கையின் பதினன்கு வகைகளேயும் சோதித்து அறிய வேண்டும். நன்ருக சோதித்துப் பார்த்தால், ஐயங்கள் எல்லாம் நீங்கும. கருத்துப் புரியாமல், படித்ததைத் திரும்பத் திரும்பச் சொல்வது மடமை.

எல்லாவித படைப்பின் விதை மூலமாய்கையிலுள் ளது. அவைகளேக் கருத்து விளங்க புரிந்து கொள் வதே பரமார்த்தம். இதைச்சரிவர புரிந்து கொண்ட னுக்கு புத்தி மயக்கம் வருவதில்லே. புத்திமயக்கம் இல்லாவிட்டால், ஐயங்கள் தோன்ருது.

பரமார்த்த விஷயங்களில் குழப்பமே காணுது. வார்த்தைகளுக்கப்பால்பட்ட பிர்மத்தைப்பற்றி வார்த் தைகளினல் விளக்குவதே 'வாச்சியாம்சம்' எனப்படும். மாசற்ற லக்ஷியாம்சம் எதுவோ, அதை வாச்சியாம் சத்தை நீக்கி, விவேகத்தினல் தெளிந்து கொள்ளல் வேண்டும். பூர்வபக்ஷம் என்பது மாய்கை. சித்தாந் தம் எனும் பிர்மம் அதைக் கண்டிக்கிறது. விலக்கு கிறது. மாயை அகன்ற பின் மிகுந்து நிற்பதற்கு என்ன பெயர் கொடுப்பது ?

அன்வயம் - வியாதிரேகங்கள், பூர்வபக்ஷத்தைச் சேர்ந்தவை. சித்தாந்தம் என்பது 'பிர்மம் ஒன்றே,

அதைத் தவிர மற்றொன்று இல்லை' எனும் தெளிவு. கீழ் நோக்குடன் போனால், மாயை நோக்கிச் சென்றால் த்வைதம் வளர்கிறது. மேல் நோக்கின், அதாவது பிர்மத்தை நோக்கி விசாரம் செய்திடின் மாறுபாடுகள் மறைகின்றன. சர்வசங்கத்தையும் விடுத்து, நிர்குணத்தில் எவன் ரமிக்கின்றானோ அவனே மஹாயோகியாவன்.

மாயை பொய்யானது என உணர்ந்தபின் அதைப் பற்றி அச்சம் ஏன் ? மாயைக் கண்டு அச்சமுற்றால். தன் ஸ்வரூப ஸ்திதியினின்றும் நழுவ வேண்டி வரும். பொய்யான மாயைக் கண்டு பயமடைந்து, முற்றிலும் உண்மையான பரபிர்மத்தை தவிர்ப்பதும், பரபிர்மத்தின் உண்மையை அறிந்தும், பூ உலகில் மாயையான பொருள்களில் ஆஸ்தைக் கொள்வது என்பதும் எவ்வளவு ஆச்சர்யமானவைகள் ? பூவுலகில் பல மாந்தர்கள் வாழ்கின்றனர். அதில் சற்ஜனங்களும் இருக்கின்றனர். சற்ஜனனை, சற்ஜனங்களே அறிகிறார்கள் ஆகையால் சமுசாரத்தை விட்டு விலகி, நற்ஜனங்களைத் தேடித் தேடித்திரிய வேண்டும். பல சற்ஜனங்களைக் காணலாம். அவர்களுள் எப்போதாவது சுய அனுபவம் கொண்ட மகான் தென்படுவான்.

சுய அனுபவமின்றி ஆத்மசுகம் என்றும் கிடைக்காது. பிரபஞ்சமாயினும் சரி, பரமார்த்தத்திலுமா

கிலும் சரி, ஆத்தும அனுபவமின்றி எல்லாம் வீண். 'பிரத்யயஞானி' எனப்படும் சுய அனுபவமுள்ள மகான் எல்லோரிலும் மேன்பாடுள்ளவன்.

இடைவிடாது, சாரமற்றதைத் தவிர்த்து, பொருள் உள்ளதைப் பற்றி விசாரணைக் கொள்ளல் வேண்டும். அர்த்தம் காண்பவன் சமர்த்தன். பரலோகத்தின் சுகமும் இதில்தான் இருக்கிறது. ஆகையால் திரும்பத் திரும்ப விசாரணை செய்ய வேண்டும். இறுதியில் சரியான பொருள் விளங்கி, சகல ஐயங்கள் அகன்று, ஓர் உறுதியான நிலைமை கிட்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 3 முற்றும்.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல் இருபதாம் தசகத்தில் நான்காம் சர்க்கப் பிரசங்கம்.

வீணுக வெறுப்புக் கொள்ளலாகாது என எல்லோரையும் பிரார்த்தினை செய்து கொள்கிறேன். அனுபவங்களைப் பற்றி கூறியதை மனதிற் கொண்டு வாழுங்கள். அனுபவம் ஒன்று சொல்ல தான் அதன் மாரான திசையில் போகத்துடங்கினுல், சாரமற்ற மாயைக் களைந்து, சாரமுள்ள பிர்மத்தின் அனுபவம் காணுவது எப்படி முடியும்? உலக வியவஹாரத்தைக் கவனித்தால் அங்கே ஒரே சந்தடி தான் பலனுகிறது. ஆனுல் மேலானதான பரமேச்வரின் ஆட்சியினுல் நடைபெறும் லோக வியவஹாரத்தை கவனித்தால் அது தனிச்சிறப்புடன் தோன்றும். உலகத்தில் எவ்வளவு சரீரங்கள் காணப்படுகின்றனவோ அவ்வளவும், பரமேச்வரனின் வீடுகள், பலவித சுகங்கள் இதன் மூலம் கிடைக்கின்றன. பரமேச்வரனின் மகிமையை யார் அளக்க முடியும்? பிராணி மாத்திரர்களிடம் பொறுப்பைக் கொடுத்து அவர்கள் மூலம், கிருபாவந்தனுன பகவான் உலகை இரக்ஷிக்கிருன். பரமேச்வரனின்

அதிகாரம் தான் பூமியில் எங்கும் பரவி அவனுடைய கலையினுல் உலக விவகாரங்கள் நடந்து வருகின்றன. உடல் ஆகிற எல்லா [1]புரங்களிலும் அவன் (பரமேச்வரன்) செங்கோலே நடைபெறுகிறது. சிருஷ்டி சம்பந்தமான விசாரணைகள் செய்வோமானல், அது ஒன்ருல்மட்டும் நடக்காமல், பல சரீரங்களைக் கொண்ட ஒருவனுல் நடைபெறுவது புரியவரும். அவனுக்கு இது மேலானது, இது தாழ்ந்தது இது நல்லது, இது கெட்டது எனும் வித்தியாசங்கள் கிடையாது. தன் சிருஷ்டி கார்யங்கள் எப்படியோ நடந்தே தீரவேண்டும் என்கிற. தீர்மானத்தின் பேரில் பலவித சரீரங்களை நிர்மாணித்திருக்கிருன். ஆனதால் எல்லா சரீரங்களிலும் அவன் வசிக்கிருன்.

இந்தப் படைப்பை அவன் எப்படி நடத்தி வைக்கிருன், அஞானத்திலிருந்து இந்த உலகம் தோன்றியதா அல்லது எல்லையற்ற காலம் முதற்கொண்டு உலகத்தைப் படைப்பது அவனுடைய ஓர் வழக்கமாகி விட்டதா? இதற்கு பதில் அவன் தான் சொல்லமுடியும். ஆகையினுல் அவனைப்பற்றி எப்போதும் தியானம் செய்ய வேண்டும். இதுதான் ஞானம் எனப்படும் தியானமும் ஞானமும் ஒன்றே.

---

1. ஊர் - வாஸஸ்தலம்.

பிறப்பெடுத்த பிராணி, சிறிது அறிவு பெற்ற உடன், தன் சொந்த விசாரத்தினுல் எதையும் சோதித்துப்பார்க்கிருன். இராமனுடைய கொடி, ரகசியமாக பறக்கவில்லை. அது பாரெங்கும் பறக்கும் கொடி. அது ஆத்மா ராமஸ்வரூபமாயும், ஞான ரூபமாயும் உள்ளது. [1] விச்வம்பரமாக உள்ளது. எங்கும் வியாபித்துள்ளது. ஆனல் அதை அடைவது என்பரு பெரும் பாக்கியவானுக்குத் தான் கிடைக்கும்.

உபாசினையின் மூலம் சோதினை செய்வோம் என்ருல் மூலமாய்கை வரை சோதித்தாக வேண்டும். அவன் மகிமை அளவிற்கு வராதது என்பதே சரியான கொள்கை நல்லோர் சேர்க்கையாலும், சிரவண மனனுதிகளாலும் மனது ஓய்வடையும். அதிலும் ஐயங்களை களையும் அனுபவஞானம் ஏற்படின் அதைவிட பலன் யாது வேண்டும்? முதல் முதல் சங்கல்ரூபகமாகத் தோன்றியதே மூலமாயை. அதுதான் பிர்மாண்டத்தின் நான்காவது மகாகாரண தேகம். அதினின்றும் சர்வ சிருஷ்டியும் நடைபெறுகிறது இதைத் தான் உபாசனை வழிப் பின்பற்றுகிறது. ஆகையால் சர்வசங்கல்ப்பங்களையும் விட்டுவிட வேண்டியது. விவேகத்தின் பலத்தினுல் மூலமாய்கையையும் விலக்கிக்கொண்டு, சாரமான கடவுளை அதாவது நிற்குணமானவனைப் போற்ற வேண்

1. எங்கும் வியாபித்துள்ளது.

டும். மூலமாய்கை, உபாசனைக்குத் தாண்டி ஆகாயம் போன்ற நிற்குணப் பிர்மம் தோன்றுகிறது. உபாசினை எனில் அது ஞானம்தான். ஞானத்தினுல் நிரஞ்சனமானப் பொருள் புரியவருகிறது. பரமயோகிகள் இங்கேதான் லயிக்கிருர்கள். நன்ருக அலசிப்பார்த்தால், உபாசனை என்பதே 'நாம்' என அறியலாம்; ஜீவன், சிவஸ்வரூபமாக உள்ளது என்பது விளங்க, ஒருவன் சரீரம்விட, மற்ருெருவன் சரீரத்தைத் தாங்குகிருன், அதாவது ஜீவன் எனும் தன்மை அகன்று, சிவத்தன்மையை அடைகிருன் என்பது விளங்கும். த்வைதத்தின், பிறப்பும் மறைவும் இவ்விதமே, தினந்தோறும் நடக்கிறது.

காடுகளில் விலங்குகளுடையதும், நீர் நிலைகளில் மீன்களுடையதும் பூமியில் மானிடர்களுடையதுமான ஆட்சி நடந்து வருகின்றது. முயற்சியினுல் சாமாத்தியம் கிடைபெறும். ஆயினும் பரமேச்வரின் ஆதிக்க முள்ளதாலுல் தான் எதுவும் நீடிக்கும். பரமேச்வரன் தன் விருப்பத்தை பலவித படைப்புகள் மூலம் நிறைவேற்றுகொள்கிருன் என்பதாலேயே, 'ஹரிர்தாதா ஹரிப் போக்தா' எனச் சொல்லிக் கொள்வதால், அஹங்காரம் எனும் பேய் கிட்டவராது. " எல்லாவற்றையும் நடத்துபவன் பரமேச்வரன், நடத்துபவதற்கு நான்யார், உல

கெங்கும் வியாபித்துள்ள பரமாத்மா நடத்திக் கொள் கிறான்" என்ற விசாரம் எப்போதும் நிலைத்து இருக்க வேண்டும். அந்தராத்மாவை (தெய்வம்) போன்ற சபல மான கார்யசாலி எங்கே இருக்கிறான்? பிர்மத்தைப் போன்று, நிச்சலமானவன் வேறுயார் உளான்? சிறிது சிறிதாக மேல் நோக்கி உயர வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 4 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் ஐந்தாம் சர்க்கப் பிரசங்கம்.

நிச்சலமான பிர்மத்திலிருந்து, பிண்டாண்டம் வரை சோதினை செய்து பார்க்கில், ஒன்று, பதினான்கு, ஐந்து, நான்கு என நான்கு வகைகள் இருப்பது தெரியவரும். ஒன்று என்பது நிச்சலமான பிர்மம். பதினான்கு என்பது மூல மாய்கையின் பதினான்கு ரூபங்கள், ஐந்து என்பது ஐம்பூதங்கள், நான்கு என்பது நால்வகை ஜீவன்கள்.

பரப்பிர்மம் இவைகள் எல்லாவற்றையும் விட்டு தனியாக உள்ளது. எல்லாவற்றிலும் மேன்பட்டது. எல்லாவகை கல்பனைக்கும் அப்பாற்பட்டது. நிற்விகல்பமான ஒன்றாக விருப்பது. அது நிர்மலமாகவும், நிச்சலமாகவும், நிர்விகாரமானதாகவும், குறைவு அற்றதாகவும் உள்ளது, அதற்கு உவமையாக வேறு ஒன்றையும் சொல்ல முடியாது. இதுமுதன்மையானது. எல்லையற்ற கல்பனாரூபத்துடன் திகழும் மூலமாய்கை இரண்டாவது. அது சூக்குமமான உருவிலிருப்பது,

பிர்மத்தில் 'ஏகோஹம் பஹுஸ்யாம்' என்று உதித்த சங்கல்பமே மூலமாய்கை. அதைப் புரிந்து கொள்ள வேண்டி பதினான்கு பெயர்களால் விவரிக்கிறார்கள்,

நிச்சலத்தில் சஞ்சலம் கண்டது என்பதினால் அதற்கு சைதன்யம் எனப்பெயர் கொடுத்தார்கள்.

சமமான குணங்கள் கொண்டமையால் அதை குண சாம்யம் என்கிறார்கள்.

அர்தநாரி நடேச்வரன், பிருகிருதி புருஷன், சிவ சக்தி, ஷட்குணேச்வரன் இவைகள் அதின் பெயர்களே ஆகும்.

அர்த்த மாத்ரையையுடைய குணமாயை தான் சுத்த சத்வகுணம் எனப்படும். அதிலிருந்துதான் முக் குணங்கள் பிறந்தன. மனது, மாயை, அந்தராத்மா என அழைக்கப்படுவதும் மூலமாயை தான். ஞானாத்துமா பதினான்கு இடங்களிலும் இருப்பவன்.

ஐம்பூதங்கள் இங்கு அறிவின்பாகம் குறைவானதே பஞ்சபூதங்கள் தோன்றி, அழிவடைவனவே.

நான்குவித பிராணிகள் எல்லாமே அறிவு படைத்தவை. இப்படியாக இந்நால்வகை பிரிவுகள் காணுகின்றன.

விதைகள் சிறிய அளவில் விதைத்த போதினும் அவைகள் பெருமளவில் பலனளிக்கின்றன அதேபோல் ஆத்மா - ராமனிடமிருந்து, நான்குவகை ஜீவன்கள், நான்கு வகை ஒலிகள், எண்பத்து நான்குவகை பிறவிகளின் விரிவு தோற்றியது. இதுபோன்றே கடவுளின் ஆதிக்கம், துவக்கத்தில் மிக சூக்குமமானதாயினும், அது விஸ்தரித்து, உலகம் முழுவதும் பரவி நின்றது. மானிடஉருவில் தன் படைப்பைதான் நன்கு அனுபவிக்கிறது. மானைக் கொன்று போடுகிறது புலி. அதற்கு மேல் அதற்கு என்ன புரியும்? பலவித அனுபவங்கள் மானிட தேகம்படைத் தோர்களுக்கே கிடைக்கும்.

அநேக சப்தங்கள், ஸ்பர்சங்கள், ரூபங்கள், ரஸங்கள், வாசனைகள் எல்லாம் அதாவது ஐம்பூதங்களின் குணங்கள் எல்லாம், மானுட உடலிலே தான் அனுபவிக்கப்படுகிறது. நல்ல ஆடைகள் ஆபரணங்கள், அநேக வாகனங்கள், ஆயுதங்கள், அநே வித்தைகள், கலைகள், மானிடருக்கே அனுபவத்திற்கு வருகின்றன.

பரமேச்வரனுடைய அம்சந்தான் எல்லாம். எங்கேயும் அவன் மகிமைதான் காணப்படுகிறது. பல வித்தைகள், கலைகள், தாரணைகள் எல்லாமே அவ்வீச சக்தியின் ஆதாரத்தின் மேல் தான் நிறுவப்பட்டுள்ளன.

நரதேஹம் கிடைத்தால் தான் எல்லா காக்ஷிகளையும் கண்டு களிக்க முடிகிறது. பெரும்பதவிகளில் நிர்வாகம் செய்யும் திறன் ஏற்படுகிறது. சாராசாரம் விசரணை செய்யும் சாமார்த்தியமும் லபிக்கிறது. இகம், பரம், விவேகம், அவிவேகம் இவைகளை மனிதன் தான் அறியலாம். அநேக பிண்ட, பிர்மாண்டங்களின் அமைப்பையும், மூலமாய்கையிலிருந்து கிளம்பிய கணக்கற்ற கற்பனைகள், தாரணைகள், எட்டுவித போகங்கள் (அன்னம், உதகம், தாம்பூலம், புஷ்பம், சந்தனம், ஆடை, படுக்கை அணிகள் என எண்வகை) நவரஸங்கள் (சிருங்காரம், வீரம் கருணை, ரௌத்ரம், பீபத்ஸம், பயானகம், அத்புதம், ஹாஸ்யம், சாந்தம் எனும் ஒன்பது ரஸங்கள்). பலவித கேளிக்கைகள், வாச்யாம்சம், இலக்ஷியாம்சம், சாராம்சம், இவைகள் அனைத்தும் மனித தேகத்தைக் கொண்டால்தான் அறிய முடியும்.

மனிதன் எல்லவற்றையும் அடக்கும் சக்தி பெற்றுள்ளான். இதை மனிதன் நன்று தெரிந்து கொண்டிருக்கலாம். மனிதவர்க்கத்தை இரக்ஷிக்கும் கடவுளைப் பற்றி புரிந்து கொள்வதற்கும் மானிட தேகம்தான் வேண்டும்.

மானிட தேகம் கிடைப்பது அரிது. அரிதிலும் அரிதானவை அம்மானிட பிறவியில்தான் கிட்டுகிறது. துர்

வங்கள் எல்லாம் சுலபமாகின்றன. மற்ற சரீரங்கள் கஷ்டங்கள் ஏற்பனவை. மானிட சரீரம்தான் தன்னுள் அரிய பொக்கிஷத்தைப் பெற்றுள்ளது. ஆனால் புரிந்து கொள்வதற்கு சூக்ஷ்ம விசாரம் வேண்டும். இது கிடைத்த பின் சோம்பலினால், விவேகமார்க்கத்தை விட்டு விட்டு, கடவுளைக் கண்டு கொள்ளாது போனால் சர்வநாசம் ஆகி விடுகிறது. தன் அனுபவங்களை அலசி அதினின்றும் கண்ட உண்மைகளை, சிரவணம் எப்போதும் செய்வானே யாகில், நரன், நாராயணனாகிறான். தனக்கே நீந்தத் தெரிந்தவனுக்கு, பிறருடைய உதவி எதற்கு வேண்டும்? அவன் சுயபுத்தியால் தானே சோதனை செய்ய வேண்டும். எல்லாம் சோதனைக்கு வந்து விட்டால் பின் ஐயங்கள் எதற்கு தோன்றுகின்றன? சோதினை எவ்வாறு நடந்தது என்பது, அவனுக்குத்தான் விளங்கும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

சர்க்கம் 5 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் ஆறும் சர்க்கப் பிரசங்கம்,

இப்பூமண்டலத்தைப்பற்றி விசாரணை செய்தோமே யானல், அநேக இடங்களில் ஜலத்தினல் நிரம்பியும், பல இடங்கள், பாலைவனம் போன்று, துளி ஜலம் கூட இல் லாததாகவிருக்கின்றது. அதேபோல் வெளிப்படைப் பைப் பற்றி விசாரணை செய்திடில், சில படைப்புகளில் அறிவும், சிலவைகளில் அறிவு இல்லாமையும் தென் படும். நால்வகை ஜீவப்பிராணிகள், நால்வகை ஒலி கள், எண்பத்து நான்குவகை ஜீவராசிகள் எல்லாம் சேர்ந்து கணக்கற்ற பிராணிகள் - ஏற்றத்தாழ்வுடன் கூடிய அறிவுடன் இருப்பவை. சாஸ்திரங்களில், நான் குலக்ஷம் மானிடர்கள், இருபது லக்ஷம் விலங்குகள், பதி ஞெரு லக்ஷம் கிருமி வகைகள், பத்து லக்ஷம் பறவை கள், ஒன்பது லக்ஷம் நீர்வாழ் இனங்கள், முப்பதுலக்ஷம் தாவர வகைகள் என எண்ணிக்கைகள் கணக்கு கொடு பட்டிருக்கின்றன எண்பத்து நான்கு வகை பிராணிகள் ஓரளவு அறிவுடன் விருக்கின்றன. அவைகளுடைய தேகங்களும் பலவகைப் பட்டவை. பல கோடி பிரா

ணிகள் தோன்றி மறைகின்றன. ஆனல் அவைகளுக்கு எல்லாவற்றிற்குமே சஞ்சார ஸ்தானமாக இப்பூமி இருக்கிறது. பூமியைத் தவிர வேறு ஆதாரம் அதற்கு கிடையாது. பஞ்ச பூதங்கள் வியக்தமாகவும், அவ்யக்த மாகவும் இருக்கின்றன. (பிருதிவி, ஜலம், தேயு இவை கள் வியக்தமாகவும், வாயுவும், ஆகாயமும் அவ்யக்த மாகவும் இருப்பவை). சபலத்தனம் எங்கு காண் கிறதோ அங்கே அந்தராத்மா இருக்கிறுன் என்பது திண்ணம்.

இனி அறிவின் இலக்ஷணங்கள் கூறிகிறேம். கேளுங்கள்.

அநேக உருவங்களில் திகழும் ஆத்துமா ராமனு டைய பல்வேறு குணங்களைப் பற்றி முன்பு விளக்கிக் கூறப்பட்டது. சுக துக்கங்களை அறிந்து கொள்ளும் தன்மை, ஜீவன், சிவன் இருவர்களுக்கும் உண்டு.

ஐந்து அந்தக்கரணங்கள், ஸ்தூல சரீரத்தில் காணும் ஆகாசத்தின் அம்சம், முக்குணங்கள் பலவகை சலனங்கள், தைர்யம், ஒன்பது வகை பக்தி, நான்கு வகை முக்தி, பற்றற்ற தன்மை சகஜாவஸ்தை இவை கள் ஆத்துமாவின் குணங்கள். திரஷ்டா, சாக்ஷி, ஞானகனன், சத்ரூபம், சித்ரூபம் இவைகளும் ஆத்து

மாவின் குணங்கள். வேதசாஸ்திரங்கள், புராண சர்சை, மறைவில் திகழும் பரமார்த்தம், சர்வஞனுய் இருக்கும் சாமார்த்தியம் எல்லாம் ஆத்மாவின் தன்மை கள். மூலமாய்கை, இருபத்து நான்கு வகை, நான்கு வித அஞான ஞானம், தேவாசுர கந்தர்வயோனிகள் எல்லாமே ஆத்துமா இராமனின் குணங்களாம். பரி பூர்ணனுயும், இரண்டற்ற ஒன்ருகத் திகழ்பவன் ஆத்மா தான். இதை அறிவதே ஆத்மா இராமனின் உபா சினியாகும். இதனுல் நிர்குணப்பதவியை எட்டலாம்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 6 முற்றும்.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் ஏழாம் சர்க்கப் பிரசங்கம்.

அநிர்வசமான சமாதானம் உண்டானதை வார்த்தைகளால் விளக்க வேண்டும். வார்த்தைகளுக்கு அப்பால் உள்ள சமாதான அனுபவத்தை வார்த்தைகளால் விளக்கியதால், சமாதானம் குன்றி விடாது, ஆகையால் விளக்குவதில் என்ன தடை? காசிவிச்வேச்வரர், இராமேச்வரத்திலுள்ள இராமலிங்கம், முக்யமான பன்னிரு இலிங்கங்கள், பல தீர்த்தக்ஷேத்திரங்களில் உள்ள மகிமை, சாக்ஷாத்காரம், விந்தைகள், தெய்வங்களின் உருவச்சிலைகள் இவை எல்லாம் ஆத்மா இராமனின் குணங்கள் ஆகும். உத்தமமான குணங்கள் ஆத்துமா இராமனுடையவை. நல்லது, கெட்டது, எவைகள் நடைபெறுகின்றனவோ அவைகள் எல்லாம் ஆத்துமாவினால்தான். சுத்தமான ஆத்துமா நற்குணங்களுடனும், தீயஆத்துமா, அவலகுணங்களுடனும் இருப்பவை. பலவித அபிமானங்கள், சிருஷ்டியைப் போல் நிர்மாணம் செய்வது, சாயம் கொடுப்பது, நீக்குவது, இவைகள் ஆத்துமாவின் குணங்கள்.

பிண்டத்தின் சோதினை, அவைளிலுள்ள தத்துவங்களை சோதிப்பது, இவைகள் செய்ய வேண்டும். தத்துவசோதனையினால் பிண்டங்களைப்பற்றிய அறிவு ஏற்படுகிறது. தேகம் பஞ்சபூதங்களாலாகியது,சபலத்தனம் ஆத்துமாவின் குணமாகும். ஆனால் எங்கு இருப்பினும் ஆத்துமாவின் சர்வ வியாபகத் தன்மை, தங்கு தடையற்றது.

நிச்சலப்பிர்மம், சஞ்சலமான ஆத்துமா, ஜடமான தேகம், இவைகளைப் பற்றிய சோதனை மானிடதேகத்தில் இருக்கையில் தான் முடியும். அனுபவத்தைப் போன்ற விரிவுரை வேறு எந்த உரையிலும் காண முடியாது.

பிண்டத்தை விட்டு, ஆத்துமா அகலுவதால், ஆத்துமா பிண்டத்தைக் காட்டிலும் வேறானது என்பது நன்கு புலப்படுகின்றது. தேகம், சபளமாகிவிடுகிறது. சடமான சடலம் தங்கிவிடுகிறது, சஞ்சலமான ஆத்துமா வெளியேறி விடுகிறது. ஆனதினால் ஜடம், சஞ்சலம் இவ்விரண்டைப்பற்றியும் தெறிகிறோம். மேலும் நிச்சலமானது எங்கும் வியாபித்திருப்பது. அதை தேடித் திரிய வேண்டியதில்லை. அதற்கு ஆத்துமாவைப்போல் குணங்கள், விசாரங்கள் ஏதும் கிடையா. பிண்டத்தைப்

பற்றி எப்படி விசாரணையோ, அப்படியே பிர்மாண்டத்தைப்பற்றியும் செய்ய வேண்டும். அங்கேயும் இவ்வித சோதனை செய்திடின், முகில் போன்ற அடர்ந்த ஒன்றாகிய பரப்பிர்மம் தெரியவரும்.

மகாபூதங்களாகிய, கூண்டில் ஆத்துமா என்பதை வைத்து, உடல் நிற்கிறது. இப்படியே உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. ஆத்துமாவின் பலத்தினாலேயே மாய்கையும் நிகழ்ந்து வருகிறது. மாயையின் சர்வவிசாரங்களும், வெளிஉலவுகின்றன. ஆயினும் மாயையே பெரிதாக சிலர் கருதுகிறார்கள். அனுபவத்தை ஒட்டி இதை விளக்குவதே திறன்.

பிர்மத்தின் விரிவடையும் தன்மை தடையற்றது. மற்றவைகளுக்கு வரையுள்ளது. நன்கு விசாரணை செய்தால் இது எளிதில் புலனாகும். மகா பிரளயம் ஆதி சிருஷ்டியானது சம்ஹரிக்கப்பட்டாலும், வெட்டவெளியில் குறைகாணுமோ ?

சம்ஹாரத்தில் அடங்கினதெல்லாம் நாசமடைபவையே, அறிவுள்ளவன் இதை நன்று விசாரிக்க வேண்டும். புரியாத வரையில் தான் மர்மமாகத்

தோன்கிறது. தெரிந்த பிறகு எல்லாம் வெட்டவெளிச் சமாகறது. ஆகையால் தனிமையில் விசாரணை செய்தல் வேண்டும்.

அனுபவமுள்ள சாதுக்களின் சகவாசமே ஏகாந்தமாகும். அவர்களுடன் சாவதானமாக சர்சை செய்து விலக்கிக் கொள்ள வேண்டும். விசாரணை செய்தாலன்றி விளங்குவதில்லை. விளக்கம் காண காண, ஐயங்கள் அகலுகின்றன, விவேகத்தின் பலத்தினுல் மாயையின் திரைகள் தகர்ந்துவிடுகின்றன ஆகாயத்தில் மேகங்கள் வருவதும் போவதும் போல்,ஆத்தும அனுத்தும விசாரணை செய்பவனுக்கு முன் நாம ரூபங்களாலாகிய நிருச்சயங்கள் நிலைப்பதில்லை. துவக்கத்திலிருந்து இறுதிவரை விவேகத்துடன் சோதினை செய்பவனுக்கு நிச்சயம் புலனுகிறது. நிச்சலமான பிர்ம நிச்சயத்தைக் காட்டிலும் வேறுபட்ட இதர நிச்சயங்கள் அனுமானிக்கப்பட்டவைகளே தவிர உண்மையாகா. அதைப்பற்றி பேசுபவர்கள் பேசிக் கொண்டே போய் ஓர் முடிவும் காணுர். அது அனுபவம் கண்ட சாதுக்களுக்கு எப்படி ஒவ்வும்? அநுமானத்தினுல் செய்யும் பேச்சுகள் என்ன பிரயோசனம்? அனுபவத்திலற்ற விசாரணை இங்கு பயன்படாது. அது விசாரம் அல்ல அவிசாரம். சிலர் ஏகாங்காார்கள் என்கிறுர்கள். அவர்

கள் பிரஷ்டாசாரர்கள். அவர்களுடைய விசாரணை தவறு. செயற்கையானதும், உண்மையல்லாத சகலத்தையும் களைந்து விட்டு, சுத்தமும் ஒன்றாகத்திகழ்வதுமான பிர்மத்தையே சாராசார விசாரத்தினால் ஏற்க வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாச பால

உபதேச விளக்கத்தில்

சர்க்கம் 7 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் எட்டாம் சர்க்கப் பிரசங்கம்.

பிர்மதேவனுடைய, சமுசார விருக்ஷமானது, வளர்ந்து வளர்ந்து பெரிதும் விரிவடைந்து அதில் பழங்கள் கண்டதும். அதை சுவைத்து பல பிராணிகள் விச்ராந்தியடைந்தனர். பல பழங்கள் (விஷய, இந்திரியங்களினுலாகிய சுகங்கள்) சுவை மிகுந்தவைகளாக தோன்றின. அதில் பலவகை ருசிகள். அவைகளை சுவைக்க பலவித தேகங்களை பிர்மதேவன் சிருஷ்டித்தான். உத்தமமான விஷயம் என்றுலும் சரீரம் இல்லாது சுகிக்க முடியாது. ஆனது கொண்டு அநேக சரீரங்களை எற்படுத்தும் யுக்தியைக் கையாள வேண்டியதாயிற்று. ஐந்து ஞான இந்திரியங்கள் இருப்பினும் அவைகள் வேறுபட்டவைகள்.

ச்ரோத்ர இந்திரியம், காதிற்கு, சப்தம் என்னும் விஷயத்தை உண்டாக்கினர். த்வக் எனும் இந்திரியத்திற்கு சீதோஷ்ணங்களை அறியும் சக்தி கொடுக்கப்பட்

டது. சக்ஷு இந்திரியத்திற்கு (கண்) ரூபம் எனும் விஷயம் நிர்மாணிக்கப்பட்டது. நாக்கிற்கு சுவைக்கும் சக்தியும், மூக்கிற்கு முகரும் சக்தியும் கொடுபட்டன. இப்படியாக ஐந்து ஞான இந்திரியங்களும் வெவ்வேறு சக்தியுடையவை.

வாயு பஞ்சகம் எனப்படுவது பிராணன், அபானன் உதானன், சமானன், வியானன் எனும் பஞ்ச (ஐந்து) பிராணன்கள்.

ஆகாச பஞ்சகம் என்பது, சித்தம், அஹங்காரம், புத்தி, மனது, அந்தக்கரணம் ஆகிய ஐந்து, இவ்வைந்தும் சுழலும்படியாக செய்து, இதை கர்ம-ஞான இந்திரியங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்படி சிருஷ்டித்தார். கர்மேந்திரியங்களின் மூலம், ஜீவன் விஷய சுகத்தை அனுபவிக்கக்கூடுமாறு உபாயங்களையும் சிருஷ்டித்தார் பிர்மதேவன். விஷயங்கள் அனுபவத்திற்குவர பல தேகங்கள் வேண்டுபவையாகையால் பல சரீரங்களையும் பிர்மன் சிருஷ்டிக்க வேண்டியதாயிற்று. எலும்பு, சதைகளாலான சரீரம், இதில் சத்துவ, இரஜ தமோ குணங்கள், வைக்கப்பட்டன. சரீரத்தைப் போன்ற இயந்திரம் வேறொன்றும் கிடையாது. இப்படியாக சரீரங்களை நிர்மாணித்து, விஷய போகங்களி

னல் அவை வளர்க்கப்பட்டன. அஸ்தி மாம்சமயமான இச்சரீரத்தை மிகசூக்ஷும அறிவினல் படைத்தது மின்றி அதை வெறும் பொம்மை போலின்றி, அறிவு கொண்டதாகவும் ஆக்கியோன் ஆக்கினன். பல இடங்களில் பல சரீரங்களை நிர்மாணித்தாலும், அது ஆங்காங்கு அந்த அந்த கார்யங்கள் முடியும்வரை தான். ஆனல் அவைகள் பலவித குணங்கள் உடையவை. சூக்ஷும புத்தியின்றி இதை அறிவது மிக்ககடினம். ஈசுவரனுக்கு (மூலமாயை) சர்வமும் செய்யவேண்டி வருவதால் அவன் இப்பேர்கொந்த மாறுபாடுகளை உண்டாக்கி இருக்கிறன். பிர்மத்தை நோக்கில் வித்யாசங்கள் எங்கே நிலைக்கும்? (பேதங்கள் மாயையில் இருப்பவை பிர்மத்தில் அல்ல). சிருஷ்டியின் துவக்கத்தில் பேதங்கள் விளைகின்றன. சமாவாரகாலத்தில் ஒன்றுபட்டு விடுகின்றன. பேதம், அபேதம், எனும் கல்பனையே மாயையினல் உண்டாவது. அந்தராத்மாவை விவரிக்க விவரிக்க, பிரதிக்ஷணம், சிக்கல்கள், முடிச்சுகள், தர்க்க விதர்க்கங்கள் இவைகளைத் தகர்த்து தகர்த்து மூளை களைப்பு அடைந்துவிடுகிறது. ஆத்துமாவைப்பற்றித் தான் இவ்வளவு சிக்கல்கள். பிர்மத்தைப்பற்றிய சர்சையில் இவ்வளவு தொல்லைகள் கிடையாது. இதை அனுபவித்துப் பார்க்கலாம். தனிமையாகவிருந்து சோதினை புரிய வேண்டும். தேகத்தின் சாமார்த்தியத்திற்கு தக்கவாறு ஈசுவரன் (மூலமாய்கை) செய்யப்படு

கிறான். பெரும் திறன் புலனாகில் அவனை 'அவதார புருஷன்' என்கிறார்கள். சேஷன், கூர்மன், வராஹம், முதலிய சரீரங்களை தாரணம் செய்து இவர்கள் சிருஷ்டி எனும் எவ்வளவு பெரும் இயந்திரத்தை சுழலவைத்துள் ளான் ஈசுவரன். பெரும் சூர்ய பிம்பத்தை வானவீதி யில் உலவவைத்துள்ளான். புகையை, நீரைக்கொள் ளும்படி செய்துள்ளான். பர்வதாகாரமான முகில்கள் சூர்யபிம்பத்தை மறைக்கின்றன. உடனே புயலைப் போன்ற சூராவளிக்காற்று, யமகிங்கரர்களைப் போன்று, வீசி, மேகங்களை சின்னாப்பின்னாப் படுத்தி வைக்கின்றன. சூரியனை விடுதலை செய்கின்றன.

மின்னலுடன் இடி இடிக்கிறது எல்லோரும் பயந்து விடுகிறார்கள். ஆகாய வெளியில் பலத்த சப் தம் எழுகிறது. பூபாகங்கள் பிளந்து போகின்றன. சிருஷ்டி கிரமத்தில் ஈசுவரன் மேலும் ஒரு வித்தையை கல்பித்துள்ளான். ஒரு மகாபூதம் மற்றொன்றை புசிக் கிறது. (ஜலம், பூமியையும், ஒளி நீரையும் இம்மாதிரி யாய்) இருந்தும் சிருஷ்டி இயந்திரம் செவ்வனே தன் வேலையை செய்து கொண்டே போகிறது. ஆத்மாவி னுடைய கணக்கற்ற விளையாட்டுகள் இப்படியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. மனிதனுக்கு அது எங்கே தெளிவு படுகிறது! இதை விசாரித்துக் கொண்டே போனால் மனதின் தூர்தசை பறந்து ஓடும்.

என்னுடைய உபாசினை மார்க்கம் இப்பேர்ப்பட்டது உபாசகர்கள் அதைப்பற்றி மனனம் செய்ய வேண்டும், அவ்வழியின் மகிமை எல்லையற்றது. பிர்மனாலும் அதைப் புரிந்து கொள்வது கடினம் ஆவாஹனம், விசர்ஜனம் இவ்விரண்டும் நம் உபாசனையின் இலக்ஷணங்கள். இது எல்லோரும் தெரிந்து கொள்ளப்பட்டது. அதிகம் வளர்த்த என்ன இருக்கிறது ?

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 8 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் ஒன்பதாம் சர்க்கப் பிரசங்கம்,

மிருத்திகையை பூஜை செய்து (மண்ணினால் செய்த பிரதிமைகளை) உடனேயே அதை விசர்ஜனம் செய்வது மனதிற்கு ஒப்பவில்லை. தெய்வத்தை பூஜித்து, உடனேயே அதை தூரவிலக்குவது மனதிற்கு இணங்கவில்லை. இதைப்பற்றி தன் மனதிலே யோசனை செய்ய வேண்டும். தெய்வத்தை உருவாக்குவதும், எறிந்து விடுவதும், சரியான ஆவாஹானம் விசர்ஜனம் என்பது என்னவென்பதை ஆராய வேண்டும்.

தெய்வம் (அந்தராத்துமா) பல சரீரங்களை தரித்து பிறகு விட்டு விடுகிறது. அந்த தெய்வத்தை விவேகத்தினாலேதான் அறிந்து கொள்ளலாம். சிரவண, மனனாதி சாதனங்கள், நிரூபணங்கள். எல்லாம் தெய்வத்தை சோதினை யாலறிந்து கொள்ள வேண்டியதற்காகத் தான் ஏற்பட்டவை. பிர்மஞானம் அடையும் வழி தானே தெரிந்து கொண்டாலன்றி, பிறர் சொல்லப் புரியக்கூடியது அல்ல. பிர்மஞானம் 'வாருங்கள்

இதோ எடுத்துக்கொள்ளுங்கள்' என்று மற்றொருவரால் சொல்லிக் கொடுக்கக் கூடிய, புலனாகும், பொருள் அன்று. எல்லோருக்கும் 'எனக்கு கடவுளின் தர்சனம் செய்து வைக்க வேண்டும்' என அவா எழுவது சகஜமே ஆயினும் விவேகத்தைக் கொண்டு தன்னுட் தெய்வத்தைக் காணும் வழி அலாதியாக உள்ளது.

சோதனை முடிவில் நிலைத்து நிற்காததை தெய்வம் எனக் கொள்ள முடியாது. ஆனால் ஜனங்கள் உறுதி கொள்வதில்லையே இறுதிவரை? பெரிய மனிதர்கள் காலஞ்சென்றபின் அவர்கள் உருவச்சிலை, படம் முதலியவைகளை ஏற்படுத்துகின்றனர். அதைப்போன்று தான் உபாசனையின் மார்கமும். பெருமளவில் வாணிபம் செய்ய திராணியற்றவனுக்கு, கூலிவேலை செய்வது தான் வழி. ராஜனுக்குரிய ஐச்வர்யங்களை அனுபவிக்கும் பாக்கியம் அவனுக்கேது? எளியத் தன்மை என்பது அஞானத்தின் வழி. அஞானத்தைக் கொண்டு ஞான ஸ்வரூபியாகத் திகழும் தேவாதி தேவனை எப்படி கண்டுகொள்ள முடியும்? அஞானியானவனுக்கு, ஞான வழி சோதனைகள் பிடிப்பதில்லை. ஞானி அனுமான வார்த்தைகள் ஏற்பதில்லை என்பதால் சித்தி பெற்றவர்களின் வழியே தான் போகவேண்டும்.

விவேகத்தைக் கொண்டு மாயையைச் சுற்றி மூலப் பொருளை அடைய வேண்டும் அப்போதுதான் தெய்வத்

தின் பிராப்தியினல், சமாதானம் கிடைக்கும். இவ்வழியை பின்பற்ற இணங்காவிடில், மனம்போன போக்கே செல்லலாம். மாயாநதியின் அக்கரைச்சார்ந்து தெய்வத்தின் பிராப்தி ஆகவேண்டும் என்ருல்,பல உபாயங்களைக் கையாளவேண்டும். நிச்சயமான உபாயமோ வெனில் அத்யாத்ம சிரவண வழியே, அனுபவங்கள் பெற்றபடி தெய்வத்தை அடைய வேண்டியது. இப்படிக்கின்றி லௌகீக உபாயங்கள் பல செய்திடினும், தெய்வம் ஒரு புறமும், சோதினை மற்ருேர்புறமுமாக ஆகிவிடும். தவறுதலில் முடியும். மெய்யும், பொய்யும் நன்று விளங்க வேண்டும். பொய்யான வழியே செல்லுதல் கூடாது. பொய்யானதின் சேர்க்கைக் கூடாது. பொய்யானதை சேர்த்து வைத்துக் கொள்ளக் கூடாது. 'பிர்மசத்யம்' என்பதே உண்மை. அதைத் தவிர மற்றதெல்லாம் மாயை - பொய். பொய் பொய்யானதுதான். அது உண்மைக்கு எதிராக எவ்வளவு நேரம் நிற்க முடியும்? உண்மையான பிர்மம் வேண்டுமாளுல், கீழ்நோக்கிச் செல்லும், மனதை, மாயையையும், மாயிகமான உலகத்திலுள்ள பொருள்களிடமும் ஓடும் மனதை, விவேகத்தினல் தட்டி எழுப்பி - நேர்மாருக - மேல் நோக்கி தன் உற்பத்தித் தானத்தை நோக்கிச் செலுத்த வேண்டும்.

அத்யாத்ம சிரவணத்தினல் சர்வமும் விளங்கும். பல சமுசயங்கள் மறைந்து விடும். நூல் சிக்கிக்கொண்

டால் எப்படி லாகவமாக விடுவிக்கிறார்களோ, அதே போல் மனதை விவேகத்தினால் விடுவித்து சிறிது சிறிதாக அதை தன் மூலத்தானத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும். ஜடசஞ்சலங்களின் பிணைப்பு ஏற்பட்டு, சர்வமும் ஏற்பட்டு அதுவே பர்ப்பல பாகங்களாக எல்லா சரீரங்களிலும் இடம் பெற்றுள்ளது. விசாரம் என செய்வதாகில், நரதேகத்தில்தான் செய்ய வேண்டும். சோதினையும் அங்கேதான் நடைபெற வேண்டும். சூக்குமம் எனப்படும் மூலமாய்கையின் பதினன்கு பெயர்களையும் இங்கு பொறுத்திப் பார்க்க வேண்டும். எல்லாவற்றிற்கும் அப்பாலுள்ள, நிற்குணமான, நிர்விகாரமான, பரபிர்மம் எங்கும் நிரம்பியுள்ளது. அது தன் தேகத்திலேயே நிஷ்கலங்கமாக இருக்கிறதா இல்லையா என சோதனையினல் அறிய வேண்டும். அப்படி இருப்பதாகவே தான் புலப்படும். மூலமாய்கை சங்கல்பரூபியானதால், தன் சரீரத்தில் அந்தக்கரண ரூபமாய் தோன்றுவதுதான் அது. ஜடத்தை சலனப்படுத்தும் சைதன்யமும் சரீரத்திலே தான் இருக்கிறது. சமான குணம் எதுவோ அதுதான் குணசாம்யம் எனும் அவஸ்தையிலுள்ளது. சூக்கும விசாரச் சொல்லிற்கு அப்பால்பட்டது. அதை அறிந்தவர்கள் மகான்கள் அவர்களை வந்தன செய்ய வேண்டும்.

சரீரத்தில் இடது, வலது என இருப்பக்கக்கள் உள. அது தான் பிண்டத்தில் அர்த்தநாரி, நடேசன் சைதன்யம், குணசாம்யம், அர்த்தநாரி நடேசன், ஷட்குணேச்

வரன், பிரகிருதி புருஷன், சிவசக்தி, சுத்த சத்துவம், குணமாயை, சத்துவம், இரஜம், தமம், மனது, மாயை, அந்தராத்மா எனும் பதினைன்கு பெயர்களும், அந்த சூக்ஷ்மமான மூலமாயையினுடையவை. அது சேற்றைப் போன்றது. இந்த சோதினைகள் எல்லாம் பிண்டத்தில் காணவேண்டியவை. பிண்டம் வீழ்ந்துவிட்டால் இவைகள் மறைகின்றன. பரப்பிர்மம் ஒன்றுதான் நிலைக்கிறது. அதுதான் சாசுவதமானது. இப்படியாக முடிவுக்கு வந்து, நிஜமான தெய்வத்தை மனதில் உறுதி படுத்துக் கொள்ளல் வேண்டும்.

இப்படிக்கு,

ஸ்ரீ குரு சீஷாள் தர்க்கத்தில்,

தாச பால உபதேச விளக்கத்தில்,

சர்க்கம் 9 முடிந்தது.

முற்றும்.

ஸ்ரீ ராமர் கர்த்தர். ஸ்ரீ ராமர் சமர்த்தர்.

இனிமேல், இருபதாம் தசகத்தில் பத்தாம் சர்க்கப் பிரசங்கம்.

பரபிர்மத்தை பிடித்துப் பார்ப்போமெனில் அது பிடிக்க முடியாது. விலக்கிவிட்டு போவோம் எனில் விலக்கவும் முடியாதது. அது எங்கும் நிரம்பியுள்ளது. எங்கே பார்த்தாலும் அது இல்லாத இடம் கிடையாது. அதை ஒதுக்க நினைத்து நாம் முதுகைக் காட்டினாலும் அது நமது முன்புதான் தோற்றமளிக்கிறது. என்ன செய்தாலும், எங்கு சென்றாலும் அது எதிரே தோன்றுகிறது.

உட்கார்ந்து கொண்டிருந்தவன், எழுந்துபோய் விடினும் ஆகாசம் அங்கேதானே இருக்கிறது. அது எழுந்துபோய் விடவில்லை. எங்கே இருந்து பார்த்தாலும் அது எதிரில் தோற்றமளிப்பது. எங்கு ஓடிப் போய் பார்க்கினும் ஆகாயம் தெரிகிறது. ஆகாயத்தை தாண்டி எவன் செல்ல முடியும் ? மத்தியான கால சூர்யனைப் போன்று அது எல்லோருடைய உச்சியிலும் உள்ளது. சூர்யனின் உவமை முற்றிலும் சரியன்று.

அது வஸ்துவை பற்றுவதில்லை. ஓரளவுக்கு தமாஷாகக் கொண்ட உபமானம்.

பல தேசங்களிலுள்ள பல தீர்த்தங்களைக் காண வேண்டும் என்றால் தேகத்தை கஷ்டப்படுத்த வேண்டும். பரப்பிர்மத்தைப் பார்க்க வேண்டி இப்படி தொலைவில் அலைய வேண்டியதில்லை. உட்கார்ந்த இடத்தில் அதைக்காணலாம். உட்கார்ந்தாலும், ஓடினாலும் அது கூடவே தான் உள்ளது. பக்ஷி ஆகாயத்தில் பறக்கும் போது, எத்திசையிலும் பறவையை சுற்றி ஆகாயம் இருப்பது போன்று, பிர்மம் பிராணி மாத்திரங்களை சூழ்ந்து உள்ளது. அது போலாகவும், அடர்த்தியாயுமிருப்பது. எப்போதும் எங்கேயும் முன்னாலிருப்பது. எல்லா தோற்றங்களின் உட்புறமும் வெளிப்புறமும், பிர்மம் நிறைந்துள்ளது. இப்படியாக விமலமாய் உள்ள பிர்மத்தின் ஈடு செய்வது எது ?

வைகுண்டம், கைலாசம் சுவர்க்கலோகம், இந்திரலோகம், பதினான்கு புவனங்கள், பாம்பினங்கள், பாதாள உலகம், காசியிலிருந்து இராமேசுவரம் வரை அடர்த்தியாக வியாபித்துள்ளது பிர்மம். அதைக் கடந்து அப்பால் செல்வோம் எனில் இது வரம்பற்றதாக இருக்கிறது. பரப்பிர்மம் ஒன்றுபட்டது. ஒரே

காலத்தில் சர்வ இடத்திலும் வியாபித்திருக்கிறது. எல்லாவற்றையும் தொட்டுக் கொண்டே எங்கும் பரவி இருக்கிறது. மழையினல் அது நனைவதில்லை. சேற்றினல் அது பூசப்படுவதுமில்லை (மாயை எனும் சேறு). வெள்ளத்தில் இருந்து கொண்டு வெள்ளத்தினல் அடித்துக் கொண்டு போகப்படாதது. அது எப்போதும் எதிரிலேயே இருந்து கொண்டு, பின்புரத்திலும் இருப்பதாக இருக்கிறது. இடது, வலது, மேல், கீழ் பக்கங்களிலும் பரவலாக இருக்கிறது. எங்கும் நிறைந்திருக்கிறது,

ஆகாயம் எனும் மடு நிறைந்திருந்தும் வழிந்து போகாமல் இருக்கிறது. ஆனல் நாலாபக்கங்களிலும் பரவி இருக்கிறது.

ஆகாயத்தை உதாசமாகவும் (பற்றற்ற) ஒரேமாதிரியாகவும் (இரண்டற்ற ஒன்ருகவும்) தோற்றம் அற்றதாகவும் கொண்டால் அதுவே பரபிர்மம். பெரிய மகான்கள், சாது ஜனங்களின் ஓய்விடம் பரபிர்மம் ஒன்றே. அதின் முடிவு எங்கே என எப்படிச் சொல்ல முடியும் ? எங்கு சென்ருலும் வரைகாண முடியாத பிர்மத்தைப்பற்றி எல்லை எப்படி நிர்ணயிக்க முடியும். அது ஸ்தூலமாகவோ, சூக்குமமாகவோ இல்லை. அது இதைப்போன்றது என்று சொல்லவும் முடிவதில்லை.

உவமையற்றது. ஞான திருஷ்டியினுல் தான் அதைப் பற்றி சமாதானம் அடையலாம்.

பிண்ட பிர்மாண்டம், அதாவது எட்டு வகை உடலும் ஒழிந்தால், பின், நிராபாசமான பிர்மம் எங்கும் ஆகாயத்தைப் போல் பரவியுள்ளது தெரியவரும். பிர்மம் வியாபித்துள்ளது என்கிரும். ஆனல் தன்மை குணத்தை வைத்துக் கோண்டு அப்படிச் சொல்கிரும். உண்மையில் தோற்றம் எல்லாமே பொய் எனச் சொல்லும் போது வியாபிக்கும் தன்மையே கிடையாது என்ருல் எப்படி வியாபிக்க முடியும்! வார்த்தைகள் பிர்மத்தை அணுகா. அது வார்த்தைகளற்றது. வார்த்தைகளால் விவரிக்க முடியாது. கற்பனையினுல் அதை கல்பித்து பார்க்க முடியாதது. அது கற்பனைக்கு அப்பார்ப்பட்ட நிரஞ்சனமான ஒன்று. விவேகம் ஒன்றினுல் தான் அதைப் புரிந்து கொள்ள முடியும்.

சுத்தமான சாரத்தையே (விமல பிர்மம்) சிரவணம் செய்ய வேண்டும். சிரவணம் செய்ததை மனனம் செய்து கொண்டே தன் அனுபவத்தையும் பார்க்க வேண்டும். அநுபவம் காணக்காண, விஞானம் (சாக்ஷாத்காரம்) அடைந்து, பிரயாசை இன்றி உன்மனி நிலை லபிக்கும்.

சாதனையின் பலன் கிட்டியது. (சிரவணம் முதலாக ஆத்தும நிவேதனம் வரை ஒன்பது வகை பக்தி செய்ததின் பலன்). சமுசாரம் பலனுள்ளதாயிற்று. நரதேகம் கிடைத்ததின் பலத்தையடைந்தாய் விட்டது. ஜன்ம மரணபந்தம் விலகிற்று நிச்சலமான, நிற்குண பிர்மம் உள்ளே நிலை கொண்டுவிட்டது மாயையின் கணக்கு தீர்த்தாய்விட்டது. தத்துவங்களின் சோதினை முடிந்தது. சாத்தியத்தை நெருங்கியதும் சாதனைகள் அகன்றன. அஞானம் எனும் கனவில் தோற்றின காக்ஷிகள் எல்லாம், ஸ்வரூபத்தில் விழிப்பெய்தின உடன் தானே மறைந்தன. பிரயாசை யின்றி இயற்கையான அநிர்வாச்யமான, சமாதானம் கிட்டியது. அதை சொற்களால் எப்படி விவரிக்க இயலும். விவேகத்தின் துணைகொண்டு இப்படி பார்க்க வேண்டியது. தன் சுய அனுபவத்தினுல் தன் குறியை (பிர்மத்தை) காண வேண்டும். இனிமேல் ஜனனமரணம் தடையுற்றது.

பக்தனிடம் அபிமானம் கொண்டு, பக்தர்களை கார்க்க வேண்டும் என்ற கருணையின் வேகத்தில், தாசரதியான இராமன் கிருபை செய்ததினுல், ஸ்ரீ சமர்த்தனை இராமனின் சொற்கள் ஒன்று பட்டு, இத்தாசபோதம் எனும் நூல் உருவாயிற்று. இருபது தசகங்

கள் கொண்டது இந்த நூல். இதை சிரவணம் செய்வதி னல் தன் சோதினை செய்து கொண்டு, மனனம் செய் தால், பரமார்த்தம் எளிதாகுகிறது இருபது தசங் களில் இருநூறு சமாஸங்கள் உள. சாதகர்கள் இதை மனதை ஒரு முகமாக வைத்துக் கொண்டு, அமைதி யுடன் படிக்க வேண்டும். இதை மனனம் செய்ய செய்ய இது மேலும் மேலும் புரிந்து கொண்டு போகும்.

இக்கிரந்தத்தை (நூலை) துதித்துப் பாராட்ட வேண் டும். ஏன்? வாசகர்களுக்கு ஆத்ம பிரத்யயம் சுதா னான அனுபவம் வரவேண்டியது மிகவும் முக்யம். அது கிட்டினல் முடிந்தது. இது தான் துதி, தேகம் ஐந்து பூதங்களாகியது அதில் செயற்படும் அதிகாரம் ஆத்துமா இராமனுடையதாகும். அப்படியே நூலாக்கும் அவனல் (ஜகதீசனல்) நடைபெறுகின்றன. கவித்துவம், புலமை மாத்திரம் மனிதனுடையது என்பது தகுதியற்ற சொல்.

எல்லாவகை சரீரங்களின் கணக்கெடுத்தாய் விட் டது. (எட்டுவித தேகம்) தத்துவங்களின் கணக்கு எடுக்கப்பட்டு தத்துவங்கள் சரியான பின், எந்த வஸ் துவை 'நான் - என்னுடையது' எனக் கொள்ள முடியும்?

இப்படியாக இவைகள் சோதனையின் கார்யங்கள். பிரமையில் காலங்கழிக்கக் கூடாது. எல்லாவற்றையும் சீராயும், ஒழுங்காயும் ஈசுவரன் செய்திருக்கிறான். ஓர் முறையும் வகுத்திருக்கிறான்.

இப்படிக்கு

ஸ்ரீ குரு சிஷ்யாள் தர்க்கத்தில் தாசபால

போத விளக்கத்தில்

சர்க்கம் 10 முடிந்தது.

ஸ்ரீ ராமார்பணம்.

முற்றும்.

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
		முன்னுரை.	
v	14	நாராயணை	நாராயண
xii	5	தேர்ந்ரி	தேர்ந்து
,,	6	ஊதுல்	ஊரில்
xvi	9	ஆத்ாமராம்,	ஆத்மாராம்
xx	4	என்பபவரைப்	என்பவரைப்
3	9	வாக்கிய துவக்கதில்	"எவன் என்பதை சேர்த்துப் படிக்கவும்.
,,	13	காண்பாள்	காண்பார்கள்
4	5	நாறு	நாறு
,,	10	நிற்சமாய்	நிற்சலமாய்
,,	27	வேனும் ?	வேணும் ?
8	13	ஆனபடிபினுவே	ஆனபடியினுலே
,,	24	கேட்டுட்	கேட்டுப்
9	12	அறிகிருள்	அறிகிருன்
10	16	நீதிஞாயத்துடனே	நீதி நியாயத் துடனே
,,	18	வேனும்	வேணும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	3	இலட்சனங்	இலட்சணங்
,,	8	மேவும்	மேலும்
,,	14	பின்	யின்
14	1	நீருகாரம்	நிராகாரம்
,,	1	விபர	வியாபகம்
16	12	அபாவமே	அபாவமோ
18	12	உடையவனை யிருக்கக	உடையவனையிருக்க
,,	23	அபசகுணங்களை	அபசகுனங்களை
20	12	அபிலசிக்கான்	அபிலஷிக்கான்
,,	15	செல்லும்போது	சொல்லும்போது
24	4	குமுளிகள்	குமிழிகள்
,,	4	பிறலேகள்	பிறளைகள்
,,	10	துளியுந் தூசி	தூளியுந்
25	2	நிற்மலமுநில்லை	நிற்மலமுமில்லை
,,	,,	ப்ாத்திரத்தில்	பாத்திரத்தில்
27	14	மரய்	மாய்
,,	27	மாயிருக்சிறதற்கு	மாயிருக்கிறதற்கு
30	8	சகஸ்கர	சஹஸ்ர
,,	25	முடிவும்	முடியும்
43	6	பக்தனைதானர் ?	பக்தனைதார் ?
,,	10	சராசாறம்	சராசரம்
,,	16	ஐடம்	ஜடம்
51	6	நிவாந்தரமாயின	நிவாந்தமாயினை
52	4	திற்டன்	திடன்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
53	7	சிர்ஷ்டிரச்சனை	சிர்ஷ்டிரசனை
54	19	விவறனை	விவரணை
58	23	கிருஷ்டி	சிருஷ்டி
80	16	விவேகஹீஹன்	விவேகஹீனள்
82	12	சுண்ணும்பு	சுண்ணும்பு
83	18	ஆதினுல்	ஆனதினுல்
91	23	முழுவதுங்குடி	முழுவதுங்கூடி
93	10	ோட வேண்டும்	தேட வேண்டும்
94	1	அம்பால்	அப்பால்
98	16	எண்ரூமானுல்	என்ரூமானுல்
100	11	அதிசத்தை	அதிசயத்தை
101	1	மிகதி	மிகுதி
102	10	அன்னங்களைடைய	அன்னங்களுடைய
104	18	பல கரையிள்	பல கரையில்
106	8	பாகீரதி ஜலப்	பாகீரதி ஜலம்
109	1	நீசப்பிரகாம்	நீசப்பிரகாரம்
,,	4	ருகி கொடுக்வேயாகாது	ருசி கொடுக்கவேயாகாது
,,	5	சவித்தால்	சலித்தால்
,,	5	ஒருத்வருக்ரு	ஒருத்தருக்கு
,,	12	துராக்கிரம்	துராக்கிரகம்
,,	25	தீர்த்துவம்	தீரத்துவம்
110	1	எப்பேகதுங் குண்ணலாகாது	எப்போதுங் குன்னலாகாது
,,	2	வெட்கய்	வெட்கப்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	8	நிஜஸ்தியை	நிஜஸ்திதியை
111	1	விடத்திலே யரகிலும்	விடத்திலே யாகிலும்
,,	3	ஒரிக்காலமும்	ஒருக்காலமும்
120	9	அதுத்தன	அத்தனை
,,	11	கிலாக்சியமாம்	சிலாக்கியமாம்
,,	15	காய்ப்	கமாய்ப்
121	3	நாரானை	கரானை
,,	9	திருஷ்டாந்திர	திருஷ்டாந்திர
,,	26	அவலுடைய	அவனுடைய
122	14	ளத்திவ்	ளத்தில்
127	4	பிள்ளையோ	பின்னையோ
129	23	படிக்கீறவாள்	படிக்கிறவாள்
131	1	பிரமேள	யிரேமள
132	27	தசிக்கவேண்டும்	தகிக்கவேண்டும்
138	15	வாய்ப்பார்	வையாய்ப்பார்
144	21	அசதத்	அகத்
146	16	ஸமஸ்தத்தைபும்	ஸமஸ்தத்தையும்
,,	22	கோபத்துக்	கோபத்தைக்
147	16	சம்மந்தம்	சம்பந்தம்
159	12	நல்ம	நல்ல
166	16	சென்னதாய்	சொன்னதாய்
167	15	ஏவர்களிடத்தில்	எவர்களிடத்தில்
171	6	போஜன	போஜனம்
,,	7	பண்ணுகினர்கள்	பண்ணுகிறார்கள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
181	5	ிமத்தியம்	நிமித்தம்
190	6	எரும்புக்கு	எறும்புக்கு
,,	9	நிறம்பியிருக்	நிரம்பியிருக்
192	15	தேகமடைந்தார கள்	தேகமடைந்தார் கள்
195	7	உபயந்	உபயத்
196	15	மாங்கள்	மரங்கள்
,,	22	சகலநதுக்கும்	சகலத்துக்கும்
,,	6	உபாசணை	உபாசனை
199	18	மிகிதியும்	மிகுதியும்
200	4	பேலவே	போலவே
201	5	நிவந்தம்	நிவாந்தம்
,,	24	அந்த்ராளம்	அந்தராளங்
204	9	வாச்சாமசம்	வாச்சாம்சம்
205	14	முனிவர்ளொலும்	முனிவர்களாலும்
216	4	பிரம்மதெவர்	பிர்ம்மதேவன்
230	5	குழுவதும்	முழுவதும்
,,	5	பிர்மாண்டித்திலும்	பிர்மாண்டத்திலும்
244	21	அனுபவக்கியது	அனுபவிக்கிரது
236	6	மூன்பும்	முன்பும்
,,	24	வாசப்மது	வாசிப்பது
237	6	தரிசி	தரிக்
240	12	உகுவமும்	உருவமும்
,,	14	பரமேஷ்வான்	பரமேஸ்வரன்
241	1	ஜிவன்	ஜீவன்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
249	3	சாரச்சாரம்	சாராசாரம்
258	20	இதல்	இதில்
259	10	புலனுகமல்	புலனுகாமல்
260	17	ஸ்துலம்	ஸ்தூலம்
262	19	முலமாயை	மூலமாயை
263	10	தோன்கிறன	தோன்றுகின்றன
276	14	சயரூபத்தை	சுயரூபத்தை
277	6	எனத்தெரிபவரும்	எனத்தெரியவரும்
290	8	என்றும்	என்னும்
297	6	டைச	டைய
300	10	நியமங்மளை	நியமங்களை
,,	14	கடினமானதை	கடினமானது
302	2	பதினேட்டாம்	பதினெட்டாம்
,,	7	கஞணையைக்	கருணையைக்
303	12	விருப்	விரும்
304	2	மகிலம	மகிமை
,,	3	முதலியவைக்ளை	முதலியவைகளை
,,	14	தக்	தத்
306	3	வெளகீகங் களிலேயே	லௌகீகங்களி லேயே
307	2	பதினேட்டாம்	பதினெட்டாம்
308	23	சம்பாஷனை	சம்பாஷணை
310	2	பதினேட்டாம்	பதினெட்டாம்
311	5	இலக்ஷணம்கள்	இலக்ஷணங்கள்
313	2	பதினேட்டாம்	பதினெட்டாம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	10	விசாாம்	விசாரம்
318	2	பதினேழாம்	பதினெட்டாம்
320	20	ஸைன்யங்களி னின்றி	ஸைன்யங்களின்றி
,,	25	எவராது	எவராவது
322	9	முரையை	முறையை
324	6	பிடித்ரால்	பிடித்தால்
330	15	க்ஷேத்திரகளாகிய	க்ஷேத்திரங்களா கிய
336	5	இடைபூருகள்	இடையூறுகள்
339	14	பொருளைப்பற்று	பொருளைப்பற்றி
347	10	ஜனங்சளின்	ஜனங்களின்
348	5	உட்கருதல்	உட்காருதல்
353	6	பாடுவதினல்	பாடுபடுவதினல்
355	3	மனதைபும்	மனதையும்
360	4	புலருடய	புலனகிய
362	8	உபசனை	உபாசனை
,,	21	கணக்க்றற	கணக்கற்ற
367	19	ஜாக்கிாதையுடன்	ஜாக்கிரதையுடன்
374	17	போதெல்லரம்	போதெல்லாம்
379	10	செய்யவிடில்	செய்யாவிடில்
389	16	கேல்விக்கு	கேள்விக்கு
,,	20	கிகாண்டு	கொண்டு
390	22	ஆகாயத்தின்	ஆகாயத்தில்
391	3	பக்கித்தில்	பக்கத்தில்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
392	15	பிர்மத்தீன்	பிர்மத்தின்
395	10	எட்டாதது	எட்டாவது
,,	12	அப்பேரதுதான்	அப்போதுதான்
398	3	அலுபவிக்கிறார்கள்	அனுபவிக்கிறார் கள்
400	16	நாள்கு	நான்கு
402	15	குனசாம்யம்	குணசாம்யம்
408	15	சங்கல்ரூபமாக	சங்கல்பரூபமாக
409	15	சாமாத்தியம்	சாமார்த்தியம்
,,	19	ஹரிப்	ஹரிர்ப்
419	6	அனிபவத்தை	அனுபவத்தை
421	2	தைப்பற்ழியும்	கைப்பற்றியும்
422	1	தோன்கிறது	தோன்றுகிறது
,,	2	சமாகறது	கமாகிறது
430	22	மூலப்	மூலப்
439	13	நூலாக்கும் என்பதிற்கு பிறகு திறமை என்பதை சேர்க்க வேண்டியது.	